# தமிழரசு

ஆக.16 1972 35 காசு






# அரசு — மிகவுயர்ந்த தரமான

# போர்ட்லெண்ட் சிமெண்ட் உங்களுக்குக் கிடைக்கிறது

அரசு சிமெண்ட் தரத்தில் தலைசிறந்து விளங்குவது; தரமே உருவானது. வலிமைக்கு மற்றொரு பெயரான அரசு, வலுவான கட்டுமானங்களுக்கு நேர் நிகரில்லாததாகும்.

அரசு சிமெண்டுக்குள்ள தனிச் சிறப்புத் தன்மைகள், அதனால் கட்டப்படும் எதையும் திண்மையும், நீர்க்காத திறனும் கொண்டு நெடுங்காலம் நீடித்து விளங்கச் செய்கின்றன.

அரசு ஒரு நவீன, விஞ்ஞான ரீதியான தயாரிக்கப்படும் போர்ட்லெண்ட் சிமெண்ட் குடியிருப்பு இல்லங்கள், பண்ணைக் கட்டிடங்கள், அலுவலக கட்டிடங்கள், தானியக் குதிர்கள், குழாய் அமைப்புகள், அணைகள், பாலங்கள், நீர்த்தொட்டிகள், நீர்த் தேக்கங்கள், நீச்சல் குளங்கள், அலங்கார அமைப்புக்கள் போன்ற எத்தனையோ கட்டுமான வேலைக்கு அரசு அருமையானதொரு சிமெண்ட்.

அரசு தமிழ்நாட்டிலேயே முதலாவதான ஒரே அரசினர் துறை சிமெண்ட் ஆலை




யால், கடுமையான தரக்கட்டுப்பாடுகளைக் கையாண்டு உற்பத்தி செய்யப்படுகிறது.

## தமிழ்நாடு சிமெண்ட்ஸ்

(தமிழ்நாடு அரசுக்கு சொந்தமான நிறுவனம்)
ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்


## அரசு —வலிவும் வனப்பும் வாய்ந்தது

AC-16

விடுதலை நாள் வெள்ளி விழா இதழ்

# தமிழரசு

மலர் 3. இதழ் 4
16 . 8 . 1972.



கிராமங்களையும் ஏழை எளிய மக்களையும் நாம் கைதூக்கி விட வேண்டும்! இதுதான் நமது முதல் கடமை!

நமது இந்தியாவின் உயிர்நாடி கிராமங்களில்தான் உள்ளது. இந்த அடிப்படையில்தான் நமது பணிகள் அமையவேண்டும்.

நம்முடைய ஒவ்வொரு பணியிலும் புதிய புதிய சோதனைகள் ஏற்படலாம். பணிவு, எளிமை, அகிம்சை, சகிப்புத்தன்மை ஆகிய நல்ல பண்புகளினால் அந்தச் சோதனைகளில் நாம் வெற்றி அடைந்து விடலாம்.

*அண்ணல் காந்தியடிகள்*

மகிழ்ச்சியும் எழுச்சியும் பெற்றிட—வாழ்த்தும் வணக்கமும் கூறிட—உறுதியும் அஞ்சாமையும் பெற்றிட—சுருக்கமாகக் கூறுவதானால், பெற்ற சுதந்திரத்துக்கு ஏற்றவர்களாக நம்மை ஆக்கிக் கொள்ள—சுதந்தரத்தின் முழுப் பயனை நாட்டவர் அனைவரும் பெற்றிட—அதற்கான அறிவாற்றலையும் பண்பாட்டையும் வளர்த்துக் கொள்ளவே இந்த ஆகஸ்டுப் பதினைந்து.

வீரம்—வெற்றியைத் தந்தது; தியாகம்—சுதந்தரத்தைத் தந்தது; வீரமும் தியாகமும் போற்றத் தக்கவை; அதிலும் உலக உத்தமர் காந்தியடிகள் வகுத்தளித்த அறநெறி நின்று இந்தியா பெற்ற சுதந்தரம் உலக வரலாற்றுக்கே ஒரு புதுமையானதாகும்.

*பேரறிஞர் அண்ணா*





# இந்திய விடுதலை வெள்ளி விழா

மேதகு தமிழ்நாடு ஆளுநர் கே.கே.ஷா

நன்றியுணர்வுள்ள ஒரு நாடு அந்த நாட்டின் விடுதலை வீரர்களையும் அதற்காக உயிரை இழந்த தியாகிகளையும், எப்பொழுதும் நினைவு கூர்கிறது. அந்தச் செம்மல்களுக்குத் தக்க முறையில் மரியாதையும் செய்கிறது.

நான் பழைய சம்பவங்களின் நடமாடும் சாட்சியாக விளங்குபவன். இன்றும் காந்தியடிகளை அச்சம் கலந்த மரியாதையுடன் வியப்புடன் பார்க்கிறேன். தூக்கு மரத்தையும், துப்பாக்கிகளையும், காவல் துறையினரின் குண்டாந் தடிகளையும், சிறை வாழ்வின் கொடுமைகளையும் கண்டு அஞ்சாது இந்நாட்டின் இலட்சக் கணக்கான மக்களைச் செயல்புரிய வைத்த அவருடைய மந்திரக் கோலின் மாயச் சக்தியைக் கண்டு வியப்படைகிறேன்.

ஆட்சியாளன் (Statesman) சந்தர்ப்பங்களை உருவாக்குகிறான். அரசியல்வாதி (Politician) அவைகளைப் பயன்படுத்துகிறான் என்று சொல்லப்படுவது உண்டு. ஆனால், காந்தி வெறும் ஆட்சியாளனுக்கும் மேம்பட்டவர். அவர் ஒரு மகானும் ஆவார். மகான் ஒருவர் நேர்மைப் பண்புகளைப் பேணிக் காத்ததோடு ஒரு சிறந்த ஆட்சி நிருவாகியாகவும் மாட்சிமை பெற்றதற்கு வரலாற்றில் அவருக்கு ஒப்புமையே கிடையாது. அவரவர் வழியிலேயே ஒரு இயக்கத்தைத் தனியாக நடத்தும் ஆற்றல் பெற்றிருந்த தலைவர்கள் கூடப் பாபுவின் தலைமையை ஏற்றுக் கொண்டார்கள்; அவரோடு தங்களையே ஐக்கியப் படுத்திக் கொண்டார்கள். அப்படிச் செய்யப்பட்டுவிட்டோமே என்று அவர்கள் வருந்துவதற்கான சூழ்நிலைகள் எப்பொழுதும் அவர்களுக்கு ஏற்பட்டதில்லை.

பண்டித நேரு, இராசாசி, சர்தார் படேல், சுபாஷ் போன்ற பல்வேறு தனித்தனிக் குண நலன்களைக் கொண்ட மேதைகளை எவ்வாறு காந்தி இணங்கி, இணைந்து செயல்பட வைத்தார் என்பது புரியாத புதிர் மட்டுமல்ல; அச்செயல் இப்போதும் மனிதச் சிந்தனையைத் திணற வைப்பதாகவே இருக்கிறது.

அகிம்சை, செய்முறை நேர்மை ஆகியவைகளைப் பற்றி அவர் அழுத்தந் திருத்தமாக இருந்திராவிட்டால் சுதந்தரப் பிற்காலப் பகுதி இன்னும் இன்னல் நிறைந்ததாகவே இருந்திருக்கும்.

சுதந்தர மனவுணர்வு இந்நாட்டு மக்களிடையே உருவாக வேண்டும் என்பதற்காகப் பண்டித நேரு கடுமையாக உழைத்தார். அதனால் மக்களாட்சி மாண்பு இந்நாட்டு மக்களின் வாழ்க்கை முறையாக உருவாகக் காரணமாக அவர் அமைந்தார்.

பெற்ற சுதந்தரத்தைப்பேணிக் காப்பதும், வறுமையைத் துடைத்தெறிவதும், தெளிந்த மக்களாட்சியை வளர்ப்பதும் காலதேவன் திருமதி இந்திரா காந்திக்கு இட்ட கட்டளைகளாக-கடமைகளாக அமைந்துவிட்டன.

பொருளாதாரத்தில் பின்னடைந்த, கல்வியில் படிப்பறிவில்லாத மக்கள் நிரம்பிய இந்தியாவில் வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை என்ற ஆபத்தை நாமே விரும்பி எடுத்துக் கொண்டோம். அதன் மூலம் வட்டார, மொழி, மத வகை வேறுபாடுகள் பொருமை உணர்வுகளைத் தூண்டி விட்டு இலாபம் காணும் சூழ்நிலையை உள்ளடக்கிய சனநாயகக் குறைபாடுகளின் தூண்டுதல்களை நேரிடையாகச் சந்திக்கவும் நாம் முடிவு செய்தோம். பெருமளவு அகதிகளின் உள்நாட்டு வருகைக்கும் நாம் ஆட்படுத்தப்பட்டோம். 1962-ஆம் ஆண்டிலிருந்து நம்முடைய பாதுகாப்புச் செலவு ஆண்டொன்றிற்கு ரூ. 800 கோடியிலிருந்து ரூ. 900 கோடி வரை உயர்ந்தது. பாகிஸ்தான் நாட்டின் ஆக்ரமிப்பையும் நாம் சந்திக்க வேண்டியிருந்தது. இத்துணைச் சுமைகளையும் நோக்கும்போது, எப்படி இத்தகைய இடர்ப்பாடுகளை வெற்றிகாண முடிந்தது, எப்படிப் பெருஞ்சுமையையேற்றுக்கொண்டு நாட்டின் முன்னேற்றத்தை நிலை நிறுத்திப் பொருளாதாரத்தில் தன் வளர்ச்சி அடிப்படையை எய்த முடிந்தது என்பது எவரும் வியப்படையத் தக்கதேயாகும்.

காந்தியும், நேருவும் எதை எடுத்துக் கூறி எதற்காகப் பாடுபட்டார்கள் என்பதை இளைய தலைமுறை புரிந்து கொள்ளாத வரையில் அவர்கள் கனவு கண்ட சமுதாய அமைப்பு நனவாகப் போவதில்லை அவர்களின் கருத்துக்கள் இந்நாட்டு இளைஞர் சமுதாயம் புரிந்து கொள்ளும் வகையில் விளக்கிக் கூறுவதற்கான முறையான முயற்சிகள் செய்யப்படவில்லை என்பது துரதிருஷ்ட வசமானதாகும்.

இளைஞர்களிடம் நேரு காட்டிய கரை கடந்த பெருந்தன்மை, ஒழுக்கக் கேட்டின் விளிம்பில் இருக்கும் அளவு தாராள மனப்பான்மை ஆகியவற்றைப் பற்றி நேருவிடமே நான் கேட்டது எனக்கு நினைவிற்கு வருகிறது. ஆனால், எனது வினவிற்கு அவர் கொடுத்த விடை அவரின் சிந்தனா சக்தியின் ஆழம், அணுகு முறையின் புத்திக் கூர்மை ஆகியவைகளை வெளிப்படுத்தியது.

''ஏழு நூற்றாண்டுக் கால அந்நியர் ஆதிக்கத்தின் விளைவால் ஏற்பட்ட அடிமை மனப்பான்மை துடைத்தெறியப்படவேண்டுமானால் அச்சமற்ற மனப்பக்குவம், எவ்விதக் கட்டுப்பாடற்ற சுதந்தர உணர்வு ஆகியவற்றை நம்முடைய இளைஞர்களிடையே நாம் உருவாக்க வேண்டும்'' என்று நேரு கூறினார்.

இப்படிப் பட்ட சந்தர்ப்பம் இங்கொன்றும் அங்கொன்றும் என்ற அளவில் சில முறை கெட்ட பிரதி பலிப்புகளுக்கு நம்மை இட்டுச் செல்லலாம். ஆனால் இவைகளைக் கட்டுப்படுத்த முடியும். உருவாக்கப்பட்ட இத்தகைய உணர்ச்சியின் பிரதிபலிப்புகளை ஆக்க முயற்சிக்குத் திசை திருப்பி விடவும் முடியும் என்றும் நேரு கருதினார்.

ஆனால், செயல் சுதந்தரம், சிந்தனைச் சுதந்தரம் மீண்டும் நமது இளைஞர்களுக்குக் கிடைக்க வேண்டும்; இது இன்றியமையாதது என்பதும் நேருவின் வலுவான கருத்தாகும். இதை அரசும் நிருவாகமும், பெற்றவர்களின் மனப் போக்கைக் கொள்வதாலும், சமுதாயமும், டிரஸ்டுகளின் மனப்போக்கை அனுசரிப்பதாலும் சாதிக்க முடியும்.

இந்தப் பின்னணியில் நோக்கின் சனநாயக சோஷலிஷம், நடுநிலைக் கொள்கை ஆகிய தத்துவங்களின் முழுத்தன்மை பகலவன் ஒளியைப் போல் துல்லியமாய்த் தெரியும். உள்நாட்டில் அமைதிக்காக அவர் பெரு முயற்சி செய்தார். அதனால் படிப்பின்மை, வறுமை, பின் தங்கிய பொருளாதார நிலை ஆகியவற்றை எதிர்த்து உள்நாட்டுப் போராட்டத்தை முடுக்கிவிட முடியும் என்று அவர் கருதினார். அவரின் நடுநிலைக் கொள்கை சிறந்த ஆட்சி நிருவாகம், சீரிய பொருளாதாரக் கொள்கை ஆகியவற்றின் கூட்டிணைப்பேயாகும்.

துரதிருஷ்டவசமாக, மதவெறி அளவிற்கு மீறிப் பாராட்டிப் புகழ்ந்து பேசப்பட்டாலும், மதம், கொள்கை வேறுபாடுகளைத் தூண்டி விட்டு நாட்டின் உணர்வுப் பூர்வமான ஒற்றுமையைக் கெடுக்க எல்லா முயற்சிகளும் செய்யப்பட்டன. இதையே இந்த நாட்டின் கடந்த இருபதாண்டுக் கால வரலாறு கண்டது.

இதன் காரணமாக ஏற்பட்ட இன்னல்கள், இடையூறுகள் மோசமான நிலைமையை நாட்டிலே உருவாக்கின. மக்களிடையே ஏமாற்ற உணர்வு வளர்ந்துகொண்டே இருந்தது; நல்ல எதிர்கால நம்பிக்கை என்பது சுருங்கிக் கொண்டே வந்தது. அதே நேரத்தில் வன்செயல் தன் அடித்தளத்தை வேகமாக வளர்த்துக் கொண்டே இருந்தது.

வேறுபட்ட பல சக்திகள் வேறுபட்ட வழிகளில் வேறுபட்ட தேவைகளுக்காகச் செயல்பட்டு நாட்டின் தலைமையின் மேலிருந்த நம்பிக்கை நாளுக்கு நாள் சுருங்கிக் கொண்டே செல்லும் சூழ்நிலையைத் தோற்றுவித்தது. நாட்டின் ஒருமைப்பாடு நிலைக்குமா, நாட்டின் முன்னேற்றம் தடைப்படாமல் செல்லுமா என்ற நம்பிக்கைகள் கேள்விக்குறியாக எழுப்பப்பட்டன.

இத்தகைய இக்கட்டான சூழ்நிலையில் நாட்டை வழிகாட்டி இயக்கிச் செல்ல இந்திரா காந்தி பொறுப்பினைச் சுமக்க அழைக்கப்பட்டார்.

உள்நாட்டுக் குழப்பங்களின் கடுமையான பளு, நிலையில்லா நிலவரங்கள், வெளியுலகத் தொல்லைகள் ஆகிய அனைத்தும் வல்லவனுக்கும் வல்லவனைக் கூட எல்லாப் பக்கங்களிலிருந்தும் தொல்லைகளை வரவழைத்துக் கொள்வதிலிருந்தும் கடுமையான பணிகளை ஏற்றுக் கொள்வதிலிருந்தும் பின்னோக்கி இழுத்திருக்கும்.

அண்மையில் பாகிஸ்தானுக்கும் இந்தியாவிற்கும் இடையே நடைபெற்ற போரின் போது தமிழக மக்கள் போருக்காகப் பெருமளவில் பொருளுதவி செய்தார்கள். நாட்டுப் பாதுகாப்பு நிதிக்கு ரூபாய் ஆறு கோடி கொடுத்ததும் அல்லாமல், போர்வீரர்களின் நலனுக்காகவும் அவர்களோடு ஒத்துழைக்கும் வண்ணமும் வேறு பல நடவடிக்கைகளும் எடுத்த பெருமை தமிழகத்திற்கு உண்டு. கன்னர் ஆறுமுகத்தின் வீரச் செயல்கள் நம்முடைய வரலாற்றின் ஓர் அங்கமாகிவிட்டது.

போர்க்களத்தில் உயிர்நீத்த போர் வீரர்களின் குடும்பங்களுக்குத் தமிழ்நாடு அரசு தன்னால் முடிந்த எல்லாவித உதவிகளையும் அளித்துள்ளது பாராட்டுதற்குரிய ஒன்றாகும்.

களத்தில் உயிர் நீத்த கன்னர் ஆறுமுகம்





16-8—1எ



# நமக்குத் தெரிந்தவரை...

இந்தியா சுதந்திரம் பெற்ற இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவு விழாவினை இந்த மாதத்தில் நாம் கொண்டாடுகிறோம். கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் ஏற்பட்ட சோதனைகளையும் அறைகூவல்களையும் எதிர்த்து வெற்றிபெற்று வலுவடைந்துள்ள நமது நாடு, மேலும் அதிக ஒற்றுமையுடனும், உறுதியுடனும் தனது இலட்சியத்தை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறது.

நமது நாட்டில் ஜனநாயகம் நிலைத்து நின்று, தனது தகுதியை நிரூபித்துக் காட்டியிருக்கிறது. ஆனால், பொருளாதாரத் தன்னிறைவு என்னும் பொருளாதார விடுதலையை நாடு இன்னமும் அடையவில்லை ஏழை மக்கமித்த முயற்சி அவசியம். நாட்டு மக்களின் நம்பிக்கையும் ஆழ்ந்த ஈடுபாடுமே நாடு சுதந்தரம் அடைவதற்குக் காரணமாக இருந்தன. நமது இலட்சியம் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் இருக்கிறது. ஆனால், இது வழி வகுத்துக் கொள்ள வேண்டும்.

எல்லாருக்கும் நீதியையும் சம வாய்ப்புகளையும் அளிப்பதும், ஒவ்வொரு குடிமகனும் முழு வளர்ச்சியடையத் தக்கதும்

## தலைமையமைச்சர் இந்திரா காந்தி அவர்களின் விடுதலை நாள் வெள்ளிவிழாச் செய்தி

ளின் அன்றாட வாழ்க்கையில் இன்னும் முன்னேற்றம் ஏற்பட வேண்டியிருக்கிறது.

ஏழ்மை, ஏற்றத்தாழ்வு ஆகிய வற்றுக்கு எதிரான போராட்டத்தில் நாம் வெற்றி பெறுவதற்கு நாட்டு மக்களின் ஒருவரையில் வேறு எந்த நாடும் இவ்வளவு பெரிய பணியில், ஈடுபட்டு இவ்வளவு சிக்கலான பிரச்சினைகளைச் சமாளித்ததில்லை. ஆகவே, இனி வரக்கூடிய நமக்குத் தெரிந்ததும் தெரியாததுமான தடைகளைச் சமாளிப்பதற்கு ஏற்ப நாம் ஒவ்வொருவரும் ஜனநாயக முறையில் செயல்பட்டுத் தமது பரஸ்பர பொறுப்புக்களை உணர்ந்து நடப்பதற்குமான ஒரு புதிய சமுதாயத்தை நோக்கிச் செல்லும் நமக்குத் தன்னம்பிக்கையும், தைரியமும் வழித்துணைவர்களாக இருக்கட்டும்.

கடமைகளைச் செய்யாமலே உரிமைகளைத் தேடினால் அவை கானல் நீர் ஆகிவிடும்.

o o o

படிப்பறிவு இல்லாவிட்டால் கோடிக்கணக்கான மக்களுக்குத்தன்னை அறியும் சக்தியே இல்லாது போய் விடும்.

o o o

செயலில் கெட்டவனை விட மனத்தில் கெட்டவனே மிகவும் கெட்டவன்.

o o o

சீர்திருத்தத்தில் கவலை சீர்திருத்தக்காரனுக்கே உண்டு ; சமூகத்திற்கு இல்லை.

o o o

உங்கள் சுதந்தரத்தில் யாராவது தலையிட்டால் அவ்விதம் தலையிடுவதைத் தடைசெய்யுங்கள்.



துன்பம் வந்துற்றபோது அழுகிறவர்கள் அடிமைகளாவார்கள்.

o o o

தேசத்தொண்டு என்பது மனித சமுதாயத்தின் தொண்டு என்றே என் கருத்திற்குப் படுகிறது.

o o o

நல்லவரின் எண்ணங்கள் ஒருபோதும் வீணாவதில்லை.

o o o

ஏழைகளுக்கும் தேவைப்பட்டவர்களுக்கும் உதவுவதைவிடப் பெரிய வேள்வி என்ன இருக்கிறது?

o o o

நல்ல விதமாக அமைக்கப்படும் ராஜ்யத்தில் ஒருவர் இடத்தை இன்னொருவர் பிடித்துக் கொள்வது ஒரு நாளும் நடவாத காரியம்.

# முயற்சிகள் சிறந்திட...

## தமிழக முதல்வர் கலைஞர்

உரிமை பெற்ற மண்ணில் ஒரு நொடியேனும் வாழ வேண்டும் என்ற எண்ணத்தோடு விடுதலைப் போரில் ஈடுபட்டு உயிர் துறந்த வீரர்கள் ஏராளம்! ஏராளம்!

அந்தத் தியாகத் திருமேனிகளின் கனவுகள் நனவாகிக் கால் நூற்றாண்டாகிறது.

விடுதலை பெற்ற நாட்டில் ஒரு நொடிப் பொழுதேனும் வாழத் துடித்தவர்களும் இந்த மண்ணில் பிறந்தவர்கள் தாம். இருபத்தைந்து ஆண்டுகளாகச் சுதந்தரம் பெற்ற நாட்டில் வாழும் நாமும் இந்த மண்ணுக்கு உரியவர்களே!

ஒரு காலத்தில் பெரும் பேறாகத் தெரிந்தது நமக்குச் சாதாரணமாகவும் தெரியும் அளவுக்குக் காலம் வேகமாக ஓடுகிறது.

அன்று அடிமைத் தளையை அகற்றிடப் போராடியது என்?

புதிய வாழ்வு கண்டிட—

பொருளாதார ஏற்றம் பெற்றிட—

பொருமைகள் நீங்கிட—

புன்மைகள் மலிந்திட—

நன்மைகள் எல்லாம் அடைந்திட —

எல்லாரும் எல்லாம் அடைந்திட—

கல்லாமை இல்லாது தொலைந்திட—

இவையே நாம் பெற்ற சுதந்தரம் நமக்குத் தரும் பெருமைகளாக இருந்திட முடியும்.

இந்த நிலைகளுக்காக நமது முயற்சிகள் தொடர்ந்தாலும், முழுமை காண முடியவில்லை என்ற பேருண்மையை இந்த விடுதலைத் திருநாள் வெள்ளி விழா ஆண்டில் ஒப்புக்கொள்வதில் தவறில்லை.

இந்த நேரத்தில் நாம் கணக்குப் பார்ப்பது நமது வருங்காலக் கடமைக்கு வழி காட்டியாகவே அமையும்.

ஆகவே, நமது முயற்சிகள் மேலும் சிறக்க உறுதியுடன் பணியாற்றுவோம்! இதையே விடுதலைத் திருநாள் வெள்ளி விழா ஆண்டில் துணையாக ஏற்போம்!

முத்து

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு, ஆகஸ்டு 14-ஆம் தேதியன்று நள்ளிரவில், இந்தியா தனது அடிமைத் தளையை உடைத்தெறிந்துவிட்டுச் சுதந்தர நாடாக மலர்ந்தது. 1942-ஆம் ஆண்டில் துவக்கப்பட்ட ''வெள்ளையனே வெளியேறு'' இயக்கத்துக்கு நாட்டு விடுதலை உச்சக் கட்டமாக அமைந்தது.

பழம் பெருமை வாய்ந்த இந்த நாடு உலக அரங்கில் தனக்குரிய இடத்தை அடைவதற்கும்—உலக அமைதிக்கும்—மனித சமுதாயத்தின் முன்னேற்றத்துக்கும்—இந்த நாடு தன்னலியன்றதனைத்தையும் செய்வதற்கும் 'ஏற்ப இந்திய நாட்டுக்கும், மக்களுக்கும் தொண்டு செய்வதற்கு இந்திய அரசியல் நிர்ணய சபை உறுப்பினராகிய நான் தாழ்மையுடன் என்னை அர்ப்பணிக்கிறேன்.''

பிரசாத் தமது துவக்க உரையில், நாடு தனது இலட்சியத்தை அடைவதற்கு வழிகாட்டியமைக்காக இறைவனுக்கு நன்றி செலுத்தினர். காந்தியடிகளைப் பற்றிக் கூறுகையில், ''கடந்த 30 ஆண்டுகளாக நமக்குக் கலங்கரை விளக்கமாகவும், வழிகாட்டியாகவும், ஆலோசகராகவும் இருந்து வருகிறார்'' என்று புகழாரம் சூட்டினர்.

# ஒரு நள்ளிரவில்...!

பெதிக்-லாரன்ஸ் பிரபுவின் தலைமையிலான பிரிட்டிஷ் அமைச்சகத் தூதுக் குழுவினர், ஆட்சி மாற்றத்துக்கான அரசியல் அடித்தளத்தை உருவாக்கினர்.

மாநிலச் சட்ட மன்றங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்கள் 650 பேரும் இரவு பன்னிரண்டு மணி அடித்தவுடன் வாக்குறுதி எடுத்துக் கொள்வதற்காக, டாக்டர் இராசேந்திர பிரசாத்தின் தலைமையில் கூடியிருந்தனர்.

திட்டத்தைத் திரு சவகர்லால் நேரு கொண்டு வந்து பேசுகையில், ''விதியுடன் கால ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறோம்'' என்று கூறினர்.

''இரவு பன்னிரண்டு மணி அடித்து ஓய்ந்தவுடன், இங்குக் கூடியுள்ள அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்கள் அனைவரும், கீழ்க் கண்டபடி வாக்குறுதி எடுத்துக் கொள்வார்கள்'' என்று கூறும் தீர்மானம் முன் வைக்கப்பெற்றது.

''இன்னல்கள், தியாகங்கள் ஆகியவற்றின் மூலம் இந்தியப் பெருமக்கள் சுதந்தரம் பெற்றிருக்கும் இந்தப் புனித வேளையில்,

திட்டத்தை ஆதரித்துப் பண்டித நேரு பின்வருமாறுபேசினர்: ''நமது வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டிய நேரம் வந்து விட்டது. வாக்குறுதிகளை முழு அளவுக்கு நிறைவேற்ற முடியா விட்டாலும், கணிசமான அளவுக்கு நிறைவேற்ற வேண்டும்; உலகம் உறங்கிக் கொண்டிருக்கும் இந்த வேளையில், இந்தியா விழித்து எழுந்து சுதந்தரத்தைப் பெற்றுக் கொள்கிறது. பழையன கழிந்து புதியன புகுதலும், நீண்ட நாட்களாக ஒடுக்கப்பட்டிருந்த ஒரு நாட்டின் ஆன்மா விழித்தெழுந்து மீண்டும் பேசும் நிகழ்ச்சியும் வரலாற்றில் அபூர்வமாகத்தான் நிகழும். தாய் நாட்டின் சேவைக்கும், மனித சமுதாயத்தின் முன்னேற்றத்துக்கும் எங்களை அர்ப்பணித்துக் கொள்வோம் என்று இந்த நேரத்தில் உறுதிமொழி எடுத்துக் கொள்வது முற்றிலும் பொருந்தும்.''

உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த சௌத்ரி காலிக்குஸ்ஸமான் தீர்மானத்தை வழிமொழிந்து பேசினர்.

அதற்கு முன்னல், அவைத் தலைவர் டாக்டர் இராசேந்திர

இரவு மணி பன்னிரண்டு அடித்தவுடன் அவைத் தலைவரும் மற்ற உறுப்பினர்களும் எழுந்து நின்று உறுதி மொழி எடுத்துக் கொண்டனர். அவைத் தலைவர் உறுதி மொழியை ஒவ்வொரு வாக்கியமாக வாசிக்க, உறுப்பினர்கள் இந்தியிலும் ஆங்கிலத்திலும் திருப்பிக் கூறினர்.

அதன் பின்னர் அவைத் தலைவர், கீழ்க்காணும் செய்தியை வைசிராய் மவுண்ட்பேட்டன் பிரபுக்கு அனுப்ப வேண்டுமென்று முன்மொழிந்தார்.

(அ) அரசியல் நிர்ணய சபை இந்தியாவை ஆள்வதற்கான அதிகாரத்தைப் பெற்று விட்டது.

(ஆ) மவுண்ட்பேட்டன்பிரபு 1947 ஆகஸ்டு 15-ஆம் தேதி முதல் இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட வேண்டுமென்ற பரிந்துரையினை இந்திய அரசியல் நிர்ணய சபை ஏற்றுக் கொள்கிறது.

இதற்குப் பிறகு பம்பாயைச் சேர்ந்ததிருமதி ஹன்ஸாமேத்தா, டாக்டர் சரோஜினி நாயுடு அப்போது அங்கு இல்லாததால் நாட்டுக்குத் தேசியக் கொடியினை வழங்கினர்.

திருமதி சுசீதா கிருபளானியின் ''வந்தே மாதரம்'' பாடலுடன் அவைக் கூட்டம் துவங்கியது. கூட்டத்தின் முடிவிலும் அவரே ''சாரே ஜகான் சே அச்சா'' என்ற இந்திப் பாடலைப் (பாருக்குள்ளே நல்ல நாடு பாரத நாடு) பாடினர்.

அரசியல் நிர்ணய சபையின் தீர்மானத்தை டாக்டர் இராசேந்திர பிரசாத்தும், திரு சவகர் லாலும் உடனடியாக வைசிராய் மவுண்ட்பேட்டன் பிரபுக்குத் தெரியப்படுத்தினர்.

'' எனக்கு அளிக்கப்பட்டுள்ள கௌரவம் குறித்துப் பெருமைப் படுகிறேன்; அரசியல் சட்டத்துக்கு உட்பட்டு உங்கள் ஆலோசனைகளை நிறைவேற்ற முழு முயற்சி மேற்கொள்வேன் '' என்று மவுண்ட் பேட்டன் பிரபு கூறினார்.

சபை உறுப்பினர்கள் முக மலர்ச்சியுடன் கலைந்து சென்றனர். பார்லிமென்ட் கட்டடத்துக்கு வெளியே கூடியிருந்த பெருந் திரளான மக்கள் அவர்களை வாழ்த்தி வரவேற்றனர். வரலாறு படைத்த அவை உறுப்பினர்களைக் கண்டு, வாழ்த்துவதற்காக உற்சாகம் கரைபுரண்டோடக் காத்து நின்ற கூட்டத்தினரைக் கட்டுப் படுத்துவது காவல் துறையினருக்கும் பெரும் பிரச்சினையாகி விட்டது.

டாக்டர் அம்பேத்கார் கூட்டத்தின் நெரிசலில் சிக்கிக் கொண்டார். அண்மையிலிருந்த முக்கியச் சாலையில் அமெரிக்கத் தூதர் திரு ஹென்ரி கிரேயின் மனைவியார், கூட்டத்தில் தமது கணவரைத் தேடிக் கொண்டிருந்தார். அவரைக் கண்டுகொண்ட ஒரு காவல் துறை அதிகாரி அவரை அழைத்துச் சென்று காரில் அமர்த்தினார்.

ஆகஸ்டு 15-ஆம் தேதியன்று மவுண்ட்பேட்டன் பிரபு, கவர்னர் ஜெனரலாகப் பதவியேற்றார். அப்போதைய தலைமை நீதிபதி கானியா, வைசிராயின் தர்பார் மண்டபத்தில் (இப்போதைய ராஷ்டிரபதி பவன்) அவருக்குப் பதவி ஏற்பு செய்து வைத்தார். திரு நேருவின் தலைமையில் பதவியேற்ற புதிய அமைச்சரவைக்குக் கவர்னர் ஜெனரல் பதவி ஏற்பு செய்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சிக்குப் பின்னர் மவுண்ட்பேட்டன் பிரபு தமது 'கோச்' வண்டியில் ஏறி, அரசியல் நிர்ணய சபை கூடி



ஆகஸ்டு 8 தீர்மானம் என்று இந்தியாவின் வரலாற்றிலும் உலக வரலாற்றிலும் பொறிக்கப்பட்ட 'வெள்ளையனே வெளியேறு' என்னும் தீர்மானம் 1942 ஆம் ஆண்டு பம்பாயில் காங்கிரஸ் பெருங் குழுவில் கொண்டு வரப்பட்டது. அந்தத் தீர்மானத்தை முன் மொழிந்தவர் யார் தெரியுமா ?



பண்டித சவகர்லால் நேரு.

அந்தத் தீர்மானத்தை வழி மொழிந்துபேசியவர் சர்தார் வல்லபபாய் படேல்.



யிருந்த மண்டபத்துக்குப்போய்ச் சேர்ந்தார். சபைக் கூட்டம் காலை பத்து மணிக்குத் துவங்கியது.

இந்தியா சுதந்தரமடைந்ததைப் பாராட்டி உலகெங்கிலுமிருந்து வந்த வாழ்த்துச் செய்திகளைச் சபைக் கூட்டத்தில் டாக்டர் இராசேந்திர பிரசாத் வாசித்துக் காட்டினார்.

பிரிட்டிஷ் மன்னர் அனுப்பிய வாழ்த்துச் செய்தியினை மவுண்ட்பேட்டன் பிரபு வாசித்தார்.

மவுண்ட்பேட்டன் பிரபு தமது உரையில், இந்தியத் தலைவர்களின் விவேகம், சகிப்புத் தன்மை, சிநேகபாவம் ஆகிய நற்குணங்களைப் புகழ்ந்து கூறினார். 'முதலில் நிர்ணயிக்கப் பட்டிருந்த தேதிக்கு 10½ மாதங்கள் முன்னதாகவே ஆட்சி மாற்றம் ஏற்படுவதற்கு இந்தியத் தலைவர்களின் அருங் குணங்களே காரணம்' என்றார் அவர். சர்தார் வல்லபாய் படேலின் தொலை நோக்கு மதி நுட்பத்தையும், பண்டித நேருவின் தீரத்தையும் கவர்னர் ஜெனரல் பாராட்டிப் பேசினார். 'உலகப் புகழ்பெற்ற தலைவர்களுள் நேருவும் ஒருவர்' என்றார்.

கவர்னர் ஜெனரலின் உரைக்குப் பதிலளித்துப் பேசிய டாக்டர் இராசேந்திர பிரசாத், '' இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி இன்றோடு முடிவடைந்தது; இனிமேல் பிரிட்டன் நமது உறவுகள், சமத்துவம், நட்புரிமை நன்மை ஆகியவற்றின் அடிப்படையிலேயே அமைந்திருக்கும்'' என்றார்.

அவைக் கூட்டம் முடிந்து திரும்பிச்செல்லுகையில் மவுண்ட்பேட்டனும், அவரது மனைவியாரும், அவரது மகள் பாமிலாவும் வெளியே காத்திருந்த கூட்டத்தினரின் அன்புப் பிடியில் சிக்கித் தவித்துப் போயினர். கூட்டத்திலிருந்த எல்லாரும், அவர்களுடன் கைகுலுக்க முயன்றனர். அவர்கள் வைசிராயின் இல்லத்துக்குப் போய்ச் சேர்ந்த போது பகல் மணி பன்னிரண்டாகி விட்டது.

# கைகுவித்து வணங்குவோம்!

அடிமைவாழ்வை நீக்கிநாம்
அரசரான நாளிது!
அந்நியர்க்கு அஞ்சிவாழ்ந்த
அவதிவிட்ட நாளிது!

கடமையோடு கண்ணியம்
கட்டுப்பாடு மூன்றையும்
கண்ணைப் போலக் காப்போமென்று
கையடித்த நாளிது!

விடுதலைநாள் கொண்டாடும்
வெள்ளிவிழா நாளிதில்
வியப்புமிக்க சாந்தசத்திய
விரதம்பூண்ட வேள்வியில்

கடுமையான தவமியற்றிக்
கட்டவிழ்த்து விட்டநம்
காந்தியண்ணல் நினைவுகொண்டு
கைகுவித்து வணங்குவோம்!

நாமக்கல் கவிஞர்

# விடுதலைப் போரிலே தமிழ் மொழியின் பங்கு

சிலம்புச் செல்வர் ம.பொ. சிவஞானம்

இந்திய விடுதலைப் போரிலே மொழிவழிப்பட்ட தேசீய இனங்கள் ஆற்றியுள்ள கடமைகளை விரித்துரைத்தால், அது மாபெரும் காப்பியமாக அமையும். ஆதி காவியமான இராமாயணத்தை விடவும் பெரிய அளவுடையதாக அமையும்.

இந்திய விடுதலைப் போர் வரலாறு இன்னும் எழுதப்படவில்லை தமிழர், ஆந்திரர், கன்னடர், கேரளர், மராத்தியர், வங்காளியர் எனப்படும் மொழிவழித் தேசிய இனங்களைக் கணக்கிலெடுத்து, இந்திய விடுதலைப் போர் வரலாறு எதிர்காலத்திலேனும் எழுதப்படுமென்று நம்புவோமாக!

இந்திய மொழிகளிலே ஒவ்வொரு மொழியும் போர்க் கருவியாகப் பயன்படுத்தப்பட்டது. அதனாற்றான், மொழிவாரி இன அடிப்படையில் விடுதலைப் போர் வரலாறு எழுதப்பட வேண்டியது அவசியமாகிறது.

ஆங்கிலம் படித்தவர்கள் மட்டுமே கூடிக்கொண்டு அந்நிய மொழியிலே விடுதலைக்காகப் பிரச்சாரம் செய்தவரை, அது விடுதலைக்கான முயற்சியாக இருந்ததேயன்றிக் கிளர்ச்சியாகவோ, புரட்சியாகவோ அமையவில்லை.

லோகமான்ய திலகர், விடுதலைப் போரின் தளபதியான பின்னர்தான் பிரதேச மொழிகளிலே பேசியும், எழுதியும், பிரச்சாரம் செய்ய வழி வகுக்கப்பட்டது. பிரதேச உணர்வுகளுக்கும் முதன்மை தந்தார் திலகர். அதன்பின், மாநில மொழி ஒவ்வொன்றிலும் செய்தி இதழ்கள் வெளி வரலாயின. அவற்றில் பெரும்பாலானவை மாநிலங்களின் பெயர்களையே தாங்கின என்பதும் நினைவிற் கொள்ளத் தக்கதாகும்.

டாக்டர் பி. வரதராசலு நாயுடு, 'தமிழ்நாடு' என்னும் பெயரில் வா– இதழ் தொடங்கிப் பின்னர் நாளிதழாக நடத்தினார்.

லோகமான்ய திலகர் 'மராத்தி' என்னும் பிரதேச மொழிப் பெயரில் செய்தி இதழ் நடத்தினார். வங்க வீரர் அரவிந்தர், 'வங்காளி' என்னும் பெயரிலே நாளிதழைக் கொண்டு வந்தார்.

'தேசோத்தாரகர்' என்னும் சிறப்புப் பெயர் கொண்ட கே. நாகேஸ்வர ராவ் பந்துலு, 'ஆந்திரப் பத்திரிகா' என்னும் பெயரில் சென்னையிலிருந்து நாளிதழ் வெளியிட்டார். இன்னும் 'கேரள கௌமதி', 'சம்யுக்த கன்னடம்' என்னும் மாநிலப் பெயர்களால் வெளிவந்த நாளேடுகள் பலவாகும்.

'இந்து' 'கிரானிக்கல்', 'ஸ்டாண்டர்டு' என்னும் பெயர்களில் வெளிவந்த ஆங்கில ஏடுகளும் விடுதலைப் போருக்கு ஆதரவாக இருந்தவையாயினும் அவற்றைக் கண்டு அந்நிய அரசு அஞ்சவில்லை. மாறாகப் பிரதேச மொழிகளிலே நாளேடுகளும், வார-மாத ஏடுகளும் வெளிவந்த போதுதான் ஆங்கில அரசு அஞ்சியது. அந்த ஏடுகளை ஒடுக்குவதற்கென்றே அடக்குமுறைச் சட்டங்களையும் பிறப்பித்தது.



உண்மையில் ஆங்கில ஏடுகளை விடவும், பிரதேச மொழி ஏடுகளே விடுதலைப் போரில் ஈடுபடுமாறு மக்களைத் தட்டியெழுப்பின.

சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள சாதாரண மக்கள் விடுதலைப் போரில் ஈடுபட்ட போதுதான் அந்நிய ஏகாதிபத்தியத்தின் அடித்தளம் ஆட்டம் கண்டது. உழவர்களும், தொழிலாளர்களும் அணியணியாக ஊர்வலம் சென்றபோதுதான்—''அச்சமில்லை, அச்சமில்லை, அச்சமென்பதில்லையே'' என்று பாடிப் படை திரண்ட போதுதான் பரங்கியர் ஆட்சி பயந்து நடுங்கியது. இந்த மகத்தான எழுச்சிக்குப் மாநில மொழிகளிலே வெளிவந்த ஏடுகளே காரணமாயின.

விடுதலைப் போரில் மேடைப் பிரச்சாரம் ஆங்கில மொழியில் மட்டுமே நடந்த போது, அது வெறும் செவி விருந்தாகத்தான் அமைந்தது. அதுவும், உயர்தரக் கல்வி கற்றவர்களுக்கு மட்டுந்தான்; ஆம், மக்களுடைய சிந்தையைச் சிளறி, அவர்களைச் செயலில் ஈடுபடுத்தும் ஆற்றல் அந்நிய மொழிக்கு இருக்காதுதானே!

விடுதலைப் பேச்சாளர்கள் மக்களின் தாய்மொழியில் மேடையிலே பேசத் தொடங்கிய பின்னர் கொள்ளலாயினர். படித்தறியா மிக ஏழைக் கிழவனும், பாரதத்தின் விடுதலைப் போரில் பங்கு கொள்ளத் துடித்தான்.

விடுதலைப் பிரச்சார மேடையிலே ஆங்கில மொழி ஆதிக்கம் பெற்றிருந்தவரை அந்நிய அரசு வேடிக்கை பார்த்தது. அத்தகைய பேச்சுகளை வெறும் பொழுது போக்கு நிகழ்ச்சிகளாகக் கருதியது. மாறாக மாநில மொழியிலே பேசத் தொடங்கிய பின்னர் ''வாய்ப் பூட்டுச் சட்டம்'' பிறப்பித்தது. கூட்டம் கூடும் உரிமையையே மக்களிடமிருந்து பறித்துவிட



16–8—2

'144' என்னும் எண் கொண்ட புதிய சட்டத்தைத் தோற்று வித்தது. என்னே தாய் மொழிக் குள்ள வலிமை!

ஆங்கில மொழியிலே—படித் தவர்கள் மத்தியிலே—ராஜத் துவேஷச் சொற்பொழிவு நிகழ்த் தியதற்காக யாரும் சிறைக்குள் தள்ளப்பட்டதாக எனக்கு நினை வில்லை. தள்ளப்பட்டிருந்தாலும் அவர்கள் எண்ணிக்கை விரல் விட்டு எண்ணிவிடக் கூடியதாகத் தான் இருக்கும். பெற்ற தண் டனையும் மாதக் கணக்கில்தான் இருக்கும். ஆனால், மக்களு டைய தாய் மொழியிலேயே பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்துப் பிரச்சாரம் செய்தவர்களிலே ஆயிரக் கணக்கானவர்கள் ஆண் டுக் கணக்கில் தண்டனை பெற் றனர். ஆயுள் தண்டனை விதிக் கப்பட்டும் நாடு கடத்தப்பட்ட னர். வீரச் சிதம்பரனார் பாமர மக்களைக் கூட்டி வைத்துப் பசுந் தமிழிலே பேசியதற்குத் தான் இரண்டு ஆயுள் தண்டனை பெற் றார்.

தமிழிலே சில பழமொழி களைச் சொன்ன பாவத்திற்கா கவும், விடுதலை வீரர்களுக்கு வெஞ்சிறை கிடைத்ததும் உண்டு. ''காகம் பறவாது கட்ட பொம் மன் துரை சீமையிலே'' என்னும் பழமொழியைச் சொல்லிச் சிறை சென்ற தேச பக்தர்களையும் நான் அறிவேன்.

விடுதலைப் போராட்டக் காலத்திலே, ஆங்கில மொழியில் தேச பக்தியூட்டும் நாடகங்கள் நடத்தப் படவில்லை. அவை தேவைப்படவுமில்லை. ஆனால், பிரதேச மொழிகளிலே பிரச்சார நாடகங்கள் நடத்தப் பெற்றன. ஆங்கில ஏகாதிபத்தியத்திற்குச் சம்பந்தம் இல்லாத செஞ்சி தேசிங்கு, வீர சிவாஜி ஆகியோ ரின் நாடகங்களை நடத்தக் கூட ஆங்கில அரசு அனுமதிக்கவில்லை. ஆம், மொகலாயப் பேரரசை எதிர்த்து எழுதப்பட்ட உரை யாடல்களிலே பிரிட்டிஷ் ஏகாதி பத்திய எதிர்ப்பையும் எதிரொ லிக்க முடிந்தது. அப்படி அந்நிய மொழியில் செய்திருக்கமுடியுமா? செய்தாலும், சாதாரணப்பொது மக்களை அது கவர்ந்திருக்க இய லுமா?


அந்நாளில் அகில இந்தியப் புகழ் பெற்ற பெருந்தலைவர் களுக்குக் கூடப் பிரதேச ரீதியில் தான் சிறப்புப் பெயர்கள் தரப் பட்டன. டாக்டர் வரதராசுலு நாயுடு 'தென்னாட்டுத் திலகர்' என்று புகழப்பட்டார். திரு டி. பிரகாசம் பந்துலு, 'ஆந்திர கேசரி' என்று அழைக்கப்பட் டார். லாலா லஜபதிராய் 'பாஞ் சாலச் சிங்கம்' என்று பாராட்டப் பட்டார். இதெல்லாம் பிரதேச வெறி என்று பழிப்பார் அந் நாளில் இல்லை. தாய் மொழிப் பற்றையும், மாநில உணர்ச்சி யையும் தூண்டித் தூபமிட்ட தனால்தான் ஏகாதி பத்திய எதிர்ப்புப் போர் வீறு பெற்றது.

பாரதியாரின் பாடல்களிலே, நாடறிந்த பாடல்கள்—நாட்டு மக்களின் நெஞ்சம் கவர்ந்த பாடல்கள் தமிழ் மொழியை யும், தமிழ் இனத்தையும் தமிழ் நாட்டையும் புகழ்ந்து பாடியவை யேயாகும்.

மனித குலத்திற்கே மாணிக்கம் எனத் திகழ்ந்த மகாத்மா காந்தி, மொழி வேற்றுமை—மாநில வேற்றுமை—கடந்தவராக வாழ்ந்தார். அப்படிப்பட்ட வர் விடுதலைப் போர்க்களத்தை விரிவுபடுத்தவும், விடுதலைப் போர்ப்படை வீரர்களின் எண் ணிக்கையைப் பெருக்கவும் மொழிப் பற்றையும் மாநிலப் பற்றையும் திட்டமிட்டு ஊக்கு வித்தார்.

காங்கிரஸ் மாநிலக் குழுக் களை மொழி அடிப்படையில், அமைக்குமாறு அடிகள் தூண்டி யதே, பிரதேச மொழிப்பற்றை


எனது று தொழில் வளர
சென்ட்ரல் பாங்க் உதவுமா?



ஆம்! உங்களுக்குச் சேவை செய்ய
சென்ட்ரல் பாங்க் காத்திருக்கிறது.
சிறு தொழில்களுக்குக் கடன் வசதி
செய்யத் தயாராக உள்ளது!

சிறு தொழில்களைத் துவக்குவதற்கு அல்லது புதுப்பிப் பதற்கு அல்லது விரிவு படுத்துவதற்கு உதவி செய்யப் பணத்துடன் தயாராக இருக்கிறது சென்ட்ரல் பாங்க். இந்தியா முழுவதும் ஆயிரக் கணக்கான தொழில் நிறுவனங்கள் தங்களது தொழிலை வெற்றிகரமாக நடத்திச் செல்லவும் தங்களது உற்பத்திப் பொருட்களை உள் நாட்டிலும், வெளி நாடுகளிலும் விற்பனை செய்யும் அளவிற்கு விரிவு படுத்தவும் சென்ட்ரல் பாங்கின் உதவியைப் பயன்படுத்தி வருகின்றன.

நீங்கள் கூட சென்ட்ரல் பாங்கின் ஊக்கந்தரும் உதவியுடன் உங்கள் சிறு தொழிலில் வளம் பெற முடியும்.

அருகிலுள்ள எங்களது கிளை அலுவலகத்திற்கு இன்றே வருகை தாருங்கள்.

மைய அலுவலகம்:
மகாத்மா காந்தி ரோடு, பம்பாய்-1.

சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா



யும், பிரதேச உணர்வையும், வளர்ப்பதற்காகத்தான். மொழிப் பற்றின்றி நாட்டுப்பற்று வளராது என்ற உண்மையினைத் திலகரும், காந்தியடிகளும் தெள்ளத் தெளிய உணர்ந்தனர்.

விடுதலைப் போரின் போது பிரதேச மொழிகளிலே விடுதலை ஆவேசமூட்டும் பிரசுரங்கள் ஏராளமாக வெளி வந்தன. அந்தப் பிரசுரங்களைப் படித்துத் தாய் மொழியில் எழுதவும், படிக்கவும் மட்டுமே ஞானம் பெற்றிருந்த எளிய மக்களெல்லாம் அந்நிய ஆட்சி என்னும் நச்சு விருட்சத்தை ஆணி வேரோடு பெயர்த்து எறிய வேண்டும் என்னும் ஆவேசம் கொண்டனர்.

ஆண்டுதோறும் கூடும் காங்கிரஸ் மகா சபைகளிலே ஆங்கிலத்தில் நிகழ்த்தப்பட்ட தலைமையுரைகளும் நூல் வடிவம் பெற்றது உண்டு. ஆனால், அவற்றில் ஒன்றைக் கூட ஆட்சி தடை செய்யவில்லை. ஒன்றினால் கூடச் சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள மக்களுக்கு விடுதலை ஆவேசம் மூட்ட இயலவில்லை. இதற்கு மாறாக, 16 பக்கங்களிலிருந்து 64 பக்கங்கள் அளவில் தமிழ் மொழியில் வெளிவந்த பிரசுரங்களும், சிறு நூல்களும், சாதாரணப் பொதுமக்களுக்கு விடுதலை ஆர்வத்தை மட்டுமன்றி ஆவேசத்தையும் மூட்டின. அதனால், அந்தப் பிரசுரங்களை எழுதிய ஆசிரியர்களும், பதிப்பித்த பதிப்பாளர்களும் அச்சடித்துத் தந்த அச்சக உரிமையாளர்களும் கடும் தண்டனைக்குள்ளாயினர்.

காந்தியடிகள் 'இந்த் சுயராஜ்' என்னும் பெயரில் தமது கொள்கைகளைத் தொகுத்து நூலாக்கினார். அந்த நூலின் ஆங்கிலப் பிரதிகளை அரசு தடை செய்யவில்லை. குஜராத்தி மொழி உள்ளிட்ட பிரதேச மொழிகளில், வெளியான பிரசுரங்களைத் தடை செய்யாததோடு பிரதிகளையும் பறிமுதல் செய்தது. அவற்றை வெளியிட்டவர்களை — விற்றவர்களை — அச்சடித்தவர்களைச் சிறைக்குள் தள்ளியது.

சிறைச்சாலைகளில் அடைபட்ட அரசியல்கைதிகளுக்குக் குறிப்பாக 'ஏ' வகுப்பு 'பி' வகுப்புக் கைதிகளுக்குச் செய்தி இதழ்களும், புத்தகங்களும் தருவித்துக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டது.

ஆங்கிலச் செய்தி இதழ்கள் அப்படியே சிறைக்குள் அனுமதிக்கப்பட்டன. தமிழ்ச் செய்தி இதழ்களோ, அவற்றில் வெளியான விடுதலைப் போர்ச் செய்திகள் மைபோட்டு, மறைக்கப்பட்ட பின்னரே அரசியல் கைதிகளுக்கு வழங்கப்பட்டன. ஆம். ஆங்கிலம் படித்தவர்களது தேச பக்தியை அரசு சந்தேகிக்கவில்லை. ஆனால், அவர்களுடைய தேசாவேசத்தை அரசு சந்தேகித்தது. தாய்மொழியில் மட்டுமே ஞானம் உடைய ஒவ்வொரு நபரையும் எளிதில் உணர்ச்சிவசப்படக் கூடிய தேசாவேசிகளாகக் கருதியது.

1947-ஆம் ஆண்டு ஆகஸ்டுப் பதினைந்தில் நாம் பெற்ற சுதந்தரத்திற்கு இன்று வெள்ளி விழா கொண்டாடுகிறோம். ஆனால், அந்தச் சுதந்தரம் எந்த எந்தச் சக்திகளால், எந்த எந்தச் சாதனங்களால் நமக்குக் கிடைத்தது என்பதனை நாம் மறந்தே விடுகிறோம்.

பிரதேசப் பற்றும், பிரதேச மொழிப் பற்றும் தேச பக்தியை வளர்த்த சக்திகளாகும். அப்படியே, பிரதேச மொழிப்பற்றுதான்—குறிப்பாக, நம் தாய் மொழியாகிய தமிழ்மொழிப் பற்றுதான் நம்மையெல்லாம் விடுதலைப் போர்க்களத்திற்கு அழைத்துச் செல்லும் கருவிகளாக அமைந்தன.

எந்தச் சக்திகளால் — எத்தகைய சாதனங்களால் நாட்டிற்குச் சுதந்தரத்தை நாம் தேடினோமோ, அந்தச் சக்திகளும், சாதனங்களும் சுதந்தர இந்தியாவில் போற்றப்படுகின்றனவா?

தாய்மொழியைப் பயன்படுத்தி நாட்டிற்குச் சுதந்தரம் தேடினோம். ஆனால், சுதந்தரம் பெற்ற நாட்டிலே தாய்மொழிக்கு—தமிழுக்கு விடுதலை வழங்கினோமா?

''செந்தமிழ் நாடென்னும்
போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே''

என்று மாநிலப் பற்றை ஊக்குவித்துத் தேசப் பற்றை வளர்த்தார் பாரதியார். அந்த மாநிலங்கள் விடுதலை பெற்ற இந்தியாவில் உரிமை வாழ்வு நடத்துகின்றனவா?

''தமிழன் என்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா'' என்று தமிழ் இன ஆவேச மூட்டி, விடுதலைப் போரிலே தமிழர்களை ஈடுபடச் செய்தார் நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை அவர்கள். அந்தத் தமிழ் உணர்ச்சி விடுதலை இந்தியாவில் தேசபக்தர்களால், போற்றி வளர்க்கப்படுகின்றதா?

அந்நிய ஆட்சிக் காலத்திலே மாநிலப் பற்றைக்கொண்டு தேசப் பற்றை வளர்க்க முடிந்ததென்றால்—தாய் மொழிப் பற்றை ஊக்குவித்து விடுதலை ஆர்வத்தை வளர்க்க முடிந்ததென்றால்—நாம் பெற்றுவிட்ட சுதந்தரத்தைப் பாதுகாக்கவும் மாநில உணர்ச்சி பயன்படும் அல்லவா?

அடிமை இந்தியாவிலே பாரத தேச பக்தியை வளர்க்கும் எருவாக மாநிலப் பற்றும் — தாய் மொழிப்பற்றும் பயன்படுமானால் சுதந்தர இந்தியாவிலே மட்டும் தேசிய ஒருமைப்பாட்டை அழிக்கும் நஞ்சாக மாநிலப்பற்றும் மொழிப்பற்றும் இருக்கமுடியுமா?

இப்படிப்பட்ட சிந்தனைகளையெல்லாம் கிளறிவிடும் ஆண்டாக வெள்ளி விழா ஆண்டு அமையட்டும்! 'இந்தியன்' என்ற சமுதாய உணர்வும், 'தமிழன்' என்ற இன உணர்வும் பெற்று விட்ட சுதந்தரத்தைப் பாதுகாக்கும், அரண்களாக அமையும் என்று நம்புவோமாக!

வாழ்க சுதந்தர இந்தியா!

வளர்க, தாய்மொழிப் பற்று!



# விடுதலை விழா நாளில் நமது கடமை



பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரை

விழா என்ற தமிழ்ச் சொல் விழை என்ற தமிழ்ச் சொல்லுடன் பொருள் தொடர்புடைய ஒரு மந்திரச் சொல் ஆகும். விழைதல் என்பது, ஆர்வத்துடன் விரும்பி வருங்கால வாழ்வு நலம் பற்றிக் கனவு காண்டல் என்று பொருள்படுவது ஆகும். விழா நாள் என்பது இதனால் கனவார்வத் திட்டமிடும் நாள் ஆகிறது.

பொங்கல் விழா என்பது பொழுது போக்கு விழாவோ, மகிழ்ச்சி விழாவோ, ஏற்கெனவே கண்ட வளத்துக்கு நன்றி தெரிவிக்கும் விழா மட்டுமோ கூட அன்று; அது இனி வர வேண்டும் வளம் பற்றி முனைப்பாக அவா ஆர்வங்கொண்டு அதற்கு வகை கோலும் விழாநாள் ஆகும்.

இந்திய விடுதலை விழாநாள் ஒரு பொங்கல் விழா நாள்; நாட்டினத்தின் பொங்குமாவளக் கனவார்வத் திட்டநாள் ஆகும். இது மட்டுமோ? இந்தியா ஒரு நாடு மட்டுமன்று; உலகினுள் ஓர் உலகு; ஒரு குட்டி உலகு; மனித இன நாகரிக வளத்திற்கே வழிகாட்டியான ஒருநாகரிகவளத் தேர்வுப் பண்ணை. இதனால், சரியான முறையில் கொண்டாடப்பட்டால், இந்திய நாட்டு விடுதலை விழாநாள் இந்திய நாட்டின் வளத்துக்கு வழிகாட்டும் விழாநாள் மட்டுமன்று; மனித உலகின் வளத்துக்கே வழிகாட்டும் நாள் ஆகும்.

இந்தியாவுக்கு விடுதலை பெற்றுத் தந்த காந்தியடிகள் இந்தியாவின் தந்தை மட்டுமல்லர், அவர் மனித இனத்துக்கே மாணிக்கமாவர் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அவர் உரிமைச் சேயான முன்னாள் இந்திய முதல்வர் சவகர்லால் நேரு இந்திய மாமணி மட்டுமல்லர்; ஆசியாவின் சோதி, அகில உலகின் பெருந்தலைவர்களுள் ஒருவராக விளங்கியவர் என்பதும் இங்கே குறித்துணர வேண்டிய செய்தி ஆகும்.

### விடுதலை வரலாறு என்பது இந்திய வரலாறே; தமிழக வரலாறே!

இந்திய விடுதலை நாளில் நாம் விடுதலையைக் கொண்டாடினால் போதாது. விடுதலை வரலாற்றுக் காவியத்தை ஆய்ந்து கற்க வேண்டும் நாள் அது. எல்லாரும் பொதுவாகக் கருதுவது போல், அது காங்கிரசின் இயக்க வரலாறு மட்டுமன்று; பல்வேறு அரசியல் கட்சிகளின் வரலாறுகள் மட்டும் கூட அன்று. நாட்டின் விடுதலைப் போராட்டத்தின் முன்னோடியலையாக 1857-ல் நடைபெற்ற இந்தியப் புரட்சியை ஆய்ந்து கண்டார் வீரசவர்க்கார். அதனுடன் விடுதலை இயக்க வரலாறு தொடங்கினார் அவர். ஆனால், மற்றொரு பெருந்தலைவர், சிலம்புச்செல்வர் சிவஞான கிராமணியார், அதனினும் முற்பட்ட மூல அலைகளாக வேலூர் போராட்டத்தையும், ஐதர் - திப்புவின் மைசூர் போராட்டத்தையும், பாஞ்சாலங்குறிச்சிக் கட்டப்பொம்மன் போராட்டத்தையும் துருவி ஆய்ந்து மக்கள் மனக்கண்முன் நிறுத்தியுள்ளார்.

இந்திய விடுதலைப் போராட்டத்திலேயே ஓர் உயிர்ப் போராட்டமாயமைந்த வான் புகழ் வள்ளல் வ.உ. சிதம்பரனாரின் கப்பல் போராட்டத்தை இந்தியாவின் நினைவுக்குக் கொண்டு வந்தவரும் அவரே!

கட்டப்பொம்மன் போராட்டத்துக்கும் முற்பட்ட புலித்தேவன் போரெழுச்சியை ஆய்ந்து கண்டுரைத்த தலைவர்களும் உண்டு.

சிலம்புச் செல்வர் சிலப்பதிகாரத்தையே இந்தியாவின்— ஒரு நாட்டின் அல்லது தேசியக் காப்பியமாகக் கண்ணகியையே விடுதலைப் போர்களின் ஒரு முன்னோடி முரசமாகக் கருதினார்.

இந்தியாவின் ஆன்மீக விடுதலை இயக்கம் தொடங்கியது இவற்றிலன்று; உபநிடதங்களிலேயே தொடங்கி விட்டது என்று கருதினார், இந்தியாவின் தந்தையான காந்தியடிகள்.

### கருதிக் காண வேண்டிய கருநிலை உண்மை

இந்திய விடுதலை நாளன்று நாம் கருதிக் காண வேண்டிய மற்றுமொரு பேருண்மை உண்டு.

இந்தியாவின் விடுதலை வரலாற்றை நாம் முழுமையாகக் காண வேண்டுமானால், இந்தியாவின் வரலாறு முழுவதையுமே ஒரு புதிய கண்ணோட்டத்துடன் ஆய்ந்து உணர வேண்டும்.

இந்தியாவின் விடுதலைப்போர் வெள்ளையராட்சியை மட்டும் எதிர்த்த போர் அன்று. வெள்ளையருக்கும் முன்னும் அயலார் இந்தியாவின் மீது படையெடுக்கவில்லையா? இந்தியரை அடிமையாக்கவில்லையா? உண்மையில் இந்தியாவின் பகைவர் வெள்ளையரோ, இந்தியாவின் மீது படையெடுத்து வந்த பிற அயலாரோ அல்லர். அப்படையெடுப்புகளுக்கு வழிவகுத்த, உதவிய இந்தியாவின் வலிமைக் கேட்டுப் பண்புகளே இந்தியாவின் உண்மைப் பகைப்புலம் ஆகும்.

இப்பண்புக் கேடுகள் எல்லாம் நம் அரசியல் விடுதலை பெற்ற அன்றே போய்விட்டனவா? இல்லை என்பதை நாம், நம் வாழ்வுப் போக்கை ஒரு சிறிது நோக்கினாலும் அறியலாம்.

ஒற்றுமைக் கேடு, சாதி மத வேறுபாட்டுப் பூசல், மூட நம்பிக்கைகள், சமுதாயத்திலே உரிமையுடையவர் — உரிமையற்றவர்—தேவைக்கே செல்வமற்று உழைத்தும் உணவு

பெறுதவர் — உழையாமலே தேவைக்கு மேல் பெற்று நாட்டுக்குச் சுமையாக வாழ்பவர்—இத்தகைய வேறுபாடுகள் அடிமைத்தனத்தால் வளர்புவை மட்டுமல்ல அடிமைத்தனத்தை வெற்றிலை பாக்கு வைத்து அழைப்பவையும் இவையே ஆகும்.

இவற்றை நீக்குவதே, நீக்கப் பாடுபடுவதே விடுதலைக்குப்பின் நடத்தப்பட வேண்டிய மெய் விடுதலைப் போராட்டம் ஆகும்.

### நாட்டின வாழ்வின் அடிப்படைப் பண்புவளர்ச்சி

விடுதலை நாட்டினத்தின் உடலானால், நாட்டின உணர்வு (தேசிய ஆர்வம்) அதன் உயிராகும். விடுதலை வரலாறு என்பது நாட்டின உணர்வு வரலாற்றின் ஒரு பாகமேயாகும். பல நாடுகளுக்கு விடுதலை வரலாறு கிடையாது. ஆனால், எல்லா நாடுகளுக்கும் முன்னே, பின்னே நாட்டின் உணர்வு வரலாறு ஏற்பட்டு விடும். விடுதலையும், பல சமயம் விடுதலைப் போராட்டம் தூண்டும் வகையில் அடிமைத்தனம் கூட, நாட்டின உணர்வை வளர்த்துப் பெருக்கும்.

நாட்டின் உணர்வு வரலாற்றின் ஒரு பகுதியே அரசமைப்பு வரலாறு (Constitutional History ) ஆட்சி முறை வரலாறு (Administration and History of Administration) ஆகியவை.

இந்தியாவின் வரலாறு இன்னும் சரிவர எழுதப்படவில்லை. அது பெரும்பாலும் அயலாட்சி வரலாறாகவே இன்னும் இருந்து வருகிறது. விடுதலை இயக்க வரலாறோ, அரசமைப்பு, ஆட்சியமைப்பு வரலாறுகளோ, நாட்டுணர்வு வரலாறோ இன்னும் பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் கனவுகூடக் காணாதவை. நாட்டின உணர்வு நம் புதிய அரசுகளை இயக்கி வந்துள்ளனவேயன்றி, அயலாட்சிக் கால, அயல் மொழியாட்சிக் கால ஆட்சி வகுப்பை இன்னும் தொடவேயில்லை.

இந்தியாவின் நாட்டின உணர்வு பற்றிய வளர்ச்சி வரலாற்றில் சேர மன்னர் காலம், சோழ மன்னர் காலம், விசயநகரப் பேரரசுக் காலம், சிவாஜி காலம் ஆகியவற்றின் பங்கு வருங்கால வரலாற்றுப் புத்தாய்வாளரால் காண வேண்டிய ஒன்று ஆகும்.




### நாட்டின வாழ்வின் வருங்கால வளத்திட்டம்

நாட்டின வாழ்வு என்னும் தோட்டப் பயிர் வளத்துக்கு அடிநிலம் நிகழ்காலமே. வரலாறு இதன் ஆய்விலிருந்தே தொடங்க வேண்டும். இன்றைய இந்திய வரலாற்றாசிரியரிடம் நாம் இதைக் காண முடியவில்லை. அவர்கள் இறந்த காலத்திலிருந்தே தம் கற்பனை வரலாறு தொடங்குகின்றனர். ஆயினும் நிகழ் காலத்துக்கு விளக்கம் தருவது இறந்த காலமே. வரலாற்றின் இரண்டாம் பிரிவு இதுவே. வரலாற்றுப் பயிருக்கு இந்த இறந்த கால ஆய்வு வேரும், உரமுமாய் அமைகிறது. இந்த இறந்த காலத்தின் கருவிலிருந்து நிகழ் காலத்தில் வளர்ந்த நாட்டுணர்வே அப்பயிருக்கு நீராய்க் காற்று மண்டலமாய் அமைவது. ஆனால் பயிரின் பயிர்ப்பகுதி, வாழ்பகுதி நிலத்துக்கு மேலேயே காணப்படுவது போல, வரலாற்றின் உயிர் நாட்டினத்தின் வருங்கால வளநோக்கேயாகும்.

வரலாற்றாசிரியர் இன்னும் இந்நோக்கை வளர்க்கவில்லை; வளர்க்க எண்ணவில்லை.

நம் நாட்டின் இறந்தகாலப் பண்பு வளர்ச்சி, இயல் அல்லது விஞ்ஞான வளர்ச்சி, கலை வளர்ச்சி இவற்றின் ஆய்வே நம் வருங்கால வள ஆக்கத் திட்டங்களின் வேர் முதல், கரு முதல். வெளியுலகின், பிற நாடுகளின் வளர்ச்சியை ஆய்ந்து அதனுடன் இயைப்பதே அதன் நிகழ்கால வளர்ச்சி. இந்த இரண்டின் மீதும் கட்டியெழுப்பப் படுவதே வருங்கால விஞ்ஞானம், வருங்கால வளம். இது, நம் நாட்டை வளப்படுத்துவது நமக்கு அரைப் பெருமை. இதுவே மற்ற நாடுகளையும், உலகத்தையும் மற்ற நாடுகளுடன் நின்று கொடுக்கல் வாங்கல் போட்டியிட்டு வளர்க்குமேயானால், அந்நிலை நம் நாட்டின் முழுப் பெருமை, அதன் பொங்கு மாவளம் ஆகிவிடும்.



**விடுதலையின் பயன் வாழ்வின் பொங்கல். அதை அடையாவிட்டால், விடுதலைக்கு நம் மாவீரர் கொடுத்த விலை வீணேயாகும்.**

நம் விடுதலைப் போராட்டம் நமக்குத் தர வேண்டும் படிப்பினைகளை நாம் ஆய்ந்து காண வேண்டும். எவ்வளவு கல்லடி, குண்டடி பெற்று, எத்தனை சிறைத் தண்டனை, தூக்குத் தண்டனை, எத்தனை குருதி சிந்தி நம் முன்னோர் நமக்கு இந்த விடுதலையை வாங்கித் தந்தார்கள் என்பதை நாம் மறத்தல் கூடாது. இவ்வளவு விலை கொடுத்து அவர்கள் வாங்கித் தந்த விடுதலையை நாம் உடல் குனியாமல், உறுப்பு அலங்காமல் வாளா அனுபவித்துக் கொண்டிருந்தால் மட்டும் நாம் அவ்வீர முன்னோர்களின் வழித் தோன்றல்கள் ஆகிவிடுவோமா?

விடுதலை என்பது நல் வாழ்வுப் பயிரின் விதை. பயிர் வளர்க்க விதையைப் பயன்படுத்தாமல், அதை அழித்து நாம் வாழலாமா?

புலிக்குப் பிறந்த பூனையாய், மலையின் மரபில் வந்த மண்ணாங்கட்டியாய் நாம் வாழ்வதா?

விடுதலை என்பது நாட்டினத்தின் உயிர்நிலை. ஆனால், அதுவே நாட்டினத்தின் குறிக்கோள் அன்று. விடுதலை மட்டுந்தான் நாட்டினத்தின் குறிக்கோள் என்றிருந்தால், நாம் விடுதலை பெற்றுவிட்ட பின் சும்மா இருந்துவிடலாம். ஆனால், விடுதலை நாட்டின வாழ்வின் தொடக்கம்; முடிவன்று; அது நாட்டின வாழ்வின் வளமன்று; வளத்திற்கான ஒரு கருவி மட்டுமே.

விடுதலை பெற்ற நாட்டில் வாழ்பவர் எல்லாம் விடுதலை வாழ்வுடையவர் ஆய்விடமாட்டார். விடுதலையை நாம் வாழ்க்கை வளமாக, நாட்டினப் பெருமையாக, நாட்டினப் பண்பாடாக மாற்ற வேண்டும். அதுவே விடுதலை பெற்றதன் பயன்.



விடுதலை என்பது காசுமுறி. அதைப் பொருளகத்தில் கொடுத்துப் பணமாக்காமல், பற்பொடி வைத்து மடக்கப் பயன்படுத்துவதா?

நாட்டின் பெருமை அதன் அளவிலோ, மக்கள் தொகையிலோ இல்லை. அதன் மக்கள் வாழும் வளத்தில், பண்புயர்வில், பிற நாடுகளுக்கு வழிகாட்டியாக நின்று மனித நாகரிக வரலாற்றில் நாம் பெறும் இடத்திலேயே அது அமைந்து கிடக்கிறது.

பெரிய குடும்பத்தில் பிறந்த பிள்ளைகள் அப்புகழ் நிழல் கடந்து எளிதில் பெருமை நாட்டிவிட முடியாது என்று கூறப் படுவதுண்டு. நம் இந்தியாவகையில் இது முற்றிலும் உண்மை என்றே கூறிவிடலாம். உலகின் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாக, அறிவில்—செல்வத்தில்—ஆற்றலில்—கலை, நாகரிகத் துறைகளில் முதல் நாடாக விளங்கியது இந்தியா. இன்றோ, பல துறைகளில் கிட்டத் தட்ட கடைப்பட்ட நிலையில் இருக்கிறோம். பல துறைகளில் பத்தாமிடத்துக்குப் பன்னிரண்டாமிடத்துக்குப்போட்டியிட வேண்டியவர்களாயிருக்கிறோம்.

இந்தக் கண்ணோட்டத்துடனே இந்திய இளைஞன், இளநங்கை ஒவ்வொருவரும் இந்திய வரலாற்றை, இந்தியாவின் மொழி இலக்கிய, கலை, சமய வரலாறுகளைக் கற்க வேண்டும். தற்று, உலக நாகரிகப் பந்தய ஓட்டத்தில் இந்தியா அடைந்த பெருந்தோல்விகளுக்குக் காரணமான தீங்குகளைக் கண்டு பிடித்து அவற்றை நீக்க வகை காணவேண்டும்.

விடுதலை நாள், குடியரசு நாள் ஆகிய விழா நாட்களில் நாம் இந்நற் பணிகளைத் தொடங்கிவைக்க வேண்டும்.

## ஏன் இந்தப் பொருந்தா நிலை?

உலக வாழ்வில் நம்மைவிட மிகப் பிந்தி வாழ்க்கை தொடங்கியவர்கள், நம்மைவிட மிக மிகக் குறைந்த வளமுடையவர்கள் நம்மை முந்திக்கொண்டு போயிருக்கிறார்களே! அவர்கள் முற்போக்கின் மறை திறவுகள் எவை என்பதை நாம் அறிய வேண்டும்.

உலகத்துக்கெல்லாம் செல்வமும், நாகரிகமும், கலையும் அறிவும் வழங்கிய நாடு இந்தியா. எல்லா நாடுகளுக்கும் உணவும், உடையும், தொழில் வளங்களும் அணி மணிப் பூண்களும் வழங்கிய நாடு தான் இது. ஆனால், மொழியில், கலையில், அறிவியலில், தொழிலில் எதிலும் பார்த்துப் பார்த்துப்பின் பற்றும் நிலை, கெஞ்சி வாழும் நிலை ஏற்பட்டதேன்? அயல் நாட்டுப் பொருள்தான் நல்ல பொருள் என்ற நிலையும், அந்த நல்ல பொருளும் இந்நாட்டினர்களுக்கு மட்டும் எட்டாப் பொருள் என்று மக்கள் ஏங்கித் தவிக்கும் நிலையும் இன்று வளர்ந்திருப்பதேன்? இவற்றுக்கு நாம் விடைகாண வேண்டும். அந்த விடையின் மீதே நம் நாட்டுப் பணி, நாட்டுத் திட்டம் அமைக்கப்பட வேண்டும்.

நம் வருங்கால நாட்டுவளம் என்னும் கட்டடத்தைக் கட்டியமைக்க நமக்கு வேண்டும் செங்கற்களாக, மரப்பாளங்களாக, காரைச் சாந்தாகப் பயன்பட வேண்டியவை இவை.

## பேரறிஞர் அண்ணாவின் சிவாஜி நாடகம் தரும் படிப்பினை

ஒரு நாட்டின் பெருமைகள் கூட அந்நாட்டின் நல்வாழ்வு ஆகமாட்டா என்பதைப் பேரறிஞர் அண்ணா தம் சிவாஜி நாடகம் மூலம் இந்திய நாட்டுக்கு அளித்துள்ள அரசியற் படிப்பினை காட்டுகிறது.

சிவாஜி கால இந்தியாவில் உலகச் செல்வத்தில் முக்கால் பாகம் இந்தியாவிலேயே குவிந்து கிடந்தது. இந்தியாவின் தொழில் வளத்தை நம்பியே உலகம் அன்று வாழ்ந்தது. இந்தியாவின் கப்பல்களே அன்று உலகத்தின் தலைசிறந்த கப்பல்கள். சிவாஜி தன் நிலப்படையாலும், பெற்ற வீரத்தாலும், வட திசையில் முகலாயச் சக்கரவர்த்தியின் படைகளையும், தென்னகத்தின் சுல்தான்கள் படைகளையும் துரத்தித் துரத்தியடித்தான். அவன் கப்பற்படை போர்ச்சுக்கீசியரையும், டச்சுக்காரரையும், ஆங்கிலேயரையும் மராட்டிய நாட்டின் பக்கம் அணுகவொட்டாமல் தடுத்தது. அவன் பக்தியையும், ஒழுக்க உயர்வையும், தூய வீரத்தையும், கண்ட சக்கரவர்த்தியாகிய ஔரங்கசீப்பே அவனைத் தன்னோடொத்த சக்கரவர்த்தியாக ஏற்றுக் கொள்ள இசைவுதர ஆர்வங்கொண்டார்.


ஆழ்வார்கள், நாயன்மார்கள் வழிவந்த மாபெரும் பக்தன் தான் சிவாஜி. அவர்கள் பாடலைப் பாடிக் கொண்டுதான் அவன் வாட்போரிட்டான். மக்கள் அவனை நேசித்தனர். மாற்றார் அவனை மதித்தனர். ஆயினும், சதாராவில் ஒரு தடவை, வேலூரில் ஒரு தடவை, தஞ்சையில் ஒரு தடவையாக மூன்று தடவை அவன் முடி சூட்டி மூவரசாள முயன்றும், மக்களின் மட மூடநம்பிக்கைகளின் ஆட்சி காரணமாக அவ் வீரப் பெருமகனால் இந்தியாவின் விடுதலையாட்சியை, நல்லாட்சியை நிறுவ முடியவில்லை.

பேரறிஞர் அண்ணா அவர்களின் இந்த அரசியற் பாடத்தைத் தமிழரேயன்றி, மராட்டியரும் பிற இந்தியரும் அறிந்து புது நாட்டின வாழ்வு வகுக்கும்படியான சூழல் விடுதலை நாளில் உருவாக வேண்டும்.

## முப்பால் முதல்வர் கண்ட கனவு

முடியாட்சிக் காலம் மலையேறிவிட்டது. இது குடியாட்சிக் காலம். நம் ஆட்சியை நாமே அமைத்து, நம் ஆட்சியாளரை நாமே தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டிய கடும் பொறுப்பான நிலை நமக்கு வந்து சேர்ந்திருக்கிறது. வீடுகட்ட நினைப்பவன் பொருளைச் சேர்த்து வைத்துக் கொள்வதுடன் தக்க பொறியரைத் தேடித் திட்டமும், தக்க கொத்தரை—தச்சரைத்தேடி அவர் உதவியும் பெறுவது போல, நம் வருங்கால வளத்தை, நம் ஆட்சியைக் கட்டமைக்க வேண்டிய நாம் நம் நாடு பற்றி, நம் நல்லாட்சி முறை பற்றி, கல்வி பற்றி, கலை பற்றி, நம் தேவைகள், நிலைகள்பற்றி ஆட்சித் தலைவரை, அறிஞரை, கலைஞரை, நம் சமயத் தலைவரை அணுகித் தக்க அறிவுரை தருமாறு அவர்களைப் பணிக்க வேண்டும்.

இக்காலத்தில் மக்கள் தான் மன்னர். இனி நம் நாட்டு மக்கள் எவரையும் கும்பிட்டுப்



பணிந்து வாழ்வது தகாது. அறிஞர், கலைஞர், ஆட்சியாளர் ஆகிய எல்லாரையும் தாமே மன்னராயிருந்து மக்கள் உத்தர விட்டு வேலை வாங்க வேண்டும். அவர்களைக் காண நடுங்கும் நிலை இருக்கக் கூடாது.

நம் பழந்தலைவர்கள், அறிஞர்கள் அயலாட்சி, முடியாட்சி, ஆகியவற்றை வெறுத்தனர். தன்னாட்சி, குடியாட்சி ஆகிய வற்றைக் கனவு கண்டனர். ஆனால் இன்றைய நம் அறிஞர்கள், நம் ஆட்சியாளர்களோ கூடக் குடியாட்சி தாண்டிப் பொது நெறியைப் (சமதருமத்தை), பொது நெறி தாண்டிச் சம நெறியை (பொதுவுடைமையை) இவற்றையும் தாண்டித் தாய்மை யாட்சி அல்லது வாழ்நல ஆட்சியை (Welfare Government) நாடிக் கனவு காணத் தொடங்கி விட்டனர்.

மக்களிடையே மக்களறிஞரின் கனவு குடியாட்சி ஆகும்.

ஆட்சியாளரிடையே ஆட்சியறிஞரின் கனவு தாய்மை ஆட்சி அல்லது வாழ்நல ஆட்சி ஆகும்.

இந்த இரண்டு கனவுகளும் இணைந்த கனவாட்சி ஒன்று உண்டு. அதுவே பொங்குநல ஆட்சி, திருவள்ளுவர் கண்ட அருளன்பாட்சி.

தன் வருங்காலக் காதற் கணவன் இப்படி இருக்க வேண்டுமென்று நங்கை கனவு காண்கிறாள், கனவு ஓரளவேனும் நிறைவேறுமோ என்று ஏங்கித் தவங்கிடக்கிறாள்.

தன் வருங்காலக் காதற் காரிகை இப்படி இப்படி இருக்க வேண்டுமென்று நம்பியும் கனவு காண்கிறான். கனவு ஒரு சிறிதளவேனும் நிறைவேறுமோ என்று ஏங்கித் தவங்கிடக்கிறான்.

இருவரும் சந்திக்கின்றனர்.

'ஆகா! நான் கண்ட கனவெலாம் கடந்து நிற்கும் காளை இவன் அல்லனோ?' என்று மகிழ்கிறாள் அவள். 'ஆகா! நான் கண்ட கனவெலாம் கடந்து நிற்கும் காரிகை இவள் அல்லவோ?' என்று மகிழ்கிறான் அவன்.



**நாட்டின் முன்னேற்றத்துக்கு நம் முதலாளிகள், தொழிலாளர்கள் ஆகிய இருதரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும். இருவரும் ஒற்றுமைப்படாவிட்டால் நாடு நாசமாகிவிடும். தொழிலில் முன்னேற்றம் அடைந்த பிறகே இங்கிலாந்தில் சமதர்மம் வந்தது. நாட்டின் தொழில்களை வளர்ச்சியுறச் செய்த பிறகுதான் நாம் சமதர்ம முறையில் பங்கீடு செய்யும் முயற்சியில் இறங்க வேண்டும்.**

**நாட்டின் வலிமை நமது ஒற்றுமையால் மட்டும் அமைந்துவிடாது; நாளையத் தினம் நமது கடுமையான உழைப்பால் உருவாகும் முன்னேற்றமும் வளர்ச்சியுமே வலிமை மிக்க இந்தியாவை உலகுக்கு உருவாக்கிக் காட்டும்.**

—சர்தார் படேல்.

பொன்மலர் மணமும் பெற்றது போன்ற அரிய பெரிய பொருத்தம் இது.

குடிமக்கள் கனவார்வ அவாக்கள் கடந்த பண்புடைய அரசும் ஏற்பட்டு, அரசின் கனவார்வ அவாக்கள் கடந்த குடிமக்கள் பண்பும் அமைந்து விட்டால்—இந்த இணைவு மேற்கூறப்பட்ட பொன்மலர் மணம் பெற்ற இணைவினையே நினைவுபடுத்தத் தக்கது.

குடியாட்சி நலமும் வாழ்நல ஆட்சியின் நலமும் முற்றிலும் ஒருங்கிசைந்த இத்தகைய மணந்திகழ் பொன்மலர் போன்ற ஆட்சி முறையே திருவள்ளுவர் பெருமான் கனவு கண்டு, முப்பால் ஏட்டின் மூலம் நமக்கு அறிவித்துச் சென்றுள்ள 'பொங்கல் ஆட்சி' ஆகும்.

ஆட்சி எப்படி இருக்கவேண்டும் என்ற இலக்கணம் மட்டுமன்றி, மக்கள் எப்படி இருக்க வேண்டும் என்ற இலக்கணமும் ஒருங்கே கூறும் உலகின் ஒரே அரசியல் ஏடு திருக்குறள்!

### இந்தியாவின் வருங்கால வளத்தின் மறை திறவு

இந்தியா, நாகரிகத்தில் பழம் பெருமை சான்ற நாடு என்பதை எவரும் ஒப்புவர். ஆனால், ஆயிரக் கணக்கான ஆண்டுகளாகவே அது ஆட்சியிலும் மொழியிலும், சமயத்திலும் கலையிலும், அறிவியலிலும் விடுதலை இழந்தே வாழ்ந்து வந்திருக்கிறது. இன்று அது பெயரளவுக்கே விடுதலை, அதுவும் அரசியல் விடுதலை மட்டுமே அடைந்துள்ளது.

உண்மையான முழு விடுதலையும், பழம் பெருமை தாண்டிய வளமும் இந்தியா பெற்று உலக நாயகமாக வயங்க வேண்டுமானால் எல்லாப் பெருமைகளும் இருந்தும் இந்தியா ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக அடிமைப்பட்டு, அடிமைப்பட்டு அவதியுற்றதன் காரணத்தை நாம் உணர வேண்டும்.

இந்தியாவின் மற்றப் பெருமைகள் எல்லாம் அதற்குப் பெருமை தருபவை மட்டுமே; பெருமை காப்பவையோ, பெருமை வளர்ப்பவையோ அல்ல—இந்தியாவுக்குப் பெருமை தருவதுடன் நில்லாது, அதன் பெருமை காக்கவும், அப்பெருமையை இன்றும், இன்னும் இனிமேலும் வளர்க்கவும் வல்ல ஆற்றலுடைய செல்வம் ஆதி வேதமாகிய முப்பாலோடு, தமிழ் மொழி, தமிழிலக்கியம் ஆகியவை மட்டுமேயாகும்.

பல்லாயிரம் ஆண்டுகளாகத் தமிழ் மக்களின் இன உள்ளத்துக்குள்ளே பெட்டிக் கனவுகளாகப் பூட்டி உறையிட்டுச் சுருட்டி வைக்கப்பட்டுள்ள திருவள்ளுவரின், தமிழரின் இப் பொங்கலாட்சிக் கருத்தை இந்தியாவின் அறிஞர் பெருமக்கள் - தமிழறிஞர் பெருமக்கள் உதவியுடன் திறந்து எடுத்துக்கண்டு பயன் படுத்துவார்களானால், தமிழகம் இந்தியாவிலும், இந்தியா உலகிலும் நாகரிகம் வளர்த்த தனது பழம் பெருமை தாண்டிப் புதுப் பெருமையை இன்றும் இனியும் நாட்டல் உறுதி என்னலாம்!

# நல்ல காலம் பொறக்குது!

வளம் கொழிக்க மின்சக்தி உற்பத்திப்பணியில்... **BHEL**

சுதந்திரமடைந்த இருபத்தைந்து ஆண்டுகளில் இந்தியா வியக்கத்தக்க முறையில் முன்னேறியிருக்கிறது. பல கனரகத் தொழிற்சாலைகளை நிறுவியதன் பயனாக, நம் நாடு இரும்பு (எஃகு), கன இயந்திரங்கள் முதலியவைகளில் அநேகமாக தன்னிறைவு அடைந்துள்ளது. அதேபோல் ரசாயன, உரப்பொருள்களிலும், பெட்ரோலியப் பொருள்களிலும் பெருவாரியாக சுயநிறைவடையும் தருவாயிலுள்ளது. எல்லாவற்றையும்விட, பசுமைப் புரட்சியின் பயனாக, விவசாயத்துறையிலும், மிகத்தீவிர முன்னேற்றம் கண்டு, நாட்டுக்குப் போதுமான உணவுப் பொருள் உற்பத்தியையும் பெருக்கியிருக்கிறது.

அத்துடன் இவையெல்லாவற்றையும் இயக்கவல்ல ஜீவநாடியான மின்சக்தியை போதுமான அளவில் உற்பத்தி செய்ய அதிக கவனத்தைச் செலுத்த வேண்டிய அவசியமேற்பட்டுள்ளது.

**BHEL**-திருச்சி ஹை பிரஷர் பாய்லர் பிளான்ட், ஹைதராபாத்திலும், ஹரித்துவாரிலும் உள்ள தன் சகோதர நிறுவனங்களுடன் சேர்ந்து தொழில் விவசாய வளம்பாட்டுக்கு ஆதாரமான மின்சக்தியைப் பெருக்கும் இந்த தேசீய முக்கியத்துவமான பணியில் முழுமூச்சுடன் முனைந்து செயல்படுகிறது.

## பாரத் ஹெவி எலக்டிரிகல்ஸ் லிமிடெட்,

(இந்திய அரசின் ஓர் நிறுவனம்)

யூனிட்: ஹை பிரஷர் பாய்லர் பிளான்ட், திருச்சிராப்பள்ளி-14.

பதிவு அலுவலகம்: 5, பார்லிமெண்ட் தெரு, புது டெல்லி-1



BHEL / CPO-01 / 72-73

# இந்திய விடுதலை நாள்

## இனிய நினைவுகள்

"ஆடுகின்ற மயிற்குழுக்காள்!
ஆடல் நுட்பம்
அருங்கலையை முதலீன்ற
அன்னை எங்கே?
பாடுகின்ற புள்ளினங்காள்!
பண்ணின் பண்பைப்
பாரினுக்குப் பரிந்தளித்த
பாவை எங்கே?
ஓடுகின்ற புயல்திரள்காள்!
உரிமை நீர்மை
உலகச்சகோ தரமென்ற
ஒருத்தி எங்கே?
தேடுகின்றேன், தேவிஎங்கே?
தேவி எங்கே?
திரிகாற்றே! நீயாதல்
செப்பாய் கொல்லோ?"

அன்பின் திருவுருவாம் அன்னையைத் தேடி அலைகிறான், துடிப்புள்ள ஓர் இந்தியன். காடு மேடுகளையெல்லாம், கழனி வரப்புகளையெல்லாம், கடந்தோடுகிறான்; எதிர்ப்பட்ட பொருள்களையெல்லாம் ஏக்கத்தோடு கேட்டுக் கொண்டே தேடுகிறான்; தன் தாயின் புகழைச் சொல்லிக் கொண்டே ஓடுகிறான்.

இந்தியத் தாய் தவிர, மற்றத் தேவியர் எல்லாம் 'உலகச் சபையில்' மதிப்புடன் வீற்றிருக்கும் காட்சியைக் காண்கிறான்.

"அரியிருக்கை யேறிமுடி
அணிந்துயர்கோல் தாங்கி,
ஆண்மையொடு வீற்றிருக்கும்
அரசிகளைக் கண்டேன்;
அரிவையர்கள் முகம்நோக்கி
யார்யார்என் றுணர,
அருகணைந்தேன்; தெரிந்தவரும்
அருளினர்இவ் வாறே"

அங்கே, கம்பீரமாகக் கொலு வீற்றிருந்தவர்கள் யார் யார் என அறிமுகம் செய்யப் பெறுகின்றனர்.

"நானாநாற் பத்தாண்டில்
நலமுற்ற ஜப்பான்
நாயகிநான்; பெருநதிகள்
நானிலத்தில் பூண்டே
ஆனாத வளமுடைநான்
அமெரிக்கச் செல்வி;
அடுக்கடுக்காய்க் கலைவினைகள்
ஆக்குஜெர்மன் யானே;
கானாடுங் கனிமொழியும்
ஓவியமும் காதல்
கவின்பிரான்சின் திருமகள்யான்,
காண்கவென முறையே
தேனூறும் மலர்வாயால்
தெரிவித்தார் தம்மைச்
சிரித்தொருத்தி முடிவினிலே
செப்பியதைக் கேண்மோ!"

ஆம், ஆணவச் சிரிப்போடு தன்னைத் தட்டிக் கேட்கும் தைரியம் உலகில் யாருக்கும் இல்லை என்ற இறுமாப்போடு தனதுசாம்ராஜ்ய ஆட்சிக்கு எப்போதும் அழிவே இல்லை என்ற மமதையோடு— பிரிட்டன் மாது பேசுகிறாள் :

"என்னருமை இந்தியனே!
என்னையறி யாயோ?
என்னாட்சிக் கதிர்மறைதல்
எப்பொழுது மில்லை;
என்னிலத்தின், என்கடலின்,
என்வெளியின் பரவல்
எவர்க்குண்டோ? இவ்வுலகில்
எங்குமென தாணை;
உன்னலத்தின் பொருட்டாக
உன்னையுமே யாளும் ஓரரசி"

எத்தகைய அறிமுகம்! இந்திய மக்களின் நன்மைக்காக! பிரிட்டன், இந்திய நாட்டையும் ஆள வேண்டியுள்ளதாம்! ஏகாதிபத்தியவாதத்தின் செருக்கு—மேட்டுக் குடிமனப் பான்மை—அதில் எதிரொலிக்கிறது! ஆதிக்க முடைநாற்றம், அதில் அப்பட்டமாக வீசுகிறது!!

இதைக்கேட்ட இந்தியன் உள்ளம், எவ்வளவு புண்பட்டிருக்கும்? எப்படிக் கொதித்திருக்கும்? அடிமையில் கட்டுண்டு வாடிய இந்தியத் தாயின் நிலையை நினைத்து நினைத்துக் கண்ணீர்வடிக்கிறான். அந்த அழுகையிலேயும், தன் தாய் நாட்டின் பழம் பெருமையை எண்ணி எண்ணி ஏற்றம் பெறுகிறான்: அப்போது தான்,

"ஆடுகின்ற மயிற்குழுக்காள்!
ஆடல் நுட்பம்
அருங்கலைகள் முதலீன்ற
அன்னை எங்கே?"
பாடுகின்ற புள்ளினங்காள்!
பண்ணின் பண்பைப்
பாரினுக்குப் பரிந்தளிக்கப்
பாவை எங்கே?"

என்று, அவலப்பண் பாடத் தொடங்குகிறான்.

" இடமகன்ற இந்நிலத்தில்
என்தாய் எங்கே?
எங்கே?என் தாயெங்கே?
எங்கே? எங்கே?"

என்று துடிதுடித்துக் கேட்கிறான்.


அவன் கேள்வியில் அலறல் எங்கும் எதிரொலிக்கிறது! பதில் சொல்வார் யாரும் இல்லையா?— ......நேரம் கழிந்து கொண்டே சென்றது. இறுதியில், ஏதோ ஒரு மூலையிலிருந்து பதில் வந்தது; மிகவும் ஏக்கமான குரலோடு, தழுதழுத்த விம்மல் ஒலியுடன், உருக்கமான பதில் வந்தது. உருவம் தெரியவில்லை. ஆனால், குரல் மட்டுமே கேட்டது:--

— — "மைந்தா!
இங்கேஎன் பழங்கதைகள்
இயம்புவதால் என்னே?
என்நிலையோ நிர்வாணம்;
எச்சபையார் ஏற்பார்?
பொங்கார முடிசெங்கோல்
பூண்பதென்றோ போச்சு!
பொலிவுடலும் பொன்உடையும்
புரிஉணவும் போச்சு!



# திரு.வி.க.வின் கனவுக் கவிதை

திரு சி. வேங்கடசாமி





வளமான வளர்ச்சிக்கும்
அதிக உற்பத்திக்கும் சிறந்தவை

# ரோவிமிக்ஸ்

மற்றும்

# ரோவிஸால் ஓரல்




**ரோவிமிக்ஸ்—சாதாரணமாகத் தேவைப்படும் விடமின்களுக்கு :**

உங்கள் கால்நடைகளுக்கு சாதாரணமாகத் தேவைப்படும் விடமின்களை சுலபமாகவும் சிக்கனமாகவும் அளிக்க கனிஜங்களால் கெடாத **ரோவிமிக்ஸ்** விடமின் பவுடர் வகைகளில் ஒன்றைத் தீனியுடன் கலக்கவும்.

**ரோவிஸால்—அதிகப்படியான விடமின்களுக்கு :**

ஒட்டுண்ணிகள் அல்லது தொற்று நோய் பற்றுதல், மருந்து ஊட்டுதல், அதிக சூடு, அதிக குளிர்ச்சி, ஈரம் அல்லது வரட்சி, சிறகுகளை உதிர்த்தல், துரிதமான வளர்ச்சி, ஓர் இடத்திலிருந்து மறு இடத்துக்குக் கொண்டு போதல் ஆகிய காலங்களில், பிராணிகளின் விடமின் தேவை சாதாரண அளவைவிட இரு மடங்குக்கும் அதிகமாகக் கூடும். எனவே, விடமின் அளவை அதிகரிக்க, தேவைக்கேற்ப, பிராணிகளுக்கு ரோவிஸால் ஓரல் கொடுக்கவும்.



தயாரிப்பாளர்கள்:
ROCHE ரோஷ் ப்ராடக்ட்ஸ் லிமிடெட்
28, தார்தேவ் ரோட், பம்பாய்-34WB

கங்காளி; துச்சிலுள்ளேன் ;
கம்பலையே ஆச்சு!
கடும்பசிநோய் முடுக்குகின்ற
கர்மம்என தாச்சு!''

தன் அவல நிலையை, உள்ளத்தை உருக்கும் வகையில் இவ்வாறு எடுத்துரைக்கிறாள், இந்தியத் தாய்.

உலகநாடுகள் பலவும் உரிமைப் பொலிவோடு வீற்றிருக்கும் பேரவையில், அடிமைநாடு, அப்போது எப்படி இடம் பெற முடியும்?

''தன்மானம் இழந்து, ஆங்கில நாட்டு ஆதிக்கத்தில் வாடித் தவித்த நிலைமாறி, விடுதலை பெறும் நன்னாள் எப்போது வருமோ?'' என்ற ஏக்கம், அன்றைய இந்தியத் தாயின் பதிலில் காண்கிறோம்.

மேலும், இந்தியத் தாய், தன் நிலையை விளக்குகிறாள்:—

வடிவினிலே பெரியள்யான்;
வயதினிலே பெரியள்;
வளத்தினிலும். வண்மையிலும்,
மக்களிலும் பெரியள்;
கடியரணில், மலையரணில்,
கடலரணில் பெரியள்;
காலினிலே தளைவந்த
காரணந்தா னென்னே?
படியினிலே இல்லாத
பாழான சாதி
பகுப்புடனே, தீண்டாமை,
பாவையர்தம் அடிமை
கொடியஇவை குடிகொண்டு
கொடிகொடியாய்ப் படர்ந்தே
கொல்லவுடன் பிறப்பன்னைக்
குலைத்ததென்றன் வாழ்வே.

தன் பழம் பெருமைக்குக் கேடு விளைவித்த தீய பண்புகளை, அடியோடு நீக்கும் தொண்டில் ஈடுபடுமாறு, தம் மக்களை இந்தியத்தாய் வேண்டுகிறாள்:

''என்னாட்சி பரிணமிக்க
எழுங்கிளர்ச்சி பலவே,
ஏரார்சு தேசியத்தில்
இருப்பதென்றன் ஆட்சி;
தன்னாட்சி அந்நியத்தைத்
தாங்குவதி வில்லை;
தயையின்றி அந்நியரைத்
தாக்கலிலு மில்லை;
மன்னாட்சி அறநெறியில்
மலர்ந்திடவே வேண்டும்;
மாக்கலைகள் வாழ்விடையே
வளர்ந்திடவும் வேண்டும்;
நன்னாட்டுத் தொழிலரசு
நலம்பெறவே வேண்டும்;
நான்சபையில் வீற்றிருக்கும்
நாள்அந்த நாளே.''

* * *

(மன் ஆட்சி : நிலைபெற்ற ஆட்சி.
கங்காளி : எலும்புருவானவள்)

''தாயின் காட்சி'' என்ற தலைப்பில், ''தமிழ்த் தென்றல்'' திரு. வி.க. அவர்கள் 1931-ஆம் ஆண்டில் இயற்றிய கவிதைக் கனவின் ஒரு பகுதியே, மேலே காண்பது.

அடிமை இந்தியாவின் அவல நிலைமையை—உணர்ச்சிக் கொந்தளிப்பை—கலை நயத்துடன் இக்கவிதை, தமிழ் மக்களுக்கு எடுத்துக் காட்டியது. அன்று மட்டும் அல்ல, இன்றும் கூடத்தான். இந்தியா விடுதலை பெற்ற பின்னும், இத்தகைய கவிதைகள் சாகாவரம் பெற்று விட்டன.

உணர்ச்சித் துடிப்புகளுக்கு அழியாக் கலை உருவம் தரும் ஆற்றல், உண்மைக் கவிஞர்களின் தனிச்சிறப்பு. அத்தகைய கவிஞர்கள் வரிசையில் திரு. வி. க. சிறப்பிடம் பெற்றுள்ளார்.



வறுமைத் தேள் கொட்டினாலும், பழி என்னும் பாம்பு கடித்தாலும் பதறாமல் சலிக்காமல் விடுதலைப் போர் நடத்தியவர் தம் வீரச் செயல்களைப் படிக்கும்போது கோழையும் வீரனாகிறான்; கூனனும் சற்று நிமிர்ந்து நிற்கிறான்.

ஆம். அவர் கண்ட கனவு—கவிதைக் கனவு—பலித்தது. அவர் போன்ற எண்ணற்ற சான்றோர்களின் சீரிய பணி வீண் போகவில்லை. அடிமை இந்தியாவின் விலங்கு முறிந்தது. நாம் விடுதலை பெற்றோம். இந்தியத் தாய், உலகப் பேரவையில் தனிச் சிறப்புடன் வீற்றிருக்கும் காட்சியை, திரு. வி. க. அவர்கள், தமது வாழ்நாளிலேயே காண முடிந்தது. ஆம்! கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி., பாரதியார் ஆகியோர்க்குக் கிடைக்காத வாய்ப்பு திரு. வி. க. வுக்குக் கிடைத்தது.


அதுமட்டுமல்ல: ''பெண்ணின் பெருமை'' வளரத் தொண்டாற்றிய திரு. வி. க. அவர்கள் மனம் மகிழ, உலக நாடுகள் பேரவையின் தலைவியாக ஓர் இந்தியப் பெண்மணி (பிரதமர் நேருவின் சகோதரி திருமதி விசயலட்சுமி பண்டிட்) வீற்றிருக்கும் வாய்ப்பு ஏற்பட்டது.
மேலும் நம் நாட்டுப் பேரறிஞர்கள் பலர் (பிரதமர் நேரு தொடங்கி, திருவாளர்கள் ஆர்க்காடு இலட்சுமணசாமிமுதலியார், இராமசாமி முதலியார், கோவை ஆர். கே. சண்முகம் செட்டியார், ஜி. பார்த்தசாரதி, பெனகல் நரசிங்கராவ், மால்கம் ஆதிசேஷய்யா, இராஜம்மாள் தேவதாஸ் முதலியோர்) உலக நாடுகள் சபையின் பல்வேறுநிறுவனங்களில் சிறப்பாகப் பணியாற்றி உலகப் புகழ் பெற்றுள்ளனர். அண்மையில், பேரறிஞர் அண்ணாவும், கலைஞரும் நடத்திய ''உலகத் தமிழ் மாநாடு'' வாயிலாக, ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற தமிழ் முழக்கம், உலகப் பேரறிஞர்களிடையே ஆக்கம் பெற்று வருகிறது. திருவள்ளுவரின் குறள் உலகெங்கும் பரவி வருகிறது.

1947-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15-ஆம் நாள், இந்தியா விடுதலை அடைந்தபோது, திரு. வி. க. அவர்கள் பெருமகிழ்ச்சி. அடைந்தார். ஆயினும், அம்மகிழ்ச்சியின் ஊடே மனக்குறை ஒன்று நிழலாடியது. திரு ம. பொ. சி. அவர்களை ஆசிரியராகக் கொண்டு, 15–8–1947-ல் வெளி வந்த 'தமிழ் முரசு' இதழில், மிக நுட்பமாக இதைக் கோடிட்டுக் காட்டி, அவர் பின் வருமாறு அப்போது எழுதினார்:—

''பிரிட்டிசு ஆட்சி நம்மை விட்டு அகன்றது உண்மை. ஆனால், சாம்ராஜ்யம் இன்னும் நம்மை விட்டு அகலவில்லை.

முன்னொருகால் வட நாடு சிதறுண்டு வருந்திய போது, அதையும்—முழுநாட்டையும் — பண்படுத்தும் முயற்சி, தென்னாட்டிலிருந்தே எழுந்தது. அம்முயற்சி மீண்டும் காலத்துக்கேற்ற முறையில் எழுவதாக!''

விடுதலை பெற்ற இந்தியாவின் வெள்ளி விழாவைக்கொண்டாடும் இந்நாளில், தமிழ்ச் சான்றோர் திரு. வி. க. அவர்கள் நினைவூட்டிய கருத்துகள், சிந்தனைக்குரியன.



# இந்திய விடுதலை நாள்

**தி. சு. அவினாசிலிங்கம்**

இந்திய விடுதலை வரலாறு ஓர் உணர்ச்சிக் காவியமாகும். பன்னூறு ஆண்டுகளாகப் பல்வேறு நாடுகள் அடிமைத் தளையை அறுத்தெறிந்து விடுதலை பெற்று வந்திருக்கின்றன. பேரரசுகள் பல வாழ்ந்து மடிந்திருக்கின்றன. கிரேக்க, ரோமாபுரிப் பேரரசுகள் அத்தகையவை. நாடுகள் பலவற்றை அடிமை கொண்டு ஆணவத்துடன் ஆண்டு வந்த பேரரசுகள் வலுவிழந்து கிடக்கும் நேரம் பார்த்துக் கிளர்ச்சி செய்து தமது தளையறுத்துக் கொண்ட நாடுகளும் உண்டு.

அண்மைக் கால வரலாற்றில், அப்படி விடுதலை பெற்ற நாடு தான் அமெரிக்காவாகும். இந்த முறையில்தான் பல நாடுகள் விடுதலை அடைந்திருக்கின்றன. ஆனால், இந்தியா விடுதலை பெற்ற விதம் ஒப்புயர்வற்றது; உலக வரலாற்றில் ஈடற்றது; இணையற்றது.

மனித குல வரலாற்றிலேயே முப்பது கோடி மக்களைக் கொண்ட ஒரு சமுதாயம், கத்தியின்றி இரத்தமின்றிக் கனிவு கொண்ட அன்பினால் அந்நியர் ஆட்சியை அகற்றிட முடியும் என்று உலகுக்கு உணர்த்திய உயர் நெறியாளர் ஒருவரை உலகம் முதன் முதலாகக் கண்டது. அன்பு நெறி போதித்த அறநெறியாளர் பலர் அவருக்கு முன்னர் வாழ்ந்தனர். புத்தர், இயேசு, நபி நாயகம் ஆகியோர் அவருக்கும் முந்தியே நன்னெறி காட்டிய நல்லோராவர். அவர்களுக்குப் பின் வந்த ஆற்றலாளர், காந்தியடிகளாவர்.

நமது காலத்தில், இந்தியாவின் மூலை முடுக்குகளிலெல்லாம் அன்பு நெறியையும், அற வழியையும் காந்தியடிகள் போதித்தார். அறிவாளர்கள் கூட அதை அலட்சியம் செய்தனர்; அரைப் பைத்தியக்காரனின் அடிப்படையற்ற கனவு என்று கிண்டல் செய்தனர். ஆனால், சாதாரண மக்கள் அவரைச் சரியாகப் புரிந்து கொண்டதாகத் தெரிந்தது. அவரை நம்பினர்; அவரைப் பின்பற்றினர்; அல்லல் பலவற்றுக்கிடையிலும் அவர் வழியில் சென்றனர்.

அழிவுச் சக்தி மிக்க ஆயுதக் குவியலின் உச்சத்தில் நின்று அகிலத்தையே ஆட்டிப் படைத்துக் கொண்ட ஓர் ஏகாதிபத்தியப் பேரரசை நாம் எதிர்த்து நிற்கலானோம். பயங்கரப் படைகளின் குவிப்பு அங்கே; படைபலம் எதுவுமற்ற பாமரர்கள் இங்கே; ஆனால், காந்தியடிகளோ நமது பலவீனத்தையே நமது பலம் நிறைந்த சக்தியாக்கினார்; பகைவரின் படை பலத்தைப் பலமிழக்கச் செய்தார்.

அவர் கூறினார்: ''அஞ்சாதீர்; ஒன்றுபட்டு நில்லுங்கள். அமைதியைக் கடைப்பிடியுங்கள். மாற்றாரிடம் பகைமை கொள்ளாதீர்; கசப்புக் கொள்ளாதீர். நீங்கள் ஓர் ஆட்சியின் அமைப்பைத் தான் எதிர்த்து நிற்கிறீர்கள்; ஓர் ஆளை அல்ல; இனத்தையுமல்ல; எதிர்த்தரப்பு மக்களையுமல்ல.'' அவரது வார்த்தைகள் மந்திரச் சக்தி பெற்று மக்களை ஆட்டுவித்தன. குறுகிய காலக் கட்டத்திற்குள் நாடே மாறியது. மக்களின் மனத்தில் பெரியதோர் மாற்றம் ஏற்பட்டது. அவர்கள் நிமிர்ந்து நின்றனர்; நேர் வழியில் சென்றனர். புதிய தெம்பு பெற்றனர்; திடம் கொண்டனர்.

அவரது அமைதி வழியும், ஒத்துழையாமை இயக்கமும் அரசாங்கத்தை முடமாக்கிப் போட்டன. ஆத்திரங் கொண்ட அரசினர் போராடிய மக்களைச் சிறையிலே அடைத்தனர்; சித்திர வதை செய்தனர்; அடித்து நொறுக்கினர்; சுட்டுப் பொசுக்கினர். அத்தனை இடர்களையும் மக்கள் ஏற்றுக் கொண்டனர்; எதிர்த்து நின்றனர். பதிலடி கொடுத்துப் பலாத்காரத்தில் இறங்கிட முனையவில்லை. அதனால், அரசின் படையும், துப்பாக்கிக் கருவிகளும் பயனற்றுப் போயின; செயலற்று நின்றன. செய்வதறியாது திகைத்தனர், பிரிட்டிசுப் பேரரசினர். தமது ஆட்சிச் சகடத்தை இந்தியாவில் இனி ஓட்டிட முடியாது என்பதை உணர்ந்தனர்; மக்கள் சக்திக்கு மதிப்பளித்தனர்; ஆட்சி மன்றம் விட்டு இறங்கினர். நாட்டைவிட்டு வெளியேறினர்.

இவ்வாறு, உலக வரலாற்றிலேயே குருதி கொட்டாமல், கோரங்கள் நேராமல் ஒரு நாடு விடுதலை பெற்றது; அந்நியர்கள் அன்பர்களாகவே அகன்று போயினர்.

விடுதலை பெற்றதோடு நமது பணி முடிந்துவிடவில்லை; ஒரு நாட்டின் பணி ஒருபோதும் முடிவதில்லை. அது முடிவற்றது; மூப்புமற்றது.

விடுதலையின் பொருளும் பயனும் பொது மக்கள் அனைவர்க்கும் உணர்த்தப்பட வேண்

டும். நாட்டிலுள்ள பல கோடி மக்களும் முறைவாழ்வு வாழ்ந்து இன்பம் பெற்றிட வழி வகுப்பதே நமது குறிக்கோள். வறுமையை விரட்ட வேண்டும் ; அறியாமையை அகற்ற வேண்டும். தன் தனித்திறனை வளர்த்துத் தன்னைக் காத்துக் கொள்ளும் நல்வாய்ப்பினை நாட்டிலுள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் நாளும் நல்கிட வேண்டும்.

1947-ஆம் ஆண்டு விடுதலை நாளுக்கு முந்திய நாள் நள்ளிரவில், அதாவது ஆகஸ்டுத் திங்கள் 14-ஆம் நாள் இரவில் விடுதலை பெறப்போகும், இந்திய அரசியலமைப்பை உருவாக்கக் காத்திருந்த அரசியலமைப்புக் குழுவின் உறுப்பினர்களிடம் உரையாற்றியபோது நேரு அவர்கள் கூறியதாவது :—

"உலகமே கண் மூடி உறங்கிக் கொண்டிருக்கும் நேரத்தில், இந்தியா விழித்தெழுகிறது ; உயிர் பெறுகிறது ; விடுதலையடைகிறது. வரலாற்றில் எப்போதோ ஒரு முறை அரிதாக வருகின்ற அற்புதக் காலக் கட்டம் இப்போது வந்துள்ளது. ஒரு காலக் கட்டம் முடிந்து, நீண்டநாள் நசுக்கப் பட்டுக்கிடந்த நாடு நிமிர்ந்து நிற்கிற பொற்காலம் பிறக்கிறது. இப்புனித வேளையில் இந்தியாவுக்கும், இந்திய மக்களுக்கும், மனித குலத்துக்கும், தூய பணியாற்றுவதற்கு நம்மை ஒப்படைத்து உறுதி மொழி எடுப்பது ஏற்புடைய ஒன்றாகும்."

"வரலாற்றின் தொடக்க காலம் முதல் இந்தியா அறிவு நாட்டமும், ஆக்க முயற்சியும் கொண்டு வெற்றிகள் பலவற்றை அடைந்திருந்தது ; சிலவற்றில் தோல்வியும் கண்டிருக்கிறது. எனினும், வெற்றி தோல்விகளுக்கு இடையிலும் தனது இலட்சிய வேட்கையை விட்டு விடவில்லை. தனது சொத்தாகவும், தனது பலமாகவும் அமைந்துவிட்ட உயர் நெறிகளை மறந்து விடவுமில்லை. தனது வீழ்ச்சிக் கட்டத்திலிருந்து இந்தியா இன்று விடுதலை பெறுகிறது. இன்று நாம் கொண்டுள்ள வெற்றி, நாம் பெற வேண்டிய பல்வேறு வெற்றிகளுக்கு ஒரு முன்னோடி ; முதற்படி. இந்த அரிய வாய்ப்பினைக் கொண்டு எதிர்காலத்தில் நம்மை எதிர்நோக்கி விடப்படுகின்ற அறைகூவலை எதிர்த்து வெற்றி பெறுகிற தெம்பும், அறிவுத் தெளிவும் நாம் பெற்றிருக்கிறோமா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்."

"விடுதலையும், ஆளும் அதிகாரமும் நமக்கு மிகப் பெரிய பொறுப்பைச் சுமத்துகின்றது. அந்த முக்கியப் பொறுப்பு அதிகாரம் பெற்ற மக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட அதிகாரம் நிறைந்த இந்த அரசியல் அமைப்புக் குழுவிடமே இருக்கிறது. விடுதலை பெறுவதற்கு முன்னர் நாம் இன்னல் பல ஏற்றுள்ளோம். அதை நினைத்தால் இதயம் வேதனையால் விம்முகிறது. வேதனை நினைவுகள் நிலைத்தும் விட்டன. என்றாலும், நடந்து முடிந்தவை எல்லாம் கடந்த காலத்தவையே. இன்முகம் காட்டி நம்மை அழைப்பது எதிர்காலமே!"

"எதிர்காலம் என்பதும் வெறும் இன்பப் பொழுது போக்கல்ல. நாம் கொடுத்து வந்திருக்கிற, கொடுக்கப் போகிற உறுதி மொழிகளை எல்லாம் செயற்படுத்திச் சாதனை புரிய வேண்டிய பொறுப்பு மிக்க காலமாகும். இந்தியாவுக்குத் தொண்டு என்பது வாடிக் கிடக்கும் கோடிக் கணக்கான மக்களை வாழ வைக்கும் தொண்டாகும். இல்லாமையையும், கல்லாமையையும், ஏற்றத் தாழ்வுகளையும் நீக்கிடும் ஓர் ஒப்பற்ற தொண்டாகும் அது. நமது தலைமுறையின் ஒப்பற்ற உயர்மனிதர் உத்தமர் காந்தியாரின் விருப்பம், ஒவ்வொரு கண்ணிலிருந்தும், ஒவ்வொரு சொட்டுக் கண்ணீரையும் துடைத்தாக வேண்டும் என்பதாகும். அது நம்மால் முடியாத ஒன்றாக இருக்கலாம். கண்ணீரும், கவலையும் இருக்கும் வரை, நமது கடமைக்கு முடிவில்லை நமது தூய பணி தொடர்ந்தாக வேண்டும்."

"ஆகவே, நமது கனவுகளை நனவாக்கிட நாம் உழைக்க வேண்டும். கடுமையாக உழைக்க வேண்டும். சலியாது உழைக்க வேண்டும்.

நேரு இவ்வாறு கூறி முடித்தார். மணி பன்னிரண்டு அடித்தது. விடுதலை பிறந்து விட்டது. கெடுதலை முடிந்து விட்டது என்பதை அறிவிக்கும் வண்ணம் சங்கு முழங்கியது. விடுதலை அறிவிக்கப் பட்ட பின்னர், இந்தியாவின் முதல் பிரதமர், மூத்த பிரதமர் பண்டித சவகர்லால் நேரு நாட்டு மக்களுக்கு நற்செய்தி வழங்கிப் பேசினார்.



"குறித்த நாள் வந்துவிட்டது. வரலாறு நமக்கு விதித்த நாள் பிறந்துவிட்டது. நெடிய தூக்கம் கலைந்து, நெக்குருகச் செய்யும் போராட்டங்களை நடத்திப், புத்துயிரும், புத் தொளியும் கொண்டு இந்தியா உரிமை பெற்று விட்டது. பழைய வரலாறு முடிந்துவிட்டது. புதிய வரலாறு தொடங்குகிறது. நாம் வாழ்ந்து காட்டப் போகிற வரலாறு தொடங்குகிறது. சரித்திரத்தில் இடம் பெறப் போகிற நமது சாதனைகளின் வரலாறு தொடங்குகிறது."

"இந்தியாவுக்கும், ஆசியாவுக்கும், உலகத்துக்கும் இன்று ஒரு முக்கிய நாளாகும். கீழ்த் திசையில் விடுதலை வெள்ளி முளைக்கிறது; நீண்டதோர் கனவு நனவாகிறது. இந்த விடுதலை விண்மீன் என்றும் நிலைக்கட்டும். நமக்கு நம்பிக்கை ஊட்டி நிற்கட்டும்."

"நாம் விழாவெடுத்து மகிழ்கிறோம். ஆனால், அல்லற்படும் மக்கள் அழுது புலம்பிக் கொண்டிருக்கிறார்கள். துயர மேகங்கள் துன்ப மழை பொழிந்தபடி இருக்கின்றன. எனவே, விடுதலை நமக்குப் பெரும் பொறுப்புகளைச் சுமத்தியுள்ளது. அச்சுமைகளை விடுதலை எழுச்சியுடன் ஒன்று பட்டுத் தாங்கிடுவோம்; தக்க பணி புரிந்திடுவோம்."

"இன்றையத் தினம், நம் விடுதலையின் சிற்பி, நாட்டின் தந்தை அண்ணல் காந்தியைச் சுற்றி நமது எண்ண அலைகள் வட்டமிடுகின்றன. இந்தியப் பண்பாட்டின் உயிரோட்டமாக விளங்கி, இருள்சூழ்ந்த நேரத்திலெல்லாம் நமக்கு ஒளிதந்து வழி நடத்தியவர்; நாம் அவரைப் பின் தொடர்ந்து வந்தோம்; என்றாலும் அவரைப் பின் பற்றும் முழுத் தகுதி நமக்கு இல்லாததால், அடிக்கடி நாம் தடம் புரண்டு சென்றோம். ஆனால், நாம் மட்டுமல்ல, நாளையத் தலைமுறையினரும், இனிமையும், எளிமையும், கொள்கைப் பற்றும், நெஞ்சுரமும், நேர்மைப் பற்றும் கொண்ட இந்தியத் தாயின் புனிதப் புதல்வனும் காந்தியடிகளின் நற்றொண்டையும், கருத்துக்களையும், வாழ்வையும் நெஞ்சத்தில் நிலை நிறுத்திக் கொள்ள வேண்டும். இந்த விடுதலை விளக்கை எந்தப் புயலும் அணைத்துவிடாதபடி நாம் காத்து நிற்போம்."

"அடுத்து, ஊர் பேர் தெரியாமல், எந்தக் கைம்மாறும், புகழும் எதிர் நோக்காமல் தாமாகவே முன்வந்து உயிரை விட்டுப் போராடித் தாய்நாட்டுக்கு விடுதலை தேடித் தந்த உத்தமத் தொண்டர்களை நினைவு கூர்ந்து, நன்றி கூறிடுவோம்."

"பிற நாடுகளுக்குச் சென்றிருக்கும் காரணத்தால் விடுதலைப் போரில் பங்குபெறும் வாய்ப்பிழந்துவிட்ட நம் இந்திய உடன் பிறப்புகளையும் நினைவிற் கொள்வோம். அவர்களும் நம்மவர்; நம்முடனேயே வாழப் போகிறவர்கள். அவர்களின் இன்ப துன்பத்தில் நாமும் பங்கு பெற்றிடுவோம்."

"எதிர் காலம் நம்மை அழைக்கிறது. நாம் எந்தத் திசையில் செல்லப் போகிறோம்? என்ன செய்யப் போகிறோம்? சாதாரண மனிதனுக்கும், ஏர் உழவனுக்கும் உழைப்பாளிக்கும், விடுதலையின் பயன் கிடைத்திடவும், வறுமையையும் அறியாமையினையும் விரட்டி வளம் பெருக்கிடவும், அரசியல், பொருளாதாரச் சமூக நீதி தழைத்திடத் தக்கதொரு சனநாயகச் சமுதாயத்தை அமைத்து முன்னேற்றம் காண முனைந்திட வேண்டும்; உழைத்திட வேண்டும்."

> கண்கள் மீண்டும் ஒளிபெறத் தொடங்கியது போல ஒரு நாட்டின் வரலாற்றிலே ஏற்படுகின்ற உன்னதமான சம்பவம் சுதந்தரம்—
>
> **பேரறிஞர் அண்ணா.**

"நாம் கடுமையாக உழைக்க வேண்டியதிருக்கிறது. நமது வாக்குறுதிகளை எல்லாம் நிறைவேற்றி மக்கள் அனைவர்க்கும் உரிய நல்வாழ்வு கிடைத்திட வேண்டும் என்ற இயற்கையின் ஆணையை நிறைவேற்றும் வரை நமக்கு ஓய்வு கிடையாது. முனைந்து / முன்னேறும் ஒரு பெரிய நாட்டுக்கு நாம் சொந்தக்காரர்கள். அந்தப் பெருமையைக் காத்து நிற்க வேண்டும்; அதற்கேற்ப வாழ்ந்திட வேண்டும். நம்மில் யார் எந்தச் சமயத்தைச் சார்ந்திருப்பினும், நாம் எல்லாரும் இந்தியத் தாயின் மக்கள்; நம் எல்லாருக்கும் உரிமையும், கடமையும் ஒன்றேயாகும். குறுகிய மனப்பான்மையையும், சாதி, சமய வெறிகளையும் நாம் ஊக்குவிக்கக் கூடாது. சிந்தையிலும், செயலிலும் குறுகிய நோக்கம் கொண்ட எந்த நாடும் ஓர் உயர்ந்த நாடாக விளங்க முடியாது."

"உரிமை, சனநாயகம், உலக அமைதி ஆகியவற்றைக் காப்பதிலும், வளர்ப்பதிலும் நாங்கள் உறுதுணை புரிந்து ஒத்துழைப்போம் என்ற உறுதியை உலக நாடுகளுக்கும், மனித குலத்துக்கும் தெரிவித்துக் கொள்கிறோம்."

"என்றும் மங்காத எழிற் சிறப்புக் கொண்டு நிற்கும் நம் இந்தியத் தாய் நாட்டுக்குப் புனிதத் தொண்டாற்றி உறுதி பூணுவோம்: அவளை வாழ்த்தி வணங்கிடுவோம், வெல்க இந்தியா!"

நேரு அவர்களின் இந்தப் பொன் மொழி நம்மை என்றும் வழிநடத்தும். விடுதலை நாள் விழா அந்த உரைகளை நினைவிற்கொண்டு செயற்படுத்தும்; உறுதி பெற்றிட வாய்ப்பளிக்க வேண்டும். பெற்றிருக்கும் உரிமையை விழித்திருந்து காக்க வேண்டும். உள் நாட்டில் வளம் இல்லை என்றால், எதிரிகளிடமிருந்து நாட்டைக் காத்திட முடியாது. உழவும், தொழிலும் பெருகிட வேண்டும். அதற்கேற்பக் கல்வித் திறனும் சிறந்திட வேண்டும். நாட்டுப் பற்றும், தொண்டுள்ளமும் வளர்ந்திட வேண்டும். நாட்டின் மக்கள் ஒவ்வொருவரும் நாட்டுப் பெருமையைக் காக்க உறுதிகொள்ள வேண்டும்.

ஆளும் பொறுப்பிலும், பிற பதவிகளிலும் இருப்போர் மட்டுமல்லர், வருங்காலத் தலைமுறையை உருவாக்கும் ஆசிரியர்களே பெரும் பொறுப்பை மேற்கொண்டிருக்கின்றனர். நாட்டுப் பற்று, கட்டுப்பாடு, கடமையுணர்வு, கண்ணியமான குணங்கள் அனைத்தையும் இளைஞர் பெற்றிட வேண்டும். அதற்கு ஆசிரியர்களே துணை புரிய வேண்டும். தன்னலம் கருதாது கடமையாற்றும் பண்பு ஆண், பெண், குழந்தைகள் ஆகிய அனைவரிடமும் வளர வேண்டும். நமது வாழ்வும், இன்பமும், வருங்காலத் தலைமுறையினரின் வாழ்வும் இச் சிறப்புப் பண்புகளை வளர்த்தால்தான் சிறப்புற அமையும். ஆகவே, இப் பண்புகளை வளர்ப்போம். பார் புகழ வாழ்வோம்!



# விடுதலைப் போரில் வீரப் பெண்மணிகள்

நமது தமிழகத்தில் வீரம் செறிந்த பெண்டிர் பலர் வாழ்ந்திருக்கிறார்கள். ''சீறிவந்த புலியை முறத்தினாலே துரத்திய சிங்கார மறத்திகளின்'' வரலாற்றைநாம் அறிந்திருக்கிறோம்.

அந்த மறக்குலப் பெண்கள் அண்மைக் காலத்திலும் தமிழ் நாட்டில் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதை விடுதலைப்போர் நமக்கு எடுத்துரைக்கிறது.

தென்னாப்பிரிக்காவில் காந்தியடிகள் நடத்திய அறப்போரிலே பங்கேற்ற தில்லையாடி வள்ளியம்மையின் வீரத்தைக் காந்தியடிகளே வியந்து பாராட்டியிருக்கிறார்கள்.

காந்தியடிகளின் பாராட்டைப் பெற்ற வீரப் பெண்மணிகள் அநேகர். ஈரோட்டில் வாழ்ந்தவரும் பெரியார் ஈ. வே. ரா. அவர்களின் மனைவியாருமான நாகம்மையாரிடம், ஒருமுறை அறப்போராட்டத்தின் தலைமைப் பொறுப்பையே காந்தியடிகள் தந்திருந்தார் என்பதும், பெரியாரின் தங்கையாரான கண்ணம்மையாரும் விடுதலைப் போரில் சிறை சென்றவர் என்பதும் நினைவு கூரத்தக்கன.

1932-ஆம் ஆண்டு.

மதுரையைச் சேர்ந்த ஒரு வீரப் பெண்மணி விடுதலைப் போரில் ஈடுபட்டுச் சிறை சென்றார். அவரது கணவரும் அப்போது சிறை சென்றார்.

1940-ஆம் ஆண்டு, நடைபெற்ற தனிப்பட்டோர் அறப்போரில் அந்த வீரப் பெண்மணியின் கணவர் பங்கு பெற்றுச் சிறை சென்றார். அடுத்துச் சிறை செல்வதற்கு அந்த அம்மையார் தயாரானார். ஆனால், அந்த அம்மையாரை மருத்துவர்கள் தடுத்தார்கள். அந்த அம்மையார் இருதய நோயால் பீடிக்கப்பட்டிருந்ததே மருத்துவர்கள் தடுத்ததன் காரணம். ஆனால், அந்த வீரப் பெண்மணி, மருத்துவர்களின் தடையைப் பொருட்படுத்துவதாக இல்லை.

அம்மையாரின் உடல் நிலையையும்-நாட்டின் சூழ்நிலையையும் அறிந்த அவர்களது குடும்ப நண்பர் ஒருவர் அம்மையாரின் நிலை பற்றிக் காந்தியடிகளுக்குக்கடிதம் எழுதினார். அந்தக் கடிதத்தைப் படித்த காந்தியடிகள் உடனே அம்மையாருக்குக் கடிதம் எழுதினார். கடிதத்தில் இருந்த வாசகம். '' நீங்கள் சிறை செல்லத் தேவையில்லை ''. —

காந்தியடிகளின் கடிதத்தைக் கண்டு ஒருவகையில் அந்த அம்மையார் மகிழ்ச்சியடைந்தாலும், தனது திட்டத்தை அவர் மாற்றிக்கொள்ள முன்வரவில்லை. அண்ணலின் அன்புக்கட்டளையையும் மீறித் தனது குழந்தைகளையும் வீட்டில் விட்டு விட்டு, அறப்போரில் ஈடுபட்டுச் சிறை சென்றார்.

அம்மையாரின் கணவர் நெஞ்சம் பதைத்தார். அண்ணலின்கட்டளையை தனது மனைவி மீறியதை எண்ணி வருந்தினார். அண்ணலுக்கு அந்தச்செய்தியைக் கடிதத்தின் வாயிலாகத் தெரிவித்தார். அவருக்கு, அண்ணல், மறுமொழி தெரிவித்திருந்தார்.

'' என் கட்டளையை உங்கள் மனைவி மீறியிருப்பது நாட்டின் அழைப்பை அவர் ஏற்றுக்கொண்டிருப்பதனால்தான். சுருக்கமாகச் சொன்னால்—ஒரு நல்ல மனைவி தனது கணவனைப் பின்பற்றி உள்ளார். கடவுள் அவரது உடல் நலத்தைக் கவனித்துக் கொள்வார். நீங்கள் கவலையுற வேண்டாம்''—இவ்வாறு காந்தியடிகள் தமது கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.



திருமதி இலக்குமி பாரதி

32 ஆண்டுகளுக்கு முன் நடந்த நிகழ்ச்சி இது.


அந்த அம்மையார் சிறையிலிருந்து வெளிவந்து நலமாகவே வாழ்ந்து வருகிறார்கள்.

அந்த வீரப்பெண்மணி, யார் தெரியுமா ?

நாவலர் சோமசுந்தர பாரதி அவர்களின் மகளார்—தமிழகத் தியாகிகளின் பட்டியலில் இடம் பெற்றவரும், தாமிர பத்திர விருது பெறவிருப்பவருமான திரு எல். கிருஷ்ணசாமி பாரதி அவர்களின் மனைவியார்—மாணவப் பருவத்தில் நாட்டு விடுதலைப் போரில் சிறை சென்ற திரு இலட்சுமிகாந்தன் பாரதி அவர்களின் அன்னையார் திருமதி கே. இலக்குமி பாரதி அவர்கள்தான் அந்த வீரப்பெண்மணி.

தமிழ்நாடு சட்டமன்றத்தில் 1937-ஆம் ஆண்டிலும் 1946-ஆம் ஆண்டிலும் உறுப்பினராகப் பணியாற்றியவர் இந்த வீரப் பெண்மணி.

அவரைப் போன்று எண்ணற்ற வீரப் பெண்மணிகளின் அருந்தொண்டு, நாட்டு விடுதலைப் போருக்கு அடித்தளமாக அமைந்திருந்தது என்பதை எவரும் மறந்துவிட முடியாது.




**பலதரப்பட்ட பூச்சிகளிடமிருந்து உங்கள் பயிர்களை முழுமையாகப் பாதுகாக்கும் விரிவாற்றல் படைத்த (ப்ராட் ஸ்பெக்ட்ரம்) பூச்சிக்கொல்லியாகிய ஆம்பிதியான், தீங்கில்லாத பண்பும், திறமை குன்ருத நெடுநேர ஆற்றலும் ஒருங்கிணைந்தது.**

கிடைக்கும் ப்ராட்-ஸ்பெக்ட்ரம் பூச்சிக் கொல்லிகளிலே ஒப்பற்ற வன்மை வாய்ந்தது ஆம்பிதியான்...கொல்லக் கடினமான எவ்வித முரட்டுப் பூச்சிகளையும் கொன்றுவிடக்கூடிய ஒன்றுதிரண்ட பேராற்றல் படைத்தது.

தீங்கு நேரும் வாய்ப்பு மிக மிகக் குறைவு ஆதலால் ஆம்பிதியான் மருந்தடிப் போருக்கு யாதொரு பிரச்சினையும் இராது; தவிர, இட்டு நெடுநேரம் ஆனபின்னும் மட்டற்ற வீரியமுடன் செயல்படும் ஆதலால், ஓயாமல் அடிக்கடி மருந்தடிக்கத் தேவையில்லை.

பணம், நேரம், சிரமம் எல்லாமே மிச்சமாகும். பல நாடுகளில் பரிட்சிக்கப்பட்ட ஆம்பிதியான், இலாபம்தரும் செழிப்பான பயிர் விளைச்சலுக்கு உறுதுணையெனப்பரிசோதிக்கப்பட்டு நிரூபணம்பெற்றபூச்சிக் கொல்லியாகும்.




CYANAMID உலகெங்கும் விவசாயத்திற்கு ஊழியம் புரிந்துவருவோர்

அக்ரிகல்சரல் டிவிஷன்,
ஸயனமைட் இந்தியா லிமிடெட்
பி. ஓ. பாக்ஸ் நம்பர் 9109, பம்பாய் 25

அமெரிக்கன் ஸயனமைட் கம்பெனியின் ரிஜிஸ்டர்டு டிரேடு மார்க்.

SISTA'S-CIL-380 TAM



# விடுதலைப் போரில் உயிர் நீத்த வீரர்களை வணங்குவோம்

கவிஞர் கொத்தமங்கலம் சுப்பு

"இந்தியத் தேசிய இராணுவ வீரர்களே! எத்தனை பேர்கள் நம்மில் உயிருடன் இருப்போம் என்பது எனக்குத் தெரியாது. ஆனால், நமது படை நிச்சயமாக வெல்லும். நம்மில் உயிர்த் தியாகம் செய்தவர்கள் போக எஞ்சிய வீரர்கள் நிச்சயம் செங்கோட்டையில் வெற்றி விழாக் கொண்டாடுவார்கள் என்பது மட்டும் எனக்குத் தெரியும்.''

இப்பொன்னான வாக்கைச் சொன்னவர் யார்? அவர்தான் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ். ஆம்! பாரத சுதந்தரம் சும்மா வந்துவிடவில்லை. அது, கண்ணீர் விட்டு வளர்த்த பயிர்.

சுதந்தரக் கொடி பட்டொளி வீசிப் பறக்கும் இந்த மண்ணுக்குள்ளே எத்தனையோ வீரர்கள் அதற்காக இரத்தம் சிந்தியிருக்கிறார்கள். நம் கொடியின் சிவப்பு, துறவின் சிவப்பு அல்ல. அது தொண்டர்கள் வடித்த இரத்தச் சிவப்பு. அதன் வெண்மைதான் சத்தியம். பச்சையோ பச்சிளம் பாலகர்களும், தாய்க்குலமும், மரகத வல்லியாம் மங்கையர்களும் செய்த தியாகம்.

உலகின் விடுதலைப் போர் வரலாற்றில் எந்த நாட்டின் சுதந்தரப் போரிலும் இந்தியப் போரில் இளைஞர்கள் உயிரைக் கொடுத்தது போல், இளைஞர் சமுதாயம் உயிர் ஈந்ததில்லை.

உயிரில் இளமைஉயிர், முதுமை உயிர் என்ற பாகுபாடு உண்டா? உயிர் ஈந்த எல்லாரும் உயர்ந்தோரே. ஓர் வீர வாலிபரின் உரை கேளுங்கள்:—

''நான் செய்யும் கடைசிப் பிரார்த்தனை இதுதான். மறுபடி மறுபடி பாரத மாதா மடியில் பிறக்க வேண்டும். மாதா விடுதலை யாகும் நாள் வரை மடியப் பிறக்க வேண்டும்.'' என்று வேண்டித் தூக்குக் கயிற்றில் கழுத்தை மாட்டிக் கொண்டு துடிக்காமல் இறந்தார் 'மதன்லால் திங்கரா' என்ற மாவீரர்.

அவர் மட்டுமா? ஆயிரமாயிரம் இளங் காளைகள், அதற்குப் பாயிரம் பாடியவர்கள்! விடுதலைப் போருக்கு முதல் முழக்கம் செய்த வீரத் தமிழனை வணங்குவோம்.

ஒரு நாள் காலை பத்து மணி. இடமோ ஒரு சாலை ஓரம். ''எனது அங்க வஸ்திரத்தை இடுப்பில் கட்டிக் கொண்டேன். என் குழந்தைகளும் மனைவியும் மிக மரியாதையுடன் என் அருகில் நின்றார்கள். கை கூப்பினோம். மார்புச் சட்டையில் சாலைமண் பதிய விழுந்து கும்பிட்டேன். அவர்களும் வணங்கினர். கோயிலா? சிலையா? அல்ல; அல்ல; அது ஓர் கற்குவியல்.

சாலைக்கு வடக்கே ஓர் புளிய மரம். அதனடியில் சிறிதும் பெரிதுமாக, இலட்சக் கணக்கான கற்கள். ஒவ்வொரு கல்லும் ஒவ்வொருவர் போட்டவை. 173 ஆண்டுகளாக இவ்வாறு போட்டு வந்திருக்கிறார்கள். மலரானால் வாடிவிடும். காற்றுக் கொண்டு போயிருக்கும். அங்கே கல்லெல்லாம் மலராகிப் பிறகு அஃதே மலையாகி இருந்தது.

கணவன் சொல்லுக்குக் கட்டுப்பட்டு மனைவி வணங்கிவிட்டாள். ஆனால், அவள் மனம் கேட்கவில்லை.

''உச்சி வெய்யில் — புளிய மரம்—இது முனியா என்ன? எதற்காக நமஸ்காரம் செய்தோம்?'' என்று கேட்டாள்.

என் பெண்டாட்டிக்கே தமிழர் வரலாறு தெரியாமல் இருந்தால் எனக்கு ஆத்திரம் வராதா? ''உனக்கு இது கூடத் தெரியவில்லையே, இதோ பார் அதோ ஒருவர் வருகிறார். ''அவர் சொல்லுவார்'' என்று கூறிவிட்டு நூறு அடி தூரத்தில் வந்த வழிப்போக்கர் ஒருவரை இரைந்து,

''ஐயா ஆ....ஆ.....ஆ. ஆ.....'' என்று கூப்பிட்டேன்.

''என்ன அ....அ.... அ....'' என்றார் அவர்.

என் மனைவியை ஒருமுறை அலட்சியத்துடன் பார்த்துவிட்டு, 'இது என்ன இங்கே?' என்றேன்.

''கட்டமனாய்க்கன் கல்லுக் குவியல்'' என்று சொன்னார்.

எனக்கு அதில் ரொம்பச் சந்தோஷம். மனைவியைக் கர்வத்துடன் பார்த்தேன். ''அவர் வாயாலேயே கட்டபொம்மன் பெருமையைச் சொல்லட்டும்'' என்ற ஆவலோடு.

''யார் அந்தக் கட்டமனாய்க்கன்?'' என்றேன்.

அவர் என்ன பதில் உரைத்தார் தெரியுமா? 'ஏ, தமிழகமே, கேள்'. அவர் கூறிய பதில் இதுதான்:

''அவன் ஒரு கொள்ளைக்காரன்'' என்றார். நான் அசந்துவிட்டேன். நல்ல வேளை, என் மனைவி சிரிக்கவில்லை. ஏன்? நான் உடனே அவளைப் பார்க்கவில்லை. பார்த்திருந்தாலும் சிரித்திருக்க மாட்டாள் என்றே நினைக்கிறேன்.

வீர பாண்டியக் கட்டபொம்மனாயக்கர் மீது எனக்கு உள்ள பக்தியை என் வீட்டில் எல்லாரும் அறிவார்கள்.

ஆனால், அவர் கூறிய வார்த்தை, கூரிய முள்ளாக என் நெஞ்சில் குத்தியது. தேடாத இடமெல்லாம் ஏடு தேடிக் கட்டபொம்மன் பாட்டைக் கண்டு பிடித்தேன். வணக்கத்துக் குரிய வாசன் அவர்களிடம் சொல்லி அந்தப் பாடலை விளக்கமுடன் ஆனந்த விகடனில் வாரந்தோறும் வெளியிட்டேன்.

அதே மரத்தடியில்தான் 173 ஆண்டுகளுக்கு முன் 1799-ஆம் ஆண்டு அக்டோபர் 16-ஆம் தேதி கட்டபொம்மு முதற் களபலி யானார். அங்கு அவரைத் தூக்கிலிடுவதை வேடிக்கை பார்க்க வந்திருந்த விடியாமூஞ்சிகளாகிய பலர் முன் தூ.. என்று காரித் துப்பினான் வெள்ளைக்காரன்.

''குதிரைக்குப் புல்லுக் கட்டும், குதிரை முளையும் சுமக்கப் போகிறீர்கள்'' என்றான் ஊமைத்

துரை. கட்டபொம்முவோ தூக்குக் கயிற்றைக் கழுத்தில் தானே மாட்டிக் கொண்டு வீர சொர்க்கம் புகுந்தார். இதை எழுதும்போது கை துடிக்கிறது. கண்கள் நீரை வடிக்கின்றன. படிப்பவர்கள் நெஞ்சும் துடிக்கும். ஆனால், அந்த மாவீரன் இறக்கும்போது அவர் கால்கூடத் துடிக்கவில்லையாம். இது சுதந்தரத்தின் முதல் பலி.

"When he went out to be executed he walked with a firm daring air, and cast looks of sullen contempt on the poligars to his rights and lefts as he passed" என்று வெள்ளைக்காரனே எழுதியிருக்கிறான்.

நமக்கெல்லாம் பேசிப் பேசி உணர்ச்சி மரத்துவிட்டது. பட்ட கட்டை போலாகி விட்டோம். நல்லதைப் பாராட்டக் கூட நானூறு யோசனைகள் செய்கிறோம். பேசுந்திறன் அதிகமில்லாத ஊமைக்கு உணர்ச்சி அதிகம் போலும்.

"வானம் பொழியுது, பூமிவிளையுது மன்னவன் காணிக்கு ஏது பணம்?" என்று கேட்டவரே ஊமைத்துரை. அந்த ஊமையன் பாட்டைப் பாடாத உதடில்லை. பாடுவோம். படை என்றால் ஓடுவோம். ஊமைத் துரையும் ஓடினார். பயந்து அல்ல, எதிரிகள்— இடித்த கோட்டையைத் திரும்பவும் கட்டி வெள்ளையனை மறுபடி போருக்கிழுத்து வீர மரணம் அடையப் பாளையங்கோட்டைச் சிறையை உடைத்துக் கொண்டு ஓடினார்.

பாதையில் மெக்கா லே பங்களா; உள்ளே புகுந்து சூறையாட வீரர்கள் நுழைந்தார்கள். 'Oh! God!' என்று, ஒரு குரல் கேட்டது. வெள்ளைக் காரதுரைசாணியின் குரல் அது.

"ஊமைத்துரையே! உமக்கு ஓராயிரம் கும்பிடு. உங்கள் பண்பு தமிழனின் வாழ்வுக்குப் பாய்ச்சிய நீர்" துரைசாணியின் குரல் கேட்டவுடன், எதிரியின் வீடாயிருந்தும் பெண்மைக்கு மதிப்புக் கொடுத்துக் கொள்ளையிடுவதைத் தடுத்து, வந்த வழியே திரும்பிச் சென்றீர்களே! இதை நினைக்குந் தோறும் எனது நெஞ்சு பெருமை கொள்கிறது. தமிழனாகப் பிறக்கும் பாக்கியம் கிடைத்ததற்குத் தமிழ்த்தாயை வணங்குகிறேன். ஊமையன் இறக்கவில்லை. நமது உள்ளத்தில் 'பெண்ணை மதிக்கும் பண்பு' என்ற உருவில் என்றும் இருக்கிறார்.

ஊமையன் இரண்டாவது பலி.

"அண்ணனும் தம்பியும் களபலியாகி அடைந்த சுதந்தரமையா ?"

"அண்ணனும் தம்பியுமாக வாழ்வதே அவருக்கு மரியாதை"

வீர மறத்தி, பகதூர் வெள்ளையன் மனைவி.... படுகளத்தில் மாண்ட கணவனை மடியில் வைத்து முத்தமிடும் போதே உத்தமி இறந்தாள்.

ஏன்? ஆண்களுக்கு மட்டும்தான் விழா எடுக்க வேண்டுமா? விடுதலைக்கு உயிர் விட்ட வீராங்கனைகளுக்கு என்றே ஒரு விழா எடுக்கலாம். வீரர்கள் பிறப்பார்கள்.

வேலு நாச்சியார், சிவகங்கைக்கு அரசி. வீர மருதுகளின் எஜமானி. மானம் போக மறத்தாய் விடுவாளா? வெள்ளையன் வருகிறான் என்றவுடன் காக்கும் வாளால் கற்பைக் காத்துத் தன் கையிலேயே தன் கழுத்தை அறுத்துக்கொண்டு உயிர் நீத்தார். கல்லல் பக்கங்களில் கண்மாய்த் தண்ணீர் ஏன் சிவப்பாக இருக்கிறது? வேலு நாச்சியாரின் வீரக் குருதிதானே?

வெள்ளையனை எதிர்த்தார், வேலுத்தம்பி தளவாய்! யாருக்காக எதிர்த்தாரோ அந்தத் திருவிதாங்கூர் அரசரே தன் தளவாயைக் கைவிட்டுவிட்டார். அரசர் கைவிட்டதற்காக அவர் கடமையை விடுவாரா? அரசன் அஞ்சுவான். வீரன் அஞ்சுவானா ? ஒரு வாளுடன் பலநூறு பேரைக் கொன்றார். கடைசியில் பகவதி கோயிலில் மறைந்தார். வெள்ளையன் விரட்டினான். பிடித்தால் பிணத்தைக் கூட மான பங்கம் செய்வான். தற்கொலை செய்து கொள்ளத் தன் வாளையே தன் மார்பில் பாய்ச்சிக் கொண்டார் வேலுத்தம்பி. வயிரம் பாய்ந்த கட்டை. வாள் உள்ளே இறங்கவில்லை. பாதியில் நின்றது. 'தம்பி என்னை உன் கையால் கொன்றுவிடு' என்று கூடவே இருந்த உடன் பிறப்பிடம் கூறினார்.

தர்ம சங்கடம். தம்பி அண்ணனைக் கொல்வதா? தயங்கினான் தம்பி. ஆனால் அடுத்த கணமே தன் வாளால் அண்ணன் தலையைத் தரையில் உருட்டினான். தன் தலையையும் வெட்டித் தரையில் வீழ்த்தினான். இரண்டும் தரையில் உருண்டு ஒன்றின் முகத்தில் ஒன்று முத்தாடியதை அவர்கள் பார்க்கவில்லை. கவிஞன் பார்க்கிறேன்.

மானங் காத்தான் தம்பி என்று மாதா போற்றினாள் அவனை. கூடப்பிறந்தே கொல்லும் வியாதியல்ல, அவன்.

இன்னோர் அண்ணன் தம்பி தியாகத்திற்கு வருவோம்.

தேவகோட்டைக்கருகில் ஒரு பாழடைந்த கோட்டை இருக்கிறது. அதற்குப் பெயர் சங்கரப்பொதிக்கோட்டை. சாலையோரத்தில் உள்ள அந்தக் கோட்டையில் ஓர் முனி இருக்கிறது. ஒரு நாள் அது என் கண்ணில் தட்டுப்பட்டுவிட்டது.

"முனி! முனி!" என்றேன் நான்.

"நரி!" என்றான் என் தம்பி.

"முனிதான் நரி உருவத்தில் வந்திருக்கிறது" என்றேன் நான்.

"அவ்வளவு கோழையாகிவிட்ட முனிக்குப் பயப்படவேண்டாம்" என்றான் அவன். அப்போது அந்த நரி மேலும் கேவலமாய் ஒரு செயல் செய்தது. யாரோ உடைத்திருந்த சிதறு தேங்காய்ச்சில் ஒன்றைக் கவ்விக் கொண்டு காட்டுக்குள் ஓடியது.

"தேங்காய்ச் சில்லை நரி திங்குமா ?" என்றேன்.

"ஏன் தின்னாது? மனிதன் ஒரு சாண் வயிற்றுக்காக வெள்ளையனைப் பணிந்து தின்னவில்லையா?" என்றான் அவன். அந்தக் கோட்டைதான் மருது பாண்டியனைக் காட்டிக் கொடுத்த இடம். வெள்ளைக்காரனா காட்டிக்கொடுத்தான்? நம்மவன்தான். இந்தக் கலையில் நம்மில் சில பேர்வழிகளை எவரும் மிஞ்ச முடியாது.

வீர மருது சகோதரர்கள் திருப்பத்தூரில் தூக்கிலிடப்பட்டார்கள். மருது பாண்டியனும் தூக்குக் கயிற்றைக் கழுத்தில் மாட்டிக் கொண்டு நம்மைப் பார்த்துச் சிரித்துவிட்டுத்தான் செத்தார்.

ஆனால், காட்டிக் கொடுத்த உலகில் ஒருவன் கவிதையும் பாடினான்.

"திருப்பத்தூர்ச் சந்தியிலே தென்னையிலே தொங்குறான்டா;" தன்மான உணர்ச்சி இல்லா ஒருவர் கையில் கவிதை சிக்கியதால் தமிழும் கேவலமாக்கப்பட்டதற்கு இது சான்று.

இனி மானத்தாலும் வீரத்தாலும் தமிழை உயர்த்தியவர் கதைக்கு வருவோம்.

''என் தாயை அம்மா என்று
இனி அழைப்பேன் நான்''

''என்னுடன் பிறந்தவர்
அண்ணனடா !
இளையவன் எனக்குத் தம்பியடா''

இது கவிதையா? இப்படிப்பாட வேண்டிய அவசியமுண்டா ? இதைப்போலத்தானே ''வந்தே மாதரம் என்போம் எங்கள் மாநிலத்தாயை வணங்குதும் என்போம்'' என்ற பல்லவியும் எனத் தோன்றுகிறது. ஆனால், அப்படிப் பாட நேர்ந்த அவசியத்தை நினைத்தால் நெஞ்சில் ஆத்திரம் பீறிடுகிறது. பாரதியைப் பணிகின்றோம்.

'வந்தே மாதரம்' என்னும் பாடல் பங்கிம் சந்திரர் எழுதிய ஒரு நாவலில் வந்த பாடல்தான். ஆனாலும் 'வந்தே மாதரம்' என்று உரைத்தால் அந்த வாயை மூடுமுன்னே சுட்டார்கள் வெள்ளையர்கள். விவேகானந்தரின் தம்பி அதற்குப் பலியானார். அப்போது வங்க மக்கள் விவேகானந்தரின் தாயை,

'ஞானத்துக் கொரு பிள்ளை
கொடுத்தாய் :
தேசத்துக் கொரு பிள்ளை
கொடுத்தாய் :
மண்ணுலகில் நீயன்றோ தாய்!

என்று வாழ்த்தி வணங்கினார்கள்.

ஒரு பன்னிரண்டு வயதுப் பாலகன். அழகில் மன்மதன். அவன் பெயரோ மதன்லால் ; குஜராத்திக் காரன். அவன் செய்த குற்றம் என்ன? வந்தே மாதரம் என்று கோஷித்தது தான். அவனுக்கு ஆயுள் தண்டனையாம். 'இந்தியத் தியாகிகள் சரித்திரம்' இம்மாதிரி பல முத்துக்களைச் சிந்தியிருக்கிறது. அதே குற்றம் தான் நம்மவர் ஒருவருக்கு இருபதாண்டுகள். 'வந்தே மாதரம்' தந்த சுகம் அந்தமான் சிறை.

சென்னையில் ஒரு முறை காங்கிரஸ் பொருட்காட்சிக் கொட்டகையில் தீப்பிடித்தது. எல்லாம் எறிந்து விட்டன. எரியாதன இரண்டு. ஒன்று நம் கொடி. மற்றொன்று சிதம்பரனார் சிலை, என்று ஞாபகம்.

செக்கிழுத்த செம்மல் சிதம்பரனாரின் சிலை அப்படியே இருந்தது. தீயவர்களாலேயே எரிக்க முடியாத சிதம்பரனாரைத் தீயால் எரிக்க முடியுமா? அவர் செய்த குற்றம் 'வந்தே மாதரம்' என்று கூறியதுதான். தீயும் காற்றும் சேர்ந்தது போல் சிதம்பரனாருடன் சிவாவும் சேர்ந்தார் 'வந்தே மாதரம்' ஒரு குற்றம். சிவாவுக்கு இடம் கொடுத்தது இரண்டாவது குற்றம். இரண்டுக்கும் சேர்ந்து இருபது ஆண்டுகள்.

அவரால் செக்கு சிவலிங்கமாயிற்று. கோவைச் சிறைக்குச் செல்பவர்கள் செக்கைத் தரிசிக்கிறார்கள். சிவாவால் அரசு அரசியல் ஆயிற்று. திருச்சிச் சிறையில் அவர் கையால் நட்ட அரச மரத்தடியில் பலர் அரசியல் ஞான முதிர்ச்சி அடைந்தார்கள்.

எனக்குப் பிடித்தது மூன்று மாமரங்கள். முதல் மரம் என் தோட்டத்தில் இருப்பது, இப்போது அது அதிகம் காய்ப்பதில்லை. பிரியம் போய் விட்டது. அடுத்தது காஞ்சியில் உள்ள ஏகாம்பரம். அது, மரமும் கடவுள் என்ற கருத்தைத் தந்து மக்களையும் கடவுளாய் மதிக்கச் செய்கிறது.



**அந்நிய ஆதிக்கம் இந்த மண்ணிலிருந்து அகற்றப்படும் பொழுதுதான் நாம் முழுமையான மனிதர்களாவோம். அப்படி முழுமையான நிலையை உடனடியாக ஒரே நொடியில் அடைந்துவிடுவோம் என்று நான் நம்பவில்லை. அந்நிலை உருவாக—ஒவ்வொரு கட்டத்திலும் நம்மை நாம் பக்குவப் படுத்திக்கொண்டு வளர வேண்டும். வளர்ச்சி, எதிர்ப்பினால் மட்டும் வந்து விடாது! உழைப்பினாலேயே வரும்.**

**—கோபாலகிருஷ்ண கோகலே.**

மூன்றாவது மரம் எரவாடாச் சிறையில் இருக்கிறது. அதன் நிழலில்தான் மகாத்மா காந்தியின் அரிசன ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று. அதன் நிழலில் நின்றபோது நானும் அரிசன் ஆனேன். மரமாய்ப் பிறந்தால் அவர்களுக்கு நிழலாவது கொடுக்கலாமே என்று எண்ணினேன். நிழலை விட்டு வந்தவுடன் அந்த எண்ணமும் நெஞ்சைவிட்டுப் போயிற்று.

தமிழக அரசின் குடிசைமாற்று வாரியத்தின் வீடுகளை ஒருமுறை பார்த்த பிறகு அந்த எண்ணம் போய்விட்டது. நிழல் தரும் அரசு நீடூழி வாழ்க!

'வந்தே மாதரம் என்று உயிர் போம் வரை வாழ்த்துவோம்' என்று பாரதியார் பாடியதன் உள்ளடக்கம் என்ன? வந்தே மாதரம் என்றால் உயிரை வாங்குவார்கள் என்பதுதான் அர்த்தம். அதில் உயிர் விட்டவர்கள் அநேகர்; சிதம்பரனார் உயிரைக் குடித்ததும் சிறை வாசத்தால் அடைந்த கஷ்டங்கள் தானே? ''சிதம்பரனார் பெயர் தாங்கும் கப்பலை நம் சுதந்தர அரசு மிதக்க விட்டபோது, சிதம்பரம் பிள்ளையவர்களின் விசாலமான விழிகள் ஆனந்தக் கண்ணீர் வடிப்பதை என் மனக்கண்ணில் காணுகின்றேன். வந்தே மாதரம் என்ற குற்றத்துக்காக வாழ்வே பாழானவர் அவர்'' என்றார் நம் நாட்டுத் தலைவர் ஒருவர். திருவல்லிக் கேணிக் கடற்கரையைத் திலகர் கட்டம் ஆக்கியவர் சுப்ரமணிய சிவா.

சிவாவுக்குத் தொழுநோய் ஏன் வந்தது? அவருடைய மூதாதையர் யாரும் தொழு நோய்க்காரர்கள் அல்லவாம். திருச்சிச் சிறையில் கம்பளி மயிர் அடித்ததால் வந்த சர்ம வியாதி அது. பாரத மாதாவைச் சுதந்தர தேவியாகத் தரிசனம் செய்ய அவர் ஆசைப் பட்டார். நடக்கவில்லை.

பாரதி, காலனைக் காலால் உதைத்தார். அவரையும் காலன் கொல்லவில்லை. தேசபக்திக் கனல்தான் அற்பாயுளில் கொன்றது. ஆனால், அவர் பாடிய 'வந்தே மாதரம்' நம்மை வாழ வைக்கும் பாட்டாக நின்றது.

நான் வன்முறையை அறவே வெறுப்பவன். பாரதத்துக்கு அருமையாகக் கிடைத்த புதுமையான அகிம்சை வழியை வன்முறையாளர்கள் குழியில் புதைக்கிறார்கள் என்று நினைப்பவன். சுதந்தரம் அடைந்த எந்த நாடும் முப்பது வருடத்திற்குமுன் விழித்துக் கொண்டதில்லை. ஆனால், இன்று நம் நாட்டில் மக்களிடையே விழிப்புணர்ச்சி வந்து விட்டது. குழம்பிய தண்ணீரில் தேத்தாங் கொட்டையைத் தேய்த்துப் போட்டுக் கலக்கி விட்டு விட்டால், அது தெளியும். ''அந்தத் தெளிவு அகிம்சையாகத்தான் இருக்கும். மறுபடி, பாரதம் உலகுக்கு வழி காட்டும்.''

இருப்பினும் வன்முறையில் நம்பிக்கை கொண்டிருந்த முன்

சொல்லிய தேசப் பக்தர்களை ஏன் கும்பிடுகிறேன்? அன்று அதுதான் வழியாக இருந்தது. அவர்களின் தியாகம் பெரியது. முதலில் தன்னை அழித்துக் கொண்டு களத்தில் குதித்தார்கள். அதற்காகவே அவர்களை வணங்குகிறேன்.

இனி மகாத்மா காந்தியின் காலத்துக்கு வருவோம். கொடி காத்த குமரனைக் கும்பிடுவோம். அவரே குமரன். அதிலும் கொதித்து எழும் வயது. ''நான் அகிம்சைவாதிதான்; ஆனால் ஆத்திரமூட்டப்பட்டால் அடிக்காமல் விடுவேனா?'' என்று அவர் திருப்பி அடிக்கவில்லை. கொடியைத் திருப்பினால் கொம்பாகி விடும். கொடி என்பது என்ன? காந்தியின் கொள்கைதானே! கொள்கையைத் தலைக்கீழாக்கக் குமரன் விரும்பவில்லை. ''அடி ....அடி வந்தே மாதரம். மகாத்மா காந்திக்கு ஜே!'' பாம்பின் வாய்த் தேரையின் குரல் போலக் குரல் தேய்ந்து கொண்டே வந்தது. கீழே விழுந்தார். கடைசி அடி விழவே குரல் ஓங்கியது. 'மகாத்மா காந்திக்கு ஜே' என்று மக்கள் மண்ணதிர, மலையதிர முழங்கினார்கள். குமரன் தியாகி ஆனார். கையிலிருந்த கொடியைப் பிடுங்கவில்லை. விரலை நீக்கி எடுத்தார்கள். கம்பில் விரல் பதிந்து பள்ளமாகியிருந்தது.

பலாத்காரப் பாதையில் போன விடுதலைப்போர் முறையைச் சத்தியாக்கிரகப் பாதையில் திருப்பிய அந்த மாவீரனால் திருப்பூர் என்ற பெயர் தேச மக்கள் உள்ளத்தில் குடி கொண்டுவிட்டது. திருப்பூர்க் கதரைக் கட்டும் போதெல்லாம் தியாகி குமரன் நினைவு வருகிறது. குமரனே குமரன்!

வங்கத்தில் மாதங்கினி தேவி என்று ஒரு கிழவி. 1942-ஆம் ஆண்டு ஆகஸ்டுப் போராட்டம். பட்டாளம் ஒரு ஊரில் சுட்டதாம். எழுபத்து மூன்று வயது மூதாட்டி மாதங்கினி தேவியார் கொடியைப் பிடித்து நடக்கிறார். கொடி பிடித்த கைகளில் குண்டு பாய்கிறது. கொடி விழவில்லை. இந்தியச் சிப்பாய்க் கூப்பிடுகிறார்கள்; அத்தாய் ''பாய் சகோதரா ... இந்தக் கொடியை நீ பிடித்துக் கொள்'' என்று கூறிவிட்டு 'பாபு வாழ்க' என் கூறிய வண்ணம் அந்தக் குலமகள் கொம்பில் பழுத்த கனி உதிர்வது போல் தரையில் உதிர்ந்து உயிர் நீத்து விடுகிறாள். பூமி பிளக்கவில்லை. வானம் இடியவில்லை.

'வா மகளே .... வா' என்று பாரதமாதா அவளை வரவேற்கிறாள்.

அவள் கிழவிதானே. பத்து நாள் பின்னால் சாகப் போகிறவள் முன்னாடிச் செத்தாள் என்று சொல்லலாம். 'பாபுகனு' கிழவனா? பால் மனம் மாறாப் பாலகன்; தாயார் தலைசீவிப் பொட்டிட்டுப் பள்ளிக்கு அனுப்புகிறாள். ஐவுளிக்கடை மறியலை வேடிக்கை பார்க்கிறான். வெள்ளைக்கார சார்ஜண்ட் ஒருவர் சீமைத்துணி லாரியை ஓட்டி வந்து தொண்டர்கள் மேல் மோதப் போகவே, தொண்டர்கள் அஞ்சி பிளாட்பாரத்தில் ஏறுகிறார்கள். பார்த்தான் பாபு கனு. குதித்தான் கீழே. சகுந்தலையின் பிள்ளை பரதன் சிங்கத்தின் பிடரி மயிரைப் பிடித்து உலுக்கியது போல், பாரதப் புத்திரன் கனு 'மகாத்மா காந்திக்கு ஜே!' என்றான். ''விலகு. இல்லாவிட்டால் லாரியை ஏற்றி விடுவேன்'' என்றார் சார்ஜண்ட்.

''மகாத்மா காந்திக்கு ஜே''

விலகுவானா வீரன்; என்று இரண்டு .. மூன்று .. ஏறியது லாரி.



நம்முடைய நோக்கம் முழுவதும் ஒரே சொல்லில் அடங்கி விடுகிறது; சுய ஆட்சி அல்லது சுயராஜ்யம் என்பதே அச்சொல்; இங்கிலாந்திலும், குடியேற்ற நாடுகளிலும் உள்ளது போன்ற ஆட்சிமுறை; சுயராஜ்யம் பெற்றுள்ள குடியேற்ற நாடுகளில் உள்ள ஆட்சி முறை பாரத நாட்டிலும் அமலுக்கு வரவேண்டும்.

—தாதாபாய் நௌரோஜி.

குழந்தை நின்ற இடத்தில் ஒரு கூடை சதையும், எலும்பும் கிடந்தன. ஓடிவந்தாள் தாய். அத்தனைச் சதையையும் அள்ளி முத்தமிட்டாள். சதையும் அவள் மகன் தானே.

''உன்னைப் போல் இன்னும் பத்துப் பிள்ளைகள் பெறவில்லையே இந்நாட்டுக்கு உழைக்க'' என்றுதான் அலறினாள்.

ஏ ... இளைஞர் சமுதாயமே! வீர வாலிபர்களே! -உங்களை வாழ்த்துகிறேன். வணங்குகிறேன். முற்காலத்தில் டில்லி மன்னன் பகதூர்ஷாவைக் கைது செய்தான், வெள்ளைக்காரன். அப்போது தங்கத் தாம்பாளத்தைப் பட்டால் மூடித் தன் கைதிக்கு ஒரு பரிசளித்தான். தாம்பாளத்தினைக் கையில் கொடுத்து, ''பகதூர்ஷா மன்னரே! மாட்சிமை தங்கிய கவர்மெண்டார் உமது பென்சனை இம்முறையில் அளிக்கிறார்கள்.'' என்றான், கிண்டலுடன். மன்னர் பட்டை எடுக்குமுன் தட்டில் இருப்பதைக் கண்டுகொண்டார். தட்டில் இருந்தது அவருடைய பிள்ளைகள் இருவருடைய தலைகள்; கதறினாரா? கண்ணீர் விட்டாரா? என்ன சொன்னார்?

மானம் பெரிதாக மதிக்கும் மரபினர் ஆகிய நாங்கள் இம்மாதிரிக் குழந்தைகளைப் பெறுவதில் பெருமையடைகிறோம் என்றாராம்.

### ஒத்துழையாமை—நாகபுரி கொடிப்போர்

பாரதத்தின் வீரப் புதல்வர்களே! மாதாவின் பெருமை மைந்தர்களால் தான். இதை உணர்ந்தவர்கள் நீங்கள். வாழ்க உங்கள் வீரம்.

தியாகிகள் வரலாறு எழுதித் தீராத ஒன்று. அதை எழுதினால் மட்டும் தீராது. மதிக்க வேண்டும். எந்த நாட்டிலும் இத்தனை இளைஞர்கள் தியாகம் செய்தது கிடையாது! அதைக் காட்டிலும் எந்த நாட்டிலும் தமிழக அரசைப்போல் தியாகிகளை மதிப்பவர்களும் இடையாது! 7,182 விடுதலை வீரர்களுக்கு மானியம் அளிக்கும் தமிழக அரசின் செயலை மகாத்மா வாழ்த்துவார்! மனம் உடையவர்கள் பாராட்டுவர்.

பஞ்சாப் படுகொலை, உப்புச் சத்தியாக்கிரகம், குவிட் இந்தியா, ஆகஸ்டு இயக்கம் இ. தே.ரா. போன்ற அத்தனை போராட்டங்களிலும் உயிர் நீத்தவர்களை நினைத்து, இன்று வணங்குவோம்.



## விடுதலைப் போர்

# சில வீரச் செயல்கள்

ஸ்ரீ கவியோகி சுத்தானந்த பாரதியார்

டில்லி செங்கோட்டையில் (1947) விடுதலைக் கொடி ஏறு முன்பே 1790-ல் சிவகங்கையில் விடுதலைக் கொடி வானளாவப் பறந்தது. முத்து வடுகநாதர் வீரப் போரில் தியாகப் பலியானார். அவரது பசுந்தலை முன் அரசி வேலு நாச்சியார், அவள் தந்தை கோலாகலத் தேவர், தம்பி வீரத் தேவன், படைத் தலைவர் பெரிய—சின்னமருதர்—ஆகியோர் விரதங் கொண்டு விடுதலைப் போர் நடத்தினர். 1858-ல் இராணி இலட்சுமிபாய் போர்க்களத்தில் இறந்தாள். இங்கே வேலுநாச்சியார் ஆங்கிலேயரை வென்று புரந்தாள். அவள் தம்பி வீரத்தேவன் துறவி வேடத்தில் வடக்கே சென்று பிரம்மாவர்த்தத்தில் 1857-ல் நானா சாகிப்பைத் தூண்டினான்.

* * * *

பாஞ்சாலங் குறிச்சியில் எட்டு மேஜர்களை வீழ்த்திக் கட்டபொம்முவும் தூக்குமேடை யேறினான். தூக்குமேடை நாட்டை ஊக்கும் மேடையானது.

* * *

ஊமையன் ஒரே வாரத்தில் இடிந்த கோட்டையை வானளாவ எழுப்பிப் பாதர் வெள்ளை, நீலமேகம், சுப்பிரமணிய பிள்ளை போன்ற சூரரைக் கூட்டிப் போர் முடுக்கினான். முதற்போரில் ஆங்கிலேயர் கை ஓங்கியது; ஊமைத்துரை சிவகங்கைக்கு ஓடி வந்து, மருது இருவருடன் சேர்ந்து, திருமயத்தில் பாசறை அமைத்துக் காளையார் கோவில் காடுகளில் படையணி மறைத்துப் பாய்ந்து பாய்ந்து போர் புரிந்தான். மருது சகோதரர் கடும் போர் புரிந்து தூக்கு மேடையில் இறவாப் புகழ் பெற்றனர். (1812).

* * *

நாற்பதாண்டுகள் ஓடி மறைந்தன. வடக்கே 1857-ல் தமிழ் நாட்டுப் பாபாஜீ (வீரத் தேவன்) தாந்தியாதோபே, ராணாசாகேபு, இலக்குமியாய், கண்வார்சிங், அபிமுல்லாகான், அகம்மது மௌலி முதலியோரைத் தூண்டிப் போர்ப் புயல் வீசச் செய்தான். டில்லி பிடிபட்டது; ஆனால், துரோகிகள் காட்டிக் கொடுத்தனர். நீல்களும், ஹாவ்லக்குகளும் நமது வீரரைச் சுட்டுக் குவித்தனர்; ஆயிரக் கணக்கான மக்களைத் தூக்கு மேடையில் ஏற்றி வதைத்தனர். கிராமம் கிராமமாகத் தீமூட்டி மக்களைத் தீயில் போட்டு மடித்தனர்.

* * *

இக்கொடிய வெற்றியும், குமுறிய போரும் விக்டோரியா சர்க்காருக்குப் புதிய பாடம் கற்பித்தன. துப்பாக்கியாலும், சட்டத்தாலும் இந்த நாட்டு உரிமை யுணர்வை அடக்க முடியாது. நாட்டினரை அடக்க நாட்டினவரைக் கொண்டே ஓர் இயக்கம் தொடர்வோம் என்ற சூழ்ச்சியால் ஷியும், வெட்டர் பார்ன் ஆகிய இருவரையும் ஊக்கிக் காங்கிரஸ் சங்கத்தை நாட்டினர். அதில் நீண்ட காலம் (1885—1912) சர்க்காரின் செல்லப் பிள்ளைகளே சலுகை பெற்றனர். முதல் காங்கிரஸ் பம்பாயில் கோகுல்தாஸ் வட மொழிக் கல்லூரியில் டபிள்யூ.சி. பானர்ஜி தலைமையில் நடந்தது. அதற்குத் தமிழ்நாட்டிலிருந்து மதுரை மணி ஐயர், சுதேசமித்திரன் ஜி.சு. மணி ஐயர், கேசவபிள்ளை ஆகியோர் சென்று பேசினர்.

* * *

1907-ல் சூரத்தில் கோகலேயின் மிதவாதக் கூட்டம் நடந்தது. அதைத் திலகர், சிதம்பரம்பிள்ளை — பாரதியார் முதலிய தீவிரச் சுதேச வீரர்கள் செருப்பெறிந்து சிதறடித்தனர். அரவிந்தர் தலைமையில் முழு விடுதலை, சுதேச விரதத்துடன் நிறைவேறியது. மறு ஆண்டு அட்வகேட்—ஜெனரல் கிருஷ்ணசாமி ஐயர் செல்வாக்கால் சென்னையில் மிதவாதிகளின் கன்வென்ஷன் காங்கிரஸ் நடந்தது. அதை 'இந்தியா' இதழாசிரியர் பாரதியார் ஆட்டு மந்தைக் கூட்டம் என்று கேலி செய்து திலகர் — அரவிந்தர் இயக்கத்திற்கே ஆக்கமளித்தார். சென்னையில் அடக்கப்பட்ட 'இந்தியா' புதுவையில் மிடுக்கு நடைபோட்டது. அதையும் 1910-ஆம். ஆண்டு அடக்கியது ஆங்கில ஆட்சி.

* * *

உடனே அரவிந்தரின் 'கர்மயோகி'யினைப் பாரதியார் தமிழில் நடத்தினர். தமிழகம் அரவிந்த மணம் கமழ்ந்தது. ஆள் தூக்கிச் சட்டம் இதோ துரத்துகிறது. பாரதியார் முயற்சியால் அரவிந்தர் கல்கத்தாவில் கப்பலேறி 4—4—1910-ல் புதுச்சேரி புகுந்து முதலில் சங்கரஞ் செட்டியார்வீட்டு மாடியில் தவம் தொடங்கினார். பிறகு வெள்ளைக்காரத் தெரு மாளிகையில் குடியேறி நான்கு மாணவருடன் வசித்தார். 1910 முதல் 1950 வரையில், நாற்பதாண்டுகள் அரவிந்தர் தமிழகத்திற்கே உரியவராகி, இங்கேயே உலகம் வியந்து போற்ற ஆசிரமமும், ஆரோவில்லும் அமைத்து அன்னையிடம் விடுத்து அமரரானார். அரவிந்தர் அரசியலை நீங்கி ஆன்ம நேய ஒருமைத் திறனால், இந்தியாவுக்கு உலகப் புகழ் தேடினார். அவர் கல்கத்தாவில் பிறந்தார்; இலண்டனில் கற்றார், பரோடாவில் கலை வளர்த்தார். கல்கத்தாவில் நான்கு ஆண்டுகள் எழுத்தாலும், பேச்சாலும்



நாட்டை வீறுபடுத்தினர். இறுதியில் காந்தி கண்டசாத்வீக எதிர்ப்பும், ஒத்துழையாமையுமே வழி எனச்சொல்லிஉள்ளடங்கியோகச் சக்தியை வளர்த்து மனிதன் தெய்வ மாறுதல் அடையும்ஆத்ம சாதனத்தைத் தந்து சென்றார். பாரதியாரும், அடியேனும், அரவிந்தர் திருவடி பற்றிப் புது வாழ்வெய்தினோம். எனது பாரத சக்தி அரவிந்த சக்தி வரலாறே. அதை அவர் ஆங்கில மொழி பெயர்ப்பில் படித்து ஆசி கூறினார்.


* * *

**1910-ல்** அரவிந்தர் வந்த சில மாதங்களுக்குப் பிறகு வீர விளக்கு வ. வே. சு. ஐயர் இடர்க் கடல்களை நீந்திப் பாரிசில் பார்சி கனவான் விக்ரமசிங் ஆகி, கெய்ரோவில் அப்துல்லா மௌலவியாகிப் பம்பாயில் குலாம் காதராகி, நாசிக் சிறையில் சாவர்காரைக் கண்டு, அவர் வந்தேமாதர ஆர்ப்புடன் அந்தமான் செல்வதைப் பார்த்துவிட்டு, நாகபுரி காங்கிரஸ் கண்டு, புதுச்சேரிக்குப் பக்கிரி வேடந்தாங்கி அல்லாகு அக்பர் என்று வந்தார். மண்டம் ஆசாரியார் வீட்டில் ஒரு வாரம் தங்கிப்பிறகு கோயில் தெருவில் குடி புகுந்தார். மனைவி வரகுநேரியிலிருந்து வந்து சேர்ந்தாள். புதுச்சேரியில் ஐயர் பட்ட இடர்கள் பிரதாபசிங்கன், கரிபால்டி ஆகிய வீரர் பட்ட இடர்களைப் போலும்.

* * *

ஐயர் கிருஷ்ண பிள்ளை தோட்டத்தில் வாஞ்சி மாடசாமி, நீலகண்டன், சங்கர கிருஷ்ணன் முதலியோருக்குத் துப்பாக்கிப் பயிற்சி தந்தார். அடியேனுக்கு மறவர் உறவால் போதிய வாட் பயிற்சியும், சுடு பயிற்சியும் கிடைத்தது. ஆதலால் என்னை ஐயர் மிகவும் விரும்பி இன்னொரு செயலுக்காகப் பயிற்றினார்.

* * *



மணியாச்சியில் கலெக்டர் ஆஷை வாஞ்சி சாம்பலாக்கினான். பிறகு ஐயருக்குப் பல இடர்கள் தொடர்ந்தன. என் உடல் பொருள் ஆவி யெல்லாம் ஐயருக்காகவும், அரவிந்தருக்காகவும் அளித்தேன். ஐயரைத் தூக்கிச் செல்லவும், சூனியம் வைத்துப் பித்தாக்கவும், மயக்கவும், மாயம் செய்யவும் ஒற்றர் செய்த வஞ்சனைகள் எண்ணில. நான் உச்சிக்குடுமி தாசரி வேடம் பூண்டு அவருக்கு உதவினேன். வீரன் மாடசாமியும், வேலைக்காரி பார்வதியும் ஐயருக்குச் செய்த உதவிகள் பல.

* *

ஒரு நாள் ஒற்றர் ஐயர் வீட்டுக் கிணற்றில் வெடி மருந்துகள் அடங்கிய ஜாடியை வைத்தனர். பார்வதி கண்டுபிடித்தாள். ஐயர் ஜாடியைப் புதுவை கவர்னரிடம் காட்டி வரும்போது



ஒற்றர் கிணற்றை இறைத்துப் பார்த்து ஏமாந்தனர். குண்டர் கள்ளுண்டு மற்றொரு தடவை இரவில் ஐயரைத் தூக்கிச் செல்லவே கூட்டமாக வந்தனர். ஐயர் தமது ஆயுதச் சாமான்களை மாடியேறி இன்னொரு வீட்டில் ஒளிய வைத்து, மனைவி மக்களையும் அங்கே அனுப்பித் துப்பாக்கி எடுத்து மேலேயிருந்து இரண்டு வேட்டுப் போட்டார். காலிகள் ஓடி மறைந்தனர்.

* *

முதல் உலகப் போர் மூண்ட போது எம்டன் கப்பல் சென்னையில் குண்டு போட்டுப் புதுவைக்கு வந்தது. அதில் சண்பக இராமன் பிள்ளை இருந்தார். மாடசாமி படகில், இரவு பன்னிரண்டு மணிக்கு ஐயர் எனக்குக் 'கடிதம்' தந்து அனுப்பினார். சண்பக இராமர் பதில் தந்தார். 'புரட்சியைப் பலமாக நடத்தினால் கைசரின் உதவி வரும்,' என்றார்.

* * *




இதன் பிறகு ஐயர், அரவிந்தர், பாரதி ஆகிய அனைவரையும் அல்ஜீரியாவுக்கு நாடு கடத்த முயன்றனர். அரவிந்தர் நடக்காது என்றார். நடக்கவில்லை.

* *

**1917-ல்** காந்தியடிகள் வந்தார். அவரது உபதேசத்தால் துப்பாக்கி வெறி ஒழிந்தது. ஐயருடன் எல்லாரும் காந்தியர் ஆனோம். போர் முடிந்ததும் அரசியல் கைதிகள் விடுதலை பெற்றனர். பாரதியார் பாய்ந்து வந்தார். சென்னைக்கு ஐயரும் வந்தார். பிறகு காந்தி வழி பற்றித் தொண்டு பரவினோம்.

அரவிந்த சக்தியால் புதுச்சேரி ஆன்ம நேய நிலையமானது, உலகெல்லாம் அங்கே கூடுகிறது. ''வள்ளலார்'' கண்ட கனவு வண்ணப் புதுவையில் ஆரோவில்லில் நிறைவேறுகிறது. இந்திய விடுதலைப் போரின் தியாகப் பாசறை புதுச்சேரி. அது புதுயுகச் சேரியாகி உலகச் சங்க நிலையமாக நிலவுகிறது.

* *

காந்தீயத்திற்கும் கனிந்துதவியது தமிழகமே. வடக்கே தண்டியாத்திரை போல இங்கே வேதாரண்ய உப்புச் சத்தியாகிரகம் நடந்தது. அங்கே சபர்மதி ஆசிரமம், இங்கே நான்கு காந்தி ஆசிரமங்கள் எழுந்து விளங்குகின்றன.

* *

இந்தியச் சுதந்தரப் போரில் 1790 முதல் இன்று வரையில் தமிழர் ஈடுபட்டுப் பாடுபட்டனர்.

இந்தப் போர்களுக்கிடையே பெரியார், அண்ணா நடத்திய தன்மானப் போர் வரிசைகளை நாம் மறக்க முடியாது.

தமிழரசு வந்ததே;
தன்மானம் வென்றதே;
அமுதமான தமிழ்மொழியும்
அரியணை வகித்ததே!



# கொய்தவை

பள்ளிக் கட்டடங்கள் உருவாக்குவதை மட்டும் கவனிக்கத் தனி நிறுவனம் ஒன்றை அமைக்கும் திட்டம் பற்றித் தமிழக அரசு ஆய்வு செய்து வருகிறது. பள்ளிக் கட்டடங்களை உருவாக்கும் பொருட்டுக் கடனுதவிக்காகக் குடிநீர் வடிகால் வாரியம் போன்று இந்த நிறுவனம் எல். ஐ. சி., வணிக வங்கிகள் ஆகியவற்றை அணுகும்.

முக்கியமாக ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் ஏறக்குறையப் பத்தாயிரம் தொடக்கப் பள்ளிகள் உள்ளன. இவற்றுக்குக் கட்டடங்கள் இல்லை. தொடக்கப்பள்ளிகளனைத்துக்கும் பலமான கட்டடங்களை உருவாக்க ரூ. 9 கோடி தேவைப்படுகிறது. பள்ளிக் கட்டடம் உருவாக்கும் பணியைக் கவனிக்கத் தனி நிறுவனம் அமைக்கப்பட்டால், இதற்காக எல். ஐ. சி. மற்றும் இதர நிதி நிலையங்களிலிருந்து கடனுதவியை இந்நிறுவனம் பெறமுடியும்.

* * *

தமிழ் நாட்டில் பல்வேறு இடங்களில் உடனடியாக மாணவருக்காக 21 அரசாங்க விடுதிகள் ஆரம்பிக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. இவற்றில் ஏழு கல்லூரி மாணவர்களுக்கும், எஞ்சியவை உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கும், மாணவியருக்கும் ஆகும்.

கல்லூரி மாணவர்களுக்காகத் தொடங்கப்படுபவை தாம்பரம், விழுப்புரம், கரூர், மதுரை, சிவகங்கை, வேலூர், திருவாரூர் ஆகிய ஊர்களில் இருக்கும். ஒவ்வொரு விடுதியிலும் 50 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப் படுவர்.

உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கான விடுதிகள், செங்கற்பட்டு மாவட்டத்தில் செவ்வாப்பேட்டை, நாடூர், திருச்சி மாவட்டத்தில் அன்னவாசல், தாத்தையங்கார் பேட்டை, சேலம் மாவட்டத்தில் நாமகிரிப் பேட்டை; தருமபுரி மாவட்டத்தில் கவண்டப்பாடி, இராமநாதபுர மாவட்டத்தில் திருவேங்கம்பேட்டை; வடஆர்க்காடு மாவட்டத்தில் கீழ்க்கொடுங்கலூர் ஆகிய ஊர்களில் இருக்கும். ஒவ்வொரு விடுதியிலும் 30 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப் படுவர்.

உயர்நிலைப்பள்ளி மாணவியருக்கான விடுதிகள், சேலம் மாவட்டம் ஓமலூர்; நெல்லை மாவட்டம் களக்காடு; கோவை மாவட்டம் அந்தியூர்; தென் ஆர்க்காடு மாவட்டம் தர்மநல்லூர் ஆகிய ஊர்களில் தொடங்கப்படும். ஒவ்வொரு விடுதியிலும் 30 மாணவிகள் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

* * *

நாளிதழ்கள் விநியோகத்தில் உலகத்திலேயே முதலிடம் வகிக்கிறது, சுவீடன். 1970-ஆம் ஆண்டில் அந்த நாட்டில் 1,000 பேர்களுக்கு 534 பிரதிகள் என்ற விகிதத்தில் நாளிதழ்கள் இருந்தன. ஜப்பானில் 511 பிரதிகள் என்ற விகிதத்திலும், பிரிட்டனில் 488 பிரதிகள் என்ற விகிதத்திலும் நாளிதழ்கள் இருந்தன. 1971-ஆம் ஆண்டிற்கான ஐ.நா. புள்ளி விவர நூல் இந்தத் தகவல்களைத் தெரிவித்துள்ளது.

* * *

உலகிலேயே ஐரிஷ் நாட்டைச் சேர்ந்தவர்கள் தான் மிகவும் அதிகமாகச் சாப்பிடுகிறார்கள். அமெரிக்கர்கள் நிறைய பீர், மதுபானம் உற்பத்தி செய்கிறார்கள்; சுவீடன் நாட்டைச் சேர்ந்தவர்கள் நீண்ட காலம் வாழ்கிறார்கள்; லைபீரியா நாட்டைச் சேர்ந்தவர்கள் அதிக அளவில் திருமணம் செய்துகொள்கிறார்கள்.

அந்நாட்டில் 1,000-க்கு 38 பேர் தாங்கள் ஆண்டு தோறும் திருமணம் செய்து கொள்வதாகக் கூறுகிறார்கள்.


கில்பர்ட், எல்லீஸ் தீவுகளில் தான்; மிக அதிக அளவில் விவாகரத்துகள் நடைபெறுகின்றன. 1,000 பேருக்கு 5 பேர் வீதம் அங்கு விவாகரத்துச் செய்து கொள்கிறார்கள்.

சமூகப் பொருளாதாரப் போக்குகள் சம்பந்தமாகத் தயாரிக்கப் பட்டுள்ள ஐ. நா. புள்ளி விவர நூல் இத்தகவலைக் கூறுகிறது.

* * *

தமிழ்நாடு முழுவதும் பூமிக்கு அடியில் உள்ள தண்ணீரை வேளாண்மைக்குப் பயன்படுத்திக்கொள்ள உலக வங்கியின் கடன் உதவியுடன் வடிமுனைக் குழாய்க் கிணறுகள் திறக்கும் திட்டம் ஏற்கெனவே தமிழக அரசின் ஆய்வில் இருந்து வருகிறது. கூடிய விரைவில், அந்தத் திட்டம் பெரும் அளவில் நிறைவேற்றப்படும்.

ஆடுதுறையில் உள்ள அரசினர் வேளாண்மை ஆராய்ச்சிப் பண்ணையின் வளர்ச்சிக்காகப் பல திட்டங்களை அரசு முனைப்பாக ஆராய்ந்து வருகிறது. தஞ்சை மாவட்டத்தில் வடிகால் பிரச்சினையைத் தீர்க்கப் பல திட்டங்கள் நிறைவேற்றப்படவிருக்கின்றன. அந்தத் திட்டங்கள் அனைத்தும் பல கட்டங்களில் இன்னும் 2 அல்லது 3 ஆண்டுகளில் நிறைவேற்றப்படும்.



# நிலக்கடலை விளை-
# விக்கும் விவசாயிகளே

பூச்சிகளாலான நஷ்டத்தை தவிர்க்கவும். சார் உறுஞ்சும் அசுவுணி யினால் பயிர் வலு விழக்கிறது. நெடுங்காலம் பாதுகாப்பளிக்கும் முழுமை யான ஊடுருவிப்பாயும்

**மெட்டாஸிஸ்டாக்ஸ்** தெளிக்கவும். புழுக்கள், அசுவுணி, இதர பூச்சிகளை அழிக்க

**∴பாலிடால் E 605 திரவமும்**

தெளிக்க தண் ணீர் வசதியில்லையெனில்

**∴பாலிடால் தூளும்** உபயோகிக்கவும்.

அடைப்புகளுடன் இணைக்கப் பட்டிருக்கும் உபயோகிக்கும் முறைகளின்படியே மெட்டாஸிஸ்டாக்ஸ், ∴பாலிடால் திரவம் அல்லது தூளையே உபயோகப்படுத்தவும்.

## நிலக்கடலை விளைவிக்கும் விவசாயிகள்

பயிர் விளைச்சலில் நஷ்டத்தை தவிர்க்க பேயரின் தரமான பூச்சி மருந்துகள் உபயோகிக்கிறார்கள்.

BAYER ®
பாயரின் தரமான
பூச்சி மருந்துகள்

5-A/202 (760)

# கணக்குப் பார்ப்போம்!

## கவிஞர் கருணானந்தம்

இருபத்தைந் தாண்டுகளாம்! என்னே விந்தை?
இணையற்ற உரிமைபெற்ற இந்தி யாதான்
உருப்படியாய் ஓட்டியுள்ள காலம் நீளம்!
உருவாக்க வேண்டியன இனும்ஏ ராளம்!
விருப்பமுடன் விடுதலையை நினைவு கூர்ந்து
வெள்ளிவிழா எடுக்கின்ற இந்நாள்-நல்ல
திருப்புமுனை வரக்கண்டோம்! மக்க ளாட்சி
சிதையாமல் சிறந்தோங்கச் சூளு ரைப்போம்!

"தலைதூக்கி நிற்காது; தழைக்கா" தென்றார்!
தரணியெங்கும் நிழல்பரப்புங் கிளைவி ரித்தோம்!
இலைதாக்கும் பயிர்க்கொல்லி நோயைப் போன்ற
எதிர்வந்த தடையனைத்தும் உடைத்தோம்! உள்ளே
தலைதூக்கும் குழப்பங்கள் கரையே றுமல்
அடிபணிந்து புறங்காணச் செய்தோம்! நீண்ட
மலைதூக்கும் முகடேபோல்-சாத னைகள்
வானேக்க வளர்க்கின்றோம். துறைகள் தோறும்!

பன்னீரின் மணங்கமழும் சோலை காணப்
பாத்திகளாய் அமைந்தோரே! மலர்கள் தோயும்
தெண்ணீரின் பொய்கையாய் நமது நாடு
திகழ்ந்தோங்க வாய்க்காலாய் ஆனீர்! உங்கள்
கண்ணீரின் காவியத்தை வணங்கு கின்றோம்!
காலத்தால் அழியாத கல்லெ ழுத்தாம்
செந்நீரின் வரலாற்றைச் சிரமேற் கொண்டோம்;
சிந்தனையால் செயலாலே நன்றி சொல்வோம்!

கற்பனையாய்க் காய்க்காத பனையா காமல்
கண்முன்னே பயனூட்டும் தென்னை போலப்
பொற்புடனே திட்டங்கள் தொகுத்துக் கோடி
புரிகின்றோம்; விடுதலைப்போன் மாளி கைக்குச்
சிற்பிகளே! "நாம்கணக்குத் தீர்த்த திந்நாள்;
சிந்தித்துப் பார்க்குந்நாள் இந்நாள்!" என்றார்
அற்புதமாய் அன்றெங்கள் அண்ணா! உண்மை!!
அவர்சொல்லைச் செயலாக்கும் கலைஞர் ஆட்சி!








குறளோவியம்
முதல்வர் கலைஞர்
வைத்தியர் ஊசி குத்துகிறார், உடலில் வலி ஏற்படுகிறது. ஆனால் அந்த ஊசி வழியே உடலுக்குள் செல்கிற மருந்து, நோய் தீர்க்கப் பெரிதும் உதவுகிறது. வைத்தியரிடம் வேதனை தரும் ஊசியும் இருக்கிறது. நோய் வேதனையை நீக்கும் மருந்தும் அதனுள் இருக்கிறது!
இங்கே திருவள்ளுவர் ஒரு வைத்தியரைக் குறள் மூலம் அறிமுகப்படுத்துகிறார் பாருங்கள். அழகி அழகனைப் பார்க்கிறாள். அந்தப் பார்வையை அவன் வர்ணிக்கிறான். இந்த அணங்கு இரு பார்வையுடையவள்; ஒரு பார்வையால் அவனுக்கு வேதனை உண்டாக்கிறாள். அடுத்த பார்வை அதை விலக்கும் மருந்தும் அளிக்கும். இந்த விசித்திரமான மருத்துவப் பெண்மணியின் பார்வைச் சிறப்பை வள்ளுவர் வாய்மொழியாகவே கேளுங்கள்.
இருநோக் கிவளுண்கண் உள்ள தொரு நோக்கு
நோய்நோக்கொன் றந்நோய் மருந்து



அப்படி அவள் பார்க்கிறாளே என்பதற்
காகப் பருவ இளைஞன் வாளாயிருந்து
விட்டானா? அவனோ ஒரு வம்புக்கார
வாலிபன் போலும். காதல் மயக்கத்தில்
என்னென்ன சொல்கிறான் பாருங்கள்!

"நான் அவளைப் பார்க்கும்போது
அவள் என்னைப் பார்க்காமல் நிலத்தை
நோக்குகிறாள். நான் அவளைப் பாரா
திருக்கும்போது அவள் என்னைப் பார்த்து
மகிழ்கிறாள்" என்று கூறுகிறான். இது
எவ்வளவு பெரிய பொய் தெரியுமா?

"நான் அவளைப் பாராதிருக்கும்போது
அவள் என்னைப் பார்த்து மகிழ்கிறாள்"
என்கிறானே—இவன்தான் அவளைப் பார்ப்ப
தில்லையே; அப்படி இருக்கும்போது அவள்
இவனைப் பார்ப்பது மட்டும் இவனுக்கு
எப்படித் தெரிந்தது? அதேபோல் இவன்
அவளைப் பார்க்கும்போது அவள் நிலத்தை
நோக்குகிறாளாமே; அது எபபடி? இவ
னைப் பார்த்துவிட்டுத்தானே அவள் தனது
பார்வையை வேறு பக்கம் திருப்ப
வேண்டும்?

இந்தப் பார்வைக்குத்தான் 'பார்க்கா
மல் பார்க்கும் பார்வை' என்று பெயர்
போலும்! இத்தகைய நிகழ்ச்சியால்
வள்ளுவர் எதை விளக்குகிறார் தெரியுமா?
காதலன் கூறும் பொய்யை மட்டுமல்ல,
அவர்கள் கண்களை வேறுபக்கம் திருப்ப
அவர்களே முயன்றாலும் அது முடியா
மல் ஒருவரையொருவர் பார்த்துக்கொள்
கிறார்கள் என்பதைத்தான் சொல்லாமல்
சொல்கிறார் செந்நாப்போதார். இதோ
அந்தக் குறளோவியம்!

யானோக்குங் காலை
நிலனோக்கும் நோக்காக்கால்
தானோக்கி மெல்ல நகும்.

மெல்ல நகும்—உள்ளுக்குள் மகிழ்ச்சி
யடைவாள் என்பதாகும்.











# விடுதலைப்போரில் திருப்பங்கள்!

## எஸ். நடராஜன்



நம் நாட்டின் விடுதலைப்
போராட்டம் ஏறத்தாழ ஒரு நூற்
ருண்டுக் காலமாக நடந்து வந்
திருக்கிறது. அடிமைகளாக
ஆர்வமிழந்து ஒடுக்கப்பட்ட
மக்கள் சுதந்திர உணர்ச்சி பெற்று
வீறு கொண்டு எழுந்தது, ஒரு
நாளில் நடந்துவிடவில்லை. நாடு
சுதந்திரம் பெறவேண்டும் என்
பதற்காகப் பல தலைவர்கள் பல
முறைகளைக் கையாண்டனர். தம்
உடல், பொருள், ஆவி எல்லா
வற்றையும் அளித்து, தியாகி
களாக விளங்கியவர்கள்
எண்ணிக்கை கணக்கிலடங்கா. அங்
நாடு விடுதலையடைந்து கொண்
டாடும் இச்சமயத்தில் அந்தத்
நாளின் வெள்ளி விழாக் கொண்
தியாகிகளுக்கு வணக்கம் கூறு
வோம்.

தீங்கு செய்வதிலும் நன்மை
யுண்டு என்பது உலகறிந்த
உண்மை. பிரிட்டிஷ் ஆட்சியை
நீடித்து நிலைக்கச் செய்யச் சிலர்
நமக்குக் கொடுமையிழைத்தனர்.
அதுவும் நாட்டில் தன் ஆதிக்
கத்தை நிலைநாட்டச் செய்த நட
வடிக்கைகள் சுதந்திர வெறி
யையே ஊட்டின.

### முதல் திருப்பம்

பிரிட்டிஷ்காரர்கள் நீதிக்கும்
நேர்மைக்கும் கட்டுப்பட்டவர்கள்.
அவர்களிடம் நியாயத்தை எடுத்
துக்காட்டியே நாட்டின் விடுதலை,
யைப் பெற்றுவிடலாம் என்று
கனவுகண்டவர் தாதாபாய் நவ
ரோஜி. சிங்கத்தின் குகைக்
குள்ளேயே சென்று அதனிடம்
விளையாடுவதைப்போல இவர்
பிரிட்டிஷ் நாடாளு மன்றத்திற்குப்
(காமன்ஸ் சபை) போட்டியிட்டு
மூன்று முறை தோற்று, நான்கா
வது முறை வெற்றி பெற்று
அம்மன்றத்தின் உறுப்பினராகி
இந்தியாவிற்கு நியாயம் வழங்க
வேண்டும் என்பதைப் புள்ளி விவ
ரங்களுடன் எடுத்து விளக்கினர்.
வில்லியம் வெட்டர்பான், கெயின்,
ஹிண்ட்மான் போன்றவர்கள்
இந்தியாவின் கோரிக்கைக்கு
ஆதரவளிக்க முன்வந்தது தாதா
பாயின் பணியின் காரணமாகத்
தான். கெயின் ஒரு சமயம் குறிப்
பிடும்போது "ஆங்கிலேயர்களா
கிய நீங்கள் ஏன் இந்தியர்களுக்
காகப் பரிந்து பேசுகிறீர்கள்?
பிரிட்டிஷ் ஆட்சியில் இந்தியர்கள்
சுகமாகத்தானே இருக்கிருர்கள்.
அவர்கள் யாரும் எதுவும் கேட்ப
தாகத் தெரியவில்லையே! என்று
என்னிடம் கேட்கிருர்கள். இந்தி
யர்களாகிய நீங்கள் விடுதலை
கோரும் ஆர்வமற்று, பாவம்
இந்தக் கிழவரை (தாதாபாய்)த்
தொல்லைக்குள்ளாக்குகிறீர்களே!"
என்று பேசினர். நம் நாட்டினர்
விடுதலை வேண்டும் என்று கேட்க
வும் துணிவற்று இருந்த காலம்
அது.





## இரண்டாவது திருப்பம்

சிப்பாய்க் கலகம் என்று கூறப்
படும் முதல் சுதந்திரப் போரை
பிரிட்டிஷார் வெற்றிகரமாக
ஒடுக்கிவிட்டனர் என்ருலும் நாட்
டில் கொந்தளிப்பு மட்டும் முழுது
மாக அடங்கிவிடவில்லை. நீறு
பூத்த நெருப்புப்போல் சுதந்திர
வேகம் இருந்துகொண்டே இருந்
தது. மக்கள் எப்போது மீண்டும்
கிளர்ச்சி செய்வார்களோ என்ற
பயம் பிரிட்டிஷ் ஆட்சியாளர்
களுக்கு இருந்தே வந்தது.

இந்தியர்களின் துயரங்களுக்கு
முடிவுகட்ட அவர்களுக்கென்று
ஒரு தேசிய ஸ்தாபனம் வேண்டும்
என்று எண்ணியவர் ஹியூம்
என்பவர். இதற்கான முயற்சி
களையும் அவரே செய்தார்.
வைஸ்ராய் டப்ரினும் இந்த ஸ்தா
பனம் ஏற்பட ஆதரவு அளித்தார்.
ஆளுபவர்களுக்கு அக்கறை ஏன்?

1857-ஆம் ஆண்டுப் புரட்சி
போல மற்ருெரு கிளர்ச்சி கிளம்ப
லாம் என்ற சூழ்நிலை நாட்டில்
இருந்தது. 1870-ல் நாட்டில்
பல இரகசிய சங்கங்கள் வேலை
செய்வது கண்டுபிடிக்கப்பட்டன.
மக்கள் உணர்ச்சி பயங்கர வழி
யில் பாயாமல் இருக்க ஒரு
ஸ்தாபனம் நிறுவ முயற்சி நடந்
தது. இதுதான் வைஸ்ராய் ஆதர
வின் இரகசியம்.

பம்பாயில் நடைபெற்ற முதல்
காங்கிரசுக்கு, பம்பாய் மாநில
ஆளுநராக இருந்த 'ரே'யைத்தான்
தலைமை வகிக்கச் சொல்வதாக
இருந்தது. ஒரு இந்தியர் தலைமை
வகிப்பது நல்லது என்று கருதப்
பட்டதால் உமேஷ்சந்திர பானர்ஜி
தலைவராகத் தேர்ந்தெடுக்கப்
பட்டார். கோபாலகிருஷ்ண
கோகலே ஹியூமைப் பாராட்டி
லண்டனில் பேசியபோது இந்திய
தேசிய காங்கிரஸை இந்தியர்
எவரும் ஆரம்பித்திருக்க
முடியாது. இந்தியர்களிடம்
பிரிட்டிஷாருக்கு அவ்வளவு
அவநம்பிக்கை என்று குறிப்பிட்
டார்.

## மூன்ருவது திருப்பம்

விடுதலைப் போரில் மகாத்மா
காந்தி தலையிடுமுன் புரட்சியே
தலைதூக்கி நின்றது. புரட்சிக்
காரர்களைப் பயங்கரவாதிகள்
என்று அந்நிய ஆட்சி வருணித்
தது. உண்மையில் அவர்கள்
பயத்தை இந்தியர் உள்ளத்திலி
ருந்து விரட்டிய தியாக சீலர்கள்.

புரட்சி நடந்தபோதெல்லாம்
இந்து முஸ்லிம் ஒற்றுமையைக்
கண்ட ஆங்கிலேயர்கள் தங்கள்
ஆதிக்கம் வேரூன்ற, பிரித்தாளும்
கொள்கையைக் கடைப்பிடிக்க
லாயினர். வங்காளத்தின் கீழ்ப்
பகுதியில் முஸ்லிம்கள் அதிகம்.







மேற்குப் பகுதியில் இந்துக்கள் மிகுதி. ஆகவே கவர்னர் ஜெனரலாக இருந்த கர்ஸான் பிரபு வங்காளத்தைக் கிழக்கு வங்கம் என்றும் மேற்கு வங்கம் என்றும் பிரித்தனர். 1905-ஆம் ஆண்டு ஆகஸ்டு 16-ஆம் நாள் வங்கம் இரு துண்டாயிற்று. மக்கள் கிளர்ச்சிக்குப் பின்னர் வங்காளம் மீண்டும் ஒன்றாகியது. ஆனால் 1947-ல் பாக்கிஸ்தான் பிரித்தளிக்கப்பட்டபோதுதான் கிழக்கு வங்கம் மறுபடியும் இந்தியாவிலிருந்து பிரிக்கப்பட்டது.





இப்பிரிவினையை எதிர்த்து நாடே கொதித்தெழுந்தது. இக்கிளர்ச்சி சுதேசி இயக்கமாகவும் அந்நியத் துணி பகிஷ்காரமாகவும் கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்தது. பங்கிம்சந்திரரின் வந்தே மாதர கீதம் புரட்சி வேகத்தை அதிகரிக்கச் செய்தது. 'வந்தே மாதரம்' என்ற ஒலியைக் கேட்டே ஆங்கிலேயர்கள் நடுங்கினர். இப்புரட்சியின் எதிரொலியால் காங்கிரஸில் மனுப் போட்டுக்கொண்டிருந்த மிதவாதிகளின் செல்வாக்குக் குறைந்தது.

திருநெல்வேலியில் வ. உ. சிதம்பரம் பிள்ளை, சுப்பிரமணிய சிவா ஆகியோர் சுதந்திர வேகத்தை மக்களிடையே பரப்பினர்.



## நான்காவது திருப்பம்

அன்னிபெசண்ட் அம்மையார் தான் 'ஹோம்ரூல்' (சுயாட்சி) இயக்கத்தின் 'மாதா'. இந்தியாவின் கல்வியும், கலையும், கலாசாரமும் வரவரக் குறைந்துபோவதற்குக் காரணம் பிரிட்டிஷ் ஆட்சியே என்ற உண்மையை இவர் துணிந்து கூறினார். இந்தியாவுக்கு நியாயம் வழங்க வேண்டும் என்று அவர் பாடுபட்டார்.

இதற்காக இவர் அங்கங்கே பிரச்சாரம் செய்து வந்ததுடன் சுயாட்சிச் சங்கங்களையும் நிறுவி வந்தார். இவருடைய 'நியூ இந்தியா' பத்திரிகையில் 'ராஜத்துவேஷ'க் கட்டுரைகள் பிரசுரிக்கப்படுகின்றன என்றும், இனி அம்மாதிரி எழுதப்படாமலிருக்க ரூ. 20,000 ஜாமீன் கட்டவேண்டும் என்றும் சென்னை அரசாங்கம் உத்தரவு பிறப்பித்தது. அப்போது சென்னை கவர்னராக இருந்த பெண்ட்லண்ட், அன்னிபெசண்ட், அருண்டேல், வாடியா இம்மூவரையும் காவலில் வைத்தார். இந்தியாவெங்கும் பரபரப்பு ஏற்பட்டது. இதனால் நாடு கொதித்தெழச் செய்தவர் பெண்ட்லண்ட்.



## ஐந்தாவது திருப்பம்

நாடு முழுவதும் சுதந்திரக் கனல் பறக்கச் செய்த பெருமை ஜெனரல் ஓ'டயர் என்ற ஒரு ராணுவ அதிகாரியையே சாரும். சீக்கியர்களைக் கொண்ட பஞ்சாப் படை வீரத்திற்குப் பேர்போனது. இங்கு, காங்கிரஸ் மகாசபைக் கூட்டம் நடைபெறாமல் தடுக்க பஞ்சாப் கவர்னர் ஓட்வியர் விரும்பினார். அப்போது பஞ்சாப் மக்களின் மனத்தைக் கவர்ந்த தலைவர்கள் டாக்டர் சத்யபால், டாக்டர் கிச்லு இவர்களைக் கைது செய்து எங்கோ அழைத்துச்சென்றுவிட்டார்கள். இது மக்களிடையே பெரும் கொதிப்பை ஏற்படுத்திவிட்டது.

அரசாங்கத்தின் அடக்குமுறையைக் கண்டிக்க 1919 ஏப்ரல் 13-ஆம் நாள் ஜாலியன்வாலா பாக் மைதானத்தில் சுமார் 20,000 பேர் கொண்ட கூட்டம் நடைபெற்றது. இந்த மைதானத்திற்குக் குறுகலான ஒரே ஒரு வழி. கூட்டம் நடந்துகொண்டிருக்கும்போதே திடீரென்று படைகள் வரும் சத்தம் கேட்டது. நூறு இந்தியச் சிப்பாய்களுடனும் ஐம்பது வெள்ளை சோல்ஜர்களுடனும் ஓ'டயர் என்ற ராணுவ அதிகாரி வந்தார். அரை மணி நேரம் கூட்டத்தினர் மீது சுடச் செய்தார். சுமார் 1600 குண்டுகள் சுட்டுத் தீர்க்கப்பட்டன. 'தோட்டாக்கள் தீர்ந்துவிட்டன; இல்லையேல் மேலும் சுட்டிருப்போம்' என்று கொக்கரித்தார் ஓ'டயர்.

காந்திஜியும் சரோஜினி தேவியும் தங்களுக்கு பிரிட்டிஷார் அளித்த கெய்ஸ்ரி ஹிந்த் மெடல்களைத் திருப்பிவிட்டனர். ரவீந்திரநாத் தாகூர் 'சர்' பட்டத்தை உதறித் தள்ளினார். மிதவாதியாக இருந்த மோதிலால் தீவிரவாதியானார்.





## ஆறாவது திருப்பம்

இந்தச் சமயத்தில்தான் காந்தியடிகள் அரசியலில் நுழைந்து அகிம்சை வழியில் போராட்டத்தைத் திருப்பினார். இவருடைய ஒத்துழையாமை இயக்கம், உப்புச் சத்தியாக்கிரகம், சட்ட மறுப்பு இயக்கம் ஆகியன அயல் நாட்டினரைத் திணற வைத்தன.

இந்திய விடுதலைப் போராட்டச் சரித்திரத்திலேயே காந்தியடிகள் நுழைவு ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியது. உலகத்திற்கே வழிகாட்டும் ஒரு புதுப் பாதையை அடிகள் இந்தியாவிற்கு வகுத்துக் கொடுத்தார்.

தியாகிகள் உயிர்ப் பலியாவதைத் தடுக்க முயற்சி எடுத்தவர் காந்தியடிகள். இவர் இந்திய அரசியலில் தோன்றிச் சத்தியம், அகிம்சை என்ற இரு 'ஆயுதங்களையும் உபயோகிக்காமல் இருந்திருந்தால் இன்னும் கணக்கில்லாதபேர் நாட்டிற்காக மாண்டு மடிந்துபோயிருப்பார்கள்.

நாட்டிற்குச் சுதந்திரம் வந்தது எதனால்? பிரிட்டிஷாரின் மனம் மாறியதாலா? புரட்சியாளர்களின் கிளர்ச்சியாலா? சுபாஷ்போஸ் தனி ராணுவம் அமைத்துப் படையெடுத்ததாலா? சாத்வீகப் போராட்டத்தினாலா? அல்லது 'வெள்ளையனே வெளியேறு' என்ற ஆகஸ்டுப் புரட்சி காரணமாகவா?



இவ்வளவும் ஒரு காரணத்தினால் தான் என்று சொல்ல முடியாது. இவை எல்லாம் ஒவ்வொரு வகையில் சுதந்திரம் கிடைக்க உதவியிருக்கலாம். எது எப்படியானாலும் நாட்டைப் பிரிவினை செய்யாமல் சுதந்திரம் பெற முடியவில்லை. காந்தியடிகள் கடைசி வரை நாட்டின் பிரிவினையை ஆதரிக்கவில்லை. வேறு வழியில்லாமல் நாடு பிரிவினையாகிச் சுதந்திரம் அடைய வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

1947 ஆகஸ்டு 15-ஆம் நாள் நாட்டிற்குச் சுதந்திரம் கிடைத்த அன்று காந்தியடிகள் கல்கத்தாவில் உண்ணாநோன்பிருந்துதான் கொண்டாடினார். அவர் வாழ்த்துச் செய்தி இல்லாமலேயே நாட்டின் சுதந்திர தின விழா கொண்டாடப்பட்டது விந்தையல்லவா?

### விருப்பத்தின் விளைவு

ஏழைகளுக்குத் தொண்டு புரிவதே என் உள்ளத்தில் குடிகொண்டிருந்த பெரு விருப்பமாகும். இவ்விருப்பமே என்னை எப்போதும் ஏழைகளிடம் கொண்டு போய்ச் சேர்த்தது; ஏழைகளுடன் கலந்து அவர்களுள் ஒருவனாகும் சக்தியையும் தந்தது.

—காந்தியடிகள்

### எது முக்கியம்?

எந்தப் பெரிய இலட்சியத்தை வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளுங்கள்; அதைச் சாதிக்க எத்தனைபேர் முன்வருகிறார்கள் என்கின்ற எண்ணிக்கை முக்கியமல்ல — அதற்காக முன்வருவோர் எத்தகைய மனப்பாங்குடையோர் என்பதே வெற்றியை நிர்ணயிக்கும் அம்சமாகும்.

—காந்தியடிகள்





# பாசிப் பயறு ராசி காணப் பயிரிடுவீர் 'ராஜேந்திரா!'

குடுமியான் மலை 'அண்ணா பண்ணை'யில் அமைந்துள்ள "கலைஞர் கருணாநிதி வேளாண்மை ஆராய்ச்சி நிறுவனம்" (Kalaingar Karunanidhi Research Institute) முதன் முதலாக வெளியிட்டுள்ள "கே.கே.ஆர்.ஐ. 1" என்ற பாசிப் பயறு (பச்சைப் பயறு) ரகத்திற்கு, மாண்புமிகு தமிழ் நாடு வேளாண்மை அமைச்சர் திரு மன்னை ப. நாராயணசாமி அவர்கள் அண்மையில் "இராஜேந்திரா" என்று பெயரிட்டுள்ளார். இந்தப் புதிய பாசிப் பயறு ரகம் கீழ்க்கண்ட ஐம் பெருஞ் சிறப்புகளைக் கொண்டுள்ளது:—

*குறுகிய கால வயதுடையது.

*மானாவாரி சாகுபடிக்கு ஏற்றது.

*இதைத்தனிப் பயிராகவும், நிலக்கடலையுடன் கலப்புப் பயிராகவும் சாகுபடி செய்யலாம்.

*நல்ல ராசி கொடுக்க வல்லது.

*மானாவாரியில் இருபோகச் சாகுபடிக்கு "இராஜேந்திரா" உதவும்!

தற்பொழுது பயிரிடப்பட்டு வரும் மானாவாரி பாசிப்பயறு வகைகளின் வயது 135 நாட்களாகும். ஆனால், "இராஜேந்திரா" பாசிப் பயறு ரகத்தின் வயது 65 நாட்களே யாகும். குறுகிய கால வயது உடையதாக இருப்பதால், "இராஜேந்திரா" அறுவடைக்குப் பின், இரண்டாம் பயிராகக் குறுகிய கால வயதுடைய கொள், எள், உளுந்து, ஆகியவைகளைச் சாகுபடி செய்யலாம். எனவே, "இராஜேந்திரா" பாசிப் பயறு மானாவாரி நிலங்களில் இருபோகச் சாகுபடி செய்ய வழிகோலியுள்ளது.

"இராஜேந்திரா" பாசிப் பயறு ரகத்தின் செடிகள் குட்டையாகவும் (சுமார் 1 அடி), விதைகள் பெரியதாகவும், மஞ்சள் கலந்த பச்சை நிறத்துடனும் இருக்கும். காய்கள் முதிர்ந்து காய்ந்தபின்னர் வைக்கோல் நிறத்துடன் இருக்கும்.

"இராஜேந்திரா" என்று பெயரிடப் பெற்ற இப்புதிய ரகப் பாசிப் பயறு, முதலில் திருச்சி மாவட்டம் ஜெயங்கொண்டத்தில் உள்ள பயறு வகைக் கிளை ஆராய்ச்சி நிலையத்தில் உருவாக்கப் பெற்றதாகும். ஆரம்பகால ஆராய்ச்சியின் போது இந்த ரகத்திற்கு ஜே. ஜி. 11 (J. G. 11) என்ற வளர்ப்பு எண் (Culture Number) கொடுக்கப்பட்டிருந்தது. பல் வேறு ஆராய்ச்சிகளுக்குப் பிறகே கலைஞர் கருணாநிதி வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் "இராஜேந்திரா" பாசிப் பயறு ரகத்தை வெளியிட்டுள்ளது.

### சாகுபடிக் குறிப்புகள்

விதைக்கும் பருவம்: மானாவாரியாகப் பயிரிட ஆனி, ஆடி மாதங்களில் "இராஜேந்திரா" பாசிப்பயறு ரகத்தை விதைக்க வேண்டும்.

விதையளவு: ஏக்கருக்கு எட்டு கிலோ. விதைகளைத் தகுந்த நுண்ணுயிர் கல்ச்சருடன் கலந்து விதைப்பதே சிறந்தது.

இடைவெளி: ஒரு சால் விட்டு மறுசாலிலும், சாலில் 8 அங்குலம் இடைவெளி விட்டும் விதைகளை விதைக்க வேண்டும். அல்லது வரிசைக்கு வரிசை 30 சென்டிமீட்டர் (1 அடி) இடைவெளியும், வரிசையில் விதைக்கு விதை 20 சென்டிமீட்டர் (8 அங்குலம்) இடைவெளியும் விட்டு விதைக்க வேண்டும்.

அடியுரம்: நல்ல மகசூல் பெற ஏக்கருக்கு 5 கிலோ தழைச்சத்து, (25 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 10 கிலோ யூரியா), 10 கிலோ மணிச்சத்து (65 கிலோ சூப்பர் பாஸ்பேட்) இடவேண்டும். சூப்பர் பாஸ்பேட்டைக் கடைசி உழவிலும், அமோனியம் சல்பேட் அல்லது யூரியாவை விதைப்பதற்கு முன்பும் இட வேண்டும்.

களையெடுத்தல்: விதைத்த 20-ஆம் நாள் களையெடுக்க வேண்டும்.

பயிர்ப் பாதுபாப்பு: காய்ப்புழுவின் சேதத்தைத் தடுக்க, பூப் பூத்தவுடன் டி.டி.டி. 5 சதத்தூளை ஏக்கருக்கு 10 கிலோ வீதம் தூவ வேண்டும்.

### மகசூல்

இவ்வாறு சாகுபடி முறைகளை மேற்கொண்டு "இராஜேந்திரா" பாசிப்பயறு பயிரிட்டால், ஒரு ஏக்கரிலிருந்து 250 கிலோ மகசூல் (பயறு) பெறலாம்.

### நிகர இலாபம்

மேற்கூறிய சாகுபடி முறைகளை மேற்கொண்டால் ஓர் ஏக்கர் பயிரிட ரூபாய் 130 செலவாகும். ஆனால், ஓர் ஏக்கரில் கிடைக்கும் 250 கிலோ மகசூல் மூலம் ரூபாய் 500 வருவாய் கிடைக்குமாதலின், சாகுபடிச் செலவு போக நிகர இலாபம் ஏக்கருக்கு ரூபாய் 370 கிடைக்கும்.

எனவே, "இராஜேந்திரா" பாசிப் பயறு பயிரிட இன்றே விரைந்திடுவீர்!




# அன்பே! ஆருயிரே!



சென்னை மூர் அங்காடி.

சாலையின் ஒரு பக்கம் ஒரு நாய் தன் குட்டிகளுடன் படுத்துக் கொண்டிருக்கிறது. எங்கிருந்தோ ஒரு 'டாக்சி' விரைந்து வந்து நாயின் மேல் ஏறி மறைந்து விடுகிறது. உடனே அந்த நாய் பரிதாபமாகக் கத்தி அதே இடத்தில் இறந்து விடுகிறது! அருகே இருந்த குட்டிகள் தாயைப் பிரிந்ததால் என்னவோ கத்துகின்றன. அந்த வழியே போவோர் வருவோர் இந்த அவல நிலையைப் பார்த்தும் பாராமல் செல்கின்றனர்.

ஆனால், அதோ வருகிறாரே ஒருவர்...... அவர் மட்டும் ஏன் அந்த இடத்தில் கண் கலங்கி நிற்கிறார்....இறந்த தாய் நாயின் அருகே அனாதைகளாக அழுகின்ற குட்டிகளைத் தூக்கி, அன்போடு தடவிக் கொடுக்கிறாரே...... நிராதரவான அந்தக் குட்டிகளைத் தூக்கிக்கொண்டு எங்குப் போகிறார்? யார் அவர்?

திருமணமாகிப் பதினொன்று ஆண்டுகளாகியும் அவர்களுக்கு மகப்பேறு இல்லை. இக்குறையைப் போக்க அவர்கள், விலையுயர்ந்த அழகான நாய் ஒன்றை வளர்க்கிறார்கள். தம் குழந்தையைப் போல அதனிடம் அன்பைப் பொழிந்து அருமையாக வளர்க்கிறார்கள். அல்லும் பகலும் அதன் நலனில் அக்கறை காட்டுகிறார்கள். இப்படிக் கண்ணுங் கருத்துமாய் வளர்த்து வந்த அந்த அன்பு நாய் ஒரு நாள்.......!

பிள்ளை இல்லாக் குறையை நிறை செய்துகொண்டு, மன நிறைவோடு வாழ்ந்து வந்த அவர்களுக்கு மனம் நிறையத் துயரத்தை ஏற்றிவிட்டுப் பிரிந்து விடுகிறது! பெற்ற குழந்தையையே பிரிந்து விட்டது போன்ற துயரம், அவர்கள் இல்லத்தையும், உள்ளத்தையும் சூழ்ந்துகொள்கிறது. துடித்தார்கள்; கதறிக் கதறி அழுதார்கள்; நண்பரெல்லாம் ஆறுதல் பல கூறினார்கள். ஆனால், அவர்களை அந்த இழப்பிலிருந்து ஈடு செய்ய முடியவில்லையே!

தொலை பேசி எண்கள் சுழல்கின்றன. ஏதோ பேசுகிறார்கள். உடனே நாயை—அவர்கள் குழந்தையை—அந்த இடத்துக்குக் கொண்டு போகிறார்கள். கண்ணீரில் நாயைக் குளிப்பாட்டி அடக்கம் செய்துவிட்டுத் துக்கம் தொண்டையை அடைக்க நடைப்பிணமாய் நடக்கிறார்கள். நாளடைவில் அந்த இடத்தில் ஒரு கல்லறை எழுகின்றது. நாயின் பிறப்பு—இறப்பு அந்தக் கல்லிலே பொறிக்கப்படுகிறது. வாரந்தோறும் தவறாமல் அந்தக் கல்லறையிலே அந்தப் 'பெற்றோர்' களின் கண்ணீரும் கவின் மலர்களும் சொரிகின்றன! ஒரு நாய்க்காகக் கல்லறை எழுப்ப அனுமதி தந்து, அதனை வளர்த்தவர் நெஞ்சுக்கு ஆறுதலைத் தந்தவர்கள் யார்? கல்லறை காட்சியளிக்கும் அந்தப் புனித இடம் எது?

இந்த இரண்டு நிகழ்ச்சிகள் மட்டுமல்ல, இதுபோல் இரண்டாயிரம் நிகழ்ச்சிகளுக்கும் காரணமாய் விளங்கிக் கருணையே உருவாகக் காட்சி அளிக்கிறது எஸ்.பி.சி.ஏ. சென்னை, வேப்பேரியில், இந்த நான்கு எழுத்துகளுக்குள்ளே அடங்கியிருக்கும் 'பிராணிகள் வதைத் தடுப்புச் சங்கம்' தான் அது.

இங்கிலாந்தில் 1809-ஆம் ஆண்டில் ஆங்கிலேயர்களால் முதன் முதலில் தொடங்கப்பட்ட இந்தச் சங்கம், இன்று உலகமெங்கணும் பரவி மிகச்சிறந்த முறையில் பணியாற்றி வருகின்றது. இந்தியாவில், கல்கத்தாவில்தான் முதன் முதல் இது நிறுவப்பட்டது. பிறகு சென்னை 'பிஷப் ரெவரெண்ட் கெல்' என்பவரால் சென்னை வேப்பேரியில் இது நிறுவப்பட்டது. இதற்கான கட்டடத்தை அன்பளிப்பாகத்தந்து உதவியவர் இராஜா வேணுகோபால் பகதூர் என்பவர். சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரிக்கு எதிரில் காட்சியளிக்கும் இந்தச் சங்கம், வாயற்ற உயிர்களுக்கு வாயாக இருந்து அவைகளை அரவணைத்து மகிழும் அன்புத் தாயாகவும் விளங்கி வருகிறது.

இதன் செயல் திட்டங்கள் அன்பே உருவானவை; அருமையானவை, உயிர்களைக் கொல்லாமை என்பதோடு, உயிரோடு சிறுகச் சிறுகக் கொல்லுகின்ற தன்மையை இது அறவே கிள்ளியெறிந்து, அதற்குக் காரணமானவர்களை நீதியின் முன்னே கொண்டுவந்து நிறுத்தி, நியாயம் வழங்கிடும் தலையாய பணியைச் செய்து வருகின்றது.

பிராணிகளைத் துன்புறுத்துவோர்களை விசாரணைக்குட்படுத்தப் போலீஸ் அதிகாரங்கள் கொடுக்கப்பட்ட பல அதிகாரிகளை இந்தச் சங்கம் நியமித்திருக்கிறது. மிகவும் கொடுமையாக நடத்தப்பட்ட பிராணிகளை, அவைகளின் சொந்தக்காரர்களிடமிருந்து கைப்பற்றிக் கால்நடை மருத்துவ மனைக்கு அனுப்பித் தக்க சிகிச்சையும், உணவும் அளிக்கிறார்கள்.

மெலிந்த மாடு ஒன்று மிகுந்த பாரமுள்ள வண்டியை இழுக்க முடியாமல் இழுத்துக் கொண்டு செல்கிறது. இப்படி அளவுக்கு மீறிய பாரத்தை ஏற்றுவது பிராணிகள் வதைச் சட்டப்படி குற்றம். இந்த நிலையைத் தொலைபேசியில் எஸ்.பி.சி.ஏ.-க்குச் சொன்னாலோ, அல்லது சங்க அதிகாரிகள் அப்பக்கமாக வரும்போது நேரில் பார்த்தாலோ என்ன செய்வார்கள்?

வண்டியிலுள்ள அதிகப்படியான பாரத்தைக் குறைப்பார்கள். அதாவது வண்டியிலுள்ள அதிகப் படியான சாமான்களை இறக்கி வைத்துவிட்டு, மாடு இழுக்கும் அளவுக்குச் சாமான்களை ஏற்றுவார்கள்.

ஒரு பாலத்தின் மீது இரண்டு மாடுகள் ஒரு பெரிய வண்டியை இழுக்கச் சக்தியில்லாமல் நிற்கின்றன. அதன் கழுத்துகளில் புண் உண்டாகி இரத்தம் கசிகிறது. வாயில் நுரை தள்ளு

கிறது. கால்கள் தள்ளாடுகின்றன. அப்படியிருந்தும் சிறிதும் இரக்கமில்லாமல் அந்த வண்டிக்காரன் கம்பால் மாடுகளை அடிக்கிறான். எருமையின் நோய் காக்கைக்குத் தெரியுமா?

வண்டிக்காரனின் ஈவிரக்கமற்ற செய்கையைக் கண்ட எஸ்.பி.சி.ஏ. அதிகாரி வண்டியை நிறுத்தச் சொல்லி, மாடுகளைக் கட்டவிழ்த்து விடுகிறார். மாட்டைத் துன்புறுத்திய குற்றத்துக்காக வண்டிக்காரனுக்கு அபராதம் விதிக்கப்படுகிறது.


இச் சங்கக் கட்டடத்திலேயே ஒரு நீதி மன்றம் இருக்கிறது. பிராணிகளுக்குத் துன்பம் தருபவர்களுக்கு இங்கே உள்ள நீதிபதி தண்டனை விதிக்கிறார். அபராதங்கள் ரூ. 10 முதல் ரூ. 30 வரை விதிக்கப் படுகின்றன. தமிழக ஆளுநர் காப்பாளராகவும், உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவர் தலைவராகவும் உள்ள இச் சங்கத்தின் குற்றங்களைக் கண்டுபிடிக்க 11 இன்ஸ்பெக்டர்கள் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். 24 மணி நேரமும் புகார்களைக் கவனித்து ஆவன செய்ய இங்கே ஓர் அதிகாரி இரவும் பகலும் பணியாற்றுகிறார்.

தொலைபேசியில் ஒரு நாளைக்கு சுமார் 25 புகார்கள் வருகின்றன. சிலர் ஆலோசனைகள் கேட்கின்றனர். திடீரென்று ஒருவர் ''நாயின் கால் வீங்கிவிட்டது என்ன செய்வது?'' என்று கேட்கிறார். உடனே இந்தச் சங்கத்திலுள்ள ஒருவர் 'சுடு தண்ணீர் ஒத்தடம் கொடுங்கள். சரியாகப் போய்விடும்!' என்கிறார்.

நீங்கள் வெளியூர் போகிறீர்கள். நீங்கள் வளர்க்கும் நாயை உடன் அழைத்துப் போக வசதியில்லை. என்ன செய்வது? நாயை மட்டும் வீட்டில் விட்டுவிட்டுப் போக முடியுமா? அதற்கொரு நல்ல வழி இருக்கிறது. இப்படி ஊருக்குப் போகிறவர்கள் தம் நாயைக் கொண்டுவந்து இந்தச் சங்கத்தில் விட்டுவிட்டாலோ அவர்கள் நீங்கள் வரும் வரை உணவு முதலான வசதிகளுடன் அதைப் பத்திரமாக வைத்திருந்து, நீங்கள் ஊரிலிருந்து திரும்பி வந்ததும் உங்களிடம் ஒப்படைத்து விடுவார்கள்.

நாய், பூனை முதலானவற்றை அன்பாக வளர்த்து வருவதைப் பார்க்கிறோம். அவற்றிற்குக் கழுத்தில் மணி முதலானவற்றைக் கட்டி அழகு பார்ப்பதும் உண்டு. விலையுயர்ந்த நாய்கள் பல, முடி வளர்ந்து பட்டுப் போன்ற மென்மையான உடலைப் பெற்றிருக்கும். நகங்கள் கூராக நீண்டு வளர்ந்திருக்கும். மனிதர்கள் தலை முடியை அழகாக வெட்டி, நகங்களை அழகு படுத்திக் கொள்ள வில்லையா? அதைப் போல நாயின் முகத்தில் தொங்கும் முடியை அழகாகக் கத்தரிக்கவும், கூரிய நீண்ட நகங்களை அழகாக வெட்டி மெருகேற்றவும், இச் சங்கத்தில் ஓர் அழகு நிலையம் ( Beauty Parlour ) இருக்கிறது.

உணவு ஏதும் தராமல் மணிக்கணக்காக, நாய் போன்ற விலங்குகளைச் சங்கிலியால் கட்டித் துன்புறுத்துவதும், பத்துக் கோழிகளை அடைக்க வேண்டிய கூடையில் நாற்பது கோழிகளை வைத்து அடைத்து, அவை மூச்சு விட முடியாமல் செய்வதும், வீட்டில் வளர்ப்பதாகக் கூறி அவற்றைச் சரியாகப் பேணாமல் தெருக்களில் அலைய விடுவதும் குற்றங்களாகும். இது பற்றிய தகவல் வந்தாலோ அல்லது அதிகாரிகள் இதனைக் கண்டாலோ சட்டப்படி வழக்குத் தொடுப்பார்கள்.




தெருக்களில் அலைந்து திரியும் சொறி நாய்களையும், பிற நாய்களையும் சென்னை மாநகராட்சியினர் பிடித்துச் செல்கின்றனரல்லவா? அந்த நாய்களில் சிலவற்றைப் பொறுக்கியெடுத்து அவற்றிற்குச் சிகிச்சை முதலானவைகள் செய்து, உணவு வகைகள் கொடுத்துப் பேணி வளர்ப்பதையும் இச் சங்கத்தினர் ஒரு கடமையாகக் கருதுகின்றனர்.

இது போன்ற பல நல்ல செயல்களையெல்லாம் நாள்தோறும் செய்வதற்குப் பொருள் அவசியமல்லவா? அதற்காகத் தமிழ்நாடு அரசு ஆண்டு தோறும் ரூ. 15,000 உதவி தந்து மேலும் மேலும் இத் துறைக்கு ஊக்கந் தருகிறது. மற்றும் தொழிலதிபர்கள் பலர் ஆண்டுதோறும் நன்கொடைகளைத் தருகின்றனர். இந்த நன்கொடைகளை வைத்துக் கொண்டு, இந்தச் சங்கம் நல்ல பல செயல் திட்டங்களை நிறைவேற்றி, நாடும் ஏடும் போற்றும் வண்ணம் விளங்கி வருகிறது.

இங்கே இரண்டு 'ஆம்புலன்ஸ்' வண்டிகள் இருக்கின்றன. அவசர உதவிக்கு இந்த வண்டிகள் பயன்படுத்தப் படுகின்றன. ஒரு குடிசைப் பகுதியில் தீப்பிடித்து அங்கிருந்த இரண்டு எருமைகள் தீயால் பாதிக்கப்பட்டு இறக்கவிருக்கும் சமயத்தில் அவைகளைக் காப்பாற்றிய பெருமை இவர்களுக்குண்டு.

சென்னையில் 'நடமாடும் நீதிமன்ற ஊர்தி'யினைப் பார்த்திருக்கிறோம். இந்த நீதிமன்றத்தில் வாரத்துக்கு இரு முறை விலங்குகளுக்குத் துன்பம் தருவோருக்கும் தண்டனை வழங்கப் படுகிறது. இதற்கான அனுமதியை இச் சங்கத்தினர் தமிழக அரசிடம் பெற்றுள்ளனர்.


இந்தச் சங்கத்தில் யார்வேண்டுமானாலும் உறுப்பினர்களாகச் சேரலாம். இதுவரை 300 பேர் இதில் உறுப்பினர்களாக இருக்கின்றனர். அவர்கள் சொல்கின்ற ஆலோசனைகள் இவர்களால் வரவேற்கப்படுகின்றன. சங்கத்தின் அரும் பணிகளை விளக்கிடும் வகையில் ஓர் ஆங்கில இதழினை நடத்தவும் ஒரு திட்டம் இருக்கிறது.

கையில் ஆயுதம் எதுவும் இல்லாமல், போலீஸ் உடையில் இங்கே காணப்படும் அதிகாரிகள் உயிர் அன்பு ஒன்றையே ஆயுத

மாகக் கொண்டு ஆவன செய்கின்றார்கள்.

உயிர்ப் பலி தருவது சட்டப்படி குற்றம் என்றாலும், இன்றும் பல இடங்களில் உயிர்ப் பலிகள் நடந்துகொண்டுதான் இருக்கின்றன. அவைகளைத் தடுத்து நிறுத்துவதும் இவர்களது பணிகளில் ஒன்றாகும்.

செங்கற்பட்டு மாவட்டக் கிராமம் ஒன்றில், மழை இல்லாக் குறைக்காக வீட்டிற்கொரு ஆட்டினைப் பலி கொடுக்க வேண்டும் என்ற பிரச்சாரம் முன்பு நடந்து கொண்டிருந்தது. சில இளைஞர்கள் இதை எதிர்த்தார்கள். இதனைக் கேள்விப்பட்ட இந்தச் சங்கத்தினர் அந்த ஊருக்குச் சென்று, கிராமத்து மக்களை ஒன்று கூட்டி, அவர்கள் அறியாமையை எடுத்துச் சொல்லி, அன்பால் அவர்களைத் திருத்தி உயிர்ப் பலியிலிருந்து எண்ணற்ற உயிர்களைக் காப்பாற்றினார்கள்.



இன்னொரு நல்ல செயலையும் இவர்கள் செய்து வருகிறார்கள். சென்னை நகரில் சரியாகப் பேணிக் காக்கப்படாத இளங் கன்றுகள் 1,000-க்கும் மேலே இருப்பதாகக் கணக்கெடுத்திருக்கிறார்கள். பால் பற்றாக் குறையினால் இவை நாளடைவில் இறந்துவிடுகின்றன. இந்த அவல நிலையைப் போக்க, இந்தச் சங்கத்தினர் இது போன்ற கன்றுகளைப் பிடித்து வந்து பராமரிக்கின்றனர். ஹாலந்து நாட்டைச் சேர்ந்த ஒரு பாதிரியார் சென்னை மாதவரத்தில் ஒரு தொழுநோய் இல்லம் நடத்தி வருகிறார். அவர், இவ்வாறு பராமரிப்பதற்காகக் கொண்டு வரப்படும் கன்றுகளில் இருநூற்றைத் தாம் காப்பாற்றுவதாக உறுதி கூறி, அதன்படி 120 கன்றுகளை நல்ல முறையில் வளர்த்து வருகிறார்.

'உயிர்களிடத்தில் அன்பு வேண்டும்' என்ற கொள்கையைப் பிஞ்சு மனத்திலேயே பதிய வைக்க வேண்டும் என்ற நோக்கோடு பள்ளிகளில் கட்டுரை, பேச்சு, ஓவியப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. படக் காட்சிகளும், பிரச்சாரங்களும் அவ்வப்போது நடக்கின்றன. உயிர்களிடத்தில் அன்பு காட்டும் விதத்தில் எடுக்கப்படும் திரைப் படங்கள், நடத்தப்படும் நாடகங்கள் ஆகியவற்றுக்கு இச் சங்கத்தினர் பரிசுகள் வழங்கிச் சிறப்பிக்கின்றனர்.

ஆருயிர்க்கெல்லாம் அன்பு செய்யும் உயர்ந்த நோக்கோடு பணிபுரிந்து வரும் எஸ்.பி.சி.ஏ. மேலும் மேலும் ஏற்றம் பெற்றுத் திகழ்ந்திட எல்லா ஒத்துழைப்பும் நல்குவோம்.

— பி.வி.ஜி.


## எந்த நாட்டில் எப்போது விடுதலை ?

இந்தியாவின் விடுதலை நாள் ஆகஸ்டு 15 என்று நமக்குத் தெரியும். ஆனால், உலகின் பல் வேறு நாடுகளில் எப்போது விடுதலை நாள் என்று உங்களுக்குத் தெரியுமா? கீழே சில நாடுகளும் அவற்றின் விடுதலை நாள் விவரமும் தரப்பட்டுள்ளன.

பர்மா—ஜனவரி 4
கிரீஸ்—மார்ச் 25
ஜோர்டான்—மே 25
பிலிப்பைன்ஸ்—ஜூன் 12
வெனிசுலா—ஜுலை 5
இந்தோனிஷியா—ஆக. 17
பிரேஸில்—செப். 7
சிலி—செப். 18
மொராக்கோ—நவ. 18

இலங்கை—ஜனவரி 4
கியூபா—மே 20
ஆப்கானிஸ்தான்—மே 27
அமெரிக்கா—ஜுலை 4
கொலம்பியா—ஜுலை 20
மலேசியா—ஆக. 31
மெக்சிகோ—செப். 16
கம்போடியா—நவ. 9
பின்லாந்து—டிச. 6

# தமிழகம் தழைக்க 12 ஆண்டுத் திட்டம்!



தமிழ் நாட்டின் சமூகப் பொருளாதார மேம்பாட்டுக்காக ஒரு 12 ஆண்டுத் திட்டத்தை—1972-லிருந்து 1984 வரை உள்ள ஆண்டுகளுக்கான—தொலை நோக்குத் திட்டத்தைத் தயாரித்தளிப்பதே மாநிலத் திட்டக் குழு மேற்கொண்ட முக்கியப் பணி. இந்த 12 ஆண்டுத் திட்ட நிறைவு ஆண்டாகிய 1984-ஆம் ஆண்டுதான் ஆறுவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கடைசி ஆண்டாகவும் அமைகின்றது.

தமிழ் நாட்டுக்கான 12 ஆண்டுத் திட்டத்துக்கு இறுதியான வரைவு தயாரிக்கப்பட்டுத் திட்டக் குழுவின் தலைவராகிய முதலமைச்சர் அவர்களிடம் தரப்பட்டுள்ளது. விரைவில் வெளியிடப்பட இருக்கும் இந்த வரைவுத் திட்டம், மாநிலத்தின் குறிக்கோள், எய்த வேண்டிய இலக்குகள், ஆகியவைகளை எடுத்துரைக்கும். கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள், சட்ட மன்றம், பத்திரிகைகள், ஆகியவைகளில் விவாதிக்கப்பட்ட பின்பு, அவற்றின் கருத்துக்களும், குறிப்புகளும் உரியமுறையில் பரிசீலிக்கப்பட்டு திட்டத்துக்கு இறுதி வடிவம் தரப்படும். மாநிலத்துக்கான 12 ஆண்டுத் திட்டத்தின் குறிக்கோள், திட்டக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்ட பணிகள், திட்டம் தயாரிக்கப்பட்ட விதம், ஆகியவைகளை எடுத்துக் கூறுகிறது இக்கட்டுரை.

## திட்டமிடுவது கூட்டுப் பொறுப்பு

பொருளாதாரச் சமூக மேம்பாட்டுக்காகத் திட்டங்களை வகுப்பது, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கருத்துப்படி, மத்திய அரசு, மாநில அரசுகள் ஆக இரு சாருடைய கூட்டுப் பொறுப்பே ஆகும்.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் போது மாநில அளவில் திட்டங்கள் வகுத்துக் கொள்வது குறித்து யாரும் அதிகம் வலியுறுத்தவில்லை. மாநில அளவில் திட்டம் வகுப்பதற்காக ஓர் அமைப்பு அவசியமான தேவை என்பது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் உணரப்பட்டது. மத்தியில் திட்டக் குழு இருப்பது போல மாநிலங்களில் வல்லுநர்களைக் கொண்ட திட்ட ஆலோசனைக் குழுக்களை அமைக்குமாறு மத்தியத் திட்டக் குழுவும் நிருவாகச் சீர்திருத்த ஆணைக் குழுவும் கருத்தைத் தெரிவித்தன. ஒவ்வொரு மாநிலத்திலும் திட்டக் குழு அமைக்குமாறு மத்திய நிருவாகச் சீர்திருத்த ஆணைக் குழு பரிந்துரைத்தது. இந்தப் பரிந்துரை குறித்து, 1967 ஜூலையில் தலைமை அமைச்சர் கூட்டிய முதலமைச்சர்கள் மாநாட்டிலும், 1967 டிசம்பரில் தேசிய அபிவிருத்திக் கவுன்சிலிலும் விவாதிக்கப்பட்டது.

## வழிகாட்டும் தமிழகம்

பல்வேறு வகை ஆக்கப் பணிகளிலும் முன்னிற்கும் தமிழகம் இதிலும் முன்னோடியாக நின்று 1971 மே மாதத்தில் மாநிலத் திட்டக் குழுவை நிறுவியது. மாநிலத் திட்டக் குழு நிறுவப்பட்டதோடு, நம் தமிழகத்தில் மாநில அளவிலும், மாவட்டங்கள் மட்டத்திலும் திட்டங்களை வகுக்கும் பணிகள் புதிய வலிமையும் வேகமும் பெற்றன.

இந்திய அரசியலமைப்பின் கொள்கை நெறியை ஒட்டிப் பல்வேறு செயல் திட்டங்கள் மூலம் சாமான்ய மக்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்தத் தமிழகம் முயன்று வருகிறது. கீழ்க்கண்ட குறிக்கோள்களைக் கருத்தில் கொண்டு செயல் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடும் செய்யப்படுகிறது.

1. சமூகம், பொருளாதாரம், அரசியல் ஆகியவைகளில் நீதி வழங்கக் கூடிய சமுதாய அமைப்புக்கு வகைசெய்து அதன் மூலம் மக்கள் வாழ்க்கை நிலையை மேம்படுத்துவது ;

2. மாநிலத்தின் நிதி வளங்களைத் திறம்படப் பயன்படுத்துதல், உற்பத்திப் பெருக்கம், சமுதாய நலப் பணிகளுக்காக வேலை வாய்ப்புகளை அதிகரித்தல் ஆகியன மூலம் மக்கள் வாழ்க்கைத் தரத்தை விரைந்து மேம்படுத்துவது ;

3. சமுதாயப் பொருள் முதல் வசதிகள், மக்களின் பொது நன்மைக்காகச் சிறப்பாகப் பயன்படும் வண்ணம் அப்பொருட்கள் பற்றிய உரிமைகளையும், நிருவாகத்தையும் பரவலாக அமைத்துக் கொள்வது ;

4. செல்வமும், பொருள் உற்பத்திச் சாதனங்களும், பொது நன்மைக்கு விரோதமாக ஒரு சிலரிடம் குவிந்து விடாத வகையில் பொருளாதார முறையை அமைத்துக் கொள்ளுதல்.

## வழிகாட்டும் தமிழ்நாடு

மேற்கண்ட குறிக்கோள்களை நிறைவேற்றவும், தமிழ்நாட்டை உன்னதமான, மக்கள் நலங்கெழு மாநிலமாக ஆக்கவும், மாநிலத் திட்ட ஆணைக் குழுவிடம் கீழ்க்கண்ட பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன :

மாநிலத்தின் பொருள் வளம், நிதி வசதி, தொழில் வல்லுநர்கள் உட்பட ஆள் பல வசதி ஆகியவைகளை மதிப்பிடுதல், மாநிலத்தின் தேவையை நிறைவு செய்ய எந்தெந்த வளங்கள் குறைவாக இருக்கின்றன என்று கண்டறிந்து ஈடு செய்ய வழிவகை காணல்.

மாநிலத்தின் ஆதார வளங்களை மிகுந்த பயன் தரும் வகையில் சீரான முறையில் பயன்படுத்திக் கொள்ள நீண்ட காலத் திட்டம் வகுத்தல்.

பொருளாதார வளர்ச்சியைப் பின்னடையச் செய்கின்ற கூறுபாடுகள் எவை என்று எடுத்துக் காட்டுதல் ; தற்போதைய சமூக அரசியல் நிலவரத்தின் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்த எத்தகைய நிலைமையை ஏற்படுத்த வேண்டும் என்று எடுத்துக் காட்டுதல்.

தனது பணிகளை நிறைவேற்ற உதவும் முறையில் அல்லது தற்போதையப் பொருளாதார நிலைமைகள், நடைமுறைக் கொள்கைகள் ஆகியவைகளுக்கு ஏற்ற முறையில் இடைக்காலப் பரிந்துரைகள் அல்லது துணைப் பரிந்துரைகளைத் தெரிவிக்கும் பொறுப்பு மாநிலத் திட்டக் குழுவிடம் விடப்பட்டது.

### 12. ஆண்டுத் திட்டம்

மாநிலச் சமூகப் பொருளாதார மேம்பாட்டுக்காக 1972-லிருந்து 1984 வரை உள்ள 12 ஆண்டுக் காலத்துக்கான ஒரு தொலை நோக்குத் திட்டம் தயாரிக்க வேண்டும் என்பதே திட்டக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்ட முக்கியப் பணி. மாநிலத்தின் வருவாய் வசதியைப் பொறுத்து, ஏற்கத் தக்க, செயல் முறை சாத்தியமான குறிக்கோள்களை வரையறுத்துக் கொள்ள வேண்டும் என்றும், சமதர்மச் சமுதாயம் அமைக்க வேண்டுமென்ற கொள்கை அடிப்படையில், பல்வேறு பிரிவு மக்களுக்கும் இப் பணியின் நன்மைகள் பரவலாகக் கிட்ட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. தேவைப்படும் பொருள் வளம், ஆள் பலம், மாற்று



**சில்லறை நாணயங்களை வைத்துள்ள ஏழை, லட்சாதிபதியை விட மகிழ்ச்சியாக இருப்பதைக் காணலாம். ஆகவே, வறுமையை நாம் வெறுக்க வேண்டாம். ஆன்றோர்கள் எனப் போற்றப்பட்டோர் யாவரும் ஏழைகளாகவே விளங்கினார்கள். பொருள் இல்லாக் காரணத்தால் தொடக்கத்தில் அவர்கள் ஏளனத்துக்கு இரையாகியிருக்கலாம். ஆனால், மகாபுருஷர்கள் என்றைக்கும் மக்கள் குலத்தின் மதிப்புக்கு உரியவர்கள் ஆகிவிட்டார்கள். அவர்களை இகழ்ந்தவர்களோ மண்ணோடு கலந்துவிட்டனர்.**

உத்திகள், அதற்கு ஆகும் செலவு, அதனால் வரும் நன்மை ஆகியவைகளைத் திட்டம் எடுத்துக் கூறும்.

மாநிலத்துக்கான திட்டத்தை வகுப்பதற்காக, மாநிலத் திட்டக் குழு நான்கு உத்திகளை— அணுகு முறைகளை அமைத்துக் கொண்டது. அந்த நான்கு முறைகள் பின்வருமாறு :

1. துறை இயல் ஆய்வுகள் ;
2. மாவட்டத் திட்டங்கள் ;
3. வட்டாரத் திட்டங்கள் ;
4. மண்டல-தொழில் மைய ஆய்வுகள்.

### 15. செயல் அணிகள்

தமிழ்நாடு போன்ற வட்டாரப் பொருளாதார மேம்பாட்டுக்குத் திட்டமிடும் போது பல்வேறு துறை இயல்களையும், விரிவாக ஆய்வு செய்து கொள்வது அவசியம். ஆதார வளங்கள், பல்வேறு துறைகளின் தேவைப்பாடுகள் ஆகியவை திட்ட அமைப்புப் பணியில் ஓர் அங்கம் ஆகும். துறை இயல் ஆய்வுக்காகவும், துறைகளுக்குத் தொலை நோக்குத் திட்டங்கள் வகுக்கவும், திட்டக் குழு உறுப்பினர்கள் தலைமையில் 15 செயல் அணிகளை மாநிலத் திட்டக் குழு அமைத்தது. அந்தச் செயல் அணிகள் விவரமாவது :

டார வாரி திட்டமிடுதல், சுற்றுலா வசதி உட்பட நகர்ப்புற மேம்பாடு, பெருந் தொழில்கள் சிறு தொழில்கள் பற்றிய செயல் அணி ; இதன் தலைவர் திரு என். மகாலிங்கம்.

கல்வி, மற்றும் விஞ்ஞானம், தொழில் நுட்பம், நல்வாழ்வு, ஊட்டச் சத்து, வன வளம் பற்றிய செயல் அணி ; இதன் தலைவர் டாக்டர் மால்கம் எஸ். ஆதிசேஷய்யா.

ஆள் பலம், மற்றும் பொருளாதார மேம்பாட்டுக்காகச் சமூக மாற்றம், நிதி ஆதார வளங்களை ஒன்று திரட்டல், வளர்ச்சி விகிதம், நிதிக் கொள்கை, கிராமப் புற மேம்பாடு, கிராமங்களில் வீட்டு வசதி பற்றிய செயல் அணி ; இதன் தலைவர் டாக்டர் வி. சண்முக சுந்தரம்.

விவசாயம், கால்நடைகள், மீன் வளம் பற்றிய செயல் அணி ; இதன் தலைவர் டாக்டர் பா. நடராசன்.

கனி வளங்கள், எரி பொருட்கள், மின் சக்தி, போக்குவரத்துப் பற்றிய செயல் ; இதன் தலைவர் டாக்டர் டி. பிரைட்சிங்.

மாநிலத்தின் வளங்கள், தற்போது அவற்றைப் பயன்படுத்தும் முறை, இன்னும் திறமையாக அவற்றைப் பயன்படுத்துதல், கடந்த 20 ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட செயல் திட்டங்கள், உற்பத்திச் சக்தியில் அவற்றின் முக்கியத்துவம், வருங்கால வளர்ச்சி வேலைகளுக்கு வழிவகை காட்டுதல் ஆகியன இந்தச் செயலணிகளின் பணியாகும்.

திட்டக் குழு உறுப்பினர் ஒருவரைத் தலைவராகக் கொண்ட செயலணி சம்பந்தப்பட்ட துறையின் முதுநிலைப் பிரதிநிதி ஒருவர், நிதித் துறைப் பிரதிநிதி ஒருவர், வல்லுநர்கள், ஒரு செயலாளர் ஆகியோரைக் கொண்டது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம் ஆகியவைகளுக்கான ஆய்வுக் குறிப்புகள் தயாரித்து, அவ்வத் துறைகளுக்கு நீண்ட காலத் திட்டங்கள் வகுக்கப் படுகின்றன. பொருள் தேவைப்பாடுகள், வேலை தேவைப்பாடுகள் ஆகியவற்றை முன்னரே யூகித்துத் தேவைகளை ஈடு செய்ய மாற்றுத் திட்டங்களை இந்த அணிகள் தருகின்றன.

இந்தியாவில் திட்டமிடுவதில் பரவல் முறை குறித்து, வெகுவாகப் பேசப்படுகிறது என்றாலும் கூட, அண்மைக் காலம் வரை, இவ் வகையில் உருவான எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. கடந்த 20 ஆண்டுகளாக ஐந்தாண்டுத் திட்ட நிறைவேற்றங்களை யொட்டிப் பொதுப் படையான வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. இப்போது அந்தந்தப் பகுதிகளில் மக்களின் முன் முயற்சி, ஆதார வளங்கள், ஆகியவைகளையும், வசதிகளைச் சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்வதற்காகக் குறிப்பிட்ட பகுதிகளின் அல்லது மாவட்டங்களின் தேவைகள், வேட்கைகள் ஆகியவைகளையும் ஆழ்ந்தும் விரிவாகவும் கவனிக்க வேண்டியது அவசியம்.

## வளர்ச்சி வட்டாரம்

மாநிலம் அளாவிய திட்டம் மாநிலத்துக்குள் உள்ள பல்வேறு பூகோளப் பிரிவுகளுக்கும் பொருளாதார வட்டாரங்களுக்கும், முழுமையாகப் பொருந்தும் படியாக இருக்கும் என்று சொல்ல முடியாது. மாநிலத்துக்குள் வட்டாரங்களுக்கிடையே சமச் சீரற்ற நிலைமையும் இதனால் தோன்றலாம். எனவே, மாநிலம் அளாவிய திட்டத்தின் குறைபாடுகளைக் களைய கட்டமைப்புத் திட்டம் ( viable Unit plan ) ஏற்ற தீர்வாக இருக்கும். இதற்காகத் தமிழ்நாடு கட்டமைப்புத் திட்டத்துக்கு, வளர்ச்சி வட்டார அமைப்பைத் தெரிந்தெடுத்துக் கொண்டது. மாவட்டத் திட்டம் அமைத்துக் கொள்வது என்றால் அதற்காகத் தற்போதைய வளர்ச்சி நிலையை நுணுகி ஆராய்ந்து மதிப்பிட்டுக் கொள்வதும் அதன் தொடர்பாக ஆதார வசதிகளுக்கும் தேவை வரிசைக் கிரமத்துக்கும் ஏற்பப் பல்வேறு துறைப்பணிகளை ஒருமுகப்படுத்துவதும் அவசியம்.

கடந்த கால அனுபவங்கள், உள்ளூர் ஆதார வசதிகள், தேவைகள், மக்களின் விருப்பங்கள் ஆகியவைகளைக் கருத்தில் கொண்டு திட்டச் செலவுகள் மூலம் அதிகபட்ச பலன்கள் காண்பதற்கு வகை செய்வதே மாவட்டத் திட்டங்களின் முக்கிய நோக்கம் ஆகும். இதில் நீண்ட காலக் கண்ணோட்டம், உடனடித் தேவைப் பணிகள் ஆகியவைகளுக்காகக் கருத்தில் கொண்ட வேலைகளுக்கு முதன்மை வரிசையை அமைத்துக் கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டது.

மாவட்டத்துக்காக நீண்ட காலக் குறுகியகாலத்திட்டங்கள் வகுப்பதில், இப்போது கிடைக்கும் புள்ளி விவரங்களையும் விஷயம் அறிந்த விவசாயிகள், தொழில் நிருவாகிகள், தல அலுவலர்கள் ஆகியோரின் கருத்துக்களையும் அறிந்து ஏற்ற முறையில் பயன்படுத்திக் கொள்வதும் அவசியம் என்று வலியுறுத்தப்பட்டது. இது சம்பந்தமாகப் புள்ளி விவரங்களைத் தயாரித்து அளிக்கும் பொறுப்பு மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் விடப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் ''திட்டச் சிறு குழு'' ஒன்று அமைக்கப்பட்டது. போதிய விஷய ஞானமும், அனுபவமும் உள்ள அலுவலர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுத் திட்டச் சிறு குழுவில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

மாவட்டத் திட்டம் வகுப்பதில் முதல் தேவையாகப் பல்வேறு துறைகளிலும் உள்ள வளர்ச்சி நிலை குறித்து, இத்தேதி வரைக்குமான புள்ளி விவரங்களைச் சேகரிக்க வேண்டும். இதற்காக வளர்ச்சி நிலை பற்றியும், போக்குவரத்து, விற்பனை வசதி, இருப்பு வைக்க வசதி, பாசனம், மின்சார உற்பத்தி, மின்சாரம் வழங்கல், பாங்கு கடன் வசதிகள், சமூக நலப் பணிகளின் தன்மை, ஆள்பலம், வேலை வசதி, பின் நிலை, சமூகநிலை ஆகியன குறித்தும் விரிவாக ஆய்வு நடத்தி விவரங்களைத் திரட்டவேண்டும். மாவட்டத்திட்டங்களுக்கு நிதி வசதி, வரையறுக்கப்பட்ட நிலையிலேயே இருப்பதால், வளர்ச்சிப் பணிகளுக்கு முதலிடம் தருவதில் நடைமுறை காரிய சாத்திய நிலைமைகள் கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

## வழிமுறைகள்—உத்திகள்

பல்வேறு மாவட்டங்களும் அடைய வேண்டிய வளர்ச்சி நிலைகளை வகுத்துக் கொண்ட பின்னர் ஒவ்வொரு மாவட்டத்துக்கும், கீழ்க்கண்ட இனங்களில் வளர்ச்சிக்கான வழிமுறை உத்திகளை வகுத்துக் கொள்ள வேண்டும்.

1. ஒவ்வொரு அலகிலும் உற்பத்தித் திறனைப் பெருக்குதல்;

2. இயற்கை வளங்களை நல்ல முறையில் பாதுகாத்துச் சிறப்பாகப் பயன்படுத்துதல்;

3. வளர்ச்சிப் பணிகளால் கிடைத்த பயன்கள், பல்வேறு பகுதிகளுக்கும், பல்வேறு பிரிவு மக்களுக்கும் இன்னும் சம சீரான முறையில் கிடைக்க வகை செய்தல்;

4. வேலை வாய்ப்புகளைப் பரவலாக்குதல். பல்வேறு வகை வேலைகளுக்கு வகை செய்தல்.

## பணிகளின் பட்டியல்

ஒவ்வொரு மாவட்டமும் தனக்குரிய முக்கியப் பொருளாதார வளர்ச்சிப் பணி எது என்பதைத் திட்டமாக அடையாளம் கண்டு குறித்துக் கொள்ள வேண்டும். அதற்கடுத்த படியாக முக்கியமான வளர்ச்சிப் பணிகளின் பட்டியலை அமைத்துக் கொள்ள வேண்டும். பின்னடைந்த வட்டாரங்கள், பின்னடைந்த மக்கள், இவர்களுடைய கல்வி, சமூகத் தேவைகளில் குறைந்த பட்ச வளர்ச்சி நிலை என்னவாக இருக்க வேண்டும் என்பதை வரையறுத்துக் கொள்ள வேண்டும். மாவட்டத் திட்டங்களுக்கான செயல் முறை உத்திகள் குறித்து இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

திட்டங்கள் வகுப்பதில் உயிரூட்டமான அம்சம், முடிவு செய்கின்ற பொறுப்பே ஆகும். ஒரு சில துறைகளில் திட்டப் பணி பற்றிய முடிவை மாநில மட்டத்திலேயே செய்யலாம். மற்றும் சில பொருளாதார மேம்பாட்



**வெளிச்சம் பிறப்பதற்கு முன் இருட்டு அடைகிறது என்பதை நம்பும்படி கேட்டுக்கொள்கிறேன். இந்தியா கட்டாயம் சுதந்தரம் அடையும்; மிக விரைவில் சுதந்திரம் அடையும். இறைவனின் ஆசி உங்களுக்கு உரித்தாகுக.**

**(24-4-1945-ல் இந்திய தேசிய ராணுவ வீரர்களுக்கு விடுத்தசெய்தி.)**

டுப் பணிகளைப் பொறுத்த வரை '' அடி வேரிலிருந்து '' முடிவு செய்வதென்பது அவசியமாகும்.

கிராமச் சாலைகள், ஆரம்பப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், பின்னடைந்த வகுப்பினர், தாழ்த்தப்பட்ட வகுப்பினர், பழங்குடியினர் ஆகியோரின் நலங்கள், குடிநீர் வசதி, கிராமச் சுகாதாரப் பணிகள், சமூக நலம், தொழில் வினைஞர் பயிற்சி போன்றவைகளில் திட்ட முடிவுகளை மாவட்ட நிலையில் மேற்கொள்ளலாம்.

### மாநில மட்டத்தில்

வேளாண்மை உற்பத்தி, சிறு பாசனம், மண்வளப் பாதுகாப்பு, ஆயக்கட்டு புதுப்பித்தல், கால்நடை நலம், காடுகள், மீன் வளம், பண்டகச்சாலை, விற்பனை வசதி, சமுதாய நல வளர்ச்சி, கூட்டுறவுக் கிராமத் தொழில்கள், சாலைகள், நகர்ப்புறச் சுகாதாரத் திட்டங்கள், குடும்பக்கட்டுப்பாடு, வீட்டுவசதி, நகரமைப்பு, நகர அபிவிருத்தி போன்றவைகளில் மாவட்ட அளவில் திட்டங்களை வகுக்கலாம். ஆனால், நிதிவசதி, அரசுக் கொள்கை, மாவட்டங்களுக்கிடையே எதிரொலிகள் முதலியவைகளை யொட்டி முடிவுகளை மேற்கொள்வது என்பது மாநில மட்டத்தில் செய்யப் பட வேண்டும்.

மாவட்ட மட்டத்தில் தகவல்கள் யோசனைகள் தரக்கூடியனவும் ஆனால் மாநில அளவில் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டியுள்ளனவுமான துறைகள் பின்வருமாறு :—

1. விவசாயக் கல்வி, கால்நடை மருத்துவக் கல்வி, தொழில் நுட்பக் கல்வி, பல்கலைக் கழகக் கல்வி, மருத்துவக் கல்வி.

2. பெரும் பாசனத் திட்டங்கள், ஆற்றுப் படுகைகளில் மண் வளப் பாதுகாப்பு, உள்நாட்டு நீர்வழிப் போக்கு வாத்து.

3. பெருந் தொழில்கள், நடுத்தரத் தொழில்கள், பெரும் அளவிலான கூட்டுறவு பதன முறைத் தொழில்கள், கைத்தறி.

4. சுற்றுலா.

5. நகராட்சிகளுக்கும், பேரூராட்சிகளுக்கும் குடிநீர், வடிகால் வழங்குந் திட்டங்கள்.

### மாநில மட்டத் திட்டங்கள்

எல்லா வகையான செயல்முறைகளும் மாநில மட்டத்திலேயே மேற்கொள்ளப்பட வேண்டிய துறைகளில் முக்கியமானவை:—மின்சாரம், கனிவள அபிவிருத்தி, சிறு துறைமுகங்கள், பெருந் துறைமுகங்கள் ஆகியன ஆகும்.



**அரசியல், உலகியல் மக்களுக்கான வேலை. அது துறவிகளின் வேலை அல்ல. கோபத்தை அன்பால் வெல்ல வேண்டும் என்ற புத்தரின் கொள்கையை நான் ஏற்கவில்லை. கண்ணபெருமான் கீதையில் கூறுவதுபோல் யார் என்னிடம் எப்படி நடந்து கொள்கிறார்களோ அதன்படியே நான் அவர்களிடம் நடந்து கொள்வேன். கீதையின் இந்தக் கருத்தைத்தான் நான் ஏற்கிறேன்.**

மாவட்ட அளவில் திட்டமிடும் பணிகளில் முன்னோடியாக ஆவணத் தொகுப்புகள் (Dossier) தயாரிக்கக் கோட்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

### திட்டச் சிறுகுழு

மேலே எடுத்துரைக்கப்பட்ட கோட்பாடுகளை யொட்டிச் சென்னை மாநகரம் நீங்கலாக, எல்லா மாவட்டங்களிலும் மாவட்டத்துக்கு ஒன்று வீதம் '' மாவட்டத் திட்டச் சிறு குழு ''க்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாவட்ட ஆட்சித் தலைவர் இதன் தலைவர். பொருளியல் ஆய்வு நுட்பத் துறையிலே ஈடுபாடு உடைய திட்ட அலுவலர், மாவட்டப் புள்ளி விவர அலுவலர் ஆகியோர் இத் திட்டச் சிறுகுழுவில் உள்ளனர். பின் வரும் தலைப்புகளில் ஆவணத் தொகுப்பினைத் தயாரிக்கும் பணி மாவட்டத் திட்டச் சிறு குழுவிடம் விடப்பட்டுள்ளது.

மக்கள் தொகையின் தன்மை, மக்கள் சக்தி, தேவையும், அளிப்பும்.

செயல்பட்டுவரும் திட்டங்கள், வருங்காலத்தில் அவை விரியக் கூடிய தன்மை, இதற்கு ஆகும் காலம், செலவு, கட்டுப்படியாகாத திட்டங்களானால் அவற்றைத் திருத்தியமைக்க அல்லது கைவிடப் பரிந்துரைகள் அளிக்கப்பட வேண்டும்.

வெறும் யோசனை அளவில் உள்ள திட்டங்களைப் பொறுத்த வரை, அவற்றுக்கு முதலிட வரிசைக் கிரமம் தெரிவிக்கப்பட வேண்டும்.

### சென்னையில் பயிற்சி

மாவட்டத் திட்டப் பணி குறித்து, மாவட்டத் திட்ட அலுவலர்கள், மாவட்டப் புள்ளி விவர அலுவலர்கள், மாநிலத் திட்டக் குழுவில் திட்டப் பணி சம்பந்தப்பட்ட அலுவலர்கள் ஆகியவர்களுக்காக, மாநிலத் திட்டக் குழு, கடந்த ஏப்ரல் மாதம் 17-ஆம் தேதியிலிருந்து 29-ஆம் தேதி வரை பயிற்சி அளித்தது.

தமிழ் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் முறையான சமச் சீரான முன்னேற்றத்துக்கு வகை செய்வதற்காக மாநிலத் திட்டம், வட்டாரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைவது அவசியம். இதன் தொடர்பாக மாநிலத்துக்கு வட்டார வரைவுகள் அமைக்கும் பொறுப்பு நகரமைப்புத் திட்ட இயக்குநரிடம் விடப்பட்டது. மக்கள் தொகை, நில வகை, சமூகப் பொருளாதார நிலவரங்கள், ஆகியவைகளை அடிப்படையாகக் கொண்டு, தமிழ்நாடு எட்டுத் திட்ட வட்டாரங்களாகப் (Planning Regions) பிரிக்கப்பட்டுள்ளது. அவை :—

1. சென்னை நகரம்—செங்கற்பட்டு.

2. வேலூர்—தருமபுரி.

3. கோயம்புத்தூர்—நீலகிரி.

4. கடலூர்—சேலம்.

5. திருச்சிராப்பள்ளி—தஞ்சாவூர்.

6. மதுரை.

7. இராமநாதபுரம்.

8. திருநெல்வேலி—கன்னியாகுமரி.

அந்தந்த வட்டாரத்தில் மக்கள் தொகை, பொருளாதார நிலை, வேலை வசதி, போக்குவரத்து வசதிகள், வன வளம், நீர்வளம், மின் வசதி ஆகியவைகளையும், வளர்ச்சிக்கான செயல் திட்டங்கள், அதற்கு ஆகக்கூடிய செலவு ஆகியவையும் வட்டாரத் திட்டத்தில் ஆராயப்படும். தமிழ் நாட்டின் தொலை நோக்கு 12 ஆண்டுத் திட்டத்தில் (Perstective Plan) இந்த எட்டு வட்டாரங்களுக்குமான வட்டாரத் திட்டங்கள் மையமான அச்சாணிகளாக விளங்கும்.

### வளர்ச்சி மையங்கள்

வளர்ச்சி மையங்களைக் குறிப்பிடுவது, மாநிலத் திட்டத்தில் ஒரு முக்கியமான பணி ஆகும். கீழ்க்கண்ட மூவகை வளர்ச்சி நிலைகளைக் கருத்தில் கொண்டு, வளர்ச்சி மையங்களுக் குரிய இடங்கள் குறிப்பிடப்படும்.

1. வளர்ச்சித் திட்டங்களும், பணிகளும் ஏற்கெனவே நல்ல முறையில் தொடங்கி, அவை சீராக இயங்கி வரும் நிலையில் உள்ள மையங்கள்.

2. வளர்ச்சிப் பணிகள் தொடங்கி, ஆனால் இடையூறுகள் காரணமாக நல்ல வளர்ச்சி ஏற்படாமல் இருக்கும் மையங்கள்.

3. இதுவரை வளர்ச்சி மையங்கள் ஏற்படாமல், இனிப் புதிதாக ஏற்படுத்த வேண்டிய நிலையில் இருக்கும் பகுதிகள்.

### தனி ஆய்வுகள்

மேலே குறிப்பிட்ட நிலைமைகளுக்கு ஏற்பத் தொழில்கள் தோன்றிப் பெருகுவதற்கு உரிய வழி வகை, சக்தி ஆகியன குறித்து மாநிலத் திட்டக் குழு தனி ஆய்வுகளை மேற்கொள்ளும். மணலி, அதன் சுற்றுப்புறப் பகுதிகள், கல்பாக்கம் மையம், ஆகியவைகளில் விரைவில் தனித் தனி ஆய்வுகள் நடத்தப்படும். சேலம்-நெய்வேலி தொழில் மையம், தூத்துக்குடி தொழில் மையம் ஆகியவைகளிலும் உரிய காலத்தில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

அந்தந்த வட்டாரத்தில் உள்ள மூலப் பொருட்கள், தொழில்கள், அமைக்கப் படுவதற்குரிய இடங்கள், வளர்ச்சி மையங்கள், பரவலாகத்தொழில்கள்அமைப்பு, முன்னேற்றம் காணக் கடைப்பிடிக்க வேண்டிய உத்திகள் ஆகியவைகளையும் வட்டாரத் திட்ட வரைவுகள் எடுத்துரைக்கும்.

### இராமநாதபுரம்—தருமபுரி

விஞ்ஞான ரீதியாகத் திட்டமிடுவதில் முதல் தேவை, பின்னடைந்த பகுதிகள் நிலைமை குறித்து விரிந்த அளவில் ஆய்வுகள், புள்ளி விவரங்கள் ஆகியவைகளை மேற்கொள்வதாகும். பின்னடைந்த மாவட்டங்களான இராமநாதபுரம், தருமபுரி ஆகிய இரண்டிலும், பொருளியல் ஆய்வு மேற்கொள்வதென்று தமிழ்நாடு அரசு முடிவு செய்திருக்கிறது. தருமபுரி மாவட்டத்தில் பொருளியல் ஆய்வு நடத்தும் பணி, புது டில்லியில் உள்ள மக்கள் கருத்தறியும் இந்திய நிறுவனம் (Indian Institute of Public Opinion) என்ற நிறுவனத்திடமும், இராமநாதபுர மாவட்டத்தில் பொருளியல் ஆய்வு நடத்தும் பணி சென்னையில் உள்ள தொழில் நுட்பப் பொருளியல் ஆய்வு (Institute of Techno-Economics Studies) நிறுவனத்திடமும் விடப்பட்டுள்ளன. இந்த நிறுவனங்களின் பணிகள் பின்வருமாறு :

1. வளர்ச்சிக்குகந்த பொருளாதார நடவடிக்கைகளைத் தெரிந்தெடுத்தல்.

2. அதனுடன் இணைந்த நடவடிக்கைகளை முக்கியத்துவத்துக் கேற்ப பட்டியலாகத் தொகுத்தல்.

3. முக்கியப் பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்தத் தேவையான உள்ளமைப்பு வசதிகள், இதரத் தேவைகளைத் தீர்மானித்தல்.

4. பின்தங்கிய பகுதிகள், பின்தங்கிய வகுப்பினர் இவர்களின் அடிப்படைத் தேவைகளை எடுத்துரைத்தல்.

5. பல்வேறு பகுதிகளின் தேவைகளை இணைத்தல் ; குறைந்த செலவில் பரவலாக நிறைந்த அளவு பயன்தரக் கூடிய திட்டங்களை ஏற்ற இடங்களில் அமைத்தல்.

6. பொருள் வளத்தையும் நிதி வளத்தையும், மதிப்பிடுதல்.

இந்த ஆய்வுகளை வைத்துத் தெரிவிக்கப்படும் முக்கியமான பரிந்துரைகள் பரிசீலிக்கப்பட்டுத் தமிழ்நாட்டின் தொலை நோக்குத் திட்டத்தில் பயன் படுத்திக் கொள்ளப்படும்.




தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் சீரிய திட்டமாகிய ‘விழி இழந்தோர்க்கு ஒளி வழங்கும் திட்டத்தின் படி’ மதுரை மாவட்டத்தில், பழனியில் 2,000 பேர்களுக்கும், திண்டுக்கல்லில் 2,000 பேர்களுக்கும், உசிலம்பட்டியில் 2,000 பேர்களுக்கும், உடையார் பாளையத்தில் 2,000 பேர்களுக்கும், மேலூர்ப் பகுதிகளில் 2,500பேர்களுக்கும் கண்சிகிச்சை முகாம் மூலம் இலவச கண்ச்சிகிச்சை நடத்தப்படும். இதனால் மதுரை மாவட்டம் முழுவதும் 10,500 பேர்கள் பயனடைவர். 1,000 பேர்களுக்கு இலவசச் சிகிச்சைக்கான உணவு வசதி, முகாம் செலவு, மூக்குக் கண்ணாடி, ஆகியவற்றிற்காக ரூ. 4 இலட்சம் செலவிடப்படும். இதில் ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவை ரூ. 3 இலட்சம் அளிக்கின்றன. மேலும் தனியார் நிறுவனங்களான, ‘பேங் ஆப் மதுரை’ திண்டுக்கல்லில் நடைபெறும் முகாமில் மூக்குக் கண்ணாடி வழங்குவதற்கான செலவினையும், மதுரை ஆலை (மதுரை மில்ஸ்) நிறுவனத்தாரும், உடையார் பாளையத்தில் ‘அரிமா சங்க’ நிறுவனத்தாரும் முகாம் நடத்தும் செலவில் ஒரு பங்கினையும் ஏற்கின்றனர். முதற் கட்டமாக வரும் ஆகஸ்டு திங்கள் முதல் வாரத்தில் பழனியில் இலவசக் கண் சிகிச்சை முகாம் நடத்தப்படும்.

# உண்மையின் சந்நிதி

சோம. மகாதேவன்.

7

## யார் செய்த தீவினையோ ?

தலையிலே முக்காடு போட்டுக் கொண்டு, தெருவில் யார் தன்னை நின்று கவனிக்கிறார்கள் என்பதையெல்லாம் திரும்பிப் பாராமல், பரபரப்போடு நடந்து வந்த டெய்சி, லிங்கத்தின் வீடு நெருங்கியபோது தயங்கினாள்.

டெய்சியின் வயதுதான் இருக்கும் அரசிக்கு. இந்தக் கிராமத்திற்கு வந்து சேர்ந்த நாளையிலிருந்து, அரசியின் அந்தரங்கத் தோழி டெய்சி.

இன்றைக்கும் நினைத்து நினைத்துப் பேசும் அளவுக்கு நடந்த அரசியின் மறுமணத்திற்குப் பிறகு, அரசியைப் பார்ப்பதே அரிதாகி விட்டது. லிங்கத்தின் வீட்டின் பக்கமே போகக் கூடாதெனக் கட்டுப்பாடு. குறிப்பாகக் கிராமத்தில் சில வீடுகளை ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். எதையும் மீறுவதற்குத் தைரியமும் இருக்க வேண்டுமல்லவா? ஊருக்கே பணிந்து போக வேண்டியவன் மைக்கேல் கிழவன். இல்லையென்றால் அவனது தொழில் படுத்து விடும். ஊருக்குள்ளும் நிம்மதியாக அவன் குடி இருக்கவும் முடியாது.

காலையில் எழுந்ததுமே, இன்றைக்கு அரசியை எப்படியும் பார்த்து விடுவதெனத் துணிந்து, முடிவுக்கு வந்து விட்டாள் டெய்சி.

இந்த மடையன் பீட்டர் செய்து வைத்த காரியம், நினைவிலே நின்று குறுகுறுத்து, ஒன்றிலும் நிலை கொள்ளாமல் தவித்துக் கொண்டிருந்தபோது, அப்பா வேறு நெஞ்சிலே சஞ்சலத்தை ஏற்றி வைத்து விட்டார்.

இதையெல்லாம் எங்கேபோய் இறக்கி வைப்பது.

தனது முக்காட்டை விலக்கிக் கொண்டு, வாசலிலே தயங்கி நின்றாள் டெய்சி.

மீனம்மா பாட்டி இருந்தால் போச்சு. அது கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லுவதற்குள் போதும் போதும் என்றாகிவிடும்.

முன்பக்கம் ஆளரவம் தெரியவில்லை.

அவள் மெதுவாகப் படியேறி, திண்ணையைக் கடந்து, முன் கூடத்தில் நுழைந்தாள்.

யாருமே இல்லையா?

கூடத்தின் கடைசிக்குப் போய் நின்று, இடது பக்கமிருந்த அறைக்குள் எட்டிப் பார்த்து அரசி என்று குரல் கொடுத்தாள் டெய்சி.

பதில் இல்லை.

இப்படியா—யாருமே இல்லாமல், வீட்டையும் திறந்து போட்டுப் போய் விடுவார்களா? அப்போது, பின்னாலிருந்து 'குப்' பென்று சிரிப்பொலி கேட்டு, டெய்சி திடுக்கிட்டுத் திரும்பினாள்.

தலைவாசல் கதவோரமா நின்று சிரித்த அரசி, "வாம்மா ... ... ... ...பொண்ணு. வழி தெரிஞ்சு வந்திட்டியா?'' என்று கேட்டவாறு பக்கத்தில் வந்தாள்.

டெய்சிக்கு முகமெல்லாம் வேர்த்து விட்டது.

'' இப்படியா பயமுறுத்துறது '' என்று கேட்டு, குனிந்து முகத்தைத் துடைத்துக் கொண்டாள்.

'' எப்படியும் நீ வருவேன்னு எனக்குத் தெரியும் '' என்று சொல்லி டெய்சியின் கையைப் பிடித்துப் பக்கத்து அறைக்கு இழுத்துச் சென்றாள் அரசி.

'' எப்படித் தெரியும். பல்லி சொல்லிச்சா? '' என்று கேட்டாள் டெய்சி.

'' பல்லி சொல்லலே. உன் தம்பி வந்திருந்தான்.''

'' இங்கேயே வா ... ... ... ... ... ஐயையோ. இப்படியொரு முட்டாள் சனியன் என் கூடப் பிறந்திருக்கானே. அப்புறம் ... ... ... ... ''என்றாள் டெய்சி.

அரசி அவளைப் பக்கத்தில் இழுத்து, கழுத்தைக் கட்டிக் கொண்டாள்.

'' இருந்தாலும் உன் கடிதம் இருக்கு பாரு, அதைக் கண்ணாடியே போட்டு வச்சுக்கலாம். நல்லாவே இருக்கு. அந்தப் பேரை நினைக்கும்போது, வேறெதையும் எழுதத் தோணலே இல்லையா?'' என்று கேட்டாள் அரசி.

டெய்சி பெருமூச்சோடு கட்டிலிலே உட்கார்ந்து கொண்டாள். "அம்மாடி ... ... ... ... ... ... ... நான் கவலைப்பட்டுக் கிட்டே இருந்தேன். அதை உங்கிட்டத்தான் கொடுத்தானா பீட்டர்" என்றாள்.

'' நானெங்கே அதைப் பார்த்தேன் '' என்றாள் அரசி.

'' அப்படியே சொல்றியே''

''அதை நினைச்சுத்தான் சிரிச்சுக்கிட்டே இருக்கேன். அண்ணன்தான் இவர் கிட்டச் சொல்லி இருக்கார் '' என்றாள் அரசி.

'' இருந்தாலும் ரொம்ப மோசமம்மா. எதை மறைக்கணும்கிறது இல்லையா? எனக்கு வெட்கமா இருக்கு'' என்று சொல்லி முகம் சிவக்கத் தலை குனிந்து கொண்டாள் டெய்சி.

'' திரும்பத் திரும்ப ஒரே பேரையே எழுதுறப்ப எப்படி இருந்திச்சு ''. என்று சிரித்துக் கொண்டே கேட்டாள் அரசி.

டெய்சி ஒன்றும் பேசவில்லை.

'' ஒவ்வோர் பெண்ணுக்கும் இந்த நேரத்திலே இப்படித் தான் 'வாயடைத்துப்போகும்.'' என்று சொல்லி, அவளது நாடியைப் பிடித்து நிமிர்த்தி னாள் அரசி.

டெய்சியின் கண்கள் கலங்கி இருந்தன.

'' என்ன டெய்சி '' என்று பரப்பரப்போடு கேட்டாள் அரசி.

'' இதையும் சொல்லத்தான் வந்தேன். பெரிய வீட்டிலே எங்க அப்பாவைக் கூப்பிட்டு, பத்து நாளைக்குள்ளே சொந்தத் திலேயே மகளுக்குக் கல்யா ணத்தை முடிக்கணும். இல்லே இந்த ஊருக்குள்ளே குடி இருக்க முடியாதுன்னு சொல்லி இருக்காங்க. அப்பாவும் சரின்னு சொல்லிட்டு வந்திருக்காரு.

'' இதை யார் சொன்னது உனக்கு.''

'' அப்பாவே சொன்னார். எட்டாத நினைவு நினைச்சுக் குடும்பத்தையே படுகுழியிலே தள்ளாதேங்கிறார் அப்பா. நேத்தே எங்க பந்துக்கள் இருக்கிற ஊர்களுக்கெல்லாம் கடிதங்களை எழுதிப் போட்டுட் டார்'' என்று கவலையோடு சொன்னாள் டெய்சி.

'' இதெல்லாம் அண்ணனுக் குத் தெரியுமா ?'' என்று கேட்டாள் அரசி.

டெய்சி தலையசைத்தாள்.

'' உங்கப்பாக்கிட்ட நேருக்கே சொல்றது''.

'' அதது-தனக்கே வர்றப்பத் தான் தெரியுது. உன்கதை முடிஞ்சு போச்சு. என்கதை இப்பத்தான் ஆரம்பமாகி இருக்கு.'' என்றாள் டெய்சி.

அரசி ஒன்றும் சொல்லாமல் அவளையே பார்த்துக்கொண் டிருந்தாள்.

சின்ன வயசிலேயிருந்து யாராயினும் போட்டுக்குபோடு போடுவாளே டெய்சி. எதற்கும் கலங்காதவள் கலங்கிப்போய் உட்கார்ந்து விட்டாள்.

அந்த நீண்ட மௌனத்தைக் கலைப்பதுபோல், வீட்டின் பின்புற மிருந்து செருமும் குரல் கேட்டு, இருவருமே திடுக் கிட்டுத் திரும்பினர்.

அறையின் நிலைப்படியைப் பிடித்தவாறே லிங்கம் நின்று கொண்டிருந்தான்.

இவர் எப்போது வந்தார். '' சந்தடி இல்லாம வந்து நிக்கிறிங்களே.'' என்று கேட்டுக்கொண்டே அரசி முன்னுக்குவர, அவள் பின்னுக்கே வந்தாள் டெய்சி.

'' இப்ப டெய்சி எதுக்கு இங்கே வந்திருக்கு தெரியுமா ?'' என்று கேட்டாள் அரசி.

லிங்கம் சிரித்தான்.

கையசைப்பிலே ' அந்தக் கடிதத்தைப் பற்றியா ' என்று கேட்டான்.

அரசிக்கும் சிரிப்பு வந்தது. திரும்பிப் பார்த்தாள். முகம் சிவக்க டெய்சி தலைகுனிந்து கொண்டாள்.

அரசி சொன்னாள் :

''இவங்கப்பாவைக் கூப்பிட்டு, பத்து நாளைக்குள்ளே உன் மகளுக்குக் கல்யாணத்தைச் செய்து வைக்கணும், இல்லை யின்னா இந்த ஊருக்குள்ளே குடி இருக்க முடியாதுன்னு சொல்லி அனுப்பி இருக்காங்க'' என்றாள்.

'' பத்து நாளைக்குள்ளேயா—நடத்திப் போட வேண்டியது தான்.'' என்று சொல்லி யோசித்த லிங்கம், ''நடத்திப் போடு வோம். இதுக்கு யாரைப்போய்க் கேட்டுக்கிட்டிருக்கப்போறோம்.'' என்றான் சிரிக்காமல்.

''நல்லா சொன்னிங்க, அவங்க வழியிலே மாப்பிள்ளை பார்க்கச் சொல்றாங்களாம் ''

லிங்கம் சிரித்தான்.

''அதானே—ஒரு வில்லங்க மும் இல்லாம, காரியம் 'பட்' டுன்னு முடியுதேன்னு பார்த் தேன்'' என்றவன், டெய்சி யின் பக்கமாகத் திரும்பி, '' பாண்டியனே ரெண்டு நாளைக் குள்ளே உங்கப்பாவைப்பார்த்துச் சொல்லுவான் டெய்சி. என்ன வந்தாலும் கலங்காம நீ தான் உறுதியோட இருக் கணும் '' என்றான்.

டெய்சி தலை நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். நீர் கோத்த இமை கள் பளிச்சிட்டன.

'' அந்த உறுதியோடத்தான் அண்ணா,—நான் உயிரோடிருக் கேன்'' என்றாள்.

அப்போது லிங்கம் என்றழைத் துக் கொண்டே பாட்டி வருவது தெரிந்தது.

டெய்சி குனிந்து பரபரப்போடு முகத்தைத் துடைத்துக் கொண் டாள்.

''உர மூட்டை எடுக்கப் போனியே எடுத்தியாடா லிங்கம்?'' என்று கேட்டுக் கொண்டே வந்த பாட்டி, டெய்சி யைத் திருப்பிப் பார்த்து '' இந்தப் பொண்ணு எப்ப வந்திச்சு '' என்று கேட்டாள்.

'' இப்பத்தான் வந்தேன் பாட்டி '' என்றாள் டெய்சி.

டெய்சியைக் கண்டதும் பாட்டிக்கு உர மூட்டைகள் மறந்து விட்டது.

'' உங்கப்பன், தோட்டத்துக் கிணத்திலே மோட்டரைச் செம்ம பண்ணிக் கொடுத்தா னம்மா. இப்பவும் சரியா ஓடலையாமே. பணத்தை வாங் கிக்கிட்டுப் போயிட்டான். மைக்கேல் கிட்டச் சொல்லி, வந்து பாக்கச் சொல்லு '' என்றாள் பாட்டி.

''சரி பாட்டி '' என்ற டெய்சி, அவசரத்துடனே, '' நான் வாரேங்க '' என்று சொல்லி விட்டு அங்கிருந்து கிளம்பி விட்டாள்.

அவள் சென்ற பரப்பரப்பைத் திரும்பிப் பார்த்த பாட்டி, '' இப்பவே ஊர்முட்டப்பகையா இருக்கு. முங்கிக் குளிச்சாக் கூதல் இல்லையின்னு திரியா திங்க '' என்றாள்.

''நம்ம கூட்டுறவு சொசைட் டிக்கு நாளைக்கி உர மூட்டைகள் வருதாம் பாட்டி. நிறுவையும் சரியா இருக்கும். அப்படியே வயலுக்குத் தூக்கி விட்டுவிட லாம் '' என்றான் லிங்கம்.

பாட்டிக்கு, டெய்சியின் நினைவு மறந்து விட்டது.



''தாளடிக்கி போன வாரமே மேலுரம் போட்டிருக்கணும்'' என்ற பாட்டி, அரசியைத் திரும்பிப் பார்த்து, என்னமோ செய்யுங்க. என்னுலே இனிமே என்ன ஆகப் போகுது'' என்பதையும் பொதுவாகச் சொல்லி விட்டு, கொல்லைப் பக்கமாக நடந்தாள்.

பாட்டியின் தலை மறைந்ததும், லிங்கம் அரசியைத் திரும்பிப் பார்த்தான். பேச்சையே மாத்திட்டிங்களே' என்றுள் அரசி குறுநகையோடு.

''பாட்டி—அப்பப்ப நினைக்கிறதை அப்படியே சொல்லுவாங்க. இடையிலே வேறே ஏதாவது ஆரம்பிச்சா.... முன்னுலே சொன்னது மறந்து போகும்'' என்ற லிங்கம், அவளருகில் நெருங்கி, ''பாட்டியைப் பத்தி நீ என்ன நினைக்கிறே'' என்று கேட்டான்.

அரசி அவனை ஏறிட்டுப் பார்த்தாள்.

''ஐந்து வயதிலேயிருந்து உங்களை வளத்து ஆளாக்கி எனக்கே தந்திருக்காங்க. அவங்களைத் தெய்வமா நினைச்சிருக்கேன்'' என்றுள் அரசி கண் கலங்க.

அவளையே இமைக்காது பார்த்தான் லிங்கம்.

''என்னங்க.'' என்றுள் அவள் இமைகள் படபடக்க.

''திடீர்னு நீ ரொம்ப அழகாயிட்ட மாதிரித் தோணுது'' என்ற லிங்கம் அவள் தளிர்க் கரங்களைப் பற்றி நெஞ்சோடு அணைத்துக் கொண்டான்.

''பாட்டி வரப் போறுங்க'' என்ற அரசி விலகிக் கொண்டாள்.

''அண்ணனும் நீங்களுமா காலையிலே எங்கே போனிங்க'' என்று கேட்டாள்.

''அணைப்பட்டியிலே ரெண்டு நாளா உழவர் பயிற்சி முகாம் நடந்துக் கிட்டிருக்கு. அதுக்குப் போயிருந்தோம்.''

''பயிற்சி முகாமா?''

''சர்க்காரிலே எத்தனையோ விவசாய ஆராய்ச்சிப் பண்ணைகள் நடத்துறுங்க. அப்பப்ப புதுசு புதுசா பொறுக்கு வித்துக்களையும், அதிக விளைச்சலுக்குப் புது வழி முறைகளையும் கண்டுபிடிக்கிறுங்க. இதை யெல்லாம் சொல்றதுக்கும், செய்து காட்டுறதுக்கும், அந்தந்த வட்டாரத்திலே பள்ளிக்கூடம் மாதிரியே, விவசாயிகளுக்காகப் பயிற்சி முகாம் நடக்கு. நானும் பாண்டியனும் இதுக்குப் போயிட்டு கரை வழியா வர்றப்பத் தான் இன்னெரு நாடகமும் நடந்து போச்சு'' என்றுன் லிங்கம்.

''நாடகமா?'' என்று வியப்போடு கேட்டாள் அரசி.

லிங்கம் சொல்ல ஆரம்பிப்பதற்குள்ளாக, வீட்டிற்குள் பரபரப்போடு நான்கைந்து பேர் ஓடி வரும் சந்தடி கேட்டது.

லிங்கமும் அரசியும் திகைப்போடு திரும்பினர்.

''பாண்டியன் இல்லையா?'' என்று கேட்டான் முன்னல் ஓடிவந்த கன்னையா.

''பாண்டியன் இப்பத்தானே வீட்டுக்குப் போனன். என்ன அவசரம். ஏன் இப்படி ஓடியாறிங்க'' என்று வியப்போடு கேட்டான் லிங்கம்.

''நீங்களும், பாண்டியனுமாச் சேர்ந்து பொன்னையாவை வெட்டிப் போட்டிங்களாம்—ஊரெல்லாம் பரப்பரப்பா இருக்கு''



என்றான் கன்னையா பதட்டத்துடன்.

“பொன்னையாவை வெட்டிப் போட்டமா ? என்ன சொல்றே” என்றான் லிங்கம் குழப்பத்துடன்.

“கட்டிலோட பொன்னையாவை நாட்டாமைக்காரர் வீட்டுக்குத் தூக்கிட்டுப் போயிருக்காங்க. பாண்டியன், பொன்னையாவைப் பின் பக்கமா பிடிச்சுக்கிட்டதாயும், லிங்கம் மண்வெட்டிக் கணையாலே அவனை அடிச்சதாயும், பொன்னையா வாக்கு மூலம் கொடுத்திருக்கான். அப்படியே வண்டியிலே தூக்கிப் போட்டுக்கிட்டு நிலக்கோட்டைக்கு அவனைக் கொண்டு போயிருக்காங்கபிராது கொடுக்க” என்றான் கன்னையா பதறிப்போன குரலில்.

லிங்கம் சிலையாக நின்று விட்டான்.

“என்னங்க இது ? ” என்றாள் அரசி நடுக்கத்துடன்.

“நெஞ்சிலே தான் பலமான அடி. ஊமைக்காயமாத்தான் இருக்கு. குடுத்துணியெல்லாம் ரெத்தமாக் கக்கி இருக்கான்” என்றான். அங்கு நேரில் பார்த்து இங்கு வந்திருப்பவனொருவன்.

“என்னடா இது ? சொல்லி வாய் மூடலையே. பேரிடியா வந்து விழுதே” என்று பெருங் குரலோடு சொல்லிக் கொண்டே பாட்டியும் வந்து விட்டாள். வாசலில் சலசலப்புக் கேட்டது. லிங்கம் திரும்பினான்.


பாண்டியனின் தலை தெரிந்தது. அவனுக்குப் பின்னால் ஒரு கும்பலே நின்று கொண்டிருந்தது.

(வளரும்)

### முத்திரை பதிக்கும் கருவி

சென்னையிலுள்ள இந்துஸ்தான் டெலிபிரிண்டர் நிறுவனம் அஞ்சலகங்களில் பயன்படுத்துவதற்காக முத்திரையிடும் கருவி ஒன்றை உருவாக்கியுள்ளது. முழுக்க முழுக்க உள்நாட்டுப் பொருட்களைக் கொண்டே உருவாக்கப்பட்ட இந்தக் கருவியின் விலை ரூபாய் 4,000 ஆகும். இந்தக் கருவியின் இறக்குமதி விலையில் இது மூன்றில் இரண்டு பங்காகிறது.

## தமிழகத்திற்கு ஒரு புதிய வாழை — ‘வாதர்’



தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் கூட்டு முயற்சியுடன், நம் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், வெளி நாட்டிலிருந்தும், சேகரித்த சுமார் 110 ரகங்களிலிருந்து, தமிழ்நாட்டில் சிறப்பாகப் பயிரிடத் தகுந்த வாழை ரகத்தைத் தேர்ந்தெடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

தமிழ் நாட்டில் ஏற்றுமதிக்காகப் பயிரிடப்படும், வாழை ரகமானது ‘குள்ள கேவன்டிஸ்’ ரகத்தைச் சேர்ந்ததாகும். இதில் பச்சை வாழை, மோரீஸ் குள்ள வாழை ஆகியவை அடங்கும். இதை ஒத்த ‘ரொபஸ்டா’ ரகம் தற்போது வாழை பயிரிடப்படும் பகுதிகளில் புகழ் பெற்று வருகிறது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலுள்ள பழத் தோட்டத்தில் நடத்தப்பட்ட வாழை ரகச் சோதனையில், பீகார் மாநிலத்தில் இருந்து கொண்டு வந்த ‘வாதர்’ என்ற ரகம் நல்ல பலனை அளித்துள்ளது. முதலாண்டில் இந்த ரகம் சராசரி 33 கிலோ எடையுள்ள 112 பழங்களைக் கொண்ட வாழைத் தார் கொடுத்துள்ளது.

‘வாதர்’ ரகத்தின் சிறந்த அம்சம், ஒவ்வொரு காயும் சுமார் 1 அடி நீளமுள்ளதாகும். இது ஒரு சிறந்த குணமாகும். இதன் பழமானது மற்றக் கேவண்டிஸ் ரகங்களைப் போல் மிகவும் ருசியாக உள்ளது. இந்தச் சிறப்பியல்பு, உலகில் தலைசிறந்த வாழை ரகமாகக் கருதப்படும் ‘கிராஸ் மைக்கேல்’ ரகத்திற்கு ஒத்தாக உள்ளது. இது நட்ட 10-வது மாதத்தில் பலனளிக்க வல்லது.

‘வாதர்’ ரகத்தின் மற்றமொரு சிறப்பு அம்சம், ‘கேவண்டிஸ்’ ரகத்தைப் போல் அல்லாமல், சீப்புகளில் காய்கள் ஒரே சீராக அமைந்திருப்பதாகும்.

‘வாதர்’ ரகத்திலிருந்து முதலாண்டில் கிடைத்தது போல், மகசூல் நிரந்தரமாகக் கிடைக்குமாயின், வாழைச் சாகுபடியாளர்களுக்குக் குள்ள ‘கேவண்டிஸ்’ ரகத்திற்குப் பதிலாகப் பயிரிட ‘வாதர்’ ஒரு நல்ல ரகமாகவிருக்கும்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் ஓரிரண்டாண்டுகளில் நடக்கவிருக்கும் மண்டல சோதனையில் இந்த ரகத்தின் அதிக மகசூல், நோய் தாக்காத தன்மை ஆகிய சிறப்பியல்புகளைப் பொறுத்து ‘வாதர்’ ரகத்தின் வாழைக்கன்றுகள் உழவர்களுக்கு விநியோகிக்கப்படும்.

(தகவல் :—
தகவல் தொடர்பு நிலையம்,
வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோவை-3.)

# வெண்பாப் போட்டி

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர்:

புலவர் மு. சிக்கந்தர்,
பூங்குயில் கவிஞர் மன்றம்,
கோரிக்கடவு, பழனி வட்டம்.

## 38. விடுதலைநாள் வெள்ளிவிழா வெண்பா

குழந்தைசன நாயகத்தைக் கொல்லவரின் யாக்கை
இழந்தேனும் வன்முறையை ஈர்வேன்—பழந்தமிழே !
உன்மீதில் ஆணை உரைக்கின்றேன் வெள்ளிவிழா
நன்னாளில் இந்நாளில் நான்.

—புலவர் மு. சிக்கந்தர், பழனி.

வெற்றிக் கனிகுலுங்க வெள்ளிவிழா வந்ததுகாண் !
சுற்றும் பகையகற்றச் சூளுரைப்போம் !—பொற்றொடியே !
நல்லறிவால் நாட்டின் நலன்காக்கும் தொண்டாற்றி
எல்லாரும் வாழ்வோம் இனிது.

—புலவர் முத்துவேங்கடேசன், இலால்குடி.

பெற்ற விடுதலையைப் பேணிடுவோம் நன்குழைத்து
மற்றவர்கள் போற்ற வளஞ்சேர்ப்போம்—உற்றுதவி
செய்வோம் வறுமை சிதைத்திடுவோம் எல்லாரும்
உய்யவழி காண்போம் உவந்து.

—வி. மு. உலகநாதன், சென்னை-7.

வெள்ளி முளைத்து விடிவதுபோல் நாட்டுயர்வு
வெள்ளிவிழா ஆண்டில் விரைவாகும்—துள்ளிநாம்
வீணாக ஆர்ப்பதனை விட்டினிமேல் நன்மைக்குத்
துணைச் செய்திடுவோம் தொண்டு.

—கதி. கணேசன், காரைக்குடி.

நாட்டில் தொழில்வளர்ப்போம் நாதியற்ற ஏழைமக்கள்
வீட்டில் விளக்கேற்றி வேதனையை—ஓட்டிடுவோம் !
பொல்லாத வன்முறையைப் போக்கி நலம்சேர்ப்போம்
வெள்ளிவிழா ஆண்டில் விரைந்து.

— சிவ. மு. சிவா, வேடசந்தூர்.

குத்துவெட்டுக் காளாகிக் குண்டுக் குடல்தந்து
செத்து மடிந்து சிறைசென்று—கொத்தடிமைப்
பேய்மறையத் தம்முயிரைப் பேணா தளித்தவரை
வாய்நிறையப் பேசுபுகழ் வான்.

—பூ. அ. இரவீந்திரன், கோவை-2.

சேமிப்போம் சிக்கனத்தால் சீர்பெறுவோம்
போர்தவிர்ப்போம் ;
பூமித்தாய் நல்விளைவு பூத்திடவே—நாம்உழைப்போம் ;
தன்னிறைவில் பல்தொழில்கள் தாம் செய்வோம் மக்களாட்சி
என்றென்றும் காப்போம் இசைந்து.

—பூ. அண்ணாமலை, செஞ்சி.

பிணியும் பசிப்பிணியும் பேதப் பகையும்
அணுகா திருத்தல் அழகாம்—மணிக்கவி
வள்ளுவனின் வார்த்தையை வைரச் செயலாக்கித்
துள்ளும் விடுதலையைத் துய்த்து.

—வங்கனூரான், வங்கனூர்.

வாழ்வே வருகவென வாய்பொத்திக் கைகட்டி
வீழ்ந்திங்கே வெம்பிய தோர்காலம்—ஆழ்ந்துரைக்கின்
நாடும் நலமெல்லாம் நாம்பெற்றோம் என்பதனைப்
பாடுவதே வெள்ளிவிழாப் பாங்கு.

—அ. நெடுமாறன், பேரூர்.

நாட்டுக் குழைக்கின்ற நல்லுணர்வும் நாடாள்வோர்,
காட்டும் வழிநடக்கும் கண்ணியமும்—ஈட்டும்
புகழார்ந்த நற்பணியும் பூரிப்பாய் மேவி
இகல்வாரை வெல்வோம் இனிது.

—புலவர் செல்வி வ. இராசரத்தினம், திருவேகம்பத்து.

# வெண்பாப் போட்டி

' சாதி அறியாமை சாத்திரப் பொய்யுரைகள்
தீதுமலி வேற்றுமைகள் தீய்ந்தழிய—மேதினியில்
கொத்தடிமை சாடிக் கோதற்ற நல்லறிவால்
புத்துலகம் காண்போம் பொலிந்து. ''

—அரி. பொன். முத்தமிழ்வாணன், கோவை–18.

சாதிமத பேதமில்லாச் சான்றோர் வழிநின்று
நாதியில்லா மக்களுக்கு நற்கதியை—ஓதியபின்
சோதிமிகு வாழ்வுக்குச் சோர்வின்றிப் பாடுபட்டுச்
சாதிப்போம் சாதனைகள் சார்ந்து.

—பி. இராசேந்திரன், மேலமுடிமன்.

இல்லாமை இந்நாட்டில் இல்லாமை ஆக்கவே
கல்லாமை தன்னைக் கழுவேற்றப்—பொல்லாமை
நெஞ்சினை நீக்கி ஒருமை நிலாமலரத்
துஞ்சா துயர்த்துவோம் தோள்.

—சி. கூடல்வைரவன், பூவாண்டிபட்டி.

வெள்ளிவிழாக் கண்ட விடுதலைநாள் வாழ்கநீ :
வள்ள நிறையமுதம் மாந்துதல்போல்—தெள்ளு
தமிழ்மாந்தும் எங்கள் தமிழரசே முன்போல்
தமிழ்ச்சங்கம் உண்டாக்கித் தா.

—காங்கேயன், வெங்கல்பாளையம்.

வெள்ளி விழாவெடுக்க வெள்ளி முளைத்ததனுல்
அள்ளிக் குவிப்போம் அதிவிளைச்சல்—வெள்ளமிடும்
கங்கையுடன் காவிரியைக் கைகோக்க வைத்திடுவோம்
தங்கவழி செய்வோம் தழைத்து.

—வி. மீனுகுமாரி, திருமயம்.

கண்மணிகள் மக்களாய்க் கங்கைவெள்ளம் பாசனமாய்
விண்மணிகள் போலும் விளைகதிராய்ப்—பொன்மணிகள்
ஆளுங் குழுவினராய் ஆவதற்கு வெள்ளிவிழா
நாளிதனில் சூளுரைப்போம் நாம்.

—புலவர் மு. விசுவபாரதி, திருமயம்.

அண்ணலாம் காந்தி அளித்த விடுதலையை
எண்ணக் குளிரும் இதயமே !—இந்நிலையில்,
' இல்லான் ' எனவொருவன் இல்லான் எனச்செய்வோம்
நல்லார் வழியில் நடந்து.

—ஆ. இராசரத்தினம், பி.எஸ்சி., பி.டி., தாமரங்கோட்டை.

அன்போ டறமும் அரும்பொருட் செல்வமும்
இன்பமும் இல்வாழ்வில் ஏற்றமுற—வன்பகைதீர்
வெள்ளிவிழாக் கோல விடுதலை நாளின்று
உள்ளத்தில் ஏற்போம் ஒழுங்கு.

—அ. குமாரசாமி, துத்திக்காடு.

எல்லார்க்கும் நல்வாழ்வு, ஏற்றங்கள், நல்லுரிமை,
கல்லார்கள் இல்லாத கல்விவளம்—சொல்லரிய
நல்லாண்மை, பண்புநலம், நாடுஞ் சிறப்பளிக்க
வல்லதுவே வெள்ளிவிழா வாழ்வு.

—புலவர் செ. வரதராசன், கள்ளக்குறிச்சி.

வெள்ளிவிழா நாளின்கண் மேலாம் உறுதிகொள்க
தள்ளா விளையுள் தழைத்தோங்க—வெள்ளமெனக்
கல்வியொடு பண்பாடு கன்னித் தமிழகத்தில்
செல்வமொடு மல்க செழித்து

—குமரிக்கவி, நாகர்கோவில்.

நொந்தாரைக் காக்க, நொடித்தார் தலைதூக்கச்
சிந்தை உறுதிமொழி செய்திடுக—செந்தமிழ்
நாட்டிற்குத் தொண்டியற்ற நாமிந்த வெள்ளிவிழாப்
பாட்டிசைத்து நாடெங்கும் பார்த்து

—கயற்கண்ணி, மதுரை–1.

வாட்டிடுதே நாட்டில் வறுமை ; அதைப்போக்கத்
தீட்டிடுவோம் நல்லபல திட்டங்கள்—நாட்டு
விடுதலைக்கு வெள்ளிவிழாக் கொண்டாடும் நாளில்
எடுப்போமே இவ்வுறுதி யீங்கு.

—ப. ச. ஆனந்தன், பி.எஸ்சி., பி.டி., ஜமீன்ஊத்துக்குளி.

நன்றே நினைத்திடுக நலமே விளைத்திடுக
என்றேனும் தீமையதை எண்ணற்க—ஒன்றாக
மேன்மைத் தமிழகத்தில் வெள்ளிவிழா நன்னாளில்
கேண்மை உறவு கிளைத்து.

—எஸ். ஆர். மூர்த்தி, கோவை.

விடுதலைநாள் வெள்ளி விழாவெடுப்பீர் ! நாட்டில்
கெடுதலையைக் கல்லிக் களிக்க—நடுநிற்போம்
ஒற்றுமை கண்டின்றே ஒன்றுவோம் ஆட்சிக்கு
நற்றுணை செய்வோம் நயந்து.

—புலவர் அ. திருஞானசம்பந்தம், கொங்கவல்லி.

# வெண்பாப் போட்டி

சாதி மதச்சமயம் சார்ந்துவர வொட்டாமல்
நீதியுடன் வாழ்வோம் நிகரில்லை—தீதற்ற
கைத்தொழிலைப் போற்றிடுவோம் காந்திவழி சென்றிடுவோம்
இத்தலத்தில் உண்டோ இணை !

—சி. இராமகிருட்டிணன், மேல்பட்டாம்பாக்கம்.

கல்விப் பயிர்வளர்த்துக் காலத்தின் நீங்காத
செல்வப் பயிர்வளர்த்துச் சீர்பெறுவோம்—வல்லமையால்
சிந்தையெலாம் எண்ணம் சிறப்புறவே பூமிதனில்
விந்தைபல செய்வோம் விழைந்து.

—புலவர் சோ. கருப்புசாமி, அருப்புக்கோட்டை.

வறுமைப் பிணியொழிக்க மக்கள் அறியாச்
சிறுமை அகற்றிடவே சிந்தித்—துறுதிமொழி
வெள்ளிவிழா நாளின்கண் வீதியெங்கும் நாமேற்போம்
உள்ளம் சிறக்க உவந்து.

—பி. கே. குமார், கும்பகோணம்.

மூளைக் குரிய முறையான கல்விதனை
நாளைத் தலைமுறைக்கு நாமளித்து—வேலைக்
குதவுகல்வி தேர்ந்து உழைப்போமேல் வேள்விச்
சிதையாகும் ஏழ்மை சிதைந்து !

—கொண்டல், அமைதித்தீவு.

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே வழுவின்றி நாமேற்றுக்—குன்றன்ன
சாதிக் கொடுமைகளைச் சாகடித்துச் சான்ருண்மை
நீதிவழி நிற்போம் நிமிர்ந்து.

—பசுமலை வீர. முருகேசன், எம். ஏ., பி.டி., களிமங்கலம்.

பெற்ரும் சுதந்தரம் என்ற பெருமிதத்தால்
மற்றக் கடனை மறவாதே—ஒற்றுமையாய்
வெள்ளி விழாக்காண்போம் ! வெம்பிணி கொல்பகையைக்
கிள்ளி எறிவோம் கிளர்ந்து!

—க. கிருட்டிணசாமி, வாளவாடி.

கல்வி பலவும் தொழில்மூலம் கற்றுணர்ந்து
எல்லாரும் வேலையில் ஈடுபட—நல்லபடி
நாட்டின் வளம்பெருக்கி நம்முள் தாழ்வுயர்வை
ஓட்டி ஒழிக்க உணர்.

—மு. நாராயணன், சத்திரப்பட்டி.

அடிமைத் தளையறுத்தே அந்நியரை வென்று
குடியரசை நாட்டிற் கொணர்ந்தோம்—குடியைச்
சிறுமைப் படவைத்துச் சீரழிக்கும் நோயாம்
வறுமை யொழித்திடுதல் மாண்பு.

—பாக்கியசாமி, சென்னை-3.

பல்வளத்தால் சீர்குவிப்போம் பண்பாட்டைக் காத்திடுவோம்
இல்லாமை கல்லாமை இங்கினிமேல்—இல்லையென்போம்
காத்திடுவோம் தாய்நாட்டைக் காட்டுகின்ற நல்லுழைப்பால்
சேர்த்திடுவோம் மேலும் சிறப்பு.

—ப. தேவகுரு, தேவதானப்பட்டி.

வன்முறையைப் போக்குதல், வான்புகழை ஈட்டுதல்
நன்மைதனை நானிலத்துள் நாட்டுதல்—என்பனபோல்
தெள்ளியன செய்வதனைத் தேர்ந்து விடுதலைநாள்
வெள்ளிவிழாக் காண்போம் விழைந்து.

—புலவர் சு. முத்துக்கருப்பன், பேரையூர்.

போராட்டம் என்றுரைத்துப் பொய்வேடம் தாங்காது
நேராகக் காந்தி நெறிநின்று —போரின்றிப்
பெற்ற சுதந்தரத்தைப் பேணி வளர்த்திட
முற்ற உழைப்போம் முயன்று.

—வெ. குமாரசாமி, பழனி.

ஏர்ப்படையும் நூற்படையும் ஏற்றமுறப் போர்ப்படையும்
சீர்மையுறும் நாற்றிசையுஞ் செல்வாக்காம்!—நேர்மையுடன்
நாளும்நாம் முன்னேற்றம் நாடிப் பணிசெய்வோம்
நீளும் சுதந்தரத்தில் நின்று.

—ஜெ. மலர்விழி, செந்துறை.

மனிதரின் வாழ்வை மனிதர் பறித்தல்
இனியும் நடத்தல் இழிவாம் ;—துணிந்திடுவோம்
எல்லார்க்கும் எல்லாமே என்னும் உலகமைப்போம் ;
வெள்ளி விழாச்சூளின் மேல்.

—புலவர் கோம்பைச்சீரான், கோம்பை.

இல்லாரும் இல்லை, உடையாரும் ஈங்கில்லை ;
எல்லாரும் ஓர்நிறையை எய்திடவும்—கல்லாரும்
ஏற்பாரும் இல்லாத ஏற்றமுறும் நற்பணிகள்
ஆற்றுவோம் வாரீர் அமைந்து.

—ஆ. தவசிலிங்கம், ஈரோடு-1.

# வெண்பாப் போட்டி

'' விண்வெளிக்குச் செல்ல விரியறிவு பெற்றிவண்
தன்னிறைவு கொண்டு தழைத்தோங்கி—மண்ணுலகைப்
பொன்னுலகாய் மாற்றிப் புகழ்க்கொடியை நாட்டியே
இன்னும் உயர்வோம் இனிது.''

—பி.சி. அசனல்லி, அரக்கோணம்.

செங்குருதி ஆறுகச் செக்கிழுத்த செம்மல்கள்
வெங்கொடுமைச் சாக்காட்டால் வென்றரே—நங்கையே!
இந்நாளைப் பாடுதற்கு ஐயைந்தாம் ஆண்டுகளோ ?
பொன்னுளைப் போற்றிப் புகழ்.

—புலவர் பி. விக்டர், அண்ணமலைநகர்.

வெள்ளிவிழாத் தேரேறி வீதிவரும் இந்தியத்தாய்
உள்ளமதில் நல்லமைதி உண்டாகத்—துள்ளிவரும்
மாற்றார் பகையை மடிவாழும் வன்துயரைத்
தோற்றோடச் செய்வோம் துணிந்து.

—கோ. வே. இளங்கோவன், தென்னமநாடு.

கொடிகாத்த நற்குமரன் கொள்கையை நாட்டில்
வடிவாக்கும் மக்களாய் வாழ்ந்து—முடிவாக
ஏழ்மையை நீக்கிட ஏர்பிடித்தால் இந்நாட்டின்
தாழ்வுதான் மாய்ந்திடா தா ?

—கே. ஏ. அர்ஜுனன், டி.எம்.இ., உத்தமபாளையம்.

புல்விளையும் பூமிதான் பாடுபட்டால் கன்னலொடு
நெல்விளையும் நன்செயிலே நீயுழைத்தால்—வில்விளையும்
வேல்விழியார் கண்ணசைத்தால் பூமகனே! வெற்றியுன்றன்
பால்குவியும் நாட்டைநினைப் பார்க்கு.

—கா. வாலிதாசன், சென்னை-35.

அறிவியலில் மேலோங்கி ஆக்கத்தைப் பெற்றுப்
பிறிதொரு நாட்டான் பிடியில்—உறுமல்நாம்
வேற்றுமையை நீக்கி விளைவைப் பெருக்கிநமை
ஏற்றமுறச் செய்தல் இனிது.

—புலவர் ந. குஞ்சிதபாதம், வங்கனூர்.

தொல்லைகள் நீக்கவும் துன்பங்கள் போக்கவும்
ஒல்லும் வகையில் உயர்தமிழ்க்கு—நல்லபுகழ்
எல்லா முறையிலும் ஏற்றவும் இன்றுமுதல்
நல்லுறுதி கொள்வோமே நாம்.

—துறைவன், கிருட்டிணபுரம்.

ஈற்றடியும் நல்ல முறிப்படியும் வெண்பாவுக்(கு)
ஏற்றமுத லீறும் எமக்களித்தார் ;—மாற்றியதை
உள்ள படியெழுத வைத்த விடுதலையின்
வெள்ளி விழாவை! விரும்பு.

—த.மு. அகமது, கடையநல்லூர்.

தீண்டாமை நீங்கிடவும் தீந்தமிழைக் காத்திடவும்
மாண்புநலன் ஓங்கிடவும் மாநிலத்தில்—காண்கின்ற
ஏற்றமிகு பண்புகொண்ட ஏழைகளின் வாழ்வுயர
ஆற்றிடுவீர் நற்செயல்தான் ஆர்ந்து.

—இரா. சுப்பிரமணியன், எம்.ஏ., வாடிப்பட்டி.

ஆட்சியினை மாற்றி யமைத்தோம் இனிஅவலக்
காட்சியினை மாற்றவழி கண்டுய்வோம் !—பேச்சுதனைச்
சற்றே நிறுத்திச் சாதனையை மேற்கொள்வோம்
எற்றே வெறுஞ்சொல் இனி .

—சுப. திலகவதி, நாரைக்கிணறு.

விடுதலையை வாழ்விக்க, வேண்டும் பொதுமை
சடுதியிலே யிங்குச் சமைக்க,—நெடும்புவியில்
நந்தமிழின் சீர்மல்க, நந்திற மேவெல்க
சிந்தையினிற் பற்றிருத்திச் செய்.

—ஒளியரசன், கரூர்-2.

வேண்டுவதைச் செய்ய விழையாமல் பாமரர்பால்
தூண்டுவதைச் செய்யும் தொழிலதனை—ஈண்டுசிலர்
கெடுதலாய் எண்ணிவிட்டால் கீழ்மேலாம் ! ஈதென்
விடுதலைநாள் வெள்ளிவிழாப் பாட்டு.

—வெ. கலைக்கூத்தன், பம்பாய்-19.

# இல்லாமைக்கு விடுதலை!

மனசை ப.கீரன்

கலைகளிலே தோய்ந்தந்நாள் கனிந்தபல புலவர்கள்
விலைகூறு மேன்மையுற விளைவித்த இலக்கியங்கள்
மெய்சிலிர்த்துச் சுவைக்கின்ற வேளையிலே மெய்ம்மறந்து
நெய்யாத விழித்திரைகள் நிழலாடி முடலுற்றேன் !

வள்ளல்கள் வரையாமல் வாரிமிக வழங்குகிற
கொள்கைகளின் கொப்புளிக்கும் காட்சியெலாம் விரியுமங்கே !
இன்னொருபால், தமிழகத்தின் இக்கால எழில்நிலைகள்
பொன்னொளிரப் பூத்ததையா, புகலறியேன், புல்லனம்மா !

செல்வமிகும் தொழிலதிபர், மல்குவள வேளாளர்,
பல்குபணத் திரையுலகோர், பணம்மிகுந்த எல்லாரும்
ஏதுமில்லார், தொழுநோயார் ஏக்கத்தைப் போக்கவெனப்
போதுமிகத் தேடிடினும் புகழ்விளக்கும் தமிழரசு

இல்லாமை நோயதனால் உடலுரமே கொள்ளாமை
அல்லற்கும் ஆகாத மூப்பாலே தள்ளாமை
எல்லாமும் இல்லாமை இயல்பாகச் செய்ததையா !
கல்லாமை நீக்கிக் களிப்படையச் செய்ததையா !


செல்வர்கள் உணவுதரக் கொள்வோர்கள் இலரெனலால்
பல்குகிற பயிர்விளைச்சல் படைப்பதுவே உதவியென
உழுதொழிலை ஊக்கிடவும், கரம்புநிலம் உழுதிடவும்
பழுதின்றி உதவிடற்குப் பணிவுடனே கருதிடினும்

வளர்பசுமைப் புரட்சியினால் கைகொடுத்தால் நீட்டாத
ஒளிர்நாட்டைப் பார்க்கின்றார் ; வழியின்றி ஓய்கின்றார் !
விழியற்றோர் விழிபெறவே கண்ணைப்பர் வியன்செயல்போல்
எழிலுதவி செயநினைத்தால், இணையற்ற திட்டத்தால்

எல்லாரும் முகாம்களிலே நல்லுதவி பெறும்வழிக்கே
வல்லதமிழ் நாட்டரசு வனைந்ததிட்டம் செயற்படலால்,
உதவிபெறத் தனியாக ஊக்கமுள்ளோர் ஒருவரில்லை !
பதவிபெறப் படிப்பளிக்கக் குடிசைகளை மாற்றிவிட

எண்ணிடினும், அமைச்சரெலாம் தொண்டரெனும் இதயமுடன்
நண்ணியிங்கே உதவியெலாம் நல்கிடுவார் ; அட்டியில்லை !
இரண்டின்மேல் குழந்தையுளோர் எவருமில்லை இனியென்ற
திரண்டினிக்கும் இலக்கணத்தின் இலக்கியமாம் நாடெனலால்

விடுதலையின் வெள்ளிவிழா வீறுபெறும் இந்தியாவில்
வடுவில்லாப் புதுப்பாடம் வழங்குகிற தமிழகம்தான்
தொலைநோக்கால் இல்லாமை தொலைத்துவிடும் எனக்கண்ட
நிலையிதனால் பூரிப்போம் ; நிறைவேற்றிக் களிப்போமே !







# விடுதலைக்குப் பின் வேளாண்மை வளர்ச்சி

இரண்டாவது உலகப் பெரும் போர் முடிந்த பின்பு 1947-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 15-ஆம் நாள் இந்தியா-ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்து விடுதலை அடைந்தது. இந்தியா விடுதலை அடைந்த பிறகு, தமிழ்நாட்டின் வேளாண்மையில் படிப்படியான வளர்ச்சி ஏற்பட்டு, இறுதியாகப் 'பசுமைப் புரட்சி' பூத்தது.

இந்திய விடுதலைக்குப் பிறகு, வேளாண்மை வளர்ச்சிக்கான திட்டமிட்ட வேலைத் திட்டங்கள் துவங்கப்பெற்றன. ஆனால், விடுதலைக்குப் பிறகு ஏற்பட்ட பல்வேறு சிக்கல்களினால், உடனடியாக வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கும் திட்டங்களைத் தீவிரப்படுத்த இயலவில்லை.

### முதல் ஐந்தாண்டுத் திட்டம்

தமிழ்நாட்டில் முதல் ஐந்தாண்டுத்திட்டம் 1951-52-ஆம் ஆண்டு முதல் செயல்படத் துவங்கியது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ரூபாய் 86.04 கோடி முதலீடு செய்யப்பட்டது. அதில் ரூபாய் 80 கோடி மட்டுமே திட்டக் காலத்தில் செலவிடப்பட்டது. அதாவது முதலீடு செய்த தொகையில் 93 சதமே செலவிடப் பட்டுள்ளது. முதல் திட்ட மூலதன ஒதுக்கீட்டில் 75 சதத்தொகை வேளாண்மை, நீர்ப்பாசனம், மின்சாரம் ஆகியவைகளின் வளர்ச்சிக்காகவே ஒதுக்கப்பட்டிருந்தது. முதல் திட்டக் காலத்தில் புதிதாக 9 நீர்ப்பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டதால் 1.32 இலட்சம் ஏக்கர் நிலப்பரப்பிற்குப் புதிதாகப் பாசன வசதி கிட்டியது. புதிதாக 110 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டது. முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதி ஆண்டான 1955-56-ஆம் ஆண்டில் மொத்தம் 45.35 இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானியங்கள் உற்பத்தி செய்யப்பட்டன.

தமிழ்நாட்டில் 1950-51-ஆம் ஆண்டில் 19.50 இலட்சம் மெட்ரிக் டன்னாக இருந்த அரிசி உற்பத்தி 1955-56-ஆம் ஆண்டில் 29·55 மெட்ரிக் டன்னாக உயர்ந்தது. அரிசி உற்பத்தியைப் பொறுத்த வரையில் இவ்வுயர்வு குறிப்பிடத் தகுந்ததாகும். ஆனால், அரிசியல்லாத மற்றத் தானியங்களின் உற்பத்தி உயர்வு குறிப்பிடத் தகுந்ததாக அமையவில்லை.

1950-51-ஆம் ஆண்டில் 3.25 இலட்சம் மெட்ரிக் டன்னாக இருந்த கரும்பு உற்பத்தி (வெல்லம்), 1955-56-ஆம் ஆண்டிலும், 3.25 இலட்சம் மெட்ரிக் டன்னாகவே இருந்ததால், கரும்பு உற்பத்தியைப் பொறுத்த வரையில் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் முன்னேற்றம் ஏற்படவில்லை. ஆனால், 1950-51-ஆம் ஆண்டில் 8.04 இலட்சம் மெட்ரிக் டன்னாக இருந்த எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி 1955-56-ஆம் ஆண்டில் 8.76 இலட்சம் மெட்ரிக் டன்னாக உயர்ந்தது. 1950-51-ஆம் ஆண்டில் 2.26 இலட்சம் பேல்களாக இருந்த பருத்தி உற்பத்தி, 1955-56-ஆம் ஆண்டில் 3.11 இலட்சம் பேல்களாக உயர்ந்தது.

### இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்

இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டம் 1956-57-ஆம் ஆண்டு முதல் செயல்படத் துவங்கியது. முதல் திட்டத்தில் கிடைத்த வெற்றி, இரண்டாவது திட்டத்தில் தமிழகத்தை மிகுந்த துணிவுடன் ஈடுபட வைத்தது. துவக்கத்தில் இரண்டாவது திட்டத்திற்கு 153 கோடி ரூபாய் மட்டுமே தமிழகத்திற்கு ஒதுக்கப்பட்டிருப்பினும், தமிழ்நாடு அரசு 188 கோடி ரூபாய் செலவில் இத்திட்டத்தை நிறைவேற்றியது. இத்திட்டக் காலத்தில் உணவு உற்பத்தியைப் பெருக்கவும், மின்சார உற்பத்தியைப் பெருக்கித் தொழில் வளம் கூட்டவும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. இத் திட்டக் காலத்தில் நிறைவேற்றப்பட்ட பெரிய, நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்கள் மூலம் கூடுதலாக 3.2 இலட்சம் ஏக்கர் பரப்பளவிற்கு நீர்ப்பாசன வசதி கிடைத்துள்ளது.

தமிழகத்தில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் கால முடிவில் 58.36 இலட்சம்மெட்ரிக் டன்உணவு தானியங்கள் உற்பத்தி செய்யக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டிருந்தாலும், இரண்டாவது திட்ட இறுதி ஆண்டில் அதாவது1960, 61-ஆம் ஆண்டில், 53.13 இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானியங்களே உற்பத்தி செய்யப்பட்டன. எனவே இரண்டாவது திட்டக் காலத்தில் 7·78 இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானியங்கள் மட்டுமே கூடுதலாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இரண்டாவது திட்ட இறுதி ஆண்டில் (1960–61) கரும்பு உற்பத்தி (வெல்லம்) 6.75 இலட்சம் மெட்ரிக் டன்னாகவும், பருத்தி உற்பத்தி 3.74 இலட்சம் பேல்களாகவும், எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி 10.86 இலட்சம் டன்களாகவும் உயர்ந்தது.

### மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம்

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் 1961–62 முதல் செயல்படுத்தப்பட்டது. இத்திட்ட முடிவில் தமிழ்நாட்டில் 70 இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானியங்கள் உற்பத்தி செய்ய வேண்டும் என்று குறியீடு விதிக்கப்பட்டது. மூன்றாவது திட்டக் காலத்தின் முதல் மூன்றாண்டுகளில் நல்ல முன்னேற்றம் காணப்பட்டது. 1964–65-ஆம் ஆண்டில் 58 இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானியங்கள் உற்பத்தி செய்யப்பட்டன. 1965–66-ஆம் ஆண்டில் நிலவிய வறட்சி வேளாண்மை உற்பத்தியை வெகுவாகப் பாதித்தது.

தமிழ்நாட்டில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதி ஆண்டில் (1965–66), 50.61 இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானியங்கள் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டன. இவ்வுற்பத்தி, இரண்டாவது திட்டக் கால இறுதியில் ஏற்பட்ட உற்பத்தியை விடக் குறைவு. ஆனால், 1965–66-ஆம் ஆண்டில் கரும்பு (வெல்லம்) உற்பத்தி, 9.55 இலட்சம் மெட்ரிக் டன்னாகவும், பருத்தி உற்பத்தி 4.38 இலட்சம் பேல்களாகவும், எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி 12.08 இலட்சம் டன்களாகவும் உயர்ந்தது. மூன்றாவது திட்டக் காலத்தில், உணவு உற்பத்திக் குறை

வினல் தமிழகத்திற்கு ஏற்பட்ட நட்டத்தைக் கரும்பு, பருத்தி, எண்ணெய் வித்துக்கள் மூலம் கிடைத்த வருவாய் ஓரளவுக்கு ஈடுகட்டியது. உணவு உற்பத்தியைப் பொறுத்தவரையில் மூன்ருவது திட்டம் தமிழ்நாட்டிற்குப் பெருத்த ஏமாற்றத்தையே கொடுத்தது.

## மூன்று தனித்தனி ஆண்டுத் திட்டங்கள்

நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் முதலில் 1966—67-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படவிருந்தது. ஆனால், பல்வேறு காரணங்களால் நான்காவது திட்டம் தள்ளிப்போடப்பட்டது. அதனால் தமிழ்நாடு அரசு, குறைந்த மூலதன ஒதுக்கீடு செய்து 1966—67, 1967—68, 1968—69 ஆகிய ஆண்டுகளுக்கு தனித்தனி ஆண்டுத் திட்டங்களைத் (Annul Plans) தீட்டிச் செயல்படுத்தியது. மூன்ருவது திட்டத்திற்கும் நான்காவது திட்டத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் நிறைவேற்றப்பட்ட ஆண்டுத் திட்டங்களில் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கும் நவீன யுக்திகள் (New Strategies) மேற்கொள்ளப்பட்டன. அவைகளில் மிகவும் குறிப்பிடத்தகுந்தவை உயர் விளைச்சல் தரும் நெல் ரகங்கள் (High Yeilding Paddy Varieties), ஒட்டு வீரிய சிறு தானியங்கள் (Hybrid Millets), இரசாயன உரங்கள் ஆகியவையாகும்.

## 1966—67-ஆம் ஆண்டின் சாதனை

1966—67-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் உயர்விளைச்சல் ரகத் திட்டம் முதன்முதலாக மேற்கொள்ளப்பட்டது. அந்த ஆண்டில் 5.28 இலட்சம் ஏக்கர்களில் உயர்விளைச்சல் ரகங்களும், ஒட்டு வீரிய சிறுதானியங்களும் பயிரிடப்பட்டன. அதே ஆண்டில் 2,038 வடிமுனைக் குழாய்களும், 865 தனியார் குழாய்க் கிணறுகளும், 9,389 சாதாரணக் கிணறுகளும் தோண்டப் பெற்றன. மேலும் 34,000 பம்பு செட்டுகளுக்கு மின்சார இணைப்புக் கொடுத்து உணவு உற்பத்தியைப் பெருக்க வழிகோலப் பட்டது. இவைகளின் காரணமாக 1966—67-ஆம் ஆண்டில் 57.88 இலட் மெட்ரிக் டன் உணவு தானியங்கள் உற்பத்தி செய்யப்பட்டன.

## பசுமைப் புரட்சி தோன்றியது

தமிழ்நாடு அரசு 1967—68-ஆம் ஆண்டில் வேளாண்மை உற்பத்தியை விரைந்து பெருக்கிட, வேகமாகத் திட்டமிட்டுச் செயல்படுத்தியது. 1967—68-ஆம் ஆண்டு முழுவதும் பருவநிலைமை ஏதுவாக அமையவில்லை.

அப்படியிருந்தும், தமிழ்நாடு அரசின் திட்டமிட்ட செயலால் அந்த ஆண்டில், 12·79 இலட்சம் ஏக்கரில் உயர்விளைச்சல் தரும் நெல் ரகங்களும், ஒட்டு வீரிய சிறுதானிய ரகங்களும் பயிரிடப்பட்டன. அதே ஆண்டில் தஞ்சை மாவட்டத்தில் 2·1 இலட்சம் ஏக்கர் ஒரு போகச் சாகுபடி நிலங்களில் இரு போகம் சாகுபடி செய்யும் திட்டத்தைத் தமிழ்நாடு அரசு வெற்றிகரமாக நிறைவேற்றியது. மற்ற மாவட்டங்களில் உள்ள 15,000 ஏக்கர் ஒரு போகச் சாகுபடி நிலங்களிலும், இருபோகம் சாகுபடி செய்யப்பட்டது. எனவே அந்த ஆண்டில் மொத்தம் 2·25 இலட்சம் ஏக்கர் ஒருபோகச் சாகுபடி நிலங்களில் இருபோகம் சாகுபடி செய்து, தமிழ்நாடு வரலாறு காணாத சாதனையை ஏற்படுத்தியது.

இரசாயன உரங்கள் போதிய அளவு கிடைக்கத் தமிழ்நாடு அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளின் காரணமாக அந்த ஆண்டில் இரசாயன உரங்களின் உபயோகம் பின்கண்ட வாறு பெருகியது.

| | மெட்ரிக் டன்கள். |
|---|---|
| தழைச்சத்து | 85,000 |
| மணிச்சத்து | 30,000 |
| சாம்பல் சத்து | 30,000 |

சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை விரைந்து நிறைவேற்றுவதில் தமிழ்நாடு அரசு மும்முர நடவடிக்கை எடுத்ததன் காரணமாக 1967—68-ஆம் ஆண்டில், 14,266 புதிய கிணறுகள் தோண்டப் பெற்றன; 2,488 வடிமுனைக் குழாய்கள் அமைக்கப்பட்டன.

மூன்ருவது திட்ட காலத்தில் ஆண்டிற்கு 28,000 பம்பு செட்டுகளுக்கு மட்டுமே மின்சார இணைப்பு கொடுக்கப்பட்டு வந்தது. ஆனால், 1967-68-ஆம் ஆண்டில் 51,746 பம்பு செட்டுகளுக்கு மின்சார இணைப்புக் கொடுத்து ஒரு புதிய மாபெரும் சாதனையைத் தோற்றுவித்தது தமிழ்நாடு அரசு.

இவ்வாறு பல்வேறு மும்முர நடவடிக்கைகளை மேற்கொண்டதன் பயனாய், பருவநிலை ஏதுவாக அமையாத அந்த ஆண்டிலும், 59.41 இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானியங்கள் உற்பத்தி செய்யப்பட்டது என்பது மகத்தான சாதனையாகும். இவ்வுற்பத்தியின் காரணமாக 1964—65-ஆம் ஆண்டிற்குப் பிறகு தமிழ்நாட்டில் நிலவி வந்த உணவுப் பற்ருக்குறை அகன்றது. உணவு தானியங்கள் மற்றும் எண்ணெய் ஆகியவற்றின் விலையும் குறைந்தது. இந்த ஆண்டில்தான் தமிழ்நாட்டில் பசுமைப் புரட்சி தோன்றியது எனலாம்.

## 1968-69-ஆம் ஆண்டின் சாதனை

தமிழ்நாட்டின் உணவு உற்பத்தியில் 1967—68-ஆம் ஆண்டில் கிடைத்த வெற்றியினால் உந்தப்பட்ட தமிழ்நாடு அரசு, 1968—69-ஆம் ஆண்டில் 63 இலட்சம் மெட்ரிக் டன் உணவு

## வெண்பாப் போட்டி-41

ஈற்றடி : அண்ணல் வழியே அழகு

(முடிவு நாள் 1--9--1972.)

பரிசு : ஓராண்டு 'தமிழரசு' அன்பளிப்பு

வெண்பா அனுப்பவேண்டிய முகவரி :

ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம், சென்னை-2.

குறிப்பு : அஞ்சலட்டையில் வரும் வெண்பாக்களே ஏற்றுக்கொள்ளப்படும்.



16—8—8எ

தானியங்களை உற்பத்தி செய்யத் திட்டமிட்டது. ஆனால் அந்த ஆண்டில் நிலவிய வேதனைக்குரிய வறட்சியின் காரணமாக 1968–69-ஆம் ஆண்டில் 51·06 இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானியங்களே உற்பத்தி செய்யப் பட்டன.

### நான்காவது ஐந்தாண்டுத் திட்டம்

நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் 1969–70-ஆம் ஆண்டில் துவங்கியது. 1968–69-ஆம் ஆண்டில் ஏற்பட்ட வேதனைக்குரிய ஏமாற்றத்தை மனத்தில் கொண்டு உணவுதானிய உற்பத்தியைப் பெருக்க மேலும் தீவிரமாக முயற்சிக்கப் பட்டது. அதன் பயனாய் 1969–70-ஆம் ஆண்டில் உணவு தானிய உற்பத்தி 62·61 இலட்சம் மெட்ரிக் டன் அளவை எட்டியது.

இவ் வெற்றியினால் மீண்டும் உந்தப்பட்ட தமிழ்நாடு அரசு, 1970–71-ஆம் ஆண்டில் 67 இலட்சம் டன் உணவு தானிய உற்பத்தி செய்யப் பெரு முயற்சி மேற்கொண்டது. முயற்சி வெற்றியாக மலர்ந்தது! 1970–71-ஆம் ஆண்டில் 70.30 இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானியம் தமிழ் நாட்டில் உற்பத்தியாகியது. அந்த ஆண்டில் அனைத்து இந்தியாவிலும் ஹெக்டேருக்குச் சராசரியாக 1,134 கிலோகிராம் அரிசி மட்டுமே உற்பத்தியாகி உள்ளது. ஆனால், தமிழ்நாட்டில் ஹெக்டேருக்குச் சராசரியாக 1,974 கிலோ கிராம் அரிசி உற்பத்தியாகியுள்ளது. அதனால் அனைத்து இந்தியாவிலும் தமிழ்நாடு, அரிசி உற்பத்தியில் முதலிடம் பெற்று வரலாறு காணாத சாதனையை ஏற்படுத்தியது. இச்சாதனைக்கு உறுதுணையாக அமைந்தவை உயர் விளைச்சல் ரகங்களும், பல பயிர் சாகுபடித் திட்டமுமே காரணம் என்றால் தவறாகாது.

நான்காவது திட்டக் கால இறுதிக்குள் அதாவது 1973–74-ஆம் ஆண்டிற்குள் 33.5 இலட்சம் ஏக்கரில் உயர்விளைச்சல் தரும் நெல் வகைகளையும், 2·5 இலட்சம் ஏக்கரில், ஒட்டு வீரிய சிறு தானியங்களையும் தமிழ்நாட்டில் பயிரிட வேண்டும் என்று திட்ட ஆணைக் குழு (Planning Commission) அறிவித்திருந்தது.

ஆனால் அந்த இலக்கை நான்காவது திட்டத்தின் இரண்டாவது ஆண்டிலேயே (1970–71) தமிழ்நாடு மிஞ்சிவிட்டது என்பதை பின் கண்ட புள்ளி விவரங்கள் தெளிவு படுத்துகின்றன.

| | இலட்சம் ஏக்கர். |
|---|---|
| உயர் விளைச்சல் தரும் நெல்வகைகள் 1970–71-இல் பயிராகிய பரப்பு | 44·93 |
| ஒட்டுவீரிய சிறுதானியங்கள் 1970–71-இல் பயிராகிய பரப்பு | 2·85 |

இச்சாதனை தமிழ்நாடு அரசின் திறமைக்கோர் சான்றாக விளங்குகிறது. 1970–71-ஆம் ஆண்டில் கரும்பு உற்பத்தி (வெல்லம்) 11·43 இலட்சம் டன்னாகவும், பருத்தி உற்பத்தி 3·45 இலட்சம் பேல்களாகவும், எண்ணெய் வித்துக்களின் மொத்த உற்பத்தி 11·25 இலட்சம் டன்களாகவும் பெருகியுள்ளது.

**தமிழரசு**

**அடுத்த இதழில்**

- டயல் நெ. 100.
- கண்ணகியே மங்கல தேவி!
- வெற்றி உலா வரும் சுற்றுலாத் துறை.
- வேளாண்மைத் தொழிற் கழகத் தலைவர் திரு. கே. வி. சுப்பையா அவர்களின் 'சந்திப்புக் கட்டுரை.'
- வ. உ. சிதம்பரனார் பற்றிய சிறப்புக் கட்டுரைகள்! செய்திகள்!

1970–71-ஆம் ஆண்டில் ஏற்பட்ட மாபெரும் வெற்றியினால் தூண்டப் பெற்ற தமிழ்நாடு அரசு, 1971–72-ஆம் ஆண்டில் 73 இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானியம் உற்பத்தி செய்யும் நோக்கத்துடன் 50 இலட்சம் ஏக்கரில் உயர்விளைச்சல் நெல் வகைகளையும், 5 இலட்சம் ஏக்கரில் எச்.பி. 3 கம்பும், 4 இலட்சம் ஏக்கரில் ஒட்டு வீரிய சிறு தானியங்களையும் பயிரிடத் திட்டமிட்டது. அதுபோலவே 13 இலட்சம் ஏக்கரில் பல போகப் பயிர் செய்யத் திட்டமிடப்பட்டது. இலக்கினை மிஞ்சிவிட்டதால் 1971–72-ஆம் ஆண்டில் உணவு தானிய உற்பத்தி 73 இலட்சம் டன்னாக இருக்கும் என்று மதிப்பிடப் பட்டுள்ளது.

நடப்பு ஆண்டில் (1972–73) 75 இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானியம் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப் பட்டுத் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறு உணவு தானிய உற்பத்தியிலும், வாணிபப் பயிர்கள் உற்பத்தியிலும் கடந்த 25 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் மாபெரும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் 1949–50-ஆம் ஆண்டில் ஹெக்டேருக்கு 944 கிலோவாக இருந்த அரிசி உற்பத்தி, 1970–71-ஆம் ஆண்டில், 1,974 கிலோவாக உயர்ந்து, அனைத்து இந்தியாவிலும் முதலிடம் வகித்துள்ளது. அதே காலத்தில் அரிசி உற்பத்தி ஏறத்தாழ 3 மடங்கிற்கு பெருகியுள்ளது என்பதைப் பின் கண்ட புள்ளி விவரங்கள் புலப் படுத்துகின்றன.

### அரிசி உற்பத்தியில் முன்னேற்றம்.

| | இலட்சம் மெட்ரிக் டன்கள். |
|---|---|
| 1949–50 .. .. | 18·21 |
| 1955–56 .. .. | 29·55 |
| 1960–61 .. .. | 35·03 |
| 1965–66 .. .. | 35·24 |
| 1970–71 .. .. | 54·03 |

அன்றையச் சென்னை மாநிலத்தில் 1949–50-ஆம் ஆண்டில் 29,292 டன் அமோனியம் சல்பேட்டும், 10,572 டன் சூப்பர் பாஸ்பேட்டும் மட்டுமே பயன்படுத்தப் பட்டிருக்கிறது. ஆனால், இன்றையத் தமிழகத்தில், கடந்த ஆண்டில் (1971–72) 1·95 இலட்சம் மெட்ரிக் டன் தழைச்சத்து உரங்களும், 68,000 மெட்ரிக் டன் மணிச்சத்து உரங்களும், 58,000 டன் சாம்பல் சத்து உரங்களும் பயன்படுத்தப் பட்டுள்ளன. இதிலிருந்து தமிழக உழவர்கள் எவ்வளவு தூரம் முன்னேறியுள்ளார்கள் என்பது தெளிவாகின்றது.

நான்காவது ஐந்தாண்டு திட்ட இறுதிக்குள் தமிழ்நாடு வேளாண்மையில் செழிப்புற்று, உலகம் போற்றும் அளவுக்கு முன்னேறும் என்பது திண்ணம்.

"தனியொருவனுக்கு உணவில்லையெனில் இச்செகத்தினை அழித்திடுவோம்" என்ற பாரதி பிறந்த நாட்டில், இன்று உணவுப் பற்றாக்குறை இல்லை என்பது ஒன்றே, விடுதலைக்குப் பிறகு தமிழ் நாட்டில் ஏற்பட்டுள்ள வேளாண்மை வளர்ச்சிக்கு நல்லதொரு சான்றாகும்.

# 1947 ஆகஸ்ட் 15-ஆம் நாள் சென்னையில் கொண்டாடப்பட்ட முதல் விடுதலை நாள் விழா



1



2



3

1. சென்னை தீவுத்திடலில் ஆளுநர் ஆர்ச்சிபால்டு நை இந்தியாவின் சுதந்தரக் கொடியை ஏற்றி வைத்தார். ஆளுநரும் முதலமைச்சர் ஓ. பி. ராமசாமி ரெட்டியார் அவர்களும் விழாவில் பங்கு பெறும் காட்சி.

2. விழாவில் உலா வந்த அணி வகுப்பில் ஒரு காட்சி.

3. ஆளுநர் ஆர்ச்சிபால்டு நை அவர்களும் அமைச்சர் களா வெங்கட் ராவ் அவர்களும்.

# குழந்தைகள் கண்ட காந்தி!

'பூவழகி'



அன்று அந்தப் பள்ளிக்கூடம் அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது.

மாணவர்கள் அழகாய் உடை உடுத்திக் கொண்டு அமைதியே உருவாய்க் காணப்பட்டனர்.

இவற்றுக்கெல்லாம் காரணம் என்ன தெரியுமா? அன்று கல்வித் துறை அதிகாரி ஒருவர் அந்தப் பள்ளியைப்பார்வையிட வந்தார். வந்தவர் ஒவ்வொரு வகுப்புக்கும் சென்று மாணவர்களைக் கேள்விகள் கேட்டு அவர்களின் கல்வி அறிவை அறிந்து கொண்டிருந்தார்.

இன்னொரு வகுப்புக் குள்ளும் நுழைந்தார். மாணவர்கள், என்ன கேட்பாரோ என்று பயந்து கொண்டிருந்தனர். கல்வி அதிகாரி மாணவர்களையெல்லாம் ஒரு முறை பார்த்துவிட்டு 'கெட்டில்' (Kettle) என்னும் சொல்லை எழுதும்படி கூறினார். தெரிந்தவர்கள் 'மட மட' வென எழுதினார்கள். தெரியாதவர்கள் விழித்துக்கொண்டிருந்தார்கள்.

ஒருமாணவன் இந்த'கெட்டில்' என்னும் ஆங்கிலச் சொல்லைத் தவறாக எழுதியிருந்தான். அப்போது அருகிலிருந்த அவன் ஆசிரியர் இதைப் பார்த்துவிட்டார். கல்வி அதிகாரி பார்த்துவிட்டால் என்ன சொல்வாரோ என்று அஞ்சிய ஆசிரியர், அவனிடம் இப்படித்தான் எழுத வேண்டும் என்று அந்தச் சமயத்தில் சொல்ல முடியுமா? அதனால் அவர் என்ன செய்தார் தெரியுமா?

'காப்பி' அடித்தாவது அந்தச் சொல்லைச் சரியாக எழுது! என்று சொல்வது போலத் தன் 'பூட்ஸ்' காலால் அவன் காலை அழுத்தினார். அந்தப்பையனுக்கோ ஆசிரியரின் செய்கை புரியவே இல்லை. மீண்டும் ஆசிரியர் பழையபடி செய்தார். அப்படியும் அவனுக்குக் 'காப்பி' அடிக்கும் எண்ணமே வரவில்லை.

'காப்பி' அடிக்கத் தெரியாத அந்தச் சிறுவன்தான் நாம் அன்பாக அழைக்கும் காந்தித் தாத்தா! உலகம் போற்றிய உத்தமர் காந்தியடிகள்.

இப்போது நீங்களெல்லாம் எழுதும் போது, பலகை அல்லது நோட்டுப் புத்தகத்தில்தானே எழுதுகிறீர்கள்? ஆனால், அந்தக் காலத்தில்காந்தியார்பலகையிலா எழுதினார்? இல்லை! இல்லை! தூசியில் எழுதினார்! ஆம். மாசு மருவற்ற உள்ளம்கொண்டகாந்தியடிகள் முதலில் எழுதக் கற்றுக் கொண்டது தூசியில்தான்.

போர்பந்தரில் உள்ள ஒரு பள்ளியில் அவர் படித்துக்கொண்டிருந்தார். அப்போது கரும்பலகையில் எழுதும் வழக்கம் இல்லை. தூசியைப் பரப்பி அதில் எழுதி வந்தனர். காந்தியடிகள் அப்படியே எழுதிப் பழகிவந்தார்.

குழந்தைப் பருவத்தில் காந்தியடிகள் யாருடனும் சேரமாட்டார். கூச்சம் உள்ளவர் என்பதே அதற்குக் காரணம். அந்தச் சமயத்தில் எல்லாம் அவருக்கு நண்பர்களாக இருந்தவர்கள் புத்தகங்களே யாகும். காந்தியடிகளிடம் நல்ல பழக்கங்கள் பல சிறு வயதிலிருந்தே வளர்ந்து வந்தன. பள்ளிக்குக் குறித்த நேரத்தில் போவார்; பள்ளி முடிந்ததும் எங்கும் சுற்றித் திரியாமல் நேரே வீட்டுக்குவருவார். யாரிடமும் வம்புக்கோ வலுச்சண்டைக்கோ அவர் போனதில்லை. சின்னஞ் சிறு வயதிலேயே இது போன்ற நல்ல பண்புகள் அவரிடம்இருந்துவந்ததால்அல்லவோ அவர், பிற்காலத்தில் உலகமே போற்றக்கூடிய உத்தமராகவிளங்கினார்? ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?

காந்தியடிகளுக்குக் குழந்தைகள் என்றால் கொள்ளை ஆசை; அவர்களைக் கண்டதும் அவர் அள்ளி யெடுத்துக் கொஞ்சி மகிழ்வார். நம் நாட்டுக் குழந்தைகள் மட்டுமல்லாமல், மற்ற நாட்டுக் குழந்தைகளிடமும் அவர் அன்பு செலுத்தி அரவணைத்து வந்தார்.

ஒரு முறை அவர் இலண்டன் நகருக்குச்சென்றபோதுஅங்குள்ள குழந்தைகள் அவரைச் சூழ்ந்து கொண்டு ஆடிப் பாடினார்கள்; அவரது பிறந்த நாளை மகிழ்ச்சியோடு கொண்டாடினார்கள். காந்தியாரும் அவர்களுக்கு வேர்க்கடலை, இனிப்புப் போன்ற தின்பண்டங்களை வழங்கி மிகவும் மகிழ்ந்தார்.

### பகைவனை நேசி

இந்த வாசகத்துக்குச் சிறந்த எடுத்துக் காட்டாய் விளங்கினார் காந்தியடிகள். பாம்பு என்றால் படையும் நடுங்குமல்லவா? ஒரு சமயம் காந்தியடிகளின் தோள்மீது ஒரு பெரிய பாம்பு ஏறியது. நம்மீது பாம்பு ஏறினால் நாம் என்ன செய்வோம்? பதறிக் கொண்டு -'பாம்பை அடி, அடி,' என்று கூச்சலிடுவோம் அல்லவா? ஆனால், அமைதியே உருவான காந்தியடிகள் பதறாமல் கூச்சலிடாமல் அந்தப் பாம்பை அடிக்க வேண்டாம் என்று கனிவோடு கேட்டுக் கொண்டாராம்.

அன்பு, அகிம்சை, அருங்குணங்கள்ஆகியவற்றின் பிறப்பிடமாக விளங்கிய காந்தியடிகளுக்கு எல்லாருக்கும் கிடைக்காத பெருஞ்சிறப்பு ஒன்றிருக்கிறது- அதுதான் அவர் இந்தியாவுக்கு விடுதலை வாங்கித் தந்தது.

விடுதலை வெள்ளிவிழா நாளான இன்று, அவர் காட்டிய அன்பு வழியில் செல்வோமென உறுதி கொள்வதுதான், அவருக்கு நாம் செலுத்தும் உண்மையான அஞ்சலியாகும்.


ஆராய்ச்சி மணி ௭
கதை: இளவல் * படம்: கோபண்ணா...
என்ன தம்பி சொல்றே...?
உங்க தலைக்குப் பின்னால் இருக்கும் கர்ச்சீப்பைக் கேட்கிறேன்!
என்ன கைக்குட்டையா? அதிலே ஒண்ணுமில்லையே... நீங்க... போங்க...
ஊர் வந்தாச்சு இறங்குங்க... நீ என்னப்பா மணி கலாட்டா பண்றே
அவரைக் கர்சீப்பைக் கொடுக்கச் சொல்லு அப்பா...!
பையா... பேசாமே போறியா... இல்லே உதை ஏதுவும் வேணுமா?
ஓய்! நான் யாருன்னு தெரியாதா?
என்ன தகராறு?
அவர் தலை வைத்துப் படுத்திருந்த இடத்தில் கர்ச்சீப் இருக்குது!
அந்தக் கைக் குட்டையிலே ஒண்ணுமில்லே... நிஜமா ஒண்ணுமில்லே!
கைக்குட்டையில் ஏதோ கட்டியில்லே வச்சிருக்கு!
ஆ! வைரங்கள்... கள்ளக் கடத்தல் வைரத்தை இப்படி அலட்சியமா கொண்டு வந்தால் யாரும் கண்டு பிடிக்க மாட்டாங்க என்ற நினைப்பு. ஆனால் இந்தத் தம்பி கண்டு பிடிச்சிடுச்சே...!
எப்படியோ ஏமாற்றிக் கொண்டிருந்த ஒரு பெரிய கள்ளக் கடத்தல் கூட்டத்தைப் பிடிக்க உங்கள் பையன் உதவி செஞ்சிட்டான். ரொம்பக் கெட்டிக்காரப் பையன். இப்ப மணி எங்கே?
கவலைப்படாதீங்க..! வெளியே போயிருக்கான்! துணையோடத்தான் அனுப்பியிருக்கேன்.


அக்கா... நம்ப மாணிக்கத்தைப் பார்த்துட்டு வரலாமா? அட்ரஸ் என்னிடம் இருக்கு
அப்பா உன்னை திருமலை நாயக்கர் மகாலைப் பார்த்தவுடன் அழைச்சிட்டு வரச் சொன்னாங்க. அப்புறம் பார்க்கலாம்
நீயும் அக்காவும் ஏன்தான் இப்படிப் பயப்படுறீங்க! தூக்கம் வராமே ஒரு கையாலேயே என் கர்ச்சீப்பைத் தூக்கி எறிந்து பிடித்துக் கொண்டிருந்தேன்... காற்றடிக் காற்றிலே தூக்கிக் கொண்டிருந்த அந்த ஆள் தலைப் பக்கம் போய் விழுந்தது. அதை நான் கேட்டேன். ஆனால்...
தெரியுதே நீ துப்பறியும் கெட்டிக்காரத்தனம்... சரி சரி சத்தம் போட்டுப் பேசாதே... யார் காதிலாவது விழப்போவது... பக்கத்திலே சேகர் சார் வருகிறார். மெதுவாப் பேசு!
என்ன பயம்! உண்மையைச் சொல்கிறேன்! இப்ப எனக்கு இருக்கிற புகழிலே நான் சொல்றதையெல்லாம் அடக்கத்தாலே சொல்றேன்னு நினைப்பாங்க என்ன சேகர் சார்! அப்படித்தானே!
என்ன மணி சொல்றீங்க!
வயசான நீங்க என்னை 'நீங்கன்னு' மரியாதையோட சொல்றீங்களே... இதுவரை நானும் அக்காவும் பேசிக் கொண்டு வந்ததைக் கவனிக்கவில்லையா? நான் சொல்றேன்.
சேகர் சார்... மணி ஏதாவது பேருழப்பான். கவனிக்காதீங்க! எங்களுக்குத் துணையா அப்பா உங்களை அனுப்பியதற்குத் தண்டனையா வெறும்....!
நோ... நோ... மணியின், புத்திசாலித்தனம் யாருக்கு வரும்?.. ஊரே புகழுது...
டேய் மணி! கையிலே என்னடா கட்டு?
ஏண்டா வாலு என்னிடமே கூட சொல்லிக் கொள்ளாமல் இங்கே வந்திட்டே...
எங்க அப்பாதான் உன்னிடம் சொல்லாமே கிளம்பணும்னு சொன்னார். ஆமாம். இந்த சேகரை உனக்கு எத்தனை நாளாத் தெரியும்?

# ஒப்பந்தப் புள்ளி அறிவிப்புகள் (டெண்டர்கள்) வேலை வாய்ப்பு விளம்பரங்கள்

## பனகல் கட்டடம்

தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த கும்பகோணம் ஊராட்சி ஒன்றியத்தின் பழுதடைந்த ஜீப் எஸ். ஒய். 2165 25–8–1972 அன்று மாலை 3-00 மணிக்கு தஞ்சை மாவட்ட வளர்ச்சி அலுவலரால் (2) தஞ்சை மாவட்ட ஆட்சியர் அலுவலகம், பனகல் கட்டடத்தில் பொது ஏலத்தில் விற்கப்படும். மேற் கண்ட ஜீப்பை பார்வையிட விரும்புபவர்கள் தஞ்சை மாவட்ட ஆட்சியர் அலுவலகம், பனகல் கட்டடத்தில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். ஏல சம்பந்தமான விதிகளைக் கீழே குறிப்பிட்டுள்ள அலுவலரிடமிருந்துப் பெற்றுக் கொள்ளலாம்.

த. • செல்லையா,
மாவட்ட வளர்ச்சி அலுவலர் (2),
பனகல் கட்டடம்,
தஞ்சை.

(த.3)

---

## ஒப்பந்தப் புள்ளி

### நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை
பாம்பன் வட்டம்

ந. க. எண். 10471/72/வ-1.

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப்பணித்துறை) பாம்பன் வட்டம் அவர்களால் கீழ்க்கண்ட வேலைக்கு அரக்கு முத்திரையிட்ட இனவாரி ஒப்பந்தப்புள்ளிகள் மேற்பார்வைப் பொறியாளர் (நெ. கி. ப. ) பாம்பன் வட்டம், நெ. 4, ஸ்ரீநகர் காலனி, சைதாபேட்டை, சென்னை-15 அலுவலகத்தில் 23–8–1972 மாலை 3–00 மணிவரை பெற்றுக்கொள்ளப் படும்.

| வரிசை எண்ணும் வேலையின் விவரம். | முன்வைப் புத் தொகை. | நிபந்தனைப் பத்திரங்கள் கிடைக்கும் இடம். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| சென்னை–கல்கத்தா சாலை–தேசிய நெடுஞ்சாலை எண்.5–ல் உள்ள ரெட்ஹில்ஸ் மாற்று வழிப்பாதையில் ரெட்ஹில்ஸ் உபரிக்கு குருக்கே பாலம் கட்டுதல். | ரூ. 8,400 | கோட்டப் பொறியாளர் (நெ. ) அலுவலகம் ஜெமினி மேம் பாலம் வேலை கிண்டி, சென்னை–25. |

ஒப்பந்தங்கள் 23–8–1972 அன்றே மாலை 3-15 மணிக்குத் திறக்கப்படும்.

ஒப்பந்தங்களுக்கான நிபந்தனைகள், பத்திரங்கள், நமூனுக்கள் வரைபடங்கள், முதலியவற்றைக் கோட்டப் பொறியாளர் (நெ) ஜெமினி மேம்பாலவேலை, கிண்டி, சென்னை–25 அலுவலகத்தில் விற்பனைவரி உட்பட ரூபாய் 25–90 செலுத்தி 15–8–1972 முதல் 22–8–1972 வரை அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்காணத்தைக்கொண்டும் திருப்பித்தரப்படமாட்டாது.

மேலே குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையை தனிக் கோட்டப் பொறியாளர் (நெ.), ஜெமினி மேம்பால வேலை, கிண்டி, சென்னை–25 அவர்களது அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் கோட்டப்பொறியாளர் (நெ.) ஜெமினி மேம்பால வேலை சென்னை–25, அவர்கள் பெயரில் " ரெவின்யூ டெபாசிட் " என்ற தலைப்பின் கீழ் செலுத்திச் செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

முன் வைப்புத் தொகையை அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளின் உறுதிப் பத்திரங்களாக அனுப்பினால் அதற்கான ரிசர்வ் வங்கியின் ஒப்புதலையும் சேர்த்து அனுப்ப வேண்டும்.

மாற்றிய வடிவமைப்புத் தாங்கிய ஒப்பந்தங்கள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.

குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது.

கு. சிவானந்தம்,
மேற்பார்வைப் பொறியாளர் (நெ.),
சென்னை–15.

(த 19)

---

## ஒப்பந்தப் புள்ளி

### பல்லவா போக்குவரத்துக் கழகம்
அண்ணா சாலை, சென்னை–2

வரும் மூன்று வருடத்திற்கு பல்லவா போக்குவரத்துக் கழகத்தின் கீழ்க்கண்ட கடைகளில் வியாபாரம் செய்வதற்கு, முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் 30–8–1972 மாலை 3 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

1. கடை நெம்பர் 2—மந்தவெளி பேருந்து நிலையம் —பலசரக்கு வியாபாரம்.
2. கடை நெ. 3, பெரம்பூர் பேருந்து நிலையம்—துணி வகை கேக்கள் விற்பது.

ஒப்பந்தங்கள் அதேநாள் 30–8–1972 மாலை 3-15 மணிக்கு செயலாளர், பல்லவா போக்கு வரத்துக் கழகம், அண்ணா சாலை, சென்னை–2, அவர்களால் திறக்கப்படும். ஒப்பந்த விதி முறைகள் செயலாளர், அலுவலகத்தில் எல்லா வேலை நாட்களிலும் ரூ. 1.04 கட்டிப் பெற்றுக்கொள்ளலாம். எக்காரணத்தைக் கொண்டும், இந்தப் பணம் திருப்பித் தரமாட்டாது.

நிருவாக இயக்குநர்.

(த 16).

---

## ஏல விற்பனை

### பாளையங்கோட்டை நகராட்சி

பாளையங்கோட்டை நகராட்சிக்குப் பாத்தியப்பட்ட காந்தி சந்தையில் திருச்செந்தூர் ரஸ்தாவைப் பார்க்க புதியதாகக் கட்டி முடிக்கப்பட்ட ஒரு கடையை 1972-ம் வருடம் செப்டம்பர் மாதம் முதல் தேதி முதல் அல்லது ஷை கடையை ஒப்படைக்கும் தேதி முதல் அனுபவிக்கும் உரிமையை (நாள் கட்டணத்தில்) 1972-ம் வருடம் ஆகஸ்டு மாதம் 26-ம் தேதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நகரமன்ற அலுவலகத்தில் வைத்து ஆணையர் அவர்களால் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் பகிரங்க ஏலத்தில் விடப்படும். ஏலம் கேட்க விரும்புகிறவர்கள் கட்டுத் தொகையாக ரூ. 150 அலுவலகக் கருவூலத்தில் செலுத்தி ஏலம் கேட்க வேண்டும். சொத்து மதிப்பு ரூ. 1,500-க்கு சான்றிதழ் இருக்க வேண்டும். அல்லது சொத்து பொறுப்பிற்காக ரூ. 300-ஐ அலுவலக கருவூலத்தில் செலுத்த வேண்டும். அதன் பின்னர்தான் ஏலம் கேட்க அனுமதிக்கப்படுவார்கள். இதர விவரங்களை அலுவலகத்தில் தெரிந்து கொள்ளலாம்.

க. ஜனார்த்தனம்,
ஆணையா.

(த. 2)

---

## ஒப்பந்தப் புள்ளி

### தூத்துக்குடி நகராட்சி

தூத்துக்குடி நகராட்சியிலுள்ள பொதுச் சுகாதார இலக்கா வண்டிகள் ரிப்பேர்செய்ய தேவையான ஆங்கில், ரிவிட் டின் சீட் பலகை, போல மரம் முதலியன சப்ளை செய்ய ஒப்பந்தப் புள்ளிகள் 28–8–1972 மாலை 4 மணி மணிவரை நகரமன்ற ஆணையர் அவர்களின் நேர்முக அதிகாரியினால் பெறப்பட்டு அன்று மாலை 4-30 மணிக்குத் திறக்கப்படும். ஒப்பந்தப்புள்ளி ஒவ்வொன்றும் ரூ. 75 முன் வைப்புதொகையாக நகராட்சிக் கருவூலத்தில் செலுத்தியோ அல்லது டிமாண்ட் டிராப்ட் மூலமாகவோ அத்தாட்சியுடன் அனுப்ப வேண்டும். இதர விவரங்களுக்கு நகரமன்ற பொறியர் அலுவலகத்தில் நேரிலோ அல்லது விண்ணப்பித்தோ தெரிவித்துக் கொள்ளலாம்.

சி. சங்கரலிங்கம், பி. ஏ.
ஆணையா.

(த. 5)

## ஒப்பந்தப் புள்ளி

### குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் ஒப்பந்ததாரர்களிடமிருந்து, எண் 17, சர் பி. டி இராசன் சாலை, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய செயல் வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 23—8—1972 பிற்பகல் 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப் படும். அவை அன்று பிற்பகல் 3-30 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

வேலையின் பெயர்.—தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியச் செயற்பொறி கோட்டம் திருச்சி—இரும்பு, எஃகு கம்பிகள் சப்ளை செய்தல்.

ஒப்பந்த வகை.—மொத்தத் தொகை.

முன்வைப்புத் தொகை.—6,000 (ரூபாய் ஆறாயிரம் மட்டும்).

இத்தொகை, எதாவது கருவூலத்தில் பெறப்பட்ட பண உத்தரவுச் சீட்டு நிருவாகப் பொறியாளர் (தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், திருச்சி செயற் கோட்டம்) அவர்கள் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப்படிவங்களுடன் இணைக்கப்படவேண்டும்.

வேலையினை முடிப்பதற்குரிய கால அளவு.—இரண்டு மாதம்.

ஒப்பந்தப் படிவங்களின் விலை.—ரூ. 15·53 (விற்பனைவரி உட்பட).

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர், நிருவாகப் பொறியாளர் (தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், திருச்சி செயற் கோட்டம்) அவர்களிடமிருந்து பி-15, தில்லை நகர், முக்கிய வீதி, திருச்சி-3 என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 21—8—1972 மாலை 5-00 மணி வரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்பார்வைப் பொறியாளர்,
குடிநீர் வடிகால் வாரியம்,
செயல் வட்டம், மதுரை-2.

(த. 26)

## ஏல விற்பனை

### பனகல் கட்டடம்

தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்த குத்தாலம் ஊராட்சி ஒன்றியத்தின் பழுதடைந்த ஜீப் எம்.எஸ்.ஒய். 6303—21—8—1972 அன்று மாலை 3-00 மணிக்கு தஞ்சை மாவட்ட வளர்ச்சி அலுவலரால்(2) தஞ்சை மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம், பனகல் கட்டடத்தில் பொது ஏலத்தில் விற்கப்படும். மேற்கண்ட ஜீப்பை பார்வையிட விரும்புபவர்கள் தஞ்சை மாவட்ட ஆட்சியர் அலுவலகம், பனகல் கட்டடத்தில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். ஏலச் சம்பந்தமான விதிகளைக் கீழே குறிப்பிட்டுள்ள அலுவலரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

த. செல்லையா,
மாவட்ட வளர்ச்சி அதிகாரி (2),
பனகல் கட்டடம்,
தஞ்சாவூர்.

(த. 25)

## ஒப்பந்தப் புள்ளி

### நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை

பாம்பன் திட்டம்.

ந.க.எண் 10480/72/23.

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை) பாம்பன் வட்டம் அவர்களால் கீழ்க்கண்ட வேலைகளுக்கு அரக்கு முத்திரையிட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை) சிவகங்கை அவர்களது அலுவலகத்தில் 6—9—1972 மாலை 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

| வரிசை எண்ணும், வேலை விவரமும். | முன்வைப்புத் தொகை. | நிபந்தனைப் பத்திரங்கள் கிடைக்குமிடம். |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| | ரூ. | |
| மண்டபம் பக்கம்— | | |
| தேசிய நெடுஞ்சாலை எண் 49-ல் கட்டப்பட இருக்கும் பாம்பன் பாலத்திற்கு மண்டபம் பக்கம் செ. 0—10000 வரை அணுகுசாலை அமைத்தல். | 7,100 | கோட்டப் பொறியாளர் (நெ.கி.ப), சிவகங்கை |
| 2 தேசிய நெடுஞ்சாலை எண் 49-ல் கட்டப்பட இருக்கும் பாம்பன் பாலத்திற்கு மண்டபம் பக்கம் செ. 1000—2,000 வரை அணுகுசாலை அமைத்தல் | 7,300 | ஷை |
| 3 தேசிய நெடுஞ்சாலை எண் 49-ல் கட்டப்பட இருக்கும் பாம்பன் பாலத்திற்கு மண்டபம் பக்கம் செ. 2,000—3000 அணுகு சாலை அமைத்தல். | 7,100 | ஷை |
| 4 தேசிய நெடுஞ்சாலை எண் 49-ல் கட்டப்பட இருக்கும் பாம்பன் பாலத்திற்கு மண்டபம் பக்கம் செ. 3,000—4,000 வரை அணுகு சாலை அமைத்தல். | 7,200 | ஷை |
| 5 தேசிய நெடுஞ்சாலை எண் 49-ல் கட்டப்பட இருக்கும் பாம்பன் பாலத்திற்கு மண்டபம் பக்கம் செ. 4,000—5,000 வரை அணுகு சாலை அமைத்தல். | 7,500 | ஷை |
| 6 தேசிய நெடுஞ்சாலை எண் 49-ல் கட்டப்பட இருக்கும் பாம்பன் பாலத்திற்கு மண்டபம் பக்கம் செ. 5,000—6,062·16 வரை அணுகு சாலை அமைத்தல். | 40,000 | ஷை |
| பாம்பன் பக்கம் | | |
| 7 தேசிய நெடுஞ்சாலை எண் 49-ல் கட்டப்பட இருக்கும் பாம்பன் பாலத்திற்குப் பாம்பன் பக்கம் செ. 234—1,000 வரை அணுகு சாலை அமைத்தல் | 17,600 | ஷை |
| 8 தேசிய நெடுஞ்சாலை எண் 49-ல் கட்டப்பட இருக்கும் பாம்பன் பாலத்திற்குப் பாம்பன் பக்கம் செ. 1,000—2,262·033 வரை அணுகு சாலை அமைத்தல் | 9,500 | ஷை |

ஒப்பந்தங்கள் 6—9—1972 அன்றே மாலை 3-15 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளர் (நெ.கி.ப.) பாம்பன் பால வேலை அவர்களால் கோட்டப் பொறியாளர் (நெ.கி.ப.) சிவகங்கை, அலுவலகத்தில் திறக்கப்படும்.

ஒப்பந்தங்களுக்கான நிபந்தனைகள், பத்திரங்கள், நமூனாக்கள் மற்றும் வரைபடங்கள் முதலியவற்றைக் கோட்டப் பொறியாளர் (நெ.கி.ப.) சிவகங்கை அவர்களது அலுவலகத்தில் வரிசை எண் 1 முதல் 5 மற்றும் 8-ல் உள்ள வேலைகளுக்கு விற்பனை வரி மற்றும் அதற்கான மேல் வரி உட்பட ரூ. 26·00-ம் வரிசை எண் 6 மற்றும் 7-ல் உள்ள வேலைகளுக்கு விற்பனை வரி மற்றும் அதற்கான மேல்வரி உட்பட ரூ. 52·00-ம் செலுத்தி 28—8—1972 முதல் 5—9—1972 வரை அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித்தரப்பட மாட்டாது.

மேலே குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையை கோட்டப் பொறியாளர் (நெ.கி.ப.) சிவகெங்கை அவர்களது அதிகார எல்லைக் குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலும் கோட்டப் பொறியாளர் (நெ.கி.ப.) சிவகங்கை அவர்கள் பெயரில் "ரெவின்யூ டெபாசிட் என்ற தலைப்பின் கீழ் செலுத்திச் செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன்" இணைத்து அனுப்ப வேண்டும்.

முன் வைப்புத் தெகையை அங்கீகரிக்கப்பட்ட வங்கியின் உறுதிப் பத்திரங்களாக அனுப்பினால் அதற்கான ரிசர்வ் வங்கியின் ஒப்புதலையும் சேர்த்து அனுப்ப வேண்டும்.

மாற்றிய வடிவமைப்புத் தாங்கிய ஒப்பந்தங்களுடன் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பதந்கள் பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

கு. சிவானந்தம்,
மேற்பார்வைப் பொறியாளர் (நெ.)

(த. 20)

கீழே விவரிக்கப்பட்ட கண்டனமான மோட்டார் சைக்கிள் 23—10—1972 அன்று காலை 10.30 மணிக்கு,கடலூர் புதுநகரிலுள்ள, தென்னார்க்காடு மாவட்ட போலீஸ் அலுவலகத்தில், பகிரங்க ஏலத்தில் விடப்படும்.

" மோட்டார் சைக்கிள்—எம்.என். என் 9289

சோலோ—ராயல் என்பீல்டு—1965 மாடல் "

இவ்வண்டியைப் பார்வையிட விரும்புவோர், அலுவலக நாட்களில் காலை 10–30 மணி முதல் மாலை 5 மணிவரை, இவ்வலுவக கட்டடத்தில், ஆயுதப்படை கூடுதல் ஆய்வாளர் முன்னிலையில் பார்வையிடலாம்.

இதர விவரங்கள் தேவையெனில், கீழ்க் கையொப்பமிட்டவருக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

க. வெ. சுப்ரமணியம்,
காவல் கண்காணிப்பாளர்,
தென்னார்க்காடு மாவட்டம்.

(த.24)

---

ஒப்பந்தப் புள்ளி

---

## வனத்துறை அரசினர் தேயிலைத் தோட்டத் திட்டம்

நெல்லியாளம் கோட்டம், கூடலூர், நீலகிரி.

கீழ்க்காணும் வேலைகளை, மேற்கொள்ளுவததற்கான மூடிமுத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளி தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் சார்பாக நெல்லியாளம் தேயிலை கோட்ட வன அலுவலர் அவர்களால் 20—9—1972-ம் தேதி காலை 11 மணிவரை வரவேற்கப்படுகின்றன. ஒவ்வொரு ஒப்பந்த விண்ணப்பமும் கீழ்க் குறிப்பிட்ட வைப்புத் தொகை அரசுக் கருவூலத்தில் செலுத்திய சலானுடன் அனுப்பப்பட வேண்டும்.

| வேலையின் விவரம். | மதிப்பீட்டுத் தொகை. | வைப்புத் தொகை. |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| 1 1972-ம் ஆண்டு தேயிலை நடும் இடங்களுக்கு அனுகும் பாதைகளைச் சீர்படுத்தி கல் பாவுதல். | 65,000 | 1,950 |
| 2 1973-ம் ஆண்டு இடங்களுக்கு அனுகும் பாதைகளை அமைத்தல். | 50,000 | 1,500 |
| 3 1971-ம் ஆண்டு அமைத்த பாதைகளைச் சல்லிபோட்டு உறுதி படுத்துதல். | 25,000 | 750 |
| 4 தண்ணீர் கொடுப்பதற்கு ஒரு உயரமான தொட்டியை ஏல மண்ணுவில் (கூடலூர் தாலுகாவில்) கட்டுதல். | 7,000 | 210 |
| 5 1972-ம் ஆண்டு இடத்தில் தொழிலாளர் வீடுகளுக்குத் தண்ணீர் கொடுப்பதற்கு நில அளவு தொட்டி கட்டுதல். | 6,000 | 420 |
| 6 1971–72 இடங்களில் பாதையில் சிறிய பாலங்கள் கட்டுதல். | 20,000 | 1,400 |

மேற்குறிப்பிட்ட வேலைகள் 31—3—1973க்குள் முடிக்கப்பட வேண்டும். ஒப்பந்த நமூனுவுக்கும் மற்ற விவரங்களுக்கும் ரூ. 4·14 கீழே ஒப்பமிடப்பட்டவரிடம் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

மு. ரமேஷன்,
கோட்ட வன அலுவலர்,
நெல்லியாளம் பிரிவு,
கூடலூர், நீலகிரி.

(த.23)



## நெடுஞ்சாலை ஊரகப் பணித்துறை

திருநெல்வேலி வட்டம்.

கீழே குறிப்பிட்டுள்ள வேலைகளுக்கான அரக்கு முத்திரையிட்ட ஷெடியூல் ஒப்பந்தங்களை கண்காணிப்புப் பொறியாளர் (நெடுஞ்சாலை ஊரகப் பணித்துறை) திருநெல்வேலி அவர்கள் இலக்கம் 18, திருச்செந்தூர் சாலை, திருநெல்வேலி–2 விலாசத்திலுள்ள அவருடைய அலுவலகத்தில் 30–8–1972 (புதன் கிழமை) அன்று பிற்பகல் 3–00 மணி (அலுவலகக் கடிகாரப்படி) வரையில் தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவருடைய சார்பிலும் பெற்றுக் கொள்ளுவார். இந்த ஒப்பந்தங்கள் அதே நாளில் பிற்பகல் 3–15 மணிக்குத் திறக்கப்படும்.

| வரிசை எண்ணும் வேலையின பெயரும். | கட்டுத தொகை. | ஷெட்யூல் கிடைக்குமிடம். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | ரூ. | |
| 1 தேவகோட்டை வட்டாணம் சாலையில் கி.மீ. 119·0 முதல் கி.மீ. 127 வரை அபிவிருத்தி செய்தல். | 3,250 | கோட்டப் பொறியாளர் (நெ.ஊ.ப.து). சிவகங்கை. |
| 2 தேவகோட்டை வட்டாணம் சாலையில்கி.மீ.127 முதல் கி.மீ. 134–0 வரை அபிவிருத்தி செய்தல். | 3,520 | கோட்டப் பொறியாளர் (நெ.ஊ.ப.து.) சிவகங்கை. |
| 3 தேவகோட்டை வட்டாணம் சாலையில் 134–0 முதல் கி.மீ. 141–0 வரை அபிவிருத்தி செய்தல். | 3,675 | ஷை |
| 4 தேவகோட்டை வட்டாணம் சாலையில் கி.மீ. 141–0 முதல் கி. மீ. 147–60 வரை அபிவிருத்தி செய்தல். | 3,675 | ஷை |
| 5 தேவகோட்டை வட்டாணம் சாலை கி. மீ. 131/1–10 மங்களாக்குடி குளக்கரையில் அலைகள் ( Revetment ) அமைக்கும் வேலை. | 1,350 | ஷை |
| 6 மறவமங்கலத்தில் இருந்து எரிவயலுக்குச் சாலை அமைத்தல் கி.மீ. 0–00 முதல் 12–17. | 3,250 | ஷை |
| 7 மறமங்கலத்தில் இருந்து சாத்தரசன் கோட்டைக்குச் சாலை அமைத்தல் கி. மீ. 0–00 முதல் 12–48. | 2,900 | ஷை |

ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனை வரி உட்பட ரூ. 15–53 வீதம்தொகை செலுத்தி, எழுத்து மூலம் வேண்டிக் கொள்வதன் மூலம் மேலே குறிப்பிட்டுள்ள கோட்டப் பொறியாளர் அலுவலக மேலாளரிடமிருந்து 17–8–1972 முதல் 28–8–1972 வரையிலான வேலை நாட்களில் அலுவல் நேரங்களில் ஒப்பந்த நிபந்தனை விவரங்கள், நிர்ணய பாரங்கள் ஷெடியூல்கள், பிளான்கள் முதலியவற்றைப் பெறலாம். இத்தொகை திருப்பித் தரப்படமாட்டாது.

மேலே குறிப்பிட்டுள்ள கட்டுத்தொகை டிபாசிட் மேற்கண்ட கோட்டப் பொறியாளரின் (நெடுஞ்சாலை ஊரகப் பணித்துறை) அதிகார எல்லைக்குள் உள்ள அரசினர் கருவூலங்கள் எதிலும் "ரெவின்யூ டெபாசிட்"" என்ற தலைப்பில் செலுத்தியதற்கான கருவூலச் சீட்டுகளை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். இது தவிர 10 வருட தற்காப்பு டெபாசிட் அத்தாட்சிகளும் 12 வருட தேசிய தற்காப்பு அத்தாட்சிகளும், மாநில அரசு ஈட்டுப் பத்திரங்களும் டிமாண்ட் டிராப்டுகளும் டெபாசிட் அழைப்பு ரசீதுகளும் கட்டுத் தொகைக்காக ஏற்றுக் கொள்ளப்படும்.

முனைவைப்புத் தொகைக்கான ரசீது இல்லாத ஒப்பந்தங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

தி. ப. கந்தசாமி,
கண்காணிப்புப் பொறியாளர்,
(நெ. ஊ. ப. து,)
திருநெல்வேலி–2.

(க.9)

## கடையநல்லூர் நகராட்சி

(திருநெல்வேலி மாவட்டம்)

திருத்தி அமைக்கப்பட்ட 1920-ம் வருடத்திய சென்னை மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 78 (1)-ன் கீழ் 81 (1), 81 (3), 81 (4) ஆகிய பிரிவுகளின் கீழ் கடையநல்லூர் நகராட்சி எல்லைக்குள் 1-10-1972-ம் தேதி முதல் ஆரம்பமாகும் அரையாண்டு முதல் அடியில் கண்ட விகிதப்படி சொத்துவரிகளைத் திருத்தி விதிக்க கடையநல்லூர் நகர் மன்றம் தனது 30-6-1972-ம் தேதிய 119 நிர் தீர்மானத்தில் உத்தேசித்திருப்பதால் இந்த உத்தேச வரி விதிப்புகளுக்கு ஆட்சேபனை ஏதேனும் இருந்தால் கடையநல்லூர் நகராட்சி ஆணையர் அவர்களுக்கு இந்த விளம்பரம் செய்த தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் எழுத்து மூலமாக தெரிவித்தால் ஆட்சேபனைகளைப் பரிசீலனை செய்யப்படும் என்று டி சட்டத்தின் 78(3) பிரிவின்படி இதனால் பொது மக்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

சொத்துவரி.

| சொத்துவரி. | 81(1) பிரிவின்படி. | 81(3) பிரிவின்படி | 81(4) பிரிவின்படி |
|---|---|---|---|
| [illegible] | கட்டடங்களுக்கும் கட்டடங்களைச் சார்ந்த காலி நிலங்களும். | விவசாயத்திற்குப் பயன் படுத்தப் படாதது. கட்டடங்களைச் சேர்ந்தாற் போல் இல்லாத காலிநிலங்களும். | விவசாயத்திற்கு மட்டிலும் உபயோகப்படும் நிலங்கள். |
| | கட்டடங்களின் வருட வாடாகை மதிப்பின் பேரில். | நிலங்களின் விலை மதிப்பின் பேரில். | அரசினரால் விதிக்கப்படும் ஓர் ஆண்டு நிலத் தீர்வையின் பேரில். |
| | (சத விகிதம் அரை வருடத்திற்கு) | (சத விகிதம் அரை வருடத்திற்கு) | (சத விகிதம் அரை வருடத்திற்கு). |
| 1. பொதுகாரியங்களுக்கு .. .. .. | 3 | 1/8 | 20 |
| 2. தண்ணீர், சாக்கடை வரி .. .. | 4 | .. | .. |
| 3. விளக்கு வரி .. .. .. .. | 2 | 1/8 | .. |
| 4. கக்கூஸ் வரி .. .. .. .. | ½ | 1/8 | .. |
| 5. கல்வி வரி .. .. .. .. | 1½ | .. | 2½ |
| அரைவருட மொத்த வரி .. | 11 | 3/8 | 22½ |

குறிப்பு: 1. தண்ணீர், சாக்கடை வரி 4:1 என்ற விகிதத்தில் பகிர்ந்துகொள்ளப்படும்.

2. கல்வி வரி நீங்கலாக இதர வரித் தொகையில் ஒரு முழு ரூபாய்க்கு 0.05 காசு வீதம் லைப்ரேரி செஸ் வசூலிக்கப்படும்.

பழ. நடேசன், எம். ஏ.,
ஆணையர்.

நகராட்சி அலுவலகம்,
கடையநல்லூர்.

(த. 11)

## ஒப்பந்தப் புள்ளி

### தேனி—அல்லி நகரம் நகராட்சி

இந்நகராட்சி உபயோகத்திற்கு இரும்பு சேர்கள் 200-ஐ சப்ளை செய்ய நகராட்சி தனி அலுவலர் அவர்களால் 28-8-1972-ம் தேதி மாலை 4 மணி வரையிலும் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் பெற்றுக் கொள்ளப் படும். அலுவலக நேரத்தில் ரூ. 1.03 செலுத்தி ஒப்பந்தப் பாரங்கள் பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தம் கொடுப்பதற்கு முன் ரூ. 50 டெபாசிட் செலுத்த வேண்டும் ஒப்பந்தம் 28-8-1972-ம் தேதி மாலை 4-15 மணிக்குத் திறக்கப்படும். ஒப்பந்தம் திறக்கப்படும் பொழுது ஒப்பந்ததாரரோ அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரப்படுத்தப் பட்டவரோ ஆஜராக இருக்கலாம். சப்ளை செய்யப்படும் சேர்கள் தரமான கம்பெனியை சார்ந்ததாக இருக்க வேண்டும்.

ஒப்பந்தத்தை பொருத்து முடிவு செய்வது நகராட்சி ஒப்பந்தக் குழுவிற்கு உட்பட்டதாகும். காலதாமதமாக வரும் ஒப்பந்தங்கள் ஏற்று கொள்ளப்படமாட்டா. மற்ற விவரங்களை அலுவலகத்தில் கேட்டுத் தெரிந்துக் கொள்ளலாம்.

கே. எஸ். சையது சாகுல் ஹமீது,
தனி அலுவலர்.

(த. 7)

### நகராட்சி அலுவலகம்

இராஜபாளையம்

போஸ்ட் ஆபீஸ் ரோடு, அசோகா லாட்ஜ் ரோடு கிழக்கு பக்கம், சேம்பர் ஆப் காமர்ஸ் ரோடு, நிசார்வாயர் ரோடு, பெருமாள்சாமி நாயுடு தெரு இந்தியன் ஆயில் கம்பெனிக்கு முன்புள்ள ரோடு ஆகிய இடங்களில் மெட்டல் போடவும், அந்தந்த ரோடு ஜங்ஷன்களில் வைப்பு கல்வெர்ட் அமைக்கவும் ரூ. 39,970 மதிப்பீட்டில் வேலைகள் செய்ய நாளது ஆகஸ்டு மாதம் 28-ம் தேதி காலை 4.00 மணிவரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் அடியிற்கையொப்பமிட்டவரால் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் ஏற்றுக் கொள்ளப்படும். அன்று மாலை 4·15 மணிக்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். ஒப்பந்த டெபாசிட் ரூ. 1,000 கட்ட வேண்டும். ஒப்பந்தப் பாரம் முதலியன் ரூ. 2 விற்பனை வரி 3½ சதம் கட்டி மன்ற பொறியாளரிடமிருந்து 26-8-1972-ம் தேதி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

வி. பிருதிவி,
நகராட்சி சுகாதார அதிகாரி
ஆணையர் பொறுப்பு,
இராஜபாளையம்.

(த. 8)

### தூத்துக்குடி நகராட்சி

தூத்துக்குடி நகராட்சிக்குச்சொந்தமான 10 டன் ஆவலிங் பார் போர்டு டீஸல் ரோடு ரோலருக்குத் தேவையான உதிரி சாமான்கள் சப்ளை செய்வதற்கு ஒப்பந்தப் புள்ளிகள் 28-8-1972 மாலை 4 மணிவரை நகரமன்ற ஆணையர் அவர்கள் நேர்முக அதிகாரியினால் பெறப்படடு அன்று மாலை 4-30 மணிக்குத் திறக்கப்படும். ஒப்பந்தப் புள்ளி ஒவ்வொன்றும் ரூ. 300 முன்வைப்புத் தொகையாக நகராட்சி கருவூலத்தில் செலுத்தியோ அல்லது டிமாண்ட் டிராப்ட் எடுத்தோ அத்தாட்சியுடன் அனுப்பவேண்டும். இதர விவரங்களுக்கு பொறியர் அலுவலகத்தில் நேரிலோ அல்லது விண்ணப்பித்தோ தெரிந்து கொள்ளலாம்.

சி. சங்கரலிங்கம்,
ஆணையர்.

(த. 6)

## அறிக்கை

## கல்லூரிக் கல்வித்துறை (தமிழ்நாடு) சென்னை-6

மத்திய அரசு வழங்கும் தேசியக் கடன் படிப்பு உதவித் தொகைத் திட்டம் 1972–73-ஆம் ஆண்டு.

மத்திய அரசு 1963–64-ஆம் ஆண்டிலிருந்து தேசியக்கடன் படிப்பு உதவித் தொகை வழங்கும் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. கலை, விஞ்ஞானம், வாணிகம், பொறியியல், தொழில்நுட்பம், மருத்துவம், வேளாண்மை, சட்டம், கல்வி, ஆகியவற்றில் முறையான முழுநேரப் படிப்பை அங்கீகாரம் பெற்ற கல்லூரிகளில் பயின்றுவரும் மாணவ, மாணவிகளுக்கு உயர்கல்வி பெறும் பொருட்டு இவ்வுதவித் தொகையை வழங்கி வருகிறது. இவ்வாண்டும் (1972–73) வழக்கம்போல் மத்திய அரசு தமிழ்நாட்டிற்கு ஒதுக்கிய பங்குக்கு ஏற்ப பள்ளி, கல்லூரித் தேர்வுகளான (தமிழ்நாட்டின் பல்கலைக் கழகங்களால் அல்லது அரசு தேர்வு மன்றங்களால் நடத்தப்படும்) மெட்ரிகுலேஷன், எஸ்.எஸ்.எல்.ஸி. தேர்வு, ஆங்கிலோ இந்தியன் உயர்நிலைப் பள்ளித் தேர்வு, இளநிலை தொழில்நுட்பப் பள்ளித் தேர்வு, புகுமுக வகுப்பு, பி.ஏ., பி.எஸ்ஸி., பி.காம்., பி.ஈ., எம்.பி.பி.எஸ்., எம்.ஏ., எம்.எஸ்ஸி., எம்.காம்., அல்லது இவைகட்கு இணையான தொழில்நுட்ப, தொழிற்கல்வி தேர்வுகளில் 50 சதவிகிதம் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் மாணவ மாணவிகள் தகுதியுள்ளவர்களாக கருதப்படுவார்கள்.

இத்திட்டத்திற்கு விண்ணப்பிக்கும் மாணவர்களின் ஆண்டு வருமானமும் அவர் தம் பெற்றோர்களின் ஆண்டு வருமானமும் சேர்ந்து ரூ. 6,000 (ரூபாய் ஆறாயிரம்)-க்கு மேல் இருக்கக்கூடாது.

முழு நேரப் பணியாளராயிருந்தும் ஊதியம் பெறாமல் விடுப்பில் இருந்து பயிலும் மாணவர்களும், ஊதியத்தோடு கூடிய விடுப்பிலிருந்து கொண்டு பயிலும் ஆசிரியர்களும் இத்திட்டத்திற்கு விண்ணப்பிக்கத் தகுதியானவர்களே.

பட்ட மேற்படிப்பு பயிலும் மாணவ, மாணவிகளின் ஆண்டு வருமானம் ரூ. 6,000 (ஆறாயிரத்திற்கு) மேலிருப்பினும் இத்திட்டத்திற்கு விண்ணப்பிக்கத் தகுதிவாய்ந்தவர்களே.

மாலை வேளைக் கல்லூரிகளிலும் கடிதப் போக்குவரத்து மூலம் நடக்கும் கல்லூரிகளிலும் பயிலும் மாணவர்கள் தேசியக் கடன் படிப்பு உதவித் தொகைக்கு விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்களாவர்.

வேறுவகையான படிப்பு உதவித் தொகை பெறும் மாணவர்களும் (சம்பளச் சலுகையைத் தவிர) தேசியக் கடன் படிப்பு உதவித் தொகையில் பாதிக்குமேல் வேறு நிதி உதவிகள் பெறும் மாணவர்களும் இத்திட்டத்திற்கு விண்ணப்பிக்கத் தகுதி இல்லாதவர்களாவர்.

வழங்கப்படும் கடன் படிப்பு உதவித் தொகை பின்வருமாறு :—

| | |
|---|---|
| (அ) பட்டப்படிப்பின் முன்நிலை டிப்ளமோ படிப்புகட்கு (பொறியியல், தொழில்நுட்பம், மருத்துவம், இவைகளின் பட்டப்படிப்பின் முன்நிலை தவிர) .. | ஆண்டுக்கு ரூ. 720 |
| (ஆ) பொறியியல், தொழில்நுட்பம், மருத்துவம் இவைகளில் பட்டப்படிப்பில் முன்நிலை படிப்புகட்கு .. .. | ஆண்டுக்கு ரூ. 970. |
| (இ) எம்.ஏ., எம்.எஸ்ஸி., எம்.காம்., மற்றும் இவற்றுக்கு இணையான படிப்புகட்கு .. | ஆண்டுக்கு ரூ. 900. |
| (ஈ) பொறியியல், தொழில்நுட்பம், பட்டப் படிப்புகளின் பின்நிலை படிப்புகட்கு .. | ஆண்டுக்கு ரூ. 1,150. |
| (உ) பொறியியல், தொழில்நுட்பம், மருத்துவம் அல்லாத பிற பாடங்களில் பெறும் பிஎச்.டி., டி.எஸ்ஸி., படிப்புகட்கு .. .. .. .. | ஆண்டுக்கு ரூ. 1,500. |
| (ஊ) பொறியியல், தொழில்நுட்பம், மருத்துவம் ஆகியவற்றில் பிஎச்.டி., டி.எஸ்ஸி. மருத்துவத்தில் எம்.டி., எம்.எஸ்ஸி. படிப்புகட்கு .. .. .. .. | ஆண்டுக்கு ரூ. 1,750. |

4. மாணவர் தம் படிப்பை முடித்துக்கொண்டு சம்பாதிக்கத் துவங்கிய ஓராண்டுக்குப் பிறகோ, அல்லது தம் படிப்பை முடித்து மூன்றாண்டுகள் கழித்தோ, அவர் பெற்ற கடன் தொகையைத் திருப்பிக் கொடுக்க வேண்டும். இத்திட்டத்தில் வழங்கப்படும் கடனுக்கு எவ்வித வட்டியும் இல்லை. எனினும் குறித்த காலத்தில் திருப்பிக்கட்டாத தொகைக்கு 6 சதவிகித வட்டி வசூலிக்கப்படும். ஆசிரியப் பணியில் ஈடுபடுபவர்களுக்கு மட்டும் பெற்ற கடனைத் திருப்பிக் கட்ட வேண்டியதில்லை. அவர்களுக்கு மட்டும் தவிர்ப்பு கொடுக்கப்படும்.

5. இதுபற்றிய விண்ணப்பங்கள் அனைத்தும் சம்பந்தப்பட்ட கல்லூரி முதல்வர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பத்தாள்களை பூர்த்தி செய்து உரிய கல்லூரி முதல்வர்களின் வழியாக கல்லூரிக் கல்வி இயக்குநர் அலுவலகத்திற்கு 31-8-1972-க்குள் அனுப்பிவிட வேண்டும்.

வி. டி. டைட்டஸ்,
கல்லூரிக் கல்வி இயக்குநர்.

(த. 17)

## ஒப்பந்தப் புள்ளி

### குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் ஒப்பந்ததாரர்களிடமிருந்து, எண். 17, சர். பி. டி. இராசன் சாலை, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய செயல் வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 28—8—1972 (திங்கட்கிழமை) பிற்பகல் 3.00 மணிவரை பெற்றுக் கொள்ளப்படும். அவை அன்று பிற்பகல் 3.30 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

வேலையின் பெயர் :

திருப்பத்தூர் பஞ்சாயத்து (இராமநாதபுர மாவட்டம்) குடிநீர்த் திட்டம்—மூன்றும் நிலை—தலைமை வேலைகள்—நீர்ஊடுறுவு வடியடுக்கு அமைத்து 15 அங்குல விட்டமுள்ள சுட்ட மண் குழாய் கொண்டு பதித்தல் சம்பந்தமாக.

ஒப்பந்த வகை : மொத்தத் தொகை.

முன்வைப்புத் தொகை : ரூ. 3,825 (ரூபாய் மூவாயிரத்து எண்ணூற்று இருபத்தைந்து மட்டும்).

இத்தொகை ஏதாவது ஒரு தேசிய வங்கியின் பண உத்தரவுச் சீட்டு வடிவில் நிருவாகப் பொறியாளர் (தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்), காரைக்குடி, (செயற்கோட்டம்) அவர்கள் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டும். காசோலை ஒப்புக்கொள்ளப்பட மாட்டாது.

வேலையினை முடிப்பதற்குரிய கால அளவு : ஒன்பது மாதங்கள்.

ஒப்பந்தப் படிவங்களின் விலை : ரூபாய் பத்தும் புதுக்காசுகள் முப்பத்தைந்தும் (விற்பனைவரி உள்பட).

ஒப்பந்தப்படிவங்கள் வேண்டுவோர், நிருவாகப் பொறியாளர் (தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், செயற்கோட்டம்), காரைக்குடி, அவர்களிடமிருந்து 42, கல்லூரி சாலை, காரைக்குடி என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 25—8—1972 (வெள்ளிக்கிழமை) மாலை 5.00 மணி வரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்பார்வைப் பொறியாளர்,
குடிநீர் வடிகால் வாரியம்,
செயல் வட்டம், மதுரை-2.

(த. 42)

## தடிகள் ஏலம்

### வனத்துறை

தேக்கு, மருது, வேங்கை, வெந்தேக்கு மற்றும் பல ஜாதிகள்.
இடம் : அரசாங்கத் தடிகள் விற்பனை மண்டி, நாகர்கோவில்.

தேதியும் நேரமும் : 28 & 29—8—1972 முற்பகல் 9.00 மணி.
அளவு : ஏறத்தாழ 1,000 கனமீட்டர்.

மேற்கொண்டு விவரங்களுக்கு நாகர்கோவிலிலுள்ள மண்டிச்சிறக அலுவலருக்கு விண்ணப்பிக்கவும்.

சி. என். சுந்தரம்,
மாவட்ட வன அலுவலர்,
திருநெல்வேலி தென்கோட்டம்

(த. 37)

## தொழில் வணிகத் துறை

### வணிகத் தொழிற்பேட்டைகள்—படித்து வேலையில்லாமல் இருப்பவர்குரிய திட்டம்

அடித்தளத்தில் தொழில் செய்யவும் மேல் தளத்தில் (முதல் மாடி) குடியிருக்கவும் தகுதி வாய்ந்த அலகுகள் கீழ்க்காணும் தொழிற் பேட்டைகளில் குறைந்த வாடகைக்கு "சர்வீஸிங்" பணி செய்ய நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு தளமும் 264 ச. அடி. (25 ச. மீ.) பரப்பளவு கொண்டிருக்கும்.

| தொழிற்பேட்டையின் பெயர். (1) | இடம். (2) | கட்டவிருக்கும் அலகுகள். (3) | அனுகப்படவேண்டிய அலுவலர்களும் தொலைபேசி எண்ணும். (4) |
|---|---|---|---|
| காட்பாடி .. .. .. .. .. | காங்கேயநல்லூர் .. .. | 2 | ம. து. இ. வேலூர்-6. தொ. பே. எண் 512 |
| சேலம் .. .. .. .. .. | ரெட்டியூர் .. .. .. | 2 | ம. து. இ. சேலம். தொ. பே. எண் 3634. |
| திருச்சிராப்பள்ளி | அரியமங்கலம் .. .. | 2 | ம. து. இ. திருச்சி-1. தொ. பே. எண் 3823 |
| தஞ்சாவூர் .. .. .. .. .. | நாஞ்ஜிக்கோட்டைச் சாலை .. | 2 | ம. து. இ. திருச்சி-1. தொ. பே. எண் 3823. |
| மதுரை-7 .. .. .. .. .. | கே. புதூர் .. .. .. | 2 | ம. து. இ. மதுரை-7. தொ பே. எண் 60521 |
| காரைக்குடி .. .. .. .. .. | அமராவதிபுதூர் | 2 | ம. து. இ. மதுரை-7. தொ. பே. எண் 60521 |
| பேட்டை .. .. .. .. .. | பேட்டை .. .. .. | 2 | ம. து. இ. திருநெல்வேலி-4. தொ. பே. எண் 620. |
| நாகர்கோயில் .. .. .. .. .. | கோணம் | 2 | ம. து. இ. திருநெல்வேலி-4. தொ. பே. எண் 620. |
| அம்பத்தூர் .. .. .. .. .. | அம்பத்தூர் .. .. .. | 2 | நிருவாக அலுவலர், அம்பத்தூர், தொ. பே. எண் 60521. |
| விருத்தாசலம் .. .. .. .. .. | விருத்தாசலம் .. .. .. | 2 | நிருவாக அலுவலர், விருத்தாசலம், தொ. பே. எண். 120. |
| வியாசர்பாடி .. .. .. .. .. | வியாசர்பாடி .. .. .. | 2 | நிருவாக அலுவலர், கூட்டுறவு தொழிற்பேட்டை, வியாசர்பாடி, சென்னை-9. தொ. பே. எண். 30419. |

பள்ளி இறுதிப் படிப்பில் தேறியவர்களும் மாநிலத்தில் அதற்கு சமமான வேறு தேர்வுகளில் தேரியவர்களும் தொழிற்பயிற்சி நிலையங்களில் கற்று தேரியவர்களும் விண்ணப்பிக்கலாம். தகுதியுள்ளவர்கள் குறிப்பிட்ட விண்ணப்பங்களில் மண்டலத் துணை அலுவலர்களுக்கும், நிருவாக அலுவலர்களுக்கும், திட்ட அறிக்கையுடனும் ரூபாய் 500-ஐ வருவாய் வைப்புத் தொகையில் கட்டிய செலுத்துச் சீட்டுடனும் 28—8—1972-க்குள் விண்ணப்பிக்கலாம். இந்த வருவாய் வைப்புத் தொகையை அலகு ஒதுக்கீடு செய்யப்படாவிட்டால் திருப்பித்தரப்படும். மேலும் விளக்கமான தகவல்களுக்கு அந்தந்த மண்டல துணை இயக்குநர்களையும், நிருவாக அலுவலர்களையும் அணுகவும்.

(த. 22)

தொழில் வணிக இயக்குநர்.

---

## தொழில் வணிகத் துறை

நன்ருக நிர்மாணிக்கப்பட்ட தொழிற்சாலைக்கான கட்டடங்கள் (அலகுகள்) கீழ்க்காணும் தொழிற்பேட்டைகளில் குறைந்த மாத வாடகையில் சிறு தொழில் நிறுவனங்களுக்காக உள்ளன.

| தொழிற்பேட்டையின் பெயர். (1) | இடம். (2) | அலகுகள் எண்ணிக்கை. (3) | பரப்பளவு ச. மீ. (4) | அனுகப்படவேண்டிய அலுவலர்களும் தொலைபேசி எண்ணும். (5) |
|---|---|---|---|---|
| புதுக்கோட்டை .. .. | ..புதுக்கோட்டை-2 .. .. | 2 | 259 | ம. து. இ. தொழில் வணிகத்துறை, திருச்சி-1. தொ. பே. எண். 3823. |
| டி | டி | 2 | 158 | டி |
| நாகப்பட்டினம் .. .. .. | நாகப்பட்டினம் .. | 1† | 243 | டி |
| தஞ்சாவூர் .. .. .. .. | நாஞ்ஜிக்கோட்டை .. | 4 | 98 | டி |
| ஒசூர் .. .. .. .. .. | ஒசூர் .. .. .. | 4* | 98 | ம. து. இ. தொழில் வணிகத்துறை, சேலம்-1. தொ. பே. எண். 3634. |
| சேலம் .. .. .. .. | ரெட்டியூர் .. .. | 2* | 98 | டி |
| டி | டி | 2 | 259 | டி |
| டி | டி | 2 | 158 | டி |
| மேட்டூர் .. .. .. | மேட்டூர் அணை .. .. | 4 | 98 | டி |
| ஈரோடு .. .. .. | ஈரோடு .. .. .. | 4 | 98 | டி |

| | | | | |
|---|---|---|---|---|
| திண்டுக்கல் .. .. .. | திண்டுக்கல் .. .. | 4 | 98 | ம. து. இ. தொழில் வணிகத்துறை, மதுரை-1. தொ. பே. எண். 23621. |
| பேட்டை .. .. .. .. | பேட்டை .. .. | 4 | 98 | ம. து. இ. தொழில் வணிகத்துறை, திருநெல்வேலி-4, தொ. பே. எண். 620. |
| காட்பாடி .. .. .. .. | காங்கேயநல்லூர் .. | 2* | 127 | ம. து. இ. தொழில் வணிகத்துறை, வேலூர்-6. |
| டிை | டிை | 2* | 173 | தொ. பே. எண். 512. டிை |

* தற்போது கட்டப்பட்டு வருகிறது.

தற்போது உள்ளது.

விருப்பமுள்ள சிறுதொழில் நடத்துபவர்கள் குறிப்பிட்ட விண்ணப்பங்களில், திட்ட அறிக்கையுடனும், ரூ. 500-ஐ வருவாய் வைப்புத் தொகையில் கட்டிய செலுத்துச் சீட்டுடனும் மண்டலத் துணை இயக்குநருக்கு விண்ணப்பிக்கலாம். இந்த வருவாய் வைப்புத் தொகையை அலகு ஒதுக்கீடு செய்யப்படாவிட்டால் திருப்பித் தரப்படும். மேலும் தகவல்களுக்கு அந்தந்த மண்டல துணை இயக்குநர்களை அணுகவும்.

தொழில் வணிக இயக்குநர்.

(த.32)

---

## ஒப்பந்தப் புள்ளி

### குடிநீர்வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும், கீழ்க்காணும் வேலைகட்கென ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் ஒப்பந்ததாரர்களிடமிருந்து, எண். 17, சர்.பி.டி. இராஜன்சாலை, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள தமிழ்நாடு குடிநீர்வடிகால் வாரியம், செயல்வட்ட மேற்பார்வைப் பொறியாளர், அவர்களால் 30—8—1972 புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிவரை பெற்றுக் கொள்ளப்படும். அவை அன்று பிற்பகல் 3.30 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

| வரிசை எண்ணும் வேலையின் பெயரும். | ஒப்பந்த வகை. | முன் வைப்புத் தொகை. | வேலையினை முடிக்கும் காலம். | ஒப்பந்தப் படிவ விலை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | ரூ. | | ரூ. |
| 1 கொடைக்கானல் குடிநீர் அபிவிருத்தித் திட்டம்—25,000 லிட்டர் கொள்ளளவுள்ள தரைமட்ட நீர்த் தாங்கியினைக் கட்டுதல்—பகுதி 1. | மொத்த தொகை. | 260 | மூன்று மாதங்கள். | 5·18 (விற்பனை வரி உட்பட, திருப்பித் தரப்படமாட்டாது) |
| 2 கொடைக்கானல் குடிநீர் அபிவிருத்தித் திட்டம்—4,50,000 லிட்டர் கொள்ளளவுள்ள தரைமட்ட நீர்த்தாங்கியினைக் கட்டுதல்—பகுதி 2. | டிை | 1,960 | ஆறு மாதங்கள். | 10·35 (விற்பனை வரி உட்பட, திருப்பித் வரப் பட மாட்டாது). |
| 3 கொடைக்கானல் குடிநீர் அபிவிருத்தித் திட்டம்—3,50,000 லிட்டர் கொள்ளளவுள்ள தரைமட்ட நீர்த்தாங்கியினைக் கட்டுதல்—பகுதி 2. | டிை | 1,620 | டிை | டிை |

முன் வைப்புத் தொகை—இத்தொகை ஏதாவது ஒரு தேசிய வங்கியின் பண உத்தரவுச் சீட்டு மூலம் நிருவாகப் பொறியாளர் (தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்) செயற் கோட்டம், மதுரை-2 அவர்கள் பெறும் வகையில் செலுத்தப்பட்டு, அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டும். வேறு வடிவில் இத்தொகை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர், நிருவாகப் பொறியாளர் (தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், மதுரை செயற் கோட்டம்) அவர்களிட மிருந்து 14, இராமமூர்த்திசாலை, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 28—8—1972 திங்கள் மாலை 5·00 மணிவரையில் ஒப்பந்தப் படிவங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்பார்வைப் பொறியாளர்,
குடிநீர் வடிகால் வாரியம்,
செயற் வட்டம், மதுரை-2.

(த. 50)

---

## ஒப்பந்தப் புள்ளி

### குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப்புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் ஒப்பந்ததாரர்களிடமிருந்து, எண். 17, சர். பி. டி. இராசன் சாலை, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய செயல் வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 5—9—1972 செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3·00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். அவை அன்று பிற்பகல் 3-30 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவகைத்தில் வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப் படும்.

வேலையின் பெயர்.—மேலூர் குடிநீர் திட்டம்—இரண்டாம் நிலை—பகிர்வு முறைக்கென ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட், பி.வி.சி. குழாய்களையும் தனி உறுப்புக்களையும் பதித்தலும் இணைத்தலும்.

ஒப்பந்த வகை.—கே. 2.

முன்வைப்புத் தொகை.—ரூ. 17,000 (ரூபாய் ஒரு ஆயிரத்து எழு நூறு மட்டும்). இத்தொகை ஏதாவது ஒரு தேசிய வங்கியின் பண உத்தரவுச் சீட்டு வடிவில் நிருவாகப் பொறியாளர் (தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், செயற் கோட்டம்) மதுரை அவர்கள் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்படவேண்டும். இத்தொகை வேறு வடிவில் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

ஒப்பந்தப் படிவங்களின் விலை.—ரூ. 10·35 (விற்பனை வரி உட்பட). ஒப்பந்தப்படிவங்கள் வேண்டுவோர், நிருவாகப் பொறியாளர் (தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், மதுரை செயற்கோட்டம்) அவர்களிடமிருந்து 14, இராமமூர்த்தி தெரு, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 2—9—1972 மாலை 5·00 மணி வரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்பார்வைப் பொறியாளர்,
குடிநீர் வடிகால் வாரியம், செயல் வட்டம், மதுரை-2

(த. 44)

## மின்வாரியம் எண்ணூர் அனல் மின்திட்டம்

குறிப்பு எண் AEP 102.

1. மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் உறையில் **Ennore Thermal Scheme, supply of seamless steel tubes. AEP 102** எனவும், மற்றும் ஒப்பந்ததாரின் பெயரும் எழுதப்பட்டு, கீழ்க் கையொப்பமிட்டவரால் குறிப்பிட்ட தேதியில் மாலை 2-30 மணிவரை பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று மாலை 3-00 மணிக்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

2. தேவையான பொருட்கள், குறிப்பு எண், முன்பணம், முடிவு தேதி முதலியன கீழே தரப்பட்டுள்ளன.

| S. No. | Description | Specn No. | E.M.D. Payable | Cost of tender | Due Date |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | seamless steel tubes and specials | AEP. 102 | Rs. 5,000 | Rs. 5 | 25-8-72 |

3. ஒப்பந்தப் பத்திரங்கள் கீழ்க் கையொப்பமிட்டவரிடமிருந்து 1-8-1972 தேதியிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

4. துறையினரைச் சார்ந்த நமூனுக்களிலில்லாத ஒப்பந்தங்களும் முடிவுத் தேதியிலும், நேரத்திற்குப் பின்னரும் சமர்ப்பிக்கப்படும் ஒப்பந்தங்களும் நிராகரிக்கப்படும். ஏதாவது ஒன்றையோ அல்லது எல்லாவற்றையுமோ காரணம் காட்டாது நிராகரிக்கவும், பிரித்துக் கொடுக்கவும் கீழ்க் கையொப்பமிட்டவரே உரிமை உடையவர்.

5. அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டு வழியில் காணமல் போகும் ஒப்பந்தங்களுக்கு மின்சார வாரியம் பொறுப்பல்ல. ஒப்பந்தப் பத்திரங்களும் மாற்றத்தக்கவை அல்ல.

மேற்பார்வைப் பொறியாளர்,
எண்ணூர் அனல் மின் திட்டம்,
எண்ணூர், சென்னை-57.

தொலைபேசி எண் : 59556
(5 Lines ).
தந்தி—ENTERMAL

(த. 52)

## குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும் அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் ஒப்பந்ததாரர்களிடமிருந்து எண்.17, சர்.பி.டி. இராசன் சாலை, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள தமிழ்நாடு குடிநீர் வாரிய செயல் வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 30—8—1972 புதன்கிழமை பிற்பகல் 3-00 மணிவரை பெற்றுக் கொள்ளப்படும். அவை அன்று பிற்பகல் 3-30 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

வேலையின் பெயர்—ஒட்டன்சத்திரம் குடிநீர்த் திட்டம்—இரண்டாம் நிலை—நீர் கொணரும் குழாய்ப் போக்கிற்கென வார்ப்பிரும்பு, மற்றும் உறுதி பெறு கற்காரைக் குழாய்களையும், தனி உறுப்புகளையும் பதித்து இணைத்தல்.

ஒப்பந்தவகை .. .. .. மொத்தத் தொகை.

முன் வைப்புத் தொகை .. .. ரூ. 2,380.

(இத்தொகை ஏதாவது ஒரு தேசிய வங்கியின் பண உத்தரவுச் சீட்டு வடிவில் நிருவாகப் பொறியாளர் (தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், மதுரை செயல் கோட்டம்) அவர்கள் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டும். இத்தொகை வேறு வடிவில் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

வேலையினை முடிப்பதற்குரிய காலம் அளவு. ஒன்பது மாதங்கள்.

ஒப்பந்தப் படிவங்களின் விலை .. ரூ.10·35. (விற்பனைவரி உட்பட—திருப்பித்தரப்பட மாட்டாது).

ஒப்பந்த படிவங்கள் வேண்டுவோர், நிருவாகப் பொறியாளர் (தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், மதுரை-2 செயற்கோட்டம்) அவர்களிடமிருந்து 14, இராமமூர்த்தி சாலை, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 28—8—1972 திங்கட்கிழமை மாலை 5·00 மணிவரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்பார்வைப் பொறியாளர்,
குடிநீர் வடிகால்வாரியம்,
செயல்வட்டம், மதுரை-2.

(த 61)

## கடையநல்லூர் நகராட்சி

அடியிற் குறிப்பிட்டுள்ள வேலைகளுக்கு மூடி முத்திரையிட்ட செடியூல் ஒப்பந்தங்கள் ஆணையாளர் அவர்களால் 1972-ம் வருடம் ஆகஸ்டு மாதம் 26-ம் தேதி சனிக்கிழமை மாலை 4-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். வரப்பெற்ற ஒப்பந்தங்கள் ஆஜராகியுள்ள ஒப்பந்ததாரர் முன்னிலையில் அன்றே மாலை 4-30 மணிக்குத் திறக்கப்படும். இதர விவரங்கள் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் தெரிந்து கொள்ளலாம். ஒப்பந்தங்கள் தஸ்தாவேசுகள் ரூ. 5.20 (ஒவ்வொரு வேலைக்கும்) இந்த நகராட்சி அலுவலகத்தில் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

| வேலை விவரம். | மதிப்பீடு. | பொறுப்புத் தொகை. |
|---|---|---|
| 1. இருஷ்ணபுரம் ரயில்வே பீடர் ரோடு அபிவிருத்தி செய்து தார் ரோடு போடுதல். | 30,000 | 750 |
| 2. மேலக்கடையநல்லூர் மலம்பாட்டை ரோடு அபிவிருத்தி செய்து தார் ரோடு போடுதல். | 36,000 | 900 |

பழ. நடேசன், எம்.ஏ.,
ஆணையர்.

(த. 55)

## தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம்

9/10, மூர் தெரு, சென்னை-1.

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவன நிருவாக இயக்குநரால் கீழ்க்கண்ட வேலைகளுக்கு 25-8-1972 மாலை 3 மணி வரை ஒப்பந்தங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| வேலை விவரம். | முன் வைப்புத் தொகை. | ஒப்பந்த விவரங்களின் விலை. |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| 1. திருநெல்வேலியில் 2,200 டன்கொள்ளளவு கொண்ட இரண்டாவது சேமிப்புக் கிடங்கு கட்டுதல் மற்றும் அதைச்சுற்றி சாலை அமைத்தல். | 6,550 | 25·99 |
| 2. வேலூரில் (வட ஆர்க்காடு மாவட்டம்) 400 டன் கொள்ளளவு கொண்ட வெல்லை சேமிப்புக் கிடங்கு கட்டுதல் மற்றும் அதைச்சுற்றி சாலை அமைத்தல். | 1,600 | 15·55 |
| 3. திருநெல்வேலியில் கட்டவிருக்கும் இரண்டாவது சேமிப்புக் கிடங்கிற்குத் தேவையான இரும்பு உத்தரம் மற்றும் இதர சாமான்கள் வழங்குதல் (**Supply and erection of angle iron trusses and other accessories.** | 2,375 | 25·99 |
| 4. வேலூரில் (வட ஆர்க்காடு) கட்டவிருக்கும் வெல் வெல்ல சேமிப்பு கிடங்கிற்குத் தேவையான இரும்பு உத்தரம் மற்றும் இதர சாமான்கள் வழங்குதல்) **Supply and erection of angle iron trusses and other accessories.** | 180 | 10·37 |

வேலை பற்றிய முழு விவரங்களை இந்த அலுவலகத்திலிருந்து 7-8-1972-க்குப் பிறகு எல்லா வேலை நாட்களிலும் நேரிலோ, தபால் மூலமோ குறிப்பிட்ட தொகையைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

ஜி. எம். வொய்ட், ஐ.ஏ.எஸ்.,
திருவாக இயக்குநர்.

(த. 48)

## ஏல விற்பனை

கண்டனம் செய்யப்பட்ட நீர்த்தாங்கி வண்டி எம்.எஸ்.எக்ஸ். 326 (ஸ்டுடிபேக்கர் 1953 மாடல் வண்டி), சென்னை, எழும்பூர், மார்ஷல்ஸ் சாலை, 17–எ, எண்ணில் உள்ள தமிழ்நாடு தீயணைப்புத்துறை தலைமை அலுவலக சுற்றுச்சுவரினுள் 7—9—1972 அன்று காலை 11-00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விடப்படும். இவ்வண்டியை மேற்படி விலாசத்தில் பார்வையிடலாம். விற்பனை, நிபந்தனைகள் கீழ்க் கையொப்பமிட்டவரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**எஸ். அமிர்தலிங்கம்,**
கோட்டத் தீயணைப்பு அலுவலர், சென்னை மாநகர்.

(த. 46)

## ஒப்பந்தப் புள்ளி

### பொதுப்பணித்துறை

கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகம்,
திருச்சி வட்டம், தபால் பெட்டி எண் 55, திருச்சிராப்பள்ளி-1.

தமிழக ஆளுநருக்காகவும், அவர் சார்பிலும் கீழ்க்கண்ட வேலைக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் கண்காணிப்புப் பொறியாளர், பொதுப் பணித்துறை. திருச்சி வட்டம், திருச்சி அவர்களால் கீழே குறிப்பிட்டுள்ள விவரங்களின்படி பெற்றுக் கொள்ளப்படும்.

1. வேலையின் பெயர்—திருச்சி மாவட்டம், பெரியார் ஈ.வெ.ரா அரசினர் கலைக் கல்லூரியில் பாட அரைகளுக்கானநிரந்திரக் கட்டடம் (புதிய பிளாக்) கட்டுதல்.
2. ஒப்பந்தம் பெறுவதற்கான கடைசி தேதி மற்றும் நேரம்—30—8—1972 மாலை 3-00. மணி.
3. பிணைப் பணத்தொகை—ரூ. 9,000 (ரூபாய் ஒன்பதாயிரம் மட்டும்).
4. ஒப்பந்த முறை—மொத்தத்தொகை.
5. முடிக்க வேண்டிய காலம்.—8 மாதங்கள் (எட்டு மாதங்கள்).
6. ஒப்பந்தப் பத்திரத்தின் விலை—ரூ. 25 (ரூபாய் இருபத்தைந்து மட்டும்).
7. விற்பனை வரி—ரூ. 0·88 (எண்பத்தெட்டு காசுகள் மட்டும்.)
8. ஒப்பந்தப் பத்திரம் விற்பனைக்குக் கிடைக்கத் தொடங்கும் தேதி.—10—8—1972.
9. விரும்பும் ஒப்பந்ததாரர்களின் முன்னால் ஒப்பந்தங்கள் திறக்கப் படும் தேதி மற்றும் நேரம்.—30—8—1972 மாலை 3-30 மணி.

ஒப்பந்தப் பத்திரங்களின் விலையையும் விற்பனை வரியையும் முறையே அரசின் கருவூலத்தில் **XXXVII Public works State Revenue-Miscellaneous, XII Sales tax b. receipts under the State Sales Tax Act—General Sales tax** என்ற தலைப்புக்களின் கீழ் ஒரே சலானில் செலுத்தி மேற்படி சலானை ஒப்பந்தப் பத்திரங்கள் கோரும் விண்ணப்பத்துடன் தவறாமல் இணைக்கப் பட்டிருக்க வேண்டும். மற்ற விதிகளும் விவரங்களும் விரிவான ஒப்பந்தப் பத்திரத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

கண்காணிப்புப் பொறியாளர் காரணங்கள் காட்டாமலே எந்த ஒப்பந்தத்தையும் அல்லது எல்லா ஒப்பந்தங்களையும் நிராகரிக்க உரிமை உண்டு.

**நா. முத்துகிருஷ்ணன்,**
திருச்சி மாவட்ட கண்காணிப்புப்
பொறியாளர்.

(த. 45)

## ஒப்பந்தப் புள்ளி

### குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப்புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் ஒப்பந்ததாரர்களிடமிருந்து, எண். 17, சர்.பி.டி இராசன் சாலை, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய செயல் வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 1972–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 2–ம் தேதி சனிக்கிழமை பிற்பகல் 3–00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும். அவை அன்று பிறபகல் 3–30 மணிக்கு மேற்பார்வைப் பொறியாள ராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

வேலையின் பெயர்.—மேலக்கரை குடிநீர்த் திட்டம்—இரண்டாம் நிலை—மண்டலம் 2—வார்ப்பிரும்பு, ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் பி.வி.சி. குழாய்களையும் தனி உறுப்புக்களையும் பகிர்வு முறைக்கென பதித்து இணைத்தல்.

ஒப்பந்த வகை.—கே. 2.

முன்வைப்புத் தொகை.—ரூ. 1,630 (ரூபாய் ஒரு ஆயிரத்து அறுநூற்று முப்பது மட்டும்).

இத்தொகை ஏதாவது ஒரு தேசிய வங்கியின் பண உத்தரவுச் சீட்டு வடிவில் நிருவாகப் பொறியாளர் (தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் செயற்கோட்டம்) அருப்புக்கோட்டை அவர்கள் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்படவேண்டும்.

ஒப்பந்தப்படிவங்களின் விலை.—ரூ. 10.35 (விற்பனை வரி உட்பட).

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர், நிருவாகப் பொறியாளர் (தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், அருப்புக்கோட்டை செயற் கோட்டம் அவர்களிடமிருந்து 18-8-1, நகராட்சி பயணிகள் விடுதி சாலை, அருப்புக் கோட்டை என்றமுகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 1972-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1-ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 5–00 மணி வரையில் ஒப்பந்தப் படிவங்களை பெற்றுக்கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் முன்னிட்டும் திரும்பத் தரப்படமாட்டாது.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
குடிநீர் வடிகால் வாரியம்,
செயல் வட்டம், மதுரை-2.

(த. 43)

## ஒப்பந்தப் புள்ளி

### பொதுப்பணித் துறை

வைகைச் சீரமைப்புத் திட்டம்.

தமிழ்நாடு ஆளுநர் அவர்களுக்காகவும். அவர்கள் சார்பிலும், கீழ்க் காணும் வேலைக்காக கே. 2 ஒப்பந்த வகையில், அரக்கு முத்திரையிடப் பட்ட ஒப்பந்தங்கள், மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித்துறை, மதுரை வட்டம், மதுரை-2 அவர்களால். மதுரை-2ல் உள்ள அவர்களது அலுவலகத்தில் 30-8-1972 அன்று மாலை 3-00 மணி வரையில் பெற்றுக் கொள்ளப்படும். பெற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள், அதே நாள் மாலை 4-00 மணிக்கு, அப்போது வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

| வரிசை எண். | வேலையின் பெயர். | முன் வைப்புத் தொகை ரூ. |
|---|---|---|
| 1 | மதுரை மாவட்டம், மதுரை வட்டம் விராகனூர் அருகே, வைகை நதியின் குறுக்கே அமைய விருக்கும் ரெகுலேட்டருக்கு இடது புறம் தலை மதகு கட்டுதல். | 7,500 |
| 2 | மதுரை மாவட்டம், மதுரை வட்டம், விராகனூர் அருகே, வைகை நதியின் குறுக்கே அமைய விருக்கும் ரெகுலேட்டரில் பகுதிகள் 10, 11, 12 கட்டுதல். | 12,000 |
| 3 | மதுரை மாவட்டம், மதுரை வட்டம், விராகனூர் அருகே வைகை நதியின் குறுக்கே அமைய விருக்கும் ரெகுலேட்டரில் பகுதிகள் 13, 14, 15 கட்டுதல். | 12,000 |
| 4 | மதுரை மாவட்டம், மதுரை வட்டம், விராகனூர் அருகே, வைகை நதியின் குறுக்கே பகுதிகள் 16, 17, 18 கட்டுதல். | 12, 000 |

ஒவ்வொரு வேலைக்கான, ஒப்பந்த நிபந்தனைகள், வரைபடங்கள், மற்றும் பத்திரங்களின் விலையான ரூ. 20 ஐ (இருபது மட்டும்) **P.W. III O.R** என்ற தலைப்பின் நிருவாகப் பொறியாளர், பொதுப் பணித்துறை, வைகைச் சீரமைப்புக் கோட்டம், மதுரை-20 அவர்கள் வாவில் சேரும்படியும், மேற்கண்ட ஒப்பந்தப்பத்திரங்களின் விலைக்கான விற்பனை வரி ரூ. 0.75-ஐ **XII Sales Tax (d) Misc.** என்ற தலைப்பிலும், தனித்தனியே அரசுக் கருவூலங்களில் செலுத்தி, அதற் கான ரசீதுகளைக் கொடுத்து, மதுரை வட்ட (பொதுப்பணித்துறை) மேற் பார்வைப் பொறியாளர், மதுரை-2 அலுவலகத்தில் 21-8-1972 தேதி முதல் 28-8-1972ம் தேதிக்குள், மேற்கண்ட ஒவ்வொரு வேலைக்கான ஒப்பந்தப் பத்திரங்களை பெற்றுக்கொள்ளலாம்.

ஒவ்வொரு வேலைக்கான முன் வைப்புத் தொகையும், கருவூலச்சீட்டு வடிவிலோ, அல்லது செட்யூல்ட் வங்கிகளின் "கால்ரசீது டெபாசிட்டு' வகையிலோ அல்லது செட்யூல்ட் வங்கிகளின் "டிமாண்ட் டிராப்டு" களாகவோ ஏற்றுக் கொள்ளப்படும். தேசிய சேமிப்புப் பத்திரங்களும், தமிழ்நாடு மின்வாரியக் கடன் பத்திரங்களும் மதிப்பில் ஐந்து விழுக் காடுகள் குறைத்துப் பெற்றுக் கொள்ளப்படும். முன் வைப்புத் தொகை வேறு எந்த வடிவிலும் பெற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

**வ. துரைராஜ்,**
மேற்பார்வைப் பொறியாளர், (பொதுப்
பணித்துறை) (கூடுதல் பொறுப்பில்) மதுரை
வட்டம், மதுரை-2.

(த. 49)

## சின்கோனத் துறை

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும், அரசு சின்கோனா பிளான்டேசன்ஸ் ஆனமலைஸ், (வடக்கு மற்றும் தெற்கு)-ல், கீழ்க்கண்ட வைகளைக் கட்டுவதற்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. எல்லாவற்றிற்கும் மொத்த மதிப்பு ரூ. 96,760.

| வரிசை எண்ணும் பெயர் மற்றும் கட்டும் இடம். | கட்டும் எண்ணிக்கை. | மதிப்பீட்டுத் தொகை. | கட்டுத் தொகை. |
|---|---|---|---|
| | | ரூபாய். | ரூபாய். |
| | | (ஒவ்வொன்றுக்கும்.) | (ஒவ்வொரு குடியிருப்புக்கும்). |
| 1. அரசு குயினைன் ( Quinine ) பேக்டரி, ஆனமலைஸ் அலுவலர் குடியிருப்புக்கள். | 4 | 4,725 | 120 |
| 2. ஆனமலைஸ் (தெற்கு), அரசு சின்கோனா பிளான்டேசன்ஸ் 4 கோட்டத்தில் அலுவலர் குடியிருப்பு. | 4 | 4,900 | 125 |
| 3. ஆனமலைஸ (தெற்கு), அரசு சின்கோனா பிளான்டேசன்ஸ் 7 கோட்டத்தில் அலுவலர் குடியிருப்பு. | 2 | 4,950 | 125 |
| | | (ஒவ்வொரு பிளாக்கிற்கும்). | (ஒவ்வொரு பிளாக்கிற்கும்). |
| 1. ஆனமலைஸ் (தெற்கு மற்றும் வடக்கு) அரசு சின்கோனா அக்யூ ( Agua ) டைப் லெட்ரின்கள். | 60 பிளாக்குகள். | 800 | 20 |

ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கான கடைசி நாள் 31-8-1972 மாலை 3-00 மணி. அதே நாள் மாலை 3·30 மணிக்குக் கீழ்க் கையொப்பமிட்டவரால் அல்லது அரசுப் பதிவு பெற்ற உதவியாளரால் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும்.

ஒப்பந்தப்புள்ளிகள் விளக்க அறிவிப்புப் பட்டியல் கீழ்க்கண்ட அலுவலர்களிடம் பெறலாம்.

1. மேனுபாக்டரிங் கெமிஸ்ட், அரசு குயினைன் பேக்டரி, சின்கோனா அஞ்சல், (வழி) வால்பாறை, கோயம்புத்தூர் மாவட்டம்.

2. மேற்பார்வையாளர், அரசு சின்கோனா பிளான் டேசன்ஸ் ஆனமலைஸ் (வடக்கு), சின்கோனா அஞ்சல், (வழி), வால்பாறை, கோயம்புத்தூர் மாவட்டம்.

3. மேற்பார்வையாளர், அரசு சின்கோனா பிளான்டேசன்ஸ், ஆனமலைஸ், (தெற்கு) பெரிய கள்ளார் அஞ்சல், (வழி), வால்பாறை கோயம்புத்தூர் மாவட்டம், ரூ. 2.07 (விற்பனை வரி உட்பட) பணமாக அல்லது மணியார்டர் மூலமாகச் செலுத்திப் பெறலாம்.

எம். மோகன்ராவ்,
இயக்குநர்,
சின்கோனத் துறை,
அஞ்சல்பெட்டி எண். 6,
உதகமண்டலம்.

(த. 10)

## வேளாண்மைத் துறை

தமிழ்நாடு அரசின் சார்பாகக் கீழ்க்கண்ட வீணான டிராக்டர்கள் டிஸ்மேண்டில்டு ( Dismantled ) நிலையில் விற்பதற்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

1. W6 இண்டர் நேசனல் டிராக்டர்—M.D.R. 1799.

2. W6 இண்டர் நேசனல் டிராக்டர்.—M.D.C. 6695.

3. ஜான் டீர் டிராக்டர்—M·S.Z. 162.

4. T 6 இண்டர் நேசனல் புள்டோசர்—M.D.F. 5036.

ஒப்பந்தப்பத்திரங்கள் விற்பதற்கான கடைசி நாள்—26-8-1972.
ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக் கொள்வதற்கான நாள்—29-8-1972.

ஒப்பந்தப்படிவங்கள் இந்த அலுவலகத்தில் ரூ. 3 —விற்பனைவரி 3½ சதவிகிதம் பணமாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ செலுத்திப் பெறலாம்.

உதவி வேளாண்மைப் பொறியாளர்,
திருநெல்வேலி-7.

(த. 14)

## ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி

கன்சர்வேன்சி லாரியாகப் பயன்படுத்துவதற்காக, ஒப்பன் டைப் லாரி பாடியுடன் ஓட்டுநரின் கேபின் மற்றும் டிராப்சைடுகள் ஃபார்கோ (109 பி. 6) 165அங்குலம் W. B. Chassis கட்டுவதற்கு, மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கையொப்பமிட்டவரால் 28-8-1972 மாலை 4-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். ஒவ்வொரு ஒப்பந்தப்புள்ளியுடன் கட்டுத் தொகை ரூ. 425 இணைத்து அனுப்பு வேண்டும். மற்ற விவரங்கள் இந்த அலுவலகத்தில் விண்ணப்பக் கடிதம் எழுதிப் பெறலாம்.

பி. சண்முகம்,
ஆணையர்.
ஸ்ரீவில்லிபுத்தூர்

(த. 1).

## பல்லவா போக்குவரத்துக் கழகம் லிமிடெட்

"போக்குவரத்து இல்லம்". அண்ணாசாலை, சென்னை-2.

சாமான்கள் (Tools) வழங்குவதற்காகக் கீழ்க் கையொப்பமிட்டவரால் மூடி முத்திரையிட்ட கொட்டேசன்கள் 5-9-1972 மாலை 2-00 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளி விளக்க நிபந்தனைகள் இதர விவரங்கள் பர்ச்சஸ் அலுவலர் பல்லவா போக்குவரத்துக் கழகம் லிமிடெட், சென்னை-2 அவர்களிடம் எல்லா வேலை நாட்களிலும் இலவசமாகப் பெறலாம்.

மெட்டீரியல்ஸ் மேலாளர்,
பல்லவா போக்குவரத்துக் கழகம் லிமிடெட்,
சென்னை-2.

(த. 13)

## பொதுப்பணித் துறை

வேலையின் பெயர்.—மீனவர்களுக்காக தஞ்சை ஜில்லா அம்மாப்பட்டணம் கிராமத்தில் 70 வீடுகள் கட்டுதல்.

மேற்படி வேலைக்கான முத்திரையிட்ட ஒப்ப அறிவிப்புகள் தமிழ்நாடு ஆளுநர் சார்பில் தமிழ்நாடு பொதுப்பணித்துறை தஞ்சாவூர் மாவட்ட மேற்பார்வைப் பொறியாளர்களால் தஞ்சாவூரிலிருக்கும் அவரது அலுவலகத்தில் 30—8—1972 மாலை 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

1. ஒப்பந்த வகை—மொத்தத் தொகை.

2. பிணைப்பணம் (செலுத்துச் சீட்டு மூலம் பெற்றுக் கொள்ளப்படும்)—ரூ. 5,000.

3. ஒப்பந்த பத்திரங்களின் விலை (அரசினர் கருவூலத்தில்) " பொ.ப. செலுத்துத் தொகை " மற்றைய செலுத்துத் தொகை " எனும் தலைப்பில் செயற் பொறியாளர், பட்டுக்கோட்டை கோட்டம் பட்டுக்கோட்டை அவர்கள் கணக்கில் செலுத்த வேண்டும்.—ரூ.30·.

4. விற்பனை வரி, அரசினர் கருவூலத்தில் "விற்பனை வரி (பி) பற்றுச்சீட்டு மாநில விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் பொது விற்பனை வரி" என்ற தலைப்பில் செலுத்துதல் வேண்டும்.—ரூ. 1·05.

5. கால அளவு.—பத்து மாதங்கள்.

6. ஒப்பந்தப் பத்திரம் கிடைக்கும் நாள்.—10—8—1972.

அ. சேஷாத்ரி,
மேற்பார்வைப் பொறியாளர் (பொறுப்பு)
தஞ்சாவூர் வட்டம், தஞ்சாவூர்.

(த.28)

## குடிசை மாற்று வாரியம்

கோட்டம் எண் V.

நந்தனம், சென்னை–35.

கீழ்க்கண்ட வேலைக்காக, வேலையின் பெயரும் ஒப்பந்ததாரரின் பெயரும் குறிப்பிடப்பட்ட மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கீழ்க் கையொப்பமிட்டவருக்கு 21—8—1972 மாலை 3-00 மணிக்கு மேற்படாதவாறு வந்து சேருமாறு வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-05 மணிக்கு அச்சமயம் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

வேலையின் பெயர் :—விசாலாட்சி அம்மாள் எஸ்டேட்டில் 217/70 டைப் டிசைன்படி ஒன்றில் 32 குடியிருப்புகள் உள்ள நான்கு அடுக்கு 2 பிளாக்குகள் மற்றும் ஒன்றில் 8 குடியிருப்புகள் உள்ள நான்கு அடுக்கு 1 பிளாக்கு (பிளாக்கு எண்: 4 எல். 1, எல். 2 & பி. 1) கட்டுதல்.

ஒப்பந்த வடிவம் :—மொத்தத் தொகை.
வேலையின் சுமார் மதிப்பு :—ரூ. 3,80,000.
கட்டுத் தொகை :—ரூ. 5,700.

ஒப்பந்தப் பத்திரங்கள் விலை ரூ. 10, விற்பனை வரி 3½ சதவிகிதம் (திருப்பித் தரப்படமாட்டாது) ரூ. 10·37 ஒப்பந்த வடிவம் மற்றவைகள் நிருவாகப் பொறியாளர் அலுவலகம், கோட்டம் எண், நந்தனம், சென்னை 35-ல் 10—8—1972 முதல் எல்லா வேலை நாட்களிலும் காலை 10-00 மணி முதல் மாலை 2-00 மணிவரை ரிசிப்டட் சலானைக் கொடுத்துப் பெறலாம்.

என். பாலசுப்பிரமணியம்,
நிருவாகப் பொறியாளர்,
குடிசை மாற்று வாரியம்,
கோட்டம் V.

(த. 38)

## பொதுப்பணித் துறை

வேலையின் பெயர் :—ஹோசூர், தருமபுரி மாவட்டம், மாவட்ட லைவ் ஸ்டாக் பண்ணையில் கோழி வளர்ப்புக் ( Poultry ) கொட்டகைகள் கட்டுதல்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் மேற்கண்ட வேலைக்காக, மேற்பார்வைப் பொறியாளர், பொதுப் பணித் துறை, சேலம், தருமபுரி மாவட்டம், சேலம்-4 அவர்களால், மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 30—8—1972 மாலை 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-15 மணிக்கு அச்சமயம் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

1. ஒப்பந்த வடிவம் : மொத்தத் தொகை.

2. கட்டுத் தொகை சலான் வடிவிலோ அல்லது தேசீயச் சேமிப்பு சர்டிபிகேட் வடிவிலோ அல்லது செட்யூல்டுபேங்க் வடிவிலோ வங்கிகளின் கால் ரசிப்ட்ஸ் வடிவிலோ செட்யூல்டு வங்கிகளின் டிமாண்டு டிராப்ட் வடிவிலோ அல்லது மாநில அரசு உறுதிப் பத்திரங்கள் அல்லது தமிழ்நாடு மின் வாரியப் பத்திரங்கள் வடிவிலோ ஏற்றுக் கொள்ளப்படும்—ரூ. 3,550.

3. ஒப்பந்தப் பத்திரங்கள் விலை கருவூலம் அல்லது இந்திய ரிசர்வ் வங்கியில் P.W. Remittances—III Other Remittances என்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர், பொதுப் பணித் துறை, தருமபுரிக் கோட்டம், தருமபுரி அவர்தம் கணக்கில் செலுத்தப்படவேண்டும்—ரூ. 20.00.

4. விற்பனை வரி XII Sales Tax (d) miscellaneous என்ற தலைப்பில் செலுத்தப்படவேண்டும்—ரூ. 0·70.

5. ஒப்பந்தப் பத்திரங்கள் மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம், பொதுப் பணித் துறை,சேலம், தருமபுரி வட்டம், சேலம்-4-ல் விற்பனைக்குக் கிடைக்கும் நாள்: 14—8—1972 முதல் 28—8—1972 வரை.

(மாநில அரசு உறுதிப் பத்திரங்கள் மற்றும் மாநில மின் வாரியப் பத்திரங்கள் உண்மை மதிப்பில் 25 சதவிகிதம் குறைவாக ஏற்றுக் கொள்ளப்படும். கால் ரசிப்ட்ஸ் மற்றும் பிக்சட் டிபாசிட் ரசிப்ட்டுகள் கட்டுத் தொகைக்காகக் கொடுக்கப்பட்டால் பணம் பெறப்பட்ட பின்னரே ஒப்பந்தப் புள்ளி உறுதி செய்யப்படும்.

மேற்பார்வைப் பொறியாளர்,
பொதுப் பணித் துறை,
சேலம்—தருமபுரி வட்டம்,
சேலம்-4.

(த. 27)

## குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும் கீழ்க் கண்ட விவரப்படி வழங்க, தலைமைப் பொறியாளர் அவர்களால், அவர்தம் அலுவலகத்தில் பொதுப் பணித் துறை கட்டடம், சேப்பாக்கம், சென்னை-5-ல் குறிப்பிடப்பட்ட வடிவத்திலான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 6—9—1972 மாலை 3-00 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-30 மணிக்கு அச்சமயம் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒப்பந்த வடிவம் :—மொத்தத் தொகை.

வேலை விவரம் :—கிராம நீர் வழங்கு திட்டத்திற்குப் பல்வேறு வகையில் தண்ணீர் இறைக்கக்கூடிய உபகரணங்களுடன் சம்மெர்சிபில் பம்பு செட்டுகள் வழங்குதல்.

கட்டுத் தொகை :—ரூ. 10,000 (டிமாண்டு ட்ராப்ட் அல்லது பாங்கு காரண்டி வடிவில் மட்டும்).

வேலை முடிக்கவேண்டிய காலம் :—ஆறு மாதங்கள்.

ஒப்பந்தப் பத்திரங்கள் விலை :—ரூ. 10·35 செட் ஒன்றுக்கு (விற்பனை வரி உட்பட).

ஒப்பந்தப் பத்திரங்கள், நிருவாகப் பொறியாளர் அலுவலகம், கிராம நீர் வழங்கு திட்டம் (UNICEF) பி. 33 இட வடகிழக்குப் பிரிவு. தில்லை நகர், திருச்சிராப்பள்ளி-18-ல் பத்திரங்கள் விலை பணமாகவோ அல்லது மணி ஆர்டர் மூலமாகவோ செலுத்திப் பெறலாம்.

ஒப்பந்தப் பத்திரங்கள் 1—8—1972 முதல் 4—9—1972 வரை விற்பனைக்குக் கிடைக்கும்.

தலைமைப் பொறியாளர்,
குடிநீர் வடிகால் வாரியம்,
சென்னை-5.

(த. 40)

## பொதுப்பணித் துறை

வேலையின் பெயர் :—உசிலம்பட்டியில் உள்ள அரசாங்க மருத்துவ மனையில் 48 படுக்கைகள் கொண்ட வார்டுக்கான கட்டடம் நிர்மாணித்தல்.

தமிழக ஆளுநருக்காகவும் அவர் சார்பிலும் மேற்பார்வைப் பொறியாளர், மதுரை வட்டம் மதுரை-2 அவர்களால் மேற்கண்ட வேலைக்கான முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 30—8—72 மாலை 3·00 மணி வரையில் பெற்றுக்கொள்ளப்பட்டு, மாலை 4-00 மணிக்கு திறக்கப்படும். 23—8—72 முதல் 28—8—72 வரை ஒப்பந்தப் பத்திரங்கள் விற்பனைக்குக் கிடைக்கும்.

ஒப்பந்த முறை—மொத்தத் தொகை
முன்வைப்புத் தொகை—ரூ. 5,080.
முடிக்கவேண்டிய காலம் —6 மாதங்கள் (ஆறு மாதங்கள)

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் விலைத்தொகை ரூ. 20-00 (அது எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித்தரமாட்டாது) கருவூலம் அல்லது ரிசர்வு வங்கி ஆகியவற்றில் P. W. Remittancess—III Other Remittances என்ற தலைப்பின் கீழ் நிருவாகப் பொறியாளர், பொதுப்பணித் துறை கட்டடங்கள் கோட்டம், மதுரை என்பவர் கணக்கில் செலுத்தப்பட வேண்டும். விற்பனை வரி ரூ. 0-75 (காசுகள் எழுபத்தைந்து மட்டும்) கருவூலம் அல்லது ரிசர்வு வங்கியில் "XII Sales Tax (d) Miscellaneous" என்ற தலைப்பில் செலுத்தப்பட வேண்டும்.

ஒவ்வொரு வேலைக்கான முன்வைப்புத் தொகையும் கருவூலச் சீட்டு வடிவிலோ தேசிய சேமிப்புப் பத்திரங்களாகவோ அல்லது ஷெட்யூல்டு வங்கிகளின் கால் ரசீது டெபாசிட்டு வகையிலோ அல்லது ஷெட்யூல்டு வங்கிகளின் டிமாண்ட் டிராப்டுகளாகவோ ஏற்றுக்கொள்ளப்படும். மாநில அரசுக் கடன் பத்திரங்களும் தமிழ்நாடு மின்வாரியக் கடன் பத்திரங்களும் மதிப்பில் ஐந்து விழுக்காடு குறைத்துப் பெறுக கொள்ளப்படும். முன்வைப்புத் தொகை வேறு எந்த வடிவிலும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

வ. துரைராஜ்,
(கண்காணிப்புப் பொறியாளர் பொறுப்பு)
பொதுப்பணித்துறை, மதுரை வட்டம், மதுரை-2

(த. 33)

## குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும் கீழ்க்கண்ட விவரப்படி வழங்க, தலைமைப் பொறியாளர் (குடிநீர் வடிகால் வாரியம்) அவர்களால் அவர்தம் அலுவலக பொதுப்பணித் துறை கட்டடம், சேப்பாக்கம் சென்னை-5 ல் குறிப்பிடப்பட்ட படிவத்திலான மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 13—9—1972 மாலை 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-30 மணிக்கு அச்சமயம் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படுகின்றன.

ஒப்பந்த வடிவம்—மொத்தத் தொகை.

வேலையின் விவரம்—கிராம நீர் வழங்கு திட்டத்தில் தண்ணீர்க் கிணறுகளுக்கு (ERW) அல்லது சீம்லெஸ் ஸ்டீல் கேசிங் பைப்புகள் 200 எம். எம். மற்றும் 150 எம். எம். நாமினல் விட்டமுள்ள பைப்புகள் வழங்குதல் (Supply and delivery)

கட்டுத் தொகை—ரூ. 20,000 டிமாண்டு டிராப்ட் அல்லது காரண்டி வடிவில் இருக்க வேண்டும்.

வேலை முடிக்க வேண்டிய காலம்—6 மாதங்கள்.

ஒப்பந்தப்பத்திரங்கள் விலை—ரூ. 10.35 செட் ஒன்றுக்கு.

ஒப்பந்தப் பத்திரங்கள் நிருவாகப்பொறியாளர், கிராம நீர் வழங்கு திட்டம் (UNICEF) பி. 33, வடகிழக்கு பிரிவு, தில்லைநகர், திருச்சிராப்பள்ளி-18-ல் ஒப்பந்தப்பத்திரங்கள் விலை பணமாகவோ அல்லது மணி ஆர்டர் மூலமாகவோ செலுத்திப் பெறலாம்.

ஒப்பந்தப் பத்திரங்கள் 7—8—1972 முதல் 10—9—1972 வரை விற்பனைக்குக் கிடைக்கும்.

**தலைமைப் பொறியாளர்,**
குடிநீர் வடிகால் வாரியம், சென்னை-5.

(த. 39)

## குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும், சென்னை எண்ணூர் தெர்மல் ஸ்டேசனிலிருந்து வடக்கு பக்கிங்காம் கால்வாயில் 2/0 விலிருந்து 9/5 வரை ஃப்ளட்பேங்ஸ் (Flood Banks) (Both left and right Banks) பார்மேசன் வேலைக்காக, மேற்பார்வைப் பொறியாளர், குடிநீர் வடிகால் வாரியம், வீராணம் திட்டம் வட்டம், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களால், பொதுப்பணித் துறையில் பதிவு செய்யப்பட்டுள்ள உரிய பிரிவைச் சார்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து, குறிப்பிடப்பட்ட படிவத்திலான மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்த வடிவம்—மொத்தத் தொகை.

கட்டுத் தொகை—கீழ்க்கண்ட அட்டவணைப்படி.

வேலையின் பெயர்.—எண்ணூர் தெர்மல் ஸ்டேசன் வடக்கு பக்கிங்காம் கால்வாய் 2/0 விருந்து 9/5 வரை 150 சி.எஸ். அளவுள்ள ஃப்ளட் பேங்ஸ் (Flood Banks) உருவாக்குதல்.

| வரிசை எண். | எண்ணூர் தெர்மல் ஸ்டேஷனிலிருந்து மைல் அளவில். | கட்டுத் தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | ரூ. |
| 1 | மைல் 2/0 முதல் 2/4 வரை .. .. .. | 1,580 |
| 2 | மைல் 2/4 முதல் 3/0 வரை .. .. .. | 2,880 |
| 3 | மைல் 3/0 முதல் 3/4 வரை .. .. .. | 2,550 |
| 4 | மைல் 3/4 முதல் 4/0 வரை .. .. .. | 1,760 |
| 5 | மைல் 4/0 முதல் 4/4 வரை .. .. .. | 1,350 |
| 6 | மைல் 4/4 முதல் 5/0 வரை .. .. .. | 1,080 |
| 7 | மைல் 5/0 முதல் 5/4 வரை .. .. .. | 1,680 |
| 8 | மைல் 5/4 முதல் 6/0 வரை .. .. .. | 1,270 |
| 9 | மைல் 6/0 முதல் 6/4 வரை .. .. .. | 1,000 |
| 10 | மைல் 6/4 முதல் 7/0 வரை .. .. .. | 1,330 |
| 11 | மைல் 7/0 முதல் 7/4 வரை .. .. .. | 890 |
| 12 | மைல் 7/4 முதல் 8/0 வரை .. .. .. | 870 |
| 13 | மைல் 8/0 முதல் 8/4 வரை .. .. .. | 1,025 |
| 14 | மைல் 8/4 முதல் 9/0 வரை .. .. .. | 1,325 |
| 15 | மைல் 9/0 முதல் 9/5 வரை .. .. .. | 1,970 |

ஒப்பந்தப்பத்திரத்தின் விலை—ரூ. 10 அரசுக் கருவூலச் சலானில் (P.W.III.O.R.) என்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர், கூவம் மேம்பாட்டு கோட்டம், சென்னை-5, அவர்கள் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

ரூபாய் 10.40 ஒவ்வொரு வகைக்கும் விற்பனைவரி உட்பட—விற்பனை வரி 0·40 காசு (XII. B. Sales Tax miscellaneous) என்ற தலைப்பில் செலுத்தப்பட வேண்டும்.

வேலை முடிக்க வேண்டிய காலம்—ஒவ்வொரு வகைக்கும் மூன்று மாதங்கள்.

ஒப்பந்தப்பத்திரங்கள் கிடைக்க —10—8—1972 முதல் 20—8—1972 வரை.

ஒப்பந்தப்புள்ளி நாளும் நேரமும்—25—8—1972 மாலை 3-00 மணி வரை.

விளக்கமான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு நிபந்தனைகள், ஒப்பந்தப் படிவம் மற்றும் இதர விவரங்களுக்கு கீழ் கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெறலாம்.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
வீராணம் திட்ட வட்டம்,
சென்னை-5.

(த. 47)

## கிருஷ்ணகிரி நகராட்சி

அடியிற்கண்ட வேலைக்கான மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 1972-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 28-ம் நாள் மாலை 3-00 மணி வரை ஆணையர் அவர்களால் நேரில் பெற்றுக்கொள்ளப்பட்டு அன்று மாலை 3-30 மணிக்குத் திறக்கப்படும். மற்றும் இது சம்பந்தமான தகவல்களை அலுவலக நேரத்தில் தெரிந்து கொள்ளலாம்.

வேலை விவரம்.—அலுவலகத்தின் பின்புறம் மற்றொரு அலுவலகக் கட்டடம் கட்டுதல்.

மதிப்பீடு.—ரூ. 8,000.

முன்வைப்புத் தொகை.—ரூ. 400.

**துரை. குருநாதன். பி.ஏ.,பி.டி.,**
ஆணையர்.

(த. 70).

## பொதுப்பணித் துறை

வேலையின் பெயர் :—திருவாரூரில் வாரச் சந்தைக் கட்டுதல்.

மேற்படி வேலைக்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்த அறிக்கைகள் தமிழ்நாடு மாநில ஆளுநர் சார்பில் தமிழ்நாடு பொதுப்பணித் துறை, தஞ்சாவூர் வட்டம், மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால், தஞ்சாவூரில் இருக்கும் அவரது அலுவலகத்தில் 14—9—1972 மாலை 3-00 மணி வரைப் பெற்றுக் கொள்ளப்படும்.

1. ஒப்பந்தவகை :—மொத்தத் தொகை.
2. பிணைப்பணம் :—ரூ. 4,700.
3. ஒப்பந்தப் பத்திரங்களின் விலை ரூ. 30

(அரசினர் கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் "பொதுப்பணித் துறை செலுத்துத் தொகை iii மற்றைய செலுத்துத் தொகை" என்னும் தலைப்பில், நிருவாகப் பொறியாளர், கட்டடக் கோட்டம், திருவாரூர் அவர்களின் பெயரில் செலுத்தப்பட வேண்டும்—

4. விற்பனை வரி :—ரூ. 1.05

(அரசினர் கருவூலம் அல்லது இந்திய ரிசர்வ் வங்கியில் "XIIவிற்பனை வரி (பி) பற்றுச் சீட்டு—மாநில விற்பனைவரிச் சட்டத்தின்கீழ்—பொது விற்பனை வரி" என்ற தலைப்பில் செலுத்தப்பட வேண்டும்—ரூ.

5. கால அளவு :—எட்டு மாதங்கள்.
6. ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்கும் நாள் :—25—8—1972.

**அ. சேஷாத்ரி,**
மேற்பார்வைப் பொறியாளர்,
(பொறுப்பு)
தஞ்சாவூர் வட்டம்,

(த. 71)

## திருச்சிராப்பள்ளி நகராட்சி.

இந்நகராட்சி கொடமல் மருந்தகத்திற்குத் தேவையான (Furnitures) கீழ்க்கண்ட மேஜை நாற்காலி முதலிய சாமான்கள் வழங்க அரக்கு முத்திரையிட்ட உறைகளில் ஒப்பந்த புள்ளிகள் 28-8-1972 தேதி மாலே 4 மணிக்குள் ஆணையர் அவர்களால் நகராட்சி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்படும். மற்ற விவரங்களை அலுவலகத்தில் விசாரித்து தெரிந்து கொள்ளலாம்.

1. ஸ்டீல் டிராயருள்ள மேஜை—1.

2. அரைக்கை டியூப்லர் இரும்பு நாற்காலி—1.

3. இரும்பு மடிப்பு நாற்காலிகள்—2.

4. ஸ்டீல் அலமாரி (Plain)—1.
78" × 36" × 19".

ஆணையர்.

(த. 34)

## பொள்ளாச்சி நகராட்சி

நகர மன்ற லாரி எம்.டி.இ. 9278-க்கு மராமத்து வேலைகள் செய்ய மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 28-8-1972 மாலே 4-00 மணி வரை ஆணையர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் எற்றுக் கொள்ளப்படும். அவை அன்று மாலை 4.30 மணி அளவில் திறக்கப்படும். முழு விவரம் அடங்கிய ஒப்பந்தப் புள்ளிப் பாரங்கள் விண்ணப்பங்களின் பேரில் பெற்றுக் கொள்ளலாம்.

கட்டுத் தொகை. ரூ. 150.

பி. கே. முகமதுஅலி

ஆணையர்.

(த. 36)

## வேலை வாய்ப்பு

சென்னை-32 கிண்டி, கிங் நிலையம், இயக்குநர் அவர்களால் இந் நிலையத்தில் ஆவி ஆக்குபவர் (கேஸ் மேக்கர்) வேலைக்காக கீழ்க் காணும் தகுதிகள் பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப் படுகின்றன.

### தகுதிகள்

1. வேலைக்கு எற்றுக்கொள்ளப்படும் பொழுது 25 (இருபத்தைந்து) வயது நிரம்பியவராக இருக்கலாகாது.

2. அரசுரிமைப் பெற்ற எதாவது ஒரு பள்ளியில் மூன்றும் படிவமோ அல்லது 8-ம் நிலையோ தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

3. குறைந்த அளவு 2 வருடமாவது வேலைக் கூடத்தில் பொருத்தும் (பிட்டர்) அனுபவம் பெற்றவராக இருத்தல் வேண்டும். இதில் 6 மாதம் ஆவி ஆக்கும் நிலையத்தில்( கேஸ் மேக்கிங் பிளாண்ட்) அனுபவம் பெற்றவராக இருத்தல் அவசியம்.

விண்ணப்பத்தோடு வயது, தகுதிகள் முதலியவற்றுக்கான சான்றேடுகளின் (டெஸ்டிமோனியல்ஸ்) சான்றிருக்கப்பட்ட உண்மை நகல்களையும் "இயக்குநர், கிங் நிலையம், கிண்டி, சென்னை-32" என்ற முகவரிக்கு இவ்வறிப்பைத் தினத்தாள்களில் கண்ட நாளி லிருந்து பத்து (10) நாட்களுக்குள் வந்து சேருகின்ற வகையில் பதிவஞ்சலில் அனுப்ப வேண்டும்.

எற்கனெவே, வேலையில் உள்ளவர்கள், அவரவர்களின் அலுவலர் களின் வாயிலாக விண்ணப்பம் அனுப்ப வேண்டும். விண்ணப்ப தாரர்கள் தங்கள் சொந்த செலவிலேயே கிங் நிலைய இயக்குநரைப் பேட்டிக்காணத், தயார் படுத்திக் கொள்ள வேண்டும். இந்த ஆவி ஆக்குபவர்வேலை நிலையானவையோடு ரூ.140—3—155—4—115—5—210 என்ற ஊதிய விகிதத்தையும் பெற்றுள்ளன.

டாக்டர் சி. ஞானதேசிகன், எம்.டி.

இயக்குநர்.

(த.41.)

## அறிவிப்பு

## தொழில் வணிகத் துறை

தொழிற்பேட்டைகள்—தொழில் நுட்பக் கல்வி பயின்று வேலையற்று இருப்பவர்க்குரிய திட்டம்.

நன்குக நிர்மானிக்கப்பட்ட தொழிற்சாலைக்கான கட்டடங்கள் (அலகுகள்) அம்பத்தூர் தொழிற்பேட்டையில் குறைந்த மாத வாடகை யில் சிறு தொழில் நிறுவனங்களுக்காக உள்ளன. அலகின் பரப்பளவு 1,000 ச. அடி. (90 ச.மீ. சுமாராக) பொறியியல் பட்டதாரிகள் பொறியியல் டிப்ளமா பெற்றவர்கள், மேலும் தொழிற் பயிற்சி நிலையங் களில் முழுமையாக பயிற்சி பெற்றவர்களும் மேற்படி அலகுகள் வேண்டி விண்ணப்பிக்கலாம்.

தகுதியுள்ளவர்கள் குறிப்பிட்ட விண்ணப்பங்களில் 28—8—1972க் குள் திட்ட அறிக்கையுடன் அம்பத்தூர் தொழிற்பேட்டை நிருவாகிக்கு விண்ணப்பிக்கவும். தவிர ரூ. 500-ஐ வருவாய் வைப்புத் தொகையில் கட்டிய செலுத்துச் சீட்டையும் விண்ணப்பத்தோடு இணைக்கவும். இந்த வருவாய் வைப்புத் தொகையை அலகு ஒதுக்கீடு செய்யப்படாவிட்டால் திருப்பித் தரப்படும். மேலும் விளக்கமான தகவல்களுக்கு அம்பத்தூர் தொழிற்பேட்டை நிருவாகியை அணுகவும்.

தொழில் வணிக இயக்குநர்.

(த. 21)

## கடையநல்லூர் நகராட்சி


அடியிற் குறிப்பிட்டுள்ள வேலைக்கு மூடி முத்திரையிட்ட செடியூல் ஒப்பந்தம் ஆணையர் அவர்களால் 1972-ம் வருடம் ஆகஸ்டு மாதம் 26ம் தேதி சனிக்கிழமை மாலே 4-00 வரை பெற்றுக் கொள்ளப்படும். வரப்பெற்ற ஒப்பந்தங்கள் ஆஜராகியுள்ள ஒப்பந்ததாரர் முன்னிலேயில் அன்றே மாலே 4-30 மணிக்குத் திறக்கப்படும். இதர விவரங்கள் அலுவல கத்தில் அலுவலக நேரங்களில் தெரிந்துக் கொள்ளலாம். ஒப்பந்த தஸ்தாவேசுகள். ரூ. 5.20 இந்த நகராட்சி அலுவலகத்தில் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.


| வேலை விவரம். | மதிப்பீடு. | பொறுப்புத் தொகை. |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| கடையநல்லூர் நகராட்சி பஸ் நிலையம் கட்டுமான வேலை. | 90,000 | 2,250 |

பழ. நடேசன், எம். ஏ.,

ஆணையர்.

(த. 54)


N
S
MOUNT ROAD
CHAMIER'S ROAD
CENOTOPH RD
ELDAMS ROAD
MOWBARY'S RD
ST MARY'S RD
TAMIL NADU HOUSING BOARD OFFICE
TOWER BLOCK
TURNBULLS RD
NANDANAM
PROPOSED BRIDGE
TOWER BLOCK
MARMALONG BRIDGE
ADAYAR
RIVER
CANAL
KOTTUR PURAM
ENGINEERING COLLEGE
A.C. COLLEGE
E.C. STAFF QUARTERS
GUINDY ROAD
GANDHI MANDAPAM
IIT


N
30'—0" ROAD
40'—0" ROAD
40'—0" ROAD
30'—0"
40'—0"
EXISTING 80'—0" WIDE ROAD
PARK
PARK
PARK
7. SHOPS
8. SHOPS

# தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம்

## சென்னை நகரின் நடுவண் அமைந்துள்ள நந்தனம் அடுக்கு மாளிகைக்கு (Tower Block) எதிரில் உள்ள கோட்டூர்புரத்தில், பண்படுத்தப்பட்ட மனைக்கட்டுகள் பொது ஏலத்தில் விற்கப்படும்.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் சிறப்புமிக்க ஒரு குடியிருப்புத் திட்டத்தை கோட்டூர்புரத்தில் ஏற்படுத்தத் திட்டமிட்டுள்ளது. பண்படுத்தப்பட்ட மனைக்கட்டுகள் 27-8-1972 அன்று காலை 10 மணிக்கு பொது ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**முக்கிய விவரங்கள்:**

**இட அமைப்பு (Location):-** அடையாறு ஆற்றுக்கு தெற்குக் கரையில் அமைந்துள்ள கிண்டி பொறியியல் கல்லூரி, ஐ.ஐ.டி., மற்றும் அழகப்பச் செட்டியார் தொழில்நுட்பக் கல்லூரிக்கு அருகிலும், நந்தனம் அடுக்கு மாளிகைக்கு எதிர்ப்புறத்திலும் கோட்டூர்புரம் அமைந்துள்ளது. அடையாறு ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் அமைத்துக் கோட்டூர்புரத்தை, டர்ன்புல்ஸ் சாலை (Turn Bulls Road), மற்றும் சேமியர்ஸ் சாலையுடன் (Chamie'rs Road) இணைக்கும் திட்டத்திற்கான கருத்து ஆய்வில் உள்ளது கடைகள், கல்லூரிகள், அங்காடிக (Markets) பள்ளிகள் போன்ற பல வசதிகள் அருகில் உள்ளன.

**பரப்பளவு:** இந்தக் குடியிருப்பு ஏறத்தாழ 23 ஏக்கர் அளவுடையது.

**வடிவமைப்பு (Design):-** இத்திட்டத்தின் மனைக்கட்டு அமைப்பு (Lay-out), நகர அமைப்பாளர் மற்றும் கட்டிட வல்லுநர்கள் கொண்ட குழுவினரால் தயாரிக்கப் பட்டுள்ளது. ஒவ்வொரு மனைக்கட்டும் ஒன்று, ஒன்றரை மறறும் இரண்டு மனை (Grounds) பரப்பளவில் கிடைக்கும்.

**சிறப்பியல்புகள்:** பாதுகாக்கப்பட்ட குடிநீர் பாதாளச் சாக்கடை, தெருவிளக்குகள் முதலிய வசதிகளுடன் இ குடியிருப்பு அமையும். இயற்கைக் காட்சிகளுடன் இப்பகுதி அழகுற அமைந்திருக்கும்.

இக்குடியிருப்பில் குடியிருக்கும் மக்களின் தேவைகளுக் கான அங்காடிகள் (Shopping Centre) அமைக்கப்படும்

**ஏலத்தில் கலந்துகொள்வதற்கான குறிப்பிட்ட விண்ணப்பப் படிவத்தை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் வரவேற்பு அறையில் ரூ. 10/- (ரூபாய் பத்து மட்டும்) செலுத்தி நேரடியாகப் பெற்றுக்கொள்ளலாம். அல்லது ரூ. 13/- (ரூபாய் பதின்மூன்று மட்டும்) செலுத்தி அஞ்சல் வழி பெற்றுக்கொள்ளலாம்.**

**இது குறித்து மேற்கொண்டு விவரங்கள் ஏதும் தேவையாயின், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தின் உதவிச் செயலாளரை (1) அணுகவும். அல்லது தன் முகவரி குறித்த 25 காசு அஞ்சல் தலையிட்ட உறை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.**

ஒரு கிரெளண்டு (ரூ. 18,000/-) ரூபாய் பதினெட்டாயிரத்திற்கு மேல் வாங்குவதற்கு விருப்பமுடையவர்கள் மட்டுமே விண்ணப்பம் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**தி.வே.வாசுதேவன் I.A.S**
தலைவர்
தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்

36, அண்ணா சாலை,
சென்னை-35

## மதுரை வீட்டு வசதி யூனிட்

### (தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்)

கீழ்க் கண்ட வேலைக்காக, வேலையின் பெயரும் ஒப்பந்ததாரரின் பெயரும் உறையின்மீது குறிப்பிடப்பட்ட தனித்தனியான ஒப்பந்தப் புள்ளிகள் கீழ்க் கையொப்பமிட்டவருக்கு 7—9—1972 மாலை 3–00 மணிக்கு மேற்படாதவாறு வந்து சேருமாறு வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப் படிவம் மற்றவைகள், யூனிட் அலுவலகத்தில், 27—8—1972 முதல் 6—9—1972 வரை எல்லா வேலை நாட்களிலும் காலை 11–00 மணி, முதல் மாலை 3–00 மணி வரை கீழ்க்கண்டவாறு தொகையைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளாலம்.

| வரிசை எண்ணும் வேலையின் பெயரும். | ஒப்பந்தப் பத்திரங்கள் விலை. | வேலையின சுமார் மதிப்பு. | கட்டுத் தொகை. |
|---|---|---|---|
| 1. பர்மாவிலிருந்து திரும்பிய அகதிகளுக்கு தனக்கன் குளத்தில் TD 178/70-ன் படி கேட்டெனரி ட்வின் வீடுகள் கட்டுதல்— | ரூ. | ரூ. | ரூ. |
| 15 கட்டிடங்கள் பிரிவு 1-ன் கீழ் .. .. .. .. .. .. .. | 10·00+ விற்பனை வரி. | 94,500 | 1,230 |
| 15 ஷை 2-ன் கீழ் .. .. .. .. .. .. .. | ஷை | 94,500 | 1,230 |
| 15 ஷை 3-ன் கீழ் .. .. .. .. .. .. .. | | 94,500 | 1,230 |
| 15 ஷை 4-ன் கீழ் .. .. .. .. .. .. | 5·00+ விற்பனை வரி. | 31,500 | 475 |

ஒப்பந்தப்புள்ளிகள் அதே நாள் 7—9—1972 மாலை 3–30 மணிக்கு நிருவாகப் பொறியாளர் நிருவாக அலுவலர்களால் அச்சமயம் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்களது ஏஜெண்டுகள் முன்னிலையில் திறக்கப்படும்.

**வி. செல்வராஜ்,**
நிருவாகப் பொறியாளர்,
நிருவாக அலுவலர்.

(த. 56)

## அசோக் நகர் கோட்டம்

### (தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்)

கீழ்க்கண்ட வேலைக்காக, வேலையின் பெயரும், ஒப்பந்ததாரரின் பெயரும் உறையின் மீது குறிப்பிடப்பட்ட மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள், கீழ்க் கையொப்பமிட்டவருக்கு 15—9—1972 மாலை 3–00 மணிக்கு மேற்படாதவாறு வந்து சேருமாறு வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்த புள்ளிகள் அதே நாள் மாலை 3–30 மணிக்கு அச்சமயம் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்களது அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

| வேலையின் பெயர். | வேலையின் சுமார் மதிப்பு. | கட்டுத்தொகை. | ஒப்பந்தப் பத்திரம் கிடைக்கும் நாள். | ஒப்பந்தப் பத்திரத்தின் விலை. | ஒப்பந்தப் புள்ளி பெறுவதற்கான கடைசி நாள். |
|---|---|---|---|---|---|
| 1. அடையாறு வடக்குப் பகுதி அருகில், கலைஞர் கருணாநிதி நகர் திட்டத்தில், சர்வே எண் 348—350-ல் உள்ள காஸ்வே மேற்குப் பகுதியில் மேடான பகுதிகளை வெட்டி அகற்றுதல். | ரூ. 98,800 | ரூ. 1,500 | 24—8—1972 | ரூ. 10+ விற்பனை வரி மற்றும் சர்ச் சார்ஜ். | 15—9—1972 |

ஒப்பந்தப் பத்திரங்கள் மற்றவைகள், நிருவாகப் பொறியாளர் அலுவலகம், அசோக் நகர் கோட்டம், வீட்டு வசதிவாரியம், 1-வது அவின்யூ, அசோக் நகர், சென்னை-83-ல் மேற்குறிப்பிட்ட தேதியிலிருந்து எல்லா வேலை நாட்களிலும் காலை 11–00 மணி முதல் மாலை 3–00 மணி வரை பெறலாம்.

**எ. அம்பாதாஸ்,**
திருவாகப் பொறியாளர்,
(அசோக் நகர்).

(த. 53)

## பொதுப்பணித் துறை

சென்னை நகரம் பொதுப்பணித்துறை, சென்னை-செங்கற்பட்டு வட்டப் பொதுப்பணிக் கோட்டங்களில் உள்ள பழைய மற்றும் டிஸ்மேன்டில்டு மெட்டீரியல்ஸ்களை எடுத்துச்செல்வதற்காகப் பதிவு செய்யப்பட்ட ஏலதாரர்களிடமிருந்து மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 15—9—1972 மாலை 3–00 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

விருப்பமுள்ள ஒப்பந்ததாரர்கள் தங்களுக்குச் செலுத்தப்பட வேண்டிய கமிஷன் தொகையைக் குறிப்பிட வேண்டும். மற்றும் அவர்களுடைய ஏல அனுபவங்களைப்பற்றிப் போதுமான விவரங்கள் கொடுக்கப்படவேண்டும்.

ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒப்பந்ததாரர் காப்புத் தொகையாக ரூ. 7,500 செலுத்த வேண்டும். மற்றும் துறைக்கான படிவத்தில் ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டும். ஒப்பந்தம் நவம்பர் 1 முதல் 1975 அக்டோபர் 31 முடிய உள்ள மூன்றாண்டுக் காலத்திற்கு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட வேண்டும்.

எழுதப்பட வேண்டிய ஒப்பந்தப்பத்திரங்களின் படிவங்கள் மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம், பொதுப்பணித்துறை, சென்னை செங்கற்பட்டு வட்டம், சேப்பாக்கம், சென்னை-5 அலுவலகத்தில் நேரில் பரிசீலித்துக்கொள்ள முடியும் அல்லது மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித்துறை, சென்னை-செங்கற்பட்டு வட்டம், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களுக்கு விண்ணப்பக் கடிதத்தோடு ரூ. 2 அனுப்பிவைத்தும் பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப் பத்திரங்கள் எழுதிக்கேட்பதற்கான மனுக்கள் பெறுவதற்கோ அல்லது அலுவலகத்தில் நேரிடையாக ஒப்பந்தப் படிவங்களை பரிசீலிப்பதற்கோ கடைசிநாள் 5—9—1972. (எல்லா வேலை நாட்களிலும் இந்த அலுவலகத்தில்)

குறிப்பிட்ட தேதிக்குப் பின்னர் வரும் ஒப்பந்தப் புள்ளிகள் கவனிக்கப்பட்டமாட்டாது.

**பி. கே. கந்தசாமி,**
மேற்பார்வைப் பொறியாளர்,
சென்னை, செங்கற்பட்டு வட்டம்.

(த. 15)

## பாளையங்கோட்டை நகராட்சி

**நகராட்சி** ஆணையர் அவர்களால் எட்டுத் தெருக்களுக்கு ரூ. 23,300 மதிப்பீட்டில் குடிநீர் சப்ளை மெயின் குழாய் பதிப்பதற்கு தேவைப்படும் 3" சிமிண்டு குழாய் அவைகளுக்கான ஜாயிண்டு, ஸ்லூயிஸ் வால்வு, டெயில்பீஸ், ரோடுபாக்ஸ் முதலிய இதர சம்பந்தப்பட்ட சாமான்கள் சப்ளை செய்ய மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் ரூ. 1,165 டிப்பாசிட் தொகையுடன் 29—8—1972-ம் தேதி மாலை 4 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். முழு விவரங்கள் கொண்ட ஒப்பந்த அறிக்கை அலுவலகத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

**க. ஜனார்த்தனம், எம்.ஏ.,**
ஆணையர்.

(த. 66)

# வேலை வாய்ப்பு

## அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம்

தமிழ்நாடு மருத்துவ சர்வீஸில் ஒதுக்கப்பட்டுள்ள 22 உதவி சர்ஜன்கள் நியமனம் செய்து நிரப்புவதற்கு, தேச நெருக்கடியின் போது பாது காப்பு அணியில் பணிபுரிந்தவர்களிடமிருந்து 31 ஆகஸ்ட் 1972 மாலை 5-00 மணிவரை மனுக்கள் வரவேற்கப்படுகின்றன.

(மாநில அரசின் கீழ் தற்காலிகப் பணியிலிருப்பவர்கள், தங்கள் மனுக்களை, மக்கள் நல்வாழ்வுப் பணி மற்றும் குடும்பநலத்துறை இயக்குநர் மருத்துவக்கல்வி இயக்குநர், சென்னை-5 அவர்களுக்கு 21 ஆகஸ்ட் 1972-க்கு முன்னர் வந்து சேருமாறு அனுப்ப வேண்டும்.)

சம்பளம்—ரூ. 525—25—600—30—690—35—900 மாதம் ஒன்றுக்கு, பட்டதாரிகளுக்கு மற்றும் ரூ. 425—25—600—30—750 மாதம் ஒன்றுக்கு, தமிழ்நாடு அரசின் D.M. & S. பெற்றிருப்பவர்களுக்கு.

எந்த மருத்துவ பாடங்களிலாவது அங்கீகரிக்கப்பட்ட பட்ட மேற் படிப்புத் தகுதி பெற்றிருப்பவர்கள், அவர்களுக்குரிய சம்பள விகிதத் துடன் இரண்டு அட்வான்ஸ் இன்கிரிமென்ட்ஸ் பெற அனுமதிக்கப்படு வார்கள். எனஸ்த்தீசியாவில்( Anaesthesia ) பட்ட மேற்படிப்பு டிப்ளமா மற்றும் கிரிமினலஜியில் டிப்ளமா பெற்றுள்ள மனுதாரர்கள் ஒரு அட்வான்ஸ் இன்கிரிமென்ட் பெற அனுமதிக்கப்படுவார்கள்.

வயது—1–7–1972 அன்று 35 வயதிற்குக்குறைவாக. மருத்துவக் கல்லூரிகளில் கிளினிகள் அல்லாத போதனைத் துறைகளில் பணிபுரிய விரும்புகிற பெண் மருத்துவ அலுவலர்கள் மற்றும் தற்காலிக உதவி சர்ஜன்கள் ஆகியோர் வயது விசயத்தில் குறிப்பிட்ட சலுகை அனுமதிக் கப்படும். தேசீய நெருக்கடியின் போது மனுதாரர் பணிபுரிந்த காலம், ஒதுக்கப்பட்டுள்ள இடங்களுக்கு ஆள் சேர்க்குபோது, வயது கணக்கிடு கையில் குறைக்கப்படும்.

தகுதி—1. சென்னை மருத்துவப் பதிவுச் சட்டம் 1914-ன் படி செய்யப் பட்ட மருத்துவப் பயிற்சியாளராக இருக்க வேண்டும்.

2. எந்தப் பல்கலைக் கழகத்திலாவது அல்லது பல்கலைக் கழக மானிய குழுவினால் அதன் மானியத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட நிறு வனத்தில் எம்.பி.பி.எஸ். பட்டம் அல்லது தமிழ்நாடு அரசு D.M. & S. அல்லது அதற்குச் சமமான தகுதி.

தாழ்த்தப்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட மலைச்சாதி வகுப்பினர், பின் தங்கிய வகுப்பினர் ஆகியோர், குறைந்த பட்ச பொதுக் கல்வித் தகுதிக்கு மேலான பொதுக் கல்வி தகுதி பெற்றிருப்பவர்கள் ஆகியோர் விசயத்தில் வயது வரம்பு கிடையாது. தேசீய நெருக்கடியின் போது மனுதாரர் இராணுவப் பணியில் இருந்த காலம் வயது கணக்கிடும்போது குறைத்துக் கொள்ளப்படும். அங்கஈனமுற்றவர்கள் விசயத்தில் அதிக பட்ச வயது வரம்பு 10 ஆண்டுகள் வரை தளர்த்தப்படும். தங்கக் கட்டுப் பாடு சட்டத்தினால் பாதிக்கப்பட்ட பொற்கொல்லரின் மகன்கள், மண மாகாத மகள்கள், 1–1–1963-ல் அல்லது அதட்குப் பிறகு முழுநேர அடிப்படையில் அண்டர் ஆபிஸர் இன்ஸ்ட்ரக்டர் அல்லது சார்ஜண்ட் மேஜர் இன்ஸ்ட்ரக்டர்ராக பணிபுரிந்த முன்னாள் தேசீய மாணவர் படையைச் சேர்ந்தவராக இருந்தால் வயது விசயத்தில் சலுகை உண்டு, 1964-ம் வருடம் சனவரி மாதம் 1-ம் தேதியில் அல்லது அதற்குப் பிறகு கிழக்குப் பாக்கிஸ்தானிலிருந்து குடி பெயர்ந்து வந்தவர்கள் விசயத்தில் இலங்கை பர்மா முதலிய நாடுகளிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டவர்கள் விசயத்திலும் வயது வரம்பு உட்படத் தகுதிகள் தளர்த்தப்படும்.

மனுவடிவங்களையும், பிற விவரங்களையும், செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம் சென்னை-2 என்ற முகவரிக்குப் பதவிப் பெயரைக் குறிப்பிட்டுக் கடிதம் எழுதி 23 செ.மீ. நீளமுள்ள தன் முகவரி எழுதிய (0.30 காசு நூல் அஞ்சல் வில்லை 0.05 காசு அகதிகள் வில்லை) ஒட்டப்பட்டு நூல் அஞ்சல் என்று குறிப்பிடப்பட்ட உறையை உடன் வைத்து அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

(த. 18)

---

# ஒப்பந்தப் புள்ளி

---

## தஞ்சாவூர் நகராட்சி

தஞ்சை மின் பிரிவின் உபயோகத்திற்குக் கீழ்க்கண்ட பொருட்கள் வழங்க நகராட்சி ஆணையர் அவர்களால் 30–8–1972-ம் தேதி மாலை 4-00 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று மாலை 4-15 மணிக்குத் திறக்கப்படும்.

| பொருட்களின் விவரம். | பொறுப்புத் தொகை. |
|---|---|
| | ரூபாய். |
| (1) 4 அடி 40 வாட்ஸ் குழாய் விளக்கு மற்றும் 40 வாட்ஸ் அண்டு 20 வாட்ஸ் குழாய் விளக்குகளுக்கான ஸ்டாட்டர்கள். | 250 |

விரிவான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பும், ஒப்பந்தப் படிவமும் நக ராட்சி மின் பொறியாளர், தஞ்சாவூர் அவர்களுக்கு ரூ. 2 மணியார்டர் மூலமாக அனுப்பி (திருப்பித் தரப்படமாட்டாது) பெறலாம். அஞ்சல் ஆணை, காசோலை ( Cheque ) ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஆ. சேவுகபாண்டியன்,
ஆணையர்.

நகராட்சி அலுவலகம்,
தஞ்சாவூர்-1.

(த. 58)

---

## தூத்துக்குடித் துறைமுக வாரியம்

"துறைமுகத்தின் வடபகுதியில் சரக்கு வைக்கும் கூடம் ( Store Shed) கட்டும்" வேலைக்கு காண்டிராக்டின் உத்தேச மதிப்பு ரூ. 15,000 ஒப்பந்தப்புள்ளிகள் 2—9—1972 மாலை 4 மணி வரை தூத்துக்குடி துறைமுக வாரியத் தலைவரால் வரவேற்கப்படுகின்றன. தூத்துக்குடி துறைமுக வாரியத்தில் பதிவு செய்யப்படாதவருடைய ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டால் அவர் வேலை உத்தரவு கிடைத்த 30 தினங்களுக்குள் துறைமுக வாரிய விதிகளின்படி துறைமுக வாரியத்தால் பதிவு செய்யப்பட்ட காண்டிராக்டராக வேண்டும். அப்படி செய்யத்தவறினால், அவருக்குக் கொடுக்கப்பட்ட வேலை உத்தரவு ரத்து செய்யப்படும். அத்துடன் அவர் கட்டிய முன்வைப்புத் தொகையும் திருப்பித் தரப்படமாட்டாது. ஒப்பந்தப் புள்ளிகள் வேண்டு வோர் 1972-ம் வருடம் ஆகஸ்டு மாதம் 30-ம் தேதி வரை ரூ. 11 (ரூபாய் பதினொன்று மட்டும்) செலுத்தி, கீழ்க் கையொப்பமிட்டவரிட மிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

காப்டன் டி. டி. ராமச்சந்திரன்,
துறைமுக அதிகாரி & காரியதரிசி.

(த. 31)

---

# ஏல அறிவிப்பு

---

## நெடுஞ்சாலைப் பொறியியல் பணித் துறை

எண். 17058/71 பி3 நாள் 26—7—72

இவ்விலாக்காவிற்குச் சொந்தமான கீழே குறிப்பிட்டுள்ள உபயோகத்திற்கு லாயக்கற்ற லாரிகளை 1972-ம் வருடம் ஆகஸ்டு மாதம் 30-ம் தேதி புதன் கிழமை காலை 11-00 மணிக்கு புதுக்கோட்டை (நெடுஞ்சாலை) போக்குவரத்து மற்றும் இயந்திர உதவிப் பொறியாளர் அவர்களால் புதுக்கோட்டை அரசினர் நெடுஞ்சாலைத் தொழிற் பட்டறையில் பகிரங்கமாக ஏலம் விடப்படும்.

அந்த லாரிகளை தொழிற் பட்டறையில் அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் காலை 8-00 மணி முதல் மாலை 5-00 மணி வரை பார்வை யிடலாம்.

1. லாரி எம். எஸ். பி. 2023.
2. லாரி எம். எஸ் இசட். 1644.
3. லாரி எம். எஸ். பி. 1873.

ஏலம் கேட்பவர்கள் வைப்புத்தொகை (டெபாசிட்) ரூபாய் 500 (ஐந்து நூறு மட்டும்) உதவிப் பொறியாளரிடம் ஏலம் ஆரம்பிக்குமுன் கட்டவேண்டும். இத்தொகை ஏல முடிவில் திருப்பிக் கொடுக்கப்படும்.

ஏலம் எடுத்தவர் முடிவான ஏலத் தொகையில் 25 சதவிகிதம் (இருபத்தைந்து சதவீதம்) ஏலம் விடப்பட்டவுடன் செலுத்த வேண்டும். மீதமுள்ள விற்பனை வரியும் ஏலம் ஊர்ஜிதம் செய்யப்பட்டவுடன் லாரிகளைத் தன் வசம் எடுத்துக் கொள்ளும்போது செலுத்த வேண்டும்.

எஸ். தனபாலன்,
கோட்டப் பொறியாளர்,
நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை, புதுக்கோட்டை.

(த 30)

# நெற்பயிரையும் களையையும் வேற்பிரித்தறிவது கடினமானதால், நாங்கள் களையை மட்டும் ஒழிக்கும்

# ஸ்டாம் F-34

# தயாரித்திருக்கிறோம்



களையைப் பிய்த்தெடுக்கும்போது நிறைய நெற்பயிர்களும் பிய்ந்து வருகின்றன அல்லவா? மேலும், கையால் பிய்த்தெடுப்பது சிரமமான காரியம். நிறைய சமயம் விரயமாகிறது. களையை அறவே ஒழிக்கவும் முடியாது. ஆகவே புது வழியைப் பின்பற்றி களைகொல்லியான ஸ்டாம் F-34 தெளியுங்கள். அது நெற்பயிர்களுக்கு ஒரு கெடுதலும் விளைவிக்காமல் களையை மட்டுமே ஒழிக்கிறது. இதன் பயனாக நெற்பயிர் அதிக ஆரோக்கியமானதாகச் செழித்து வளரும். உங்கள் வருவாயும் பெருகும்.

ஸ்டாம் F-34 — குறைந்த செலவில் துரிதமாக களையை மட்டும் ஒழிக்கும் அற்புத களைகொல்லி!




இண்டோஃபில் கெமிக்கல்ஸ் லிமிடெட்
பம்பாய் 25, இந்தியா

STAM F-34 என்ற பெயரும், ஃப்ளாஸ்க்கின் சின்னமும், ரோம் அண்ட் ஹாஸ் கோ., ஃபிலடெல்ஃபியா, பா., வின் டிரேட் மார்க்குகள். இவை யு.எஸ்.ஏ. மற்றும் இதர நாடுகளில் ரெஜிஸ்டர் செய்யப்பட்டவை.

P.9058

## இராசிபுரம் நகராட்சி

கீழ்க்கண்ட பணியை செய்து முடிக்க மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 1972-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 28-ம்தேதி திங்கட்கிழமை மாலை 4 மணி வரை ஆணையர் அவர்களால் பெற்றுக் கொள்ளப்படும். விவரங்கள் அலுவலகத்தில் தெரிந்துகொள்ளலாம்.

| வேலையின் பெயர். | மொத்த மதிப்பீட்டுத் தொகை. | கட்டுத் தொகை. |
|---|---|---|
| | ரூபாய். | ரூபாய். |
| 1. சுகாதாரத் தொழிலாளிகளுக்கு 2 வீடுகள் கொண்ட பிளாக்குகள் 7 கட்டுதல் (ஏ. பிளாக்கு). | 35,000 | 875 |
| 2. சுகாதாரத் தொழிலாளிகளுக்கு 2 வீடுகள் கொண்ட 7 பிளாக்குகள் (பி. பிளாக்கு) | 35,000 | 875 |

வெ. பாலசுப்ரமணியம்,
ஆணையர்.

(த. 86)

## விழுப்புரம் நகராட்சி

நவாப் தோப்பு நகராட்சி உயர்நிலைப் பள்ளிக்கு சுற்றுமதில் கட்டும் வேலைக்கு பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப் புள்ளிகள் மூடி அரக்கு முத்திரையிட்ட உறைகளில் 28—8—1972 மாலை 4 மணி வரை ஆணையர் அவர்களால் தனது அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும்.

| | ரூபாய். |
|---|---|
| வேலையின் மதிப்பீட்டுத் தொகை .. .. .. | 16,300 |
| வேலையின் ஒப்பந்தத் தொகை .. .. .. | 15,317 |
| செலுத்த வேண்டிய பொறுப்புத் தொகை .. .. | 770 |

ஒப்பந்த நமூனாக்கள் ( Tender Schedule ) 28—8—1972 மாலை 3 மணிவரை அலுவலக வேலை நாட்களில் ரூபாய் 2 செலுத்தி விண்ணப்பித்தலின் பேரில் பெற்றுக் கொள்ளலாம். மற்ற விவரங்களும், ஒப்பந்த நிபந்தனைகளும் அலுவலகத்தில் கோரி பெற்றுக் கொள்ளலாம்.

பெ. இ. பத்மநாபமேனன்,
ஆணையர்.

(த. 81)

## தூத்துக்குடி நகராட்சி

கீழ்க்கண்ட ரோடுகளுக்கு 30—8—1972-ம் தேதி மாலை 4 மணி வரை மூடி முத்திரையிட்ட தனித்தனியான ஒப்பந்தப் புள்ளிகள் ஆணையரின் நேர்முக உதவியாளரால் பெற்றுக் கொள்ளப் பட்டு அன்று மாலை 4-30 மணிக்குத் திறக்கப்படும். மற்ற விவரங்களுக்குப் பொறியர் அவர்களுக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

| வேலையின் பெயர். | முன் வைப்புத் தொகை. ரூ. |
|---|---|
| 1. டூவிபுரம் 2-ம் தெருவின் ஓரங்களில் தார் ரோடு போட | 235 |
| 2. ஜெயராஜ் ரோட்டில் புதிதாக ஆர்ஜிதம் செய்த இடத்தில் ரோடு போட .. .. .. .. | 255 |
| 3. டேவிஸ்புரம் பாதைத்தை அடுத்த பள்ளத்தை நிரப்பித் தார் ரோடு போட .. .. .. .. | 150 |
| 4. எஸ். எஸ். பிள்ளை தெருவிற்குத் தார் ரோடு போட.. | 85 |
| 5. தெற்கு சம்பந்த மூர்த்தி தெருவிற்குத் தார் ரோடு போட | 150 |
| 6. சாரங்கபாணித் தெருவிற்குத் தார் ரோடு போட .. | 125 |
| 7. தாமோதரநகர் மெயின் ரோட்டிற்குத் தார் ரோடு போட | 200 |
| 8. போல்டன்புரம் 1-ம் தெருவிற்குத் தார் ரோடு போட .. | 175 |

சி. சங்கரலிங்கம் பி.ஏ.,
ஆணையர்.

(த. 78)

## மாயூரம் நகராட்சி

திரு. வி. க. மார்க்கெட்டில் ஆறு ஸ்டால்கள் கட்டுவதற்கு ரூபாய் 6,500-க்கும் நகராட்சியிலுள்ள நகர சுத்தித் தொழிலாளர்களுக்கு முதற்படியாக 10 ஜதை வீடுகள் கட்டுவதற்கும் ஜதை 1-க்கு ரூபாய் 4,200 வீதம் ரூபாய் 42,000 க்கும், சானிடரி சந்துகளில் மேடாக உள்ள மண்ணை வெட்டி அப்புறப்படுத்துவதற்கு ரூபாய் 8,500-க்கும் ஆக கூடுதல் ரூபாய் 57,000-க்கான வேலைகளுக்கு 28—8—1972 மாலை 4 மணி வரை ஆணையர் அவர்களால் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும். மேற்கண்ட வேலைகளின் விவரங்களை நகராட்சிக் கருவூலத்தில் ஒவ்வொரு வேலைக்கும் ரூபாய் ஒன்றும் காசு நான்கு விற்பனை வரியும் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

வி. டி. உமாபதி,
ஆணையர்.

(த. 84)

## நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைக்கான அரக்கு முத்திரையிட்ட ஷெட்யூல் ஒப்பந்தங்களை கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை காவேரிப் பாலம் தனிக் கோட்டம்), குளித்தலை அவர்கள் 44-ஏ, காவேரி நகர், குளித்தலை விலாசத்திலுள்ள அவருடைய அலுவலகத்தில் 18—8—1972 அன்று பிற்பகல் 3-15 மணி (அலுவலகக் கடிகாரப்படி) வரையில் தமிழ் நாடு ஆளுநருக்காகவும் அவருடைய சார்பிலும் பெற்றுக் கொள்வார். இந்த ஒப்பந்தங்கள் இதே தேதியன்று பிற்பகல் 3-30 மணிக்குத் திறக்கப் படும்.

1. திருச்சிராப்பள்ளி ஜில்லா முசிறி—குளித்தலையை இணைக்கும் காவேரிப் பாலத்தின் குளித்தலைப் பக்க அணுகுசாலை அமைத்தல், செயின் 1-350 வரை. பொறுப்புத் தொகை டெபாசிட்: ரூபாய் 2,425 ஒப்பந்த ஷெட்யூல் கிடைக்கும் விலாசம் : கோட்டப் பொறியாளர், காவேரிப்பால தனிக் கோட்டம், 44-ஏ, காவேரி நகர், குளித்தலை.

2. திருச்சிராப்பள்ளி ஜில்லா முசிறி—குளித்தலையை இணைக்கும் காவேரிப் பாலத்தின் குளித்தலைப் பக்க அணுகு சாலை அமைத்தல் செயின் 350—558. 78 வரை. ஆர். எல். 90·00 கீழ். பொறுப்புத் தொகை டெபாசிட்: 2,065. ஒப்பந்த ஷெட்யூல் கிடைக்கும் விலாசம் : கோட்டப் பொறியாளர் காவேரிப்பால தனிக்கோட்டம், 44 ஏ, காவேரி நகர், குளித்தலை.

ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனை வரி உட்பட ரூபாய் 10-35 வீதம் தொகை செலுத்தி எழுத்து மூலம் வேண்டிக் கொள்வதன் மூலம் கோட்டப் பொறியாளர் அலுவலகம் (நெடுஞ்சாலை) காவேரிப்பாலத் தனிக் கோட்டம், குளித்தலை விலாசத்திலிருந்து 10—8—1972-லிருந்து 17—8—1972 வரையிலான வேலை நாட்களில் அலுவல் நேரங்களில் ஒப்பந்த நிபந்தனை விவரங்கள், நிர்ணய பாரங்கள், ஷெட்யூல்கள், பிளான்கள் முதலியவற்றைப் பெறலாம். இந்தத் தொகை திருப்பித் தரப்படமாட்டாது.

மாற்றிய வடிவமைப்புக் கொண்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பொறுப்புத்தொகை டெபாசிட்டை மேற் கண்ட கோட்டப் பொறியாளரின் (நெடுஞ்சாலை) தனிக்கோட்டம், குளித்தலை அதிகார எல்லைக்குள் உள்ள அரசினர் கருவூலங்கள் எதிலும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பில் செலுத்தியதற்கான சலானை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். இது தவிர 10 வருட தற்காப்பு டெபாசிட் அத்தாட்சிகளும், 12 வருட தேசிய தற்காப்பு அத்தாட்சிகளும், மாநில அரசு சட்டப் பத்திரங்களும், தமிழ்நாடு மாநில மின்சார வாரியப் பத்திரங்களும் ஷெட்யூல் பாங்குகளால் வழங்கப்படும் பாங்க் காரண்டிகளும் டிமாண்ட் டிராப்டுகளும் டெபாசிட் அழைப்பு ரசீதுகளும் பொறுப்புத் தொகைக்காக ஏற்றுக் கொள்ளப்படும்.

பாங்கு காரண்டிகள் சமர்ப்பிக்கப்படும் பொழுது ரிசர்வ் பேங்க் ஒப்புதல் பெற்று ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். அவ்விதம் அனுப்பப்படாத ஒப்பந்தப் புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

முன் பணவைப்புத் தொகைக்கான ரசீது இல்லாத ஒப்பந்தங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

கோட்டப் பொறியாளர் (நெ) தனி,
காவேரிப்பால கோட்டம்.

(த. 80)

VOLTAS

# பருத்திப்பயிர் களுக்குப் பாதுகாப்பளிக்க மிகச் சிறந்தது



## ஜோலோன்®

மூலப் பொருள்

## ‘ரோன்-பொலெங்க்’

பாரீஸ், பிரான்ஸ், ஸ்தாபனத்தாரால் கண்டுபிடிக்கப்பட்ட **போஸலோன்** பூச்சி மருந்து

RHÔNE-POULENC

உலகப் புகழ்பெற்ற பூச்சி மருந்து தயாரிப்பாளர்களான, பிரான்ஸ் நாட்டு ரோன்—பொலெங்க் நிறுவனத்தாரால் கண்டுபிடிக்கப்பட்ட போஸலோனை மூலப்பொருளாகக் கொண்ட ஜோலோன் பூச்சி மருந்து இப்போது இந்தியாவில் கிடைக்கிறது. அது விவசாயிகளுக்கு நோயற்ற, செழிப்பான பருத்தி மகசூலை அளிக்கிறது. காய் துளைக்கும் புழுக்கள், வெள்ளை ஈக்கள், உறிஞ்சும் பூச்சிகள், இலை தின்னும் புழுக்கள், செடிப் பூச்சிகள், வண்டுகள் முதலியவற்றிலிருந்து பரிபூரணப் பாதுகாப்பு அளிப்பதைத் தவிர, ஜோலோன் பருத்திப்பயிர்களைக் காய்ப்புழுக்கள் தாக்குவதிலிருந்தும் பரிபூரணமாகப் பாதுகாக்கிறது. மேலும் ஜோலோன் பயிர்ச்சிலந்தியை ஈடற்ற முறையில் கட்டுப்படுத்துவதால், அதனுடன் ஸல்பரோ அல்லது வேறு எந்தப் பூச்சி மருந்தோ உபயோகப்படுத்தத் தேவையில்லை.

**காய்கறிகள், பழங்கள் மற்றும் உணவுப் பயிர்களைப் பாதுகாத்திட ரோன்—பொலெங்கின் மற்றுமோர் தயாரிப்பு கில்வால் (மூலப்பொருள் வேமிடோதியோன் ஸிஸ்டமிக் (Systemic) பூச்சிமருந்து) மிகச்சிறந்தது.**

பாரதத்தின் பசுமைப் புரட்சியைப் பாதுகாப்பது

## ‘ரோன்-பொலெங்க்’

பூச்சி மருந்துகள்

மேலும் விவரங்களுக்கு, கீழ்க்கண்ட முகவரிக்குத் தயவுசெய்து தொடர்பு கொள்க:

**வோல்டாஸ் லிமிடெட்**
கெமிக்கல்ஸ் டிவிஷன்,
19, கிரஹாம் ரோடு, பெல்லார்ட் எஸ்டேட்,
பம்பாய்-1.

## சேலம் நகராட்சி

சேலம் நகராட்சியின் கீழ்க்கண்ட பொதுவேலைகள் செய்வதற்கான மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் 30—8—1972-ம் தேதி மாலை 3 மணிவரை நகராட்சி ஆணையாளரின் நேர்முகத் துணைவர் அவர்களால் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும். அன்றே மாலை 3·15 மணிக்குத் ஒப்பந்தங்கள் திறக்கப்படும்.

குறிப்பு.—வேலைகளுக்கு எதிரே குறிப்பிட்டுள்ள வைப்புத் தொகையையும் ஒப்பந்த ஷெட்யூல் கட்டணம் ரூ. 2-யையும் 29—8—1972-ம் தேதிக்குள் செலுத்தி ஷெட்யூல் பெற்றுக் கொள்ள வேண்டும். மற்ற விவரங்களுக்கு ஆணையாளரை அணுகவும்.

| வரிசை எண்ணும் வேலை விவரமும். | மதிப்பீடு தொகை. | வைப்புத் தொகை. | வேலை முடிக்க வேண்டிய காலம். |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | |
| (1) | (2) | (3) | (4) |
| 1 நகராட்சி அலுவலகத்திலிருந்து பெரியார் சிலை வரை மெயின் ரோடுக்குத் தார் கலந்த ஜல்லி போட. | 30,000 | 750 | 3 மாதங்கள் |
| 2 கோட்டை மெயின்ரோடுக்குப் பங்களாத் தெரு சந்திப்பிலிருந்து பழைய மார்க்கட் தெரு சந்திப்பு வரை தார் கலந்த ஜல்லி போட. | 33,500 | 840 | ஷை |
| 3 சையத்மதார் சாயபு தெரு சந்திப்பிலிருந்து பங்களாத் தெரு சந்திப்பு வரை செவ்வாய்ப் பேட்டை மெயின் ரோடுக்குத் தார் கலந்த ஜல்லி போட. | 32,000 | 800 | ஷை |
| 4 லாங்லி ரோடு சந்திப்பிலிரிந்து சையத் மதார் சாயபு தெரு சந்திப்பு வரைசெவ்வாய்ப்பேட்டை ரோடுக்குத் தார் கலந்த ஜல்லி போட. | 30,000 | 750 | ஷை |
| 5 செவ்வாய்ப் பேட்டை மெயின் ரோடுக்கு கள்ளிக்கோட்டை டிரங் ரோடிலிருந்து லாங்லி ரோடு சந்திப்பு வரை தார் கலந்த ஜல்லி போட. | 40,000 | 1,000 | ஷை |

பி. ஹமீதலி,
ஆணையர்.

(த. 60)

## தஞ்சாவூர் நகராட்சி

தஞ்சாவூர் நகராட்சி பேருந்து நிலைய அபிவிருத்தி கட்டடங்கள் கட்ட மதிப்பீடு ரூ. 1,93,000-க்கான வேலைக்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 30—8—1972 அன்று மாலை 3·30 மணிவரை ஆணையர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் பெற்றுக் கொள்ளப்படும்.

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர் அதற்கான ரூ. 10·35-ஐ (விற்பனை வரி உட்பட) மணியார்டர் மூலமோ அல்லது நகராட்சி கருவூலத்தில் செலுத்தியோ 28—8—1972 மாலை 4·00 மணிவரையில் பெற்றுக் கொள்ளலாம்.

ஆ. சேவுகபாண்டியன், பி. ஏ.,
ஆணையர்.

(த. 65)

## பாளையங்கோட்டை நகராட்சி

நகராட்சி ஆணையாளர் அவர்களால் அடியிற் குறிப்பிட்ட வேலைக்கு மூடி முத்திரையிட்ட தாரணைகள் 29—8—1972-ம் தேதி மாலை 4 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். தாரணை ஷெட்யூல் ஒன்றுக்கு ரூ. 6·00 (விற்பனை வரி காசு 21) செலுத்தி 28—8—1972 முடிய பெற்றுக் கொள்ளலாம். இதர விவரங்களை அலுவலக நேரங்களில் நகராட்சிப் பொறியாளர் அவர்களிடம் தெரிந்து கொள்ளலாம். வேலை முடிக்க வேண்டிய காலம் மூன்று மாதம்.

| மதிப்பீடு எண. | வேலை விவரம். | மதிப்பீடு | டிப்பாசிட் தொகை. முதலில் | டிப்பாசிட் தொகை. பிறகு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | ரூ. | ரூ. | ரூ. |
| 23/72-73 | வெள்ளைக் கோவில் ரோட்டில் சிமெண்ட் ரோட்டில் அபிவிருத்தி வேலை செய்யவும், மேற்படி ரோட்டில் இரு பக்கங்களிலும் முட்டுச்சுவர் கட்டவும் (தாரணை கேட்கப்படும் தொகை ரூ. 18,090). | 20,000 | 453 | 452 |

க. ஜனார்த்தனம், எம். ஏ.,
ஆணையர்.

(த. 68)

## பொதுப்பணித் துறை

சென்னை—செங்கற்பட்டு வட்டம்.

வேலையின் பெயர்—சென்னை அரசினர் கீழ்ப்பாக்கம் மருத்துவக்கல்லூரி மருத்துவ மனையில் அறுவைச் சிகிச்சைப் பகுதிக் கட்டடத்தின் ( Surgical block ) மூன்றுவது மாடியின்மேல் கூடுதலாக மூன்று மாடிகள் கட்டுதல்.

மேற்கண்ட வேலைக்காக ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்காக இருந்த கடைசி நாள் 9—8—1972–லிருந்து 26—8—1972 மாலை 3·00 மணிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது. மேற்கண்ட வேலைக்கான ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் இவ்வலுவலகத்தில் 16—8—1972 முதல் 25—8—1972வரை எல்லா அலுவலக நேரங்களில் விற்பனைக்குக் கிடைக்கும். மற்ற நிபந்தனைகளில் மாற்றம் இல்லை.

பி. கே. கந்தசாமி,
மேற்பார்வைப் பொறியாளர்.

(த. 72)

## பொள்ளாச்சி நகராட்சி

ஐந்து குதிரை வேகமுள்ள டீசல் பம்பு செட்டு விநியோகம் செய்ய மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 29—8—1972-ம் தேதி மாலை 4–00 மணி வரை ஆணையர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் பெற்றுக் கொள்ளப்படும். அவை அன்று மாலை 4–30 மணி அளவில் திறக்கப்படும். முழு விவரம் அடங்கிய ஒப்பந்தப் புள்ளி பாரங்கள் விண்ணப்பங்களின் பேரில் பெற்றுக்கொள்ளலாம்.

வைப்புத் தொகை ரூ. 180.

ஆணையர்

(த. 73.)

## ஏல விற்பனை

### காவல் பயிற்சிக் கல்லூரி வேலூர்

வேலூர் காவல் பயிற்சிக் கல்லூரியைச் சேர்ந்த போலீஸ் மோட்டார் சைக்கிள் எண் எம்.டி.எச். 1754 (ராயல் என்பீல்டு) மேற்குறித்த அலுவலகத்தின் முன்பு 2—9—1972 அன்று காலை 11 மணிக்கு பகிரங்கமாக ஏலத்தில் விற்கப்படும். மேற்குறித்த வண்டியைக் காவல் பயிற்சிக் கல்லூரியில் அலுவலக நாட்களில் காலை 11 மணி முதல் மாலை 5 மணி வரையில் பார்வையிடலாம். ஏல விற்பனை நிபந்தனைகள் காவல் பயிற்சி முதல்வர் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

முதல்வர்,
காவல் பயிற்சிக் கல்லூரி,
வேலூர்.

(த. 74)

முன்னேற்றத்திலும்
செழிப்பிலும்
எமது பங்கு

TANSI

நன்கு நிர்மாணிக்கப்பட்ட நவீன தொழி-ற்கூடங்களோடு தனது முழு உழைப்பைக் கொண்டு நாட்டிற்கும் தொழிலுக்கும் பல துறைகளில் பணிபுரிகிறது

**தொழில்**

- கட்டுமான கட்டமைப்புகள்
- தரமான வார்ப்பு இரும்பு வார்ப்படங்கள்
- எஃகு, பித்தளை ஆகியவற்றில் வடிக்கப்பட்ட உறுப்புகள்
- மின் தடுப்புச் சாதனங்கள்
- விஞ்ஞான வகை கண்ணாடி உபகரணங்கள்
- இருமல், டிசிசி கம்பிகள்

**விவசாயம்**

- வேளாண்மைக் கருவிகள்
- பயிர் பாதுகாப்பு கருவிகள்
- டிராக்டர் தொடர்பு வண்டி
- மோட்டார் விசை யேற்றங்கள்
- கரும்பாலை
- வடிமுனைக் குழாய்கள்

**அன்றாட உபயோகப் பொருட்கள்**

- எஃகு, மரமேஜை, நாற்காலிகள்
- மருத்துவமனை சாமான்கள்
- கதவுகளுக்கான பூட்டு
- தாழ்ப்பாள்கள்
- சுகாதார வசதி பொருட்கள்
- பீங்கான் பொருட்கள்
- காலணிகள்
- தோலணிப் பொருட்கள்

**ஏற்றுமதி**

- பல வண்ண சாதாரண தோல்கள்
- மேலிற தரமான குரோம் தோல்கள்
- கட்டுமான கட்டமைப்புகள்

தகவல்களுக்கு அணுகவும்
நிர்வாக இயக்குநர்

**தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்**

(இது ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனம்)

35/2 உட்ஸ் சாலை, சென்னை-2.

## வனத்துறை

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மைலார் கப்பு 69-லிருந்து சுமார் 600 கன மீட்டர் தடிகளை ஏற்றி நாகர்கோவில் அல்லது பேட்டை விற்பனை மண்டியில் சேர்ப்பிக்க அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் 2—9—1972 ஆம் நாள் மதியம் 12-00 வரை பாளையங்கோட்டையிலுள்ள திருநெல்வேலி தென் கோட்ட மாவட்ட வன அலுவலரால் கோரப்படுகின்றன. இதன் பேரில் விவரங்களுக்குத் திருநெல்வேலி தென்கோட்ட மாவட்ட வன அலுவலருக்கு விண்ணப்பிக்கவும்.

சி. என். சுந்தரம்,
மாவட்ட வன அலுவலர்.

(த. 79)

## பொதுப் பணித்துறை

வேலையின் பெயர்.—மதுரை மாவட்டம், உத்தமபாளையம் தாலுகா கூடலூரில், ஒரு சப்-இன்ஸ்பெக்டர் மூன்று தலைமைக் காவலர்கள் மற்றும் ஆறு போலீஸ் கான்ஸ்டபிள்களுக்குக் குடியிருப்புகள் கட்டுதல்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும், மேற்கண்ட வேலைக்காக, மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித்துறை, மதுரை வட்டம், மதுரை-2 அவர்களால், மூடிமுத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 30—8—1972 மாலை 3-00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்பட்டு அதே நாள் மாலை 4-00 மணிக்குத் திறக்கப்படும். ஒப்பந்தப் பத்திரங்கள் 14—8—1972 முதல் 28—8—1972 வரை விற்பனைக்குக் கிடைக்கும்.

ஒப்பந்த வடிவம்:—மொத்தத் தொகை.

கட்டுத் தொகை:—ரூ. 5,650.

வேலை முடிக்க வேண்டிய காலம்:—6 மாதங்கள்.

ஒப்பந்தப் பத்திரங்கள் விலை ரூ. 20 (திருப்பித்தரப்பட மாட்டாது) கருவூலம் அல்லது இந்திய ரிசர்வ் வங்கியில் "P. W. Remittances III O.R." என்ற தலைப்பில், நிருவாகப் பொறியாளர், பொதுப்பணித்துறை, பெரியகுளம் கோட்டம், பெரியகுளம் அவர்கள் கணக்கிலும் விற்பனைவரி சர்ச் சார்ஜ் ரூ. 0·75 காசு " XII Sales tax (d) Miscellaneous என்ற தலைப்பிலும் ஒரே சலானில் செலுத்தப்பட வேண்டும். கொடுக்கப்பட்ட பின்னரே ஒப்பந்தப் பத்திரங்கள் வழங்கப்படும்.

கட்டுத் தொகை சலான் வடிவிலோ, டெபாசிட் அட் கால் ரிசிப்ட் அல்லது செட்யூல்ட் வங்கிகளின் டிமாண்டு டிராப்ட்கள், அரசு உறுதிப் பத்திரங்கள் மற்றும் தேசிய மயமாக்கப்பட்ட 14 வங்கிகளின் காரண்டிகளோ ஏற்றுக் கொள்ளப்படும். தமிழ்நாடு மின்வாரியப் பத்திரங்கள் மற்றும் தேசியச் சேமிப்பு சர்ட்டிபிகேட்டுகள் மார்க்கெட் மதிப்பிற்கு 5 சதவிகிதம் குறைவாக ஏற்றுக்கொள்ளப்படும்.

வி. துரைராஜ்,
மேற்பார்வைப் பொறியாளர்,
மதுரை வட்டம், மதுரை.

(த. 69)

## தொழில் நுட்பக் கல்வி இயக்ககம்

## (கட்டுமானப் பிரிவு), கிண்டி, சென்னை-25.

வேலையின் பெயர்.—கோயம்புத்தூர், பெண்கள் அரசு பாலிடெக்னிக்கிற்கு அலுவலர் குடியிருப்புகள் கட்டுதல்.

பார்வை:—இந்த அலுவலக ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு எண். C. W/4005/D 1—72 தேதி: 30—6—1972.

மேற்கண்ட வேலைக்கு இந்த அலுவலகத்தில் ஒப்பந்தப் புள்ளிகள் பெறுவதற்கான கடைசிநாள் 7—8—1972 என்று குறிப்பிட்டிருந்தது 21—8—1972 மாலை 3-00 மணி வரை ஒத்தி வைக்கப்பட்டு நீட்டிக்கப்பட்டிருக்கிறது.

ஒப்பந்தப் பத்திரங்கள் மேற்கண்ட அலுவலகத்தில் 19—8—1972 மாலை 5·00 மணி வரை விற்பனைக்குக் கிடைக்கும்.

மற்ற எல்லா நிபந்தனைகளும் மாற்றப்படாதது.

தொழில் நுட்பக் கல்வி இயக்குநர்,
சென்னை

(த. 64)

## குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும், கீழ்க் கண்ட வேலைக்காக, மேற்பார்வைப் பொறியாளர், குடிநீர் வடிகால் வாரியம் வீராணம் திட்ட வட்டம், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களால் பொதுப் பணித்துறையில் பதிவு செய்யப்பட்டுள்ள உரிய பிரிவைச் சேர்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து, மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் (குறிப்பிடப்பட்ட படிவத்தில்) வரவேற்கப்படுகின்றன.

வேலையின் பெயர்:—தென் ஆர்க்காடு மாவட்டம், பனிக்குப்பத்தில் வீராணம் திட்ட பேக்டரி சைட்டிற்கு, பண்ணுருட்டி இரயில்வே நிலையத்திலிருந்து சிமெண்ட் எடுத்துச் செல்லுதல்.

ஒப்பந்த வடிவம்:—மொத்தத் தொகை.

கட்டுத் தொகை:—ரூ. 1,900 பணமாகவோ, அல்லது டிமாண்டு டிராப்டாகவோ நிருவாகப் பொறியாளர், வீராணம் திட்டக் கோட்டம், பண்ணுருட்டி அவர்கள் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

ஒப்பந்தப் பத்திரங்கள் விலை: ரூ. 10·40 (விற்பனை வரி 40 காசு உட்பட) —மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம், வீராணம் திட்ட வட்டத்தில் "Receipts A. Revenue Account other Departmental receipts"

என்ற கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

ஒப்பந்தத்திற்கான காலம்:—12 மாதங்கள்.

ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்கும் நாள்:—15—8—1972 முதல் 25—8—1972 வரை

ஒப்பந்தப் புள்ளி நாளும் நேரமும்:—30—8—1972 மாலை 3-00 மணி வரை.

விளக்கமான ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு நிபந்தனைகள், ஒப்பந்த வடிவம் மற்றும் இதர விவரங்கள், கீழ்க்கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெறலாம்.

மேற்பார்வைப் பொறியாளர்,
வீராணம் திட்ட வட்டம்,
சென்னை-5.

(த. 76)

## காஞ்சிபுரம் நகராட்சி

காஞ்சிபுரம் நகராட்சி ஆணையர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் தமது அலுவலகத்தில் 28-8-1972 மாலை 4 மணி வரை கீழ்க்கண்ட வேலைக்காக மூடி, முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

| | வேலையின் தொகை. | வைப்புத் தொகை. |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| (1) ரயில்வே ரோடில் தற்போதுள்ள 10 கடைகளுக்குச் சேர்ந்தாற்போல் மேலும் 4 கடைகள் கட்ட .. .. .. | 17,000 | 850 |
| (2) ஆஸ்பத்திரி ரோடில் உள்ள நகராட்சிப் பயணிகள் தங்கும் விடுதியில் மேலண்டைப் பக்கத்தில் கட்டடம் ஒன்று கட்ட .. .. .. .. .. | 18,000 | 900 |
| (3) ஆஸ்பத்திரி ரோடில் உள்ள நகராட்சிப் பயணிகள் தங்கும் விடுதியில் வடவண்டைப் பக்கத்தில் கட்டடம் ஒன்று கட்ட .. .. .. .. .. | 18,000 | 900 |
| (4) கரும்பலகை வர்ணம் 4 லிட்டர் கொள்ளளவு ஜான்சன் நிக்கல்சன் மேக் 40 டின்கள் சப்ளை செய்ய .. | .. | 125 |
| (5) மின் உந்து 5 குதிரை ஓட்டம், 7.5 குதிரை ஓட்டம் மானோ பிளாக் பம்ப்செட் கிராம்ப்டன் அல்லது எ.ஈ.ஐ. மேக் சப்ளை செய்ய .. .. .. | .. | 250 |
| (6) 48" சீலிங் மின் விசிறி 7 எண்கள் சப்ளை செய்ய .. .. .. | .. | 100 |
| (7) கன்மெட்டல் ராடு பலவித அளவுகளில் சப்ளை செய்ய .. .. .. | 1,800 | 90 |

கே. அருணாசலம், எம்.ஏ.,
ஆணையர்.

(த. 77)

## அறிவிப்பு

### தஞ்சாவூர் நகராட்சி

இந்த நகராட்சியின், நகராட்சியில் நகர் அமைப்புத்துறையில், நகர் அமைப்புத்திட்ட சர்வேயர் மற்றும் பில்டிங் டிராப்ட்ஸ்மேன் பதவிகளில் நியமனம் செய்வதற்குத் தகுதி வாய்ந்த மனுதாரர்களிடமிருந்து மனுக்கள், 31—8—1972-க்கு மேற்படாதவாறு வந்து சேருமாறு வரவேற்கப்படுகின்றன. மற்ற விவரங்கள், தஞ்சாவூர் நகராட்சி ஆணையர், அவரிடம் பெறலாம்.

**ஆ. சேவுகபாண்டியன்,**
ஆணையர்.

(த. 63)

## ஒப்பந்தப் புள்ளி.

### பொதுப்பணித் துறை.

வேலையின் பெயர்.—மதுரை, அரசு எர்ஸ்கின் மருத்துவ மனையில் ஆர்த்தோப்டிக் கோர்ஸ் நடத்துவதற்கு (Orthoptic Course) ஒரு கட்டடம் கட்டுதல்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும், மேற்கண்ட வேலைக்காக, மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித்துறை, மதுரை வட்டம், மதுரை-2 அவர்களால், மூடிமுத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 30—8—1972 மாலை 3-00 மணிவரை பெற்றுக் கொள்ளப்பட்டு, அதே நாள் மாலை 4-00 மணிக்குத் திறக்கப்படும். ஒப்பந்தப் பத்திரங்கள் 23—8—1972 முதல் 28—8—1972 வரை விற்பனைக்குக் கிடைக்கும்.

ஒப்பந்தப் படிவம்—மொத்தத் தொகை.

கட்டுத் தொகை—ரூ. 2,000.

வேலை முடிக்க வேண்டிய காலம்—6 மாதங்கள்.

ஒப்பந்தப் பத்திரங்கள் விலை ரூ. 20 (திருப்பித்தரப்படமாட்டாது) கருவூலம் அல்லது இந்திய ரிசர்வ் வங்கியில் "P.W. Remittances III" என்ற தலைப்பில், நிருவாகப் பொறியாளர், பொதுப்பணித்துறை, மதுரைக் கோட்டம், மதுரை அவர்கள் கணக்கிலும், மற்றும் விற்பனை சார்சார்ஜ் ரூ. 0·75 காசு "XII Sales tax (d) Miscellaneous" என்ற தலைப்பில் ஒரே சலானில் செலுத்தப்பட வேண்டும். சலான் கொடுக்கப்பட்ட பின்னரே ஒப்பந்தப் பத்திரங்கள் வழங்கப்படும்.

கட்டுத் தொகை சலான் வடிவிலோ, டெபாசிட் அட் கால் ரிசிப்ட் அல்லது செட்யூல்டு வங்கிகளின் டிமாண்டு டிராப்ட்டு அரசு உறுதிப் பத்திரங்கள் மற்றும் தேசிய மயமாக்கப்பட்ட 14வங்கிகளின கரண்டிகளோ ஏற்றுக் கொள்ளப்படும். தமிழ்நாடு மின்வாரியப் பத்திரங்கள் மற்றும் தேசிய சேமிப்பு சர்ட்டிபிகேட்டுகள் மார்க்கெட் மதிப்பிற்கு 5 சதவிகிதம் குறைவாக ஏற்றுக் கொள்ளப்படும்.

**வி. துரைராஜ்,**
மேற்பார்வைப் பொறியாளர்,
மதுரை வட்டம்.

(த. 57)

## அறிவிப்பு

### புத்தகங்களும் செய்தித்தாள்களும் வழங்குதல்

(பொது நூலகங்கள்) 1954 சட்டம் 27

1. 1954 சட்டம் 27-ன்படி புத்தகங்கள் மற்றும் செய்தித்தாள்கள் வழங்குவதின் கீழ், இந்தியாவிலுள்ள ஒவ்வொரு வெளியீட்டாளரும் தங்கள் வெளியீடுகளை செய்தித்தாள்கள் உட்படக் கட்டணமின்றி மற்றும் அனுப்புகின்ற கட்டணத்தையும் செலுத்திக் கீழ்க்கண்ட மூன்று நூலகங்களுக்கும் அனுப்புவது உறுதியான கடமையாகும்.

(1) கன்னிமாரா பொது நூலகம், சென்னை-8.
(2) தேசிய நூலகம், கல்கத்தா-27.
(3) மத்திய நூலகம், பம்பாய்-1.

2. ஆகையால் வெளியீட்டாளர்கள் அனைவரும், 20—5—1954 அன்று அல்லது அதற்குப் பிறகு வெளியிடப்பட்ட பள்ளிப் பாடப் புத்தகங்கள் மற்றும் குழந்தைகளின் புத்தகங்களும் சேர்த்துத் தங்களுடைய வெளியீட்டில் ஒரு பிரதி மேற்கண்ட மூன்று நூலகங்களுக்கும் வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

3. இந்தச் சட்டத்தை மீறுகின்ற வெளியீட்டாளர்கள் தண்டனைக்குள்ளாவார்கள்.

(த. 12)

## ஒப்பந்தப் புள்ளி

### குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் ஒப்பந்ததாரர்களிடமிருந்து, எண். 17, சர். பி. டி. இராசன் சாலை, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய செயல் வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 25—8—1972 பிற்பகல் 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். அவை அன்று பிற்பகல் 3-30 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பவராலோ அவருடைய அலுவலகத்தில் வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

வேலையின் பெயர்.—பாளையங்கோட்டை குடிநீர் முன்னேற்றத்திட்டம்—நீரேற்றி மாற்றுதல் நிர்மாணித்தல் சம்பந்தமாக.

ஒப்பந்த வகை.—மொத்த தொகை.

முன்வைப்புத் தொகை.—ரூ. 3,150.

இத்தொகை பணவுத்தரவுச் சீட்டு வடிவில் நிருவாகப் பொறியாளர் (தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் திருநெல்வேலி செயற் கோட்டம்) அவர்கள் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப்படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டும்.

வேலையினை முடிப்பதற்குரிய கால அளவு.—ஆறு மாதம்.

ஒப்பந்தப்படிவங்களின் விலை—ரூ. 10·37 (ரூபாய் பத்தும் காசு முப்பத்தேழு மட்டும்).

ஒப்பந்தப்படிவங்கள் வேண்டுவோர் நிருவாகப் பொறியாளர்(தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் திருநெல்வேலி செயற் கோட்டம்) அவர்களிடமிருந்து பிரசன்ன விநாயகர் கோவில் தெரு, திருநெல்வேலி-2 என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 19—8—1972 மாலை 5-00 மணி வரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
குடிநீர் வடிகால் வாரியம், செயல் வட்டம்,
மதுரை-2.

(த. 89)

## ஒப்பந்தப் புள்ளி

### பல்லவா போக்குவரத்துக் கழகம்

அண்ணா சாலை, சென்னை-2.

பல்லவா போக்குவரத்துக் கழகத்தின் சார்பில்நிருவாகப் பொறியாளர் பல்லவா போக்குவரத்துக் கழகம், சென்னை-2 அவர்களால் கீழ்க்கண்ட வேலைக்கு அரக்கு முத்திரையிட்ட இனவாரி ஒப்பந்தப்புள்ளிகள், அண்ணா சாலை, சென்னை-2-ல் உள்ள நிருவாகப் பொறியாளர் அவர்கள் அலுவலகத்தில் 2—9—1972 மாலை 3-00 மணிவரை பெற்றுக் கொள்ளப்படும்.

தண்டையார்பேட்டை, இரண்டாவது பணிமனையில் தார் சாலை அமைத்தல், முன்வைப்புத் தொகை ரூ. 4,700, ஒப்பந்தப் பாரங்கள் விற்பனை வரி உட்பட ரூ. 20·80, முடிக்கும் காலம் 8 மாதங்கள்.

ஒப்பந்தங்கள் மேலாளர் (தொழில் நுட்பம்) பல்லவா போக்குவரத்துக் கழகம், சென்னை-2, அவர்களால் மேற்கூறிய அதே தேதியில் மாலை 3-15-க்குத் திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நிபந்தனைப் பத்திரங்கள், நமூனக்கள், வரை படிவங்கள் முதலியவற்றை நிருவாகப் பொறியாளர், பல்லவா போக்குவரத்துக் கழகம், சென்னை-2-ல் உள்ள அலுவலகத்தில் மேற்கூறிய தொகையைக் கட்டி, கீழ்க்கண்ட தேதிகளில் (17—8—1972 முதல் 1—9—1972 முடிய) எல்லா அலுவலக நாட்களிலும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

மேலே குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையை, "நிதி நிலைமை பல்லவா போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் செலுத்திச் செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

**ஏ. வி. சுப்பிரமணியம்,**
நிருவாகப் பொறியாளர்,
(பல்லவா போக்குவரத்துக் கழகத்துக்காக).

(த. 91)

## ஏல விளம்பரம், வனத்துறை

"20—9—1972 காலை 11 மணியளவில் சென்னை-86, 37, கதீட்ரல் சாலையிலுள்ள வனப்பயன்பாட்டு அலுவலகத்தில் வனப்பயன்பாட்டு அலுவலரால் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற வேறு அலுவலரால் யானைத் தந்தம் (300 கிலோவுக்குமேல்) மற்றும் மான் கொம்புகள் (1,500 கிலோவுக்கு மேல்) ஏலம் நடத்தப்படும். மேல் விவரங்களுக்கு வனப்பயன்பாட்டு அலுவலரை நேரில் அணுகவும்."

**எம். தியாகராஜன்,**
வனப்பயன்பாட்டு அலுவலர்.

(த 90)


கதர் கைத்தொழில்
அங்காடி
குறளகம்
சென்னை-1
கைவண்ணப் பொருள்களின் களஞ்சியம்
வெளிநாட்டார் போற்றும்
பயன் பொருள்
கலைக்கூடம்
20461
20462
20463
20464
20465

# அஞ்சலக சேமிப்பு வங்கி மூலம் சேமியுங்கள்!

- எந்த வங்கியும் இதுவரை அளிக்காத அளவுக்கு நடப்புக் கணக்கு – 4 சதவீத வட்டியுடன்
- வேண்டும்போதெல்லாம் பணம் எடுத்துக்கொள்ளலாம்; செலுத்தலாம்; எந்தத் தடையும் இல்லை
- காசோலை வசதிகள் உண்டு
- முற்றிலும் பாதுகாப்பு உடையது
- அஞ்சலகங்கள் அனைத்திலும் இந்த வசதி உண்டு

இப்போது சொல்லுங்கள் சேமிப்பதற்காக
அஞ்சலகச் சேமிப்பு வங்கியை
நான் தேர்ந்தெடுத்தது நியாயம்தானே.



தமிழ்நாடு அரசு
சிறு சேமிப்பு இயக்குநரால்
வெளியிடப் பெற்றது

# இதோ இன்னொரு சாதனை!

தமிழக அரசின் ஆக்கப் பணிகளுக்கு அடித்தளம்!

நாளையத் தலைமுறையின் "நல்வாழ்வுக்குப் புதிய பாதை"!

அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்!


இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்!!




தமிழரசு

குடும்பநலத்துறை






# கதர் கிராமத் தொழில்கள்

கதர் கிராமத்
தொழில்களை
ஆதரிப்பது
புனிதத் தொண்டு

கதர் கிராமத்
தொழில்களை ஆதரிப்பது
கிராம மக்களுக்குச்
செய்யும் பேருதவி





கதர்- கதர்ப் பட்டு
சோப்பு, தேன்
தோல் பொருள்கள்
பனைவெல்லம்.
பனைப் பொருள்கள்
வார்ப்படங்கள்
மற்றும் பல்வேறு கைநுட்பப்
பொருள்கள் கதர் கிராமத்தொழில்
விற்பனை நிலையங்களில் கிடைக்கும்





## கதர் கிராமத் தொழில் துறை

2. சர் தேசிகாச்சாரி சாலை

சென்னை-4

சந்தர்...

## அறிவிப்பு

### 1973, ஆங்கில ஆண்டுக்கு இன்ஸ்டிடியூட்ஸ் ஆப் காமர்ஸ் அங்கீகாரத்திற்கு மனுக்கள் கோருவது பற்றிய அறிவிப்பு

1973 ஆங்கில ஆண்டுக்குப் பல்வேறு காமர்ஸ் பாடங்களில் பயிற்சி அளித்து 1973 மே, நவம்பர் ஆகிய மாதங்களில் அரசினர் தொழில் நுட்பத் தேர்வுகளுக்கு நபர்களை அனுப்ப விரும்புகின்ற கமர்சியல் இன்ஸ்டிடியூட்களின் உரிமையாளர்கள் வகுக்கப்பட்ட வினாப் பட்டியல்கள் மூலம் தங்கள் நிறுவனங்களைப் பொருத்து விவரங்களை 31–8–1972-க்குள் சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அதிகாரிகளுக்கு அனுப்புமாறு கோரப் படுகிறார்கள்.

வினாப்பட்டியல் படிவங்கள் பெற வேண்டுகோள் கடிதத்தை தலைவர் தேர்வுகள் குழு சென்னை-25 அவர்களுக்கு சுயவிலாசம் எழுதிய 25 × 15 செ.மீ., அளவுள்ள ரூ. 1·00 + 0·05 அஞ்சல் வில்லை ஒட்டிய உறையை உடன் வைத்து அனுப்ப வேண்டும். ஒவ்வொரு உரிமையாளருக்கும் 3 வினாப் பட்டியல் படிவங்கள் அனுப்பப்படும். பூர்த்தி செய்த ஒரு மனு வடிவத்தைத் தங்களிடம் வைத்துக் கொள்ளலாம். சோதனையின் போது அல்லது ஆய்வின்போது அதைக் காண்பிக்க வேண்டும். மற்றொரு பிரதியை அலுவலகத்துக்கு நேரடியாக அனுப்பவேண்டும். மூன்றாவது பிரதி, இந்த நிறுவனம் எங்கு உள்ளதோ அப்பகுதியின் அதிகார வரம்பு சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலருக்கு அனுப்பவேண்டும்.

ஆங்கில ஆண்டின் அடிப்படையில் அங்கீகாரம் அளிக்கப்படுவதால் கமர்சியல் இன்ஸ்டிடியூட் நிறுவனங்களின் உரிமையாளர்கள் 1972-ஆம் ஆண்டுக்கு ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்டவராக இருந்தாலும் வினாப் பட்டியலைப் பூர்த்தி செய்து, 1973-ஆம் அங்கீகாரத்துக்காக மேற்குறித்த வாறு அனுப்பி வைக்க வேண்டும். 1972-ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப் பட்ட இவ்வகை நிறுவனங்களின் உரிமையாளர்கள் மேலே குறிப்பிட்ட வாறு வினாப்பட்டியலைப் பூர்த்திசெய்து குறிப்பிட்ட தேதிக்குள் அனுப்பத் தவறினால் 1973-ஆம் ஆங்கில ஆண்டுக்கு நபர்களுக்கு பயிற்சியளிக்கவோ தேர்வுக்கு அனுப்பவோ அங்கீகாரம் தரப்படமாட்டாது என்பதை அவற்றின் உரிமையாளர்கள் உணர வேண்டும்.

புதிதாக அங்கீகாரம் கோரும் இவ்வகை நிறுவனங்களின் உரிமையாளர்கள் மேலே 1-வது பாராவில் கண்டபடி வினாப்பட்டியலைப் பூர்த்தி செய்து சம்பந்தப்பட்ட அலுவலருக்கு அனுப்ப வேண்டும்.

நாளிதழ்களில் ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி குறிப்பிட்ட காலத்தில் அங்கீகாரத்துக்கு மனுச் செய்து கொள்ளாத நிறுவனங்களுக்குத் தற்காலிக அனுமதியோ தனி அனுமதியோ தரப்படமாட்டாது. தவிரவும் கமர்சியல் இன்ஸ்டிடியூட்களின் அங்கீகாரம் ஆண்டுதோறும் கவனிக்கப் படுவதாலும் இடைக்காலத்தில் சேர்க்க முடியாததனாலும் குறிப்பிட்ட தேதிக்குப் பிறகு சமர்ப்பிக்கப்படும் வினாப்பட்டியல் எக்காரணம் கொண்டும் கவனிக்கப்பட மாட்டாது. அங்கீகார ஆணையில் குறிப்பிட்ட பாடங்கள் தவிர கூடுதல் பாடங்களைச் சேர்த்துக்கொள்ள அனுமதிகோரும் கடிதங்கள் ஏற்கப்படமாட்டாது.

உரிமையாளர்கள் வினாப்பட்டியல் (questionnaire) படிவங்களில் தவறான விவரங்களைக் கொடுத்தல் அவர்களது மனுக்கள் நிராகரிக்கப் படுவது மட்டுமல்லாமல், அத்தகைய நிறுவனங்கள் அனுமதிக்கப்பட்ட பட்டியலிலிருந்து தேர்வுக் குழுவின் தலைவர் எடுக்கின்ற முடிவை ஒட்டி குறிப்பிட்ட காலத்திற்கு நீக்கப்படும்.

வினாப்பட்டியல் படிவங்கள் அனுப்பும்பொழுது (Duly filled in) இந்த அலுவலகத்திற்கு, சுய விலாசமிட்ட உறையில் ரூ. 0·35 அஞ்சல் வில்லை + 0·05 காசு அகதிகள் நிவாரண வில்லைகள் ஒட்டி, அவர்களின் நிறுவனங்களின் அனுமதி சம்பந்தமாக செய்தி தெரிவிப்பதற்காக சேர்த்து அனுப்பப்பட வேண்டும். 1972 ஆங்கில ஆண்டுக்கு அனுமதிக்கப் பட்ட நிறுவனங்களின்உரிமையாளர்கள்மற்றும் 1973 ஆங்கில ஆண்டுக்கு அனுமதிக்கு விண்ணப்பித்துள்ள புதிய நிறுவனங்கள், இந்தத் துறையில் அப்ரூவல் ஆர்டர் பெற்ற பின்னரே 1973 ஆங்கிலஆண்டுக்கான தங்கள் அனுமதியை வெளியிட வேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட வணிக இயல் நிறுவனங்களின் (Commerce Institutions) அச்சிடப்பட்ட பட்டியல் அந்தந்தப் பகுதி மாவட்டக் கல்வி அதிகாரிகள், பாலிடெக்னிக்களின் முதல்வர்கள் மற்றும் அந்தந்த வணிக நிலையங்களின் உரிமையாளர்களிடம் கிடைக்கும் ஆர்வமுள்ள மனுதாரர்கள் (Candidate) குறிப்பிட்ட நிலையத்தில் சேருவதற்கு முன்னர் அந்நிலையத்தின் பெயர் மேலே குறிப்பிட்டுள்ளவர் களிடம் கிடைக்கும் அச்சிடப்பட்ட பட்டியலில் வணிக இயல் கல்வி நிலையத்தின் பெயர் இருக்கிறதா என்று பார்த்து பயிற்சிக்காகச் சேர வேண்டும்.

தலைவர்,
தேர்வுக்குழு &
தொழில் நுட்பக் கல்வி, இயக்குநர்.

(த. 29)

## ஒப்பந்தப் புள்ளி

### மாநிலப் போக்குவரத்துத்துறை

போக்குவரத்து இல்லம், சென்னை-2

வேலூரில், புதிதாகக் கட்டப்பட்ட பஸ் நிலையத்தில், 15–10–1972 லிருந்து 3 ஆண்டு காலத்திற்கு ஒரு கேண்டீன் (Running a canteen) நடத்துவதற்காக, மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 15–9–1972 மாலை 2-30 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்த நிபந்தனைப் பிரதிகள், இயக்குநர் அலுவலகம், தமிழ்நாடு மாநிலப் போக்குவரத்துத் துறை, போக்குவரத்து இல்லம், சென்னை-2 அவர்களிடம் ரூ. 1 செலுத்திப் பெறலாம்.

(த. 107)

இயக்குநர்.

## அறிவிப்பு

### தொழில் துறை

ஏலக்காய் தோட்டங்களைப் பதிவு செய்தல்.

1965 ஏலக்காய் சட்டத்தின்படி (1965 மைய சட்டம் 42) 11-வது பிரிவின்படி, ஏலக்காய் தோட்டம் அல்லது தோட்டங்களின் சொந்தக் காரர்கள், அந்தத் தோட்டம் அல்லது தோட்டங்களின் சொந்தக்காரர் ஆகி ஒரு மாதம் ஆகும் முன் அல்லது இந்தப் பிரிவு அமலுக்கு வந்த மூன்று மாதங்களுக்குள், அல்லது எது பிற்பட்டதோ, அதற்குள், அரசினரால் இதற்காக நியமிக்கப்பட்டுள்ள பதிவு அலுவலரிடம் அவருக்குச் சொந்தமாகவுள்ள ஒவ்வொரு ஏலத் தோட்டத்திற்கும் சொந்தக் காரராகப் பதிவு செய்துகொள்ள வேண்டும். இந்தச் சட்டப்பிரிவு 1966 ஜூலை 12-ம் தேதி அன்று அமலுக்கு வந்தது. இந்திய அரசு பிறப்பித்துள்ள ஏலக்காய் (உரிமம் மற்றும் பதிவு) விதிகள் 1968-படி இதற்காக இந்த விதிகளின்படி பிரிவுச் சான்றிதழ்கள் பெற்றவர்கள் தவிர வேறு யாரும் ஏலக்காய் விற்பனையில் ஈடுபடக்கூடாது. இந்த மாநிலத்திலுள்ள ஏலக்காய் தோட்டக்காரர்கள் தாங்கள் உற்பத்தி செய்த ஏலக்காயை விற்பனை செய்வதில் தொல்லைகள் அனுபவிக்கக் கூடாது என்ற நோக்கத்தில் மாநில அரசு, இந்தப் பதிவு செய்வதற்கான கால வரையறையை அவ்வப்போது நீடித்து வந்திருக்கிறது. தற்போது அந்தக் கால வரையறையை 1972 டிசம்பர் 31-ம் தேதிக்கு நீடித்துள்ளார்கள். இதற்கு மேலும் நீடிக்கப்படமாட்டாது. எனவே தங்களது தோட்டங்களை பதிவு செய்யாமலிருந்தால் ஏற்படவிருக்கும் விளைவுகளைத் தவிர்க்க பதிவு செய்யும் அலுவலர்களிடம் அதாவது சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் பதிவு செய்யும்படி ஏலக்காய்த் தோட்டச் சொந்தக்காரர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

வி. கார்த்திகேயன்,
செயலாளர்.

(த. 92)

## ஒப்பந்தப் புள்ளி

### பாளையங்கோட்டை நகராட்சி

இந்நகர் மன்றத்திலுள்ள 11 பள்ளிகளுக்கும் அவரவர் பாத்திரத்திலேயே உணவு தயார் செய்து சம்பந்தப்பட்ட பள்ளிகளுக்கு கொண்டு சேர்க்க (சமையல் கூலி, பாத்திர வாடகை, வண்டி வாடகை உட்பட) சமையல் செய்த நாளன்று மட்டும் நாள் 1-க்கு ரேட் விவரம் குறித்தும், டிப்பாசிட் ரூ. 50 செலுத்தியும், மூடி முத்திரையிட்ட தாரணைகள் பாளையங்கோட்டை நகராட்சி ஆணையர் அவர்களால் 29—8—1972-ம் தேதி மாலை 4 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். முழு விவரங்கள் அலுவலகத்தில் நேரில் அல்லது கடிதம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

பாளையங்கோட்டை.

ஆணையர்.

(த. 104)

## ஒப்பந்தப் புள்ளி

### வேளாண்மைத் தொழில்கள் இணையகம், கிண்டி

கிண்டி தொழிற்பேட்டையிலுள்ள அக்ரோ இல்லத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள முதல் மாடியில் தேக்கு முகப்புக் கொண்ட தடுப்புகள் அமைப்பதற்காக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள், நிருவாக இயக்குநர், தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் இணையகம், தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை-32 அவர்களால் 21—8—1972 மாலை 5 மணிக்குள் வந்து சேரும்படி வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் படிவங்களை மேற்கூறிய அலுவலகத்தில் ரூபாய் 5-20-ஐ பணமாகவோ, போஸ்டல் ஆர்டர் மூலமாகவோ அல்லது வங்கி உண்டி மூலமாகவோ செலுத்தி 19—8—1972 மாலை 3 மணிக்குள் பெற்றுக் கொள்ளலாம்.

நிருவாக இயக்குநர்.

(த. 87)

## ஏல விற்பனை

### தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி மருத்துவமனை

எம்.எஸ்.எக்ஸ். 7932 ஆம்புலன்ஸ் வண்டி, ( Fargo ) ஒன்று தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவ மனை அலுவலகம், அயனவரம், சென்னை-23-ல் 1972-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 25-ம் நாள் பொது ஏலத்தில் விறகப்படும்.

வாகனத்தை மேற்கண்ட இடத்தில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

விற்பனை நிபந்தனை பிரதிகளை கண்காணிப்பாளர், தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி மருத்துவமனை அயனவரம், சென்னை-23ல் பெறலாம்.

கண்காணிப்பாளர்.

(த. 106)

---

## ஒப்பந்தப் புள்ளி

### துறையூர் நகராட்சி

(திருச்சி மாவட்டம்)

துறையூர் நகரில் உள்ள குரங்குகளைப் பிடித்து மாற்ற மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் துறையூர் நகராட்சி தனி அலுவலரிடம் 31—8—1972 வியாழக்கிழமை மாலை 4-00 மணிக்குள் தாக்கல் செய்யக் கோரப்படுகிறது. ஒப்பந்தப் புள்ளிகளுடன் ரூபாய் 10 டிபாசிட்டு ரொக்கமாகக் கட்டவேண்டும். இதர நிபந்தனைகளுக்கு துறையூர் நகராட்சி தனி அலுவலரிடம் விண்ணப்பித்து தெரிந்து கொள்ளலாம்.

சையத் அப்துல் காதர்,
தனி அலுவலர்.

(த. 105)

---

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு சிமெண்ட்ஸ்

தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் லிமிடெட் யூனிட்
(தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ள).

தமிழ்நாடு சிமெண்ட் தொழிற்சாலையில் ஒரு கேன்டீனுடன் இணைந்த ஓய்வுக் கூடம் (Canteen-cum-Rest shed) கட்டும் வேலைக்காக, மாநிலம் மத்திய அரசுத் துறைகளில் பதிவு செய்துள்ள முதல் அல்லது இரண்டாம் வகுப்பு ஒப்பந்ததாரர்களிடமிருந்து மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 30—8—1972 மாலை 4-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

சுமார் மதிப்பீட்டுத் தொகை.—ரூபாய் 1,25,000.

ஒப்பந்த வகை.—மொத்தத் தொகை.

கட்டுத் தொகை.—2½ சதவீதம் (ஒப்பந்தத் தொகையில்).

வேலை முடிக்க வேண்டிய காலம்.—4 மாதங்கள்.

ஒப்பந்தப் பத்திரங்கள், பொது மேலாளர், தமிழ்நாடு சிமெண்ட்ஸ், ஆலங்குளம் அஞ்சல், (வழி) ராஜபாளையம், ராமநாதபுரம் மாவட்டம் அவர்களிடம், செட் ஒன்றுக்கு ரூபாய் 20-70 (திருப்பித் தரப்படமாட்டாது) 10—8—1972 முதல் 29—8—1972 வரை எல்லா வேலை நாட்களிலும் காலை 9-00 மணி முதல் மாலை 4-00 மணிவரை பெறலாம்.

பொது மேலாளர்.

(த. 102)

---

## ஒப்பந்தப் புள்ளி

### பொதுப்பணித் துறை

வேலையின் பெயர்.—திருவைகுண்டம் அனைக்கட்டு தெற்கு முக்கிய வாய்க்காலில் எல்.எஸ். 6.455 கி.மீ. லிருந்து 7.455 கி.மீ. வரை பிரிகாஸ்ட் சிமெண்ட் காங்கிரீட் பலகைகள் செய்து தளம் அமைத்தல்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும், மேற்கண்ட வேலைக்காக, மேற்பார்வைப் பொறியாளர், பொதுப் பணித்துறை, புராஜெக்ட்ஸ் வட்டம், பாளையங்கோட்டை, அவர்களால் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 16—9—1972 மாலை 3-00 வரை பெற்றுக் கொள்ளப்படும். அதே நாள் மாலை 4-00 மணிக்குத் திறக்கப்படும்.

ஒப்பந்த வடிவம்.—கே. 2.

கட்டுத் தொகை.—ரூபாய் 3,470.

ஒப்பந்தப் பத்திரங்கள் விலை.—ரூபாய் 10.

விற்பனை வரி.—0.35 காசு.

வேலை முடிக்கவேண்டிய காலம்.—3 மாதங்கள்.

ஒப்பந்தப் பத்திரங்கள் விலை (திருப்பித்தரப்படமாட்டாது) எந்தக் கருவூலத்திலாவது "P.W. III. O-R. Receipts", என்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர், பொதுப்பணித் துறை, திருவைகுண்டம் கோட்டம், திருவைகுண்டம் அவர்கள் கணக்கில் மற்றும் விற்பனை வரி "XII Sales Tax (b) Receipt Under the State Sales Tax Act General Sales Tax என்ற தலைப்பிலும் செலுத்தப்பட வேண்டும்.

ஒப்பந்தப் வடிவம் மற்றும் இதர விவரங்கள் மேற்பார்வைப் பொறியாளர், அலுவலகம், பொதுப் பணித்துறை, புராஜெக்ட்ஸ் வட்டம், பாளையங்கோட்டை திருநெல்வேலி-2ல் தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ, 2—9—1972 முதல் 8—9—1972 வரை எல்லா வேலை நாட்களிலும் அலுவலக நேரங்களில், மேலவர் அவர்களுக்கு விண்ணப்பத்துடன் ஒப்பந்தப்பத்திரங்களின் விலை மற்றும் விற்பனை வரி செலுத்திய ரிசிப்ட் சாலானையும் அனுப்பிப் பெறலாம். குறிப்பிட்ட தேதிக்குப் பின்னர் வரும் மனுக்கள் பொதுவாகக் கவனிக்கப்பட மாட்டாது.

மற்ற விவரங்கள் இந்த அலுவலகத்தில் வேலை நாட்களிலும் அலுவலக நேரங்களில் பெறலாம்.

மேற்பார்வைப் பொறியாளர்.

(த. 94)

---

## வேலை வாய்ப்பு

வேலூர், ஆடைகள் மற்றும் ஹோல்டால் செய்யும் பயிற்சி நிலையத்தில், துணி வெட்டுபவர் ( Master Cutter ) ( Garments) பதவிக்குக் கீழ்க்கண்ட தகுதிகளைக் கொண்ட மனுதாரார்களிடமிருந்து மனுக்கள் வரவேற்கப்படுகின்றன.

1. அங்கீகரிக்கப்பட்ட பள்ளியில் 8-ம் வகுப்பு அல்லது மூன்றும் படிவம் தேறியிருக்க வேண்டும்.

2. அரசு தொழில் நுட்பத் தேர்வு தையலில் ( Tailoring ) தேறியிருக்க வேண்டும். அல்லது துணி வெட்டுதல் மற்றும் தையலில் ரீசெட்டில்மென்ட் மற்றும் வேலை வாய்ப்புப் பொது இயக்குநரால் வழங்கப்பட்ட டிப்ளமா; அல்லது துணிவெட்டுதல் மற்றும் தையலில் வக்கேசனல் வியாபாரத்திற்காக ( Vocational Traders ) தேசீயக் கவுன்சிலால் வழங்கப்பட்ட வர்த்தக சர்ட்டிபிகேட்; மற்றும்

3. இரண்டாண்டு காலத்திற்கு குறையாத செய்முறைப் பயிற்சி அனுபவம்.

4. மின்சாரத்தில் இயங்கும் தையல் மெசின்களை இயக்கக் கூடிய திறமை பெற்றிருக்க வேண்டும்.

வயது: —நியமனத்தின்போது 30 வயது பூர்த்தியடைந்திருக்கக் கூடாது. தாழ்த்தப்பட்ட வகுப்பினர் அல்லது தாழ்த்தப்பட்ட மலைச் சாதியினர் விசயத்தில் வயது வரம்பு 5 ஆண்டுகள் வரை தளர்த்தப்படும்.

சம்பள விகிதம்.—ரூ. 250—10—400 டியர்னஸ் அலவன்ஸ் மற்றும் வீட்டுவாடகை அலவன்ஸ்கள் நடைமுறை ஆணைகளின்படி பெற அனுமதிக்கப்படும்.

மனுக்களில் பெயர், வயது, பிறந்த தேதி, பொதுக்கல்வி மற்றும் தொழில் நுட்பக் கல்வி மற்றும் முன் அனுபவம் ஆகிய முழு விவரங்கள் குறிப்பிட்டு போதுமான டெஸ்டிமோனியல்ஸ் மற்றும் சர்ட்டிபிகேட்களின் பிரதிகளை இணைத்து, கீழ் கையொப்பமிட்டவருக்கு 31—8—1972 மாலை 5-00 மணிக்கு மேற்படாதவாறு வந்து சேருமாறு, பெயரைக் குறிபிடாமல் பதவியைக் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்.

மனுதாரர்கள் அழைக்கப்படும் பொழுது, சென்னையில் நேரடி பேட்டிக்குத் தங்கள் சொந்தச் செலவில் வரவேண்டும்.

ஜெயலெட்சுமி ஏ. ராவ்,
அப்ரூவ்டு பள்ளி மற்றும் விஜிலன்ஸ் சர்வீஸ்
இயக்குநர்.

26-எ, பன்தீன்சாலை, எழும்பூர், சென்னை-8.

(த-62.)

---

## ஒப்பந்தப் புள்ளி

### போடிநாயக்கனூர் நகராட்சி

ரோடு வேலைகள் இருபத்தொன்பது ரூ. 1,51,350 மதிப்பீட்டில் பாலங்கள் கட்டுதல் எட்டு ரூ. 52,700 மதிப்பீட்டில், கட்டட வேலைகள் நான்கு ரூ. 59,600 மதிப்பீட்டில் வடிகால் பழுதுபார்க்கும் வேலை ரூ. 4,400 மதிப்பீட்டில் வேலைகள் செய்ய ஒப்பந்தப் புள்ளிகள் ஆணையர் அவர்களால் 1972-ம் வருடம் ஆகஸ்டு மாதம் 25-ம் தேதி மாலை 4 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். அவைகள் அன்று மாலை 4-30 மணிக்குத் திறக்கப்படும். இதர விவரங்கள் அலுவலகத்தில் தெரிந்து கொள்ளலாம்.

பி. பகவதிமுத்து,
ஆணையர்.

(த. 82)

## ஒப்பந்தப் புள்ளி

### சங்கரன் கோவில் நகராட்சி

ரேடியோக்களும் ஹார்ன் ஸ்பீக்கர்களும் சப்ளை செய்வதற்கு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் சங்கரன் கோவில் நகராட்சி ஆணையர் அவர்களால் 28–8–72 தேதி திங்கட்கிழமை மாலை 4 மணிவரையில் பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று மாலை 4-30 மணிக்குத் திறக்கப்படும். ஒப்பந்தப் பாரம் நகராட்சிக் கருவூலத்தில் ரூ. 1.03 செலுத்திப்பெற்றுக்கொள்வதுடன் அனுப்பும்போது ரூ. 50 வைப்புத் தொகையுடன் அனுப்ப வேண்டும், மற்ற விவரங்கள் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் தெரிந்துகொள்ளலாம்.

விவரம்.

1. ரேடியோக்கள் .. .. .. .. .. .. எண்ணம் 6
   6 வால்வு, 4 பேண்ட், பியூர் எ.ஸி. வால்வுகள் 81 சீரியஸ், உட்டன் கேபினட், பிக்கப், எக்ஸ்ட்ரா ஸ்பீக்கர் ஜாக்கட்ஸ். பல மேக்குகளின் விலை விவரம் குறிப்பிடவும்.

2. ஹாரன் .. .. .. .. .. .. எண்ணம் 6
   8 ஓம்ஸ் பாக்ஸ் யூனிட்.

3. ஸ்பீக்கர் .. .. .. .. .. .. எண்ணம் 1
   3 ஓம்ஸ் மரப்பெட்டியுடன் கூடியது 10½" எலிப்டிக்கல், பெர்மனெண்ட் மாக்னெட்.

வெ. சானகிராமன்,
ஆணையர்.

(த. 83)

---

## அறிவிப்பு

### வேளாண்மைத் தொழில்கள் இணையகம்
### சென்னை-32.

"தமிழ்நாட்டு விவசாயிகளுக்கு ஓர் முக்கிய அறிவிப்பு"
டிராக்டர்களை வெளிநாடுகளிலிருந்து நன்கொடையாக இறக்குமதி செய்வதற்கு ஓர் அரிய வாய்ப்பு

வெளிநாடுகளில் உறவினர்கள் உள்ள விவசாயிகள் தம் சொந்த உபயோகத்திற்காக அந்த உறவினர்களிடமிருந்து வெளிநாட்டு டிராக்டர்களை நன்கொடையாகப் பெற்றுக் கொள்ளலாம் என்று இந்திய அரசு திட்டம் வகுத்துள்ளது. 31–3–1973 தேதிக்குள் இந்தத் திட்டத்தின் கீழ் வெளிநாட்டு டிராக்டர்களைக் கீழ்க்கண்ட விதிகளுக்குட்பட்டுநன்கொடையாகப் பெறலாம்.

1. டிராக்டர்களை வெளிநாட்டிலிருந்து நன்கொடையாக அனுப்புபவர்கள் பெறும் விவசாயின் தந்தை, கணவர், மகன், உடன்பிறந்தோர், தாயார், மனைவி அல்லது மகளாக இருக்கலாம். மேற்கண்ட உறவினர் குறைந்தது ஒரு ஆண்டுக் காலமாவது வெளிநாட்டில் குடியிருந்திருக்க வேண்டும். நல்ல ஊதியம் பெறுபவராகவும் இருக்க வேண்டும்.

2. இத்திட்டத்தின் கீழ் ஒரு விவசாயி ஒரு டிராக்டர்தான் இறக்குமதி செய்யலாம்.

3. நன்கொடையாக வரும் டிராக்டருடன் அதன் மதிப்பில் 30 சத விகிதத்திற்கு மேற்படாமல் உதிரி பாகங்கள், இணைக் கருவிகள், ஆகியவற்றையும் தருவிக்கலாம்.

4. டிராக்டரின் விலை, உதிரிபாகங்கள், இணைக் கருவிகளின் விலை, இங்கு விவசாயிக்கு டிராக்டர் வந்து சேரும் வரை செலவுகள், யாவையும் வெளிநாட்டிலுள்ள உறவினரே ஏற்க வேண்டும். நம் நாட்டிலிருந்து மேற்படி இறக்குமதிக்காகப் பணம் யாதும் அனுப்ப அனுமதிக்கப்பட மாட்டாது.

மேற்படி திட்டத்தின் கீழ் டிராக்டர்களை நன்கொடையாகப் பெற விரும்புபவர்கள் விண்ணப்பத்தாள் மற்றும் விபரங்களுக்கு கீழ்க்கண்ட முகவரிக்கு உடனடியாக எழுதுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் :—

மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் இணையகம், "அக்ரோ இல்லம்", தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை-32.

மேலாண்மை இயக்குநர்

(த. 85)

---

## வேலை வாய்ப்பு

### அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம்

நேரடி ஆள் சேர்ப்பின் மூலம் கீழ்க்கண்ட பதவிகளுக்காக 1972 டிசம்பரில் நடைபெறும் எஸ். எஸ். எல். சி. ஸ்டேண்டர்டு போட்டித் தேர்வில் சேர்வதற்கு, வெளியில் விடப்பட்ட அல்லது 1972–73 ல் வெளியில் விடப்படும் என்று எதிர் பார்க்கிற எமர்ஜன்சி கமிசண்டு அலுவலர்கள் குறுகிய காலப் பணி ரெகுலர் கமிசன் அலுவலர்களிடமிருந்து மனுக்கள் 1972 செப்டம்பர் மாதம் 6-ம் தேதி புதன்கிழமை மாலை 5–00 மணி வரை வரவேற்கப்படுகின்றன:

1. தமிழ்நாடு அமைச்சக சர்வீஸில் மற்றும் தமிழ்நாடு ஜுடிசியல் அமைச்சக சர்வீஸில் இளநிலை உதவியாளர்கள் **(Junior Assistants)** இதற்கு காப்புத் தொகை கட்ட வேண்டியது இல்லை.

2. தமிழ்நாடு அமைச்சக சர்வீஸில் மற்றும் தமிழ்நாடு ஜுடிசியல் அமைச்சக சர்வீஸில் இளநிலை உதவியாளர்கள் **(Junior Assistants)** இதற்குக் காப்புத் தொகை கட்ட வேண்டும்.

3. தமிழ்நாடு தலைமைச் செயலக சர்வீஸ், தமிழ்நாடு அமைச்சக சர்வீஸ், தமிழ்நாடு ஜுடிசியல் அமைச்சக சர்வீஸ் மற்றும் தமிழ்நாடு மாநில சட்ட மன்ற தலைமைச் செயலக சர்வீஸில் தட்டெழுத்தர்கள் மற்றும் ஸ்டெனோ டைப்பிஸ்ட்கள் **(Typists and Steno-typists).**

மேற்கண்ட ஏதாவதொரு பதவிக்கு அல்லது எல்லாப் பதவிகளுக்கும், விண்ணப்பிக்கும் மனுதாரர் ஒரே ஒரு மனுவில் மட்டும் அவர் விண்ணப்பிக்கும் பதவி அல்லது பதவிகளுக்கான பெயரைக் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்.

விளக்கமான விவரங்கள், மற்றும் மனுப்படிவம் ,செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம், சென்னை-2 அவர்களிடம், பதவிப் பெயரை குறிப்பிட்டு விண்ணப்பக் கடிதம் எழுதி, போதுமான அஞ்சல் வில்லைகள் ஒட்டப்பட்ட சுயவிலாசமிடப்பட்ட உறையை வைத்து அனுப்பிப் பெறலாம். சுயவிலாசமிட்ட உறையை வைத்து அனுப்பாத விண்ணப்பக் கடிதங்களுக்கு எந்த அறிவிப்பும் எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.

குறிப்பு.—சுயவிலாசமிடப்பட்ட 23 செ.மீ. (9") நீளமுள்ள உறையில் 35 காசு அஞ்சல் வில்லைகள் + 5 காசு அகதிகள் நிவாரண வில்லைகள் ஒட்டப்பட்டு ,"திறந்த அஞ்சல்" ( Book post ) என்று குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்.

(த. 96)

---

## வேலை வாய்ப்பு

### அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம்

நேரடி ஆள் சேர்ப்பின் மூலம் கீழ்க்கண்ட பதவிகளுக்காக, 1972 டிசம்பரில் நடைபெறும் எஸ். எஸ். எல். சி. ஸ்டேண்டர்டு **( Group IV Services )** போட்டித் தேர்வில் சேர்வதற்கு மனுதாரர்களிடமிருந்து மனுக்கள் 1972 செப்டம்பர் 6-ஆம் தேதி புதன்கிழமை மாலை 5–00 மணி வரை மனுக்கள் வரவேற்கப்படுகின்றன.

1. தமிழ்நாடு அமைச்சக சர்வீஸில் மற்றும் தமிழ்நாடு ஜுடிசியல் அமைச்சக சர்வீஸில் இளநிலை உதவியாளர்கள் **(Junior Assistants)** இதற்குக் காப்புத் தொகை கட்ட வேண்டியதில்லை.

குறிப்பு.—சபார்டினேட் சர்வீஸ்களின் உறுப்பினர்கள் மற்றும் அரசு அல்லாத அமைப்புகளில் மற்ற குறிப்பிடப்பட்டவைகளில் இருப்பவர்களும் இந்தத் தேர்வுக்கு விண்ணப்பிக்கலாம். பதவி உயர்வு அல்லது மாற்றம் அல்லது உறுதி செய்தல் அல்லது அதிகச் சம்பளம் பெறுவதற்கு அவர்களைத் தகுதியாக்கிக் கொள்வதற்காக, எஸ். எஸ். எல். சி. ஸ்டேண்டர்டில் பொதுக் கல்வித் தேர்வு நடைபெறும்

2. தமிழ்நாடு அமைச்சக சர்வீஸில் மற்றும் தமிழ்நாடு ஜுடிசியல் அமைச்சக சர்வீஸில் இளநிலை உதவியாளர்கள் **( Junior Assistants )** இதற்குக் காப்புத் தொகை கட்டவேண்டும்.

3. தமிழ்நாடு தலைமைச் செயலக சர்வீஸ், தமிழ்நாடு மாநில சட்ட மன்ற தலைமைச் செயலக சர்வீஸ், தமிழ்நாடு அமைச்சக சர்வீஸ் மற்றும் தமிழ்நாடு ஜுடிசியல் அமைச்சக சர்வீஸில் தட்டெழுத்தர்கள் மற்றும் ஸ்டெனோ-டைப்பிஸ்டுகள் **(Typists and Steno-typists)** மேற்கண்ட மூன்று வகைப் பதவிகளில் ஒவ்வொரு நியமனத்திற்கும் தனித்தனி மனுக்கள் கொடுக்கப்படவேண்டும்.

பொதுக் கல்வித் தேர்வில் சேர விருப்பமுள்ள சபார்டினேட் சர்வீஸ்களின் உறுப்பினர்கள் இளநிலை உதவியாளர் பதவிகளுக்குக் கொடுக்கப்பட்ட படிவத்திலேயே தங்கள் மனுக்களை சமர்ப்பிக்கலாம். இதற்குக் காப்புத் தொகை கட்ட வேண்டியதில்லை.

விளக்கமாக விவரங்கள், மனுப்படிவம், செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம், சென்னை-2 அவர்களிடம், பதவிப் பெயரைக் குறிப்பிட்டு விண்ணப்பக் கடிதம் எழுதி, போதுமான அஞ்சல் வில்லைகள் ஒட்டப்பட்ட சுயவிலாசமிட்ட உறையை உடன்வைத்து அனுப்பிப் பெறலாம்.

சுயவிலாசமிடப்பட்ட உறையை உடன் வைத்து அனுப்பப்படாத விண்ணப்பக்கடிதங்களுக்கு எந்த அறிவிப்பும் எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.

குறிப்பு.—ஒவ்வொரு பதவிக்கும் 23 செ. மீ. நீளமுள்ள சுய விலாசமிட்ட உறையில் 45 காசு அஞ்சல் வில்லைகள் +5 காசு அகதிகள் நிவாரண வில்லைகள் ஒட்டப்பட்டு திறந்த அஞ்சல் ( **Book post** ) என்று குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்.

(த. 100)

## குடிசை மாற்று வாரியம்

குடிசை மாற்று வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும், கீழ்க்கண்ட வேலைக்காக, நிருவாகப் பொறியாளர், குடிசை மாற்று வாரியம், கோட்டம்-2, 35/37 ஜஹாங்கீர் தெரு, 2-வது லேன் பீச் , சென்னை-1 அவர்களால் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து, உறையின் மீது வேலையின் பெயரும், ஒப்பந்ததாரரின் பெயரும் குறிப்பிட்ட மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 7-9-1972 மாலை 3.00 மணிவரை வரவேற்கப்படுகின்றன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள், அதே நாள் மாலை 3.30 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளர், குடிசை மாற்று வாரியம் கோட்டம் எண். 2 அவர்களால் அச்சமயம் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்களது ஏஜெண்ட்டுகள் முன்னிலையில் திறக்கப்படும்.

| வரிசை எண்ணும் வேலையின் பெயரும். | வேலை முடிக்க வேண்டிய காலம். | ஒப்பந்த வடிவம். | கட்டுத் தொகை, ரூ. | ஒப்பந்தப் பத்திரங்கள் விலை விற்பனைவரி (திருப்பித்தரப்பட மாட்டாது). ரூ. |
|---|---|---|---|---|
| 1. தாகூர் நகர் குடிசை மாற்றுத் திட்டம், மாநகராட்சிக் கோட்டம்-54-ல் நான்கு அடுக்குக் குடியிருப்புகள் கட்டுதல்— | | | | |
| பிரிவு 1.— | | | | |
| ஒன்றில் 32 குடியிருப்புகள் கொண்ட ஒரு பிளாக் .. ஒன்றில் 24 குடியிருப்புகள் கொண்ட ஒரு பிளாக் .. ஒன்றில் 16 குடியிருப்புகள் கொண்ட ஒரு பிளாக் .. | 10 மாதங்கள் | மொத்தத் தொகை. | 6,700 | 20 + விற்பனைவரி |
| 2. தாகூர் நகர் குடிசை மாற்றுத் திட்டம் மாநகராட்சிக் கோட்டம் எண். 54-ல் நான்கு அடுக்குக் குடியிருப்புகள் கட்டுதல்— | | | | |
| பிரிவு 2 — | | | | |
| ஒன்றில் 32 குடியிருப்புகள் கொண்ட இரண்டு பிளாக்குகள் ஒன்றில் 16 குடியிருப்புகள் கொண்ட ஒரு பிளாக் .. | 10 மாதங்கள். | மொத்தத் தொகை. | 7,000 | 20 + விற்பனை வரி |

ஒப்பந்தப் பத்திரங்கள், நிருவாகப் பொறியாளர், அலுவலகம், குடிசை மாற்று வாரியம், கோட்டம்-2,35/37, ஜஹாங்கீர் தெரு, 2-வது லேன பீச், சென்னை-1ல் 16-8-1972 முதல் எல்லா வேலை நாட்களிலும் காலை 11.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை, கோட்ட அலுவலகத்தில், ஒப்பந்தப் பத்திரங்கள் விலையைப் பணமாகச் செலுத்திப் பெறலாம்.

ஒப்பந்தப் புள்ளிகள் துறையில் வழங்கப்பட்ட குறிப்பிடப்பட்ட படிவத்தில் கொடுக்கப்பட வேண்டும். ஒப்பந்தப் புள்ளிகள் தாமாக வந்தாலோ, தவறி விட்டாலோ துறை பொறுப்பேற்காது.

ஒன்று அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையும் எக்காரணமும் காட்டாமல் நிராகரிக்க உரிமை உண்டு.

கட்டுத்தொகை ஒப்பந்தப் புள்ளி நிபந்தனைகளில் குறிப்பிட்டுள்ளவாறு ஏதாவது ஒரு வடிவத்தில் இருக்க வேண்டும். கட்டுத்தொகையின்றி வரும் ஒப்பந்தப் புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

(த. 59)

நிருவாகப் பொறியாளர்.

## மின்சார வாரியம்

எண்ணூர் அனல்மின் திட்டம்

குறிப்பு எண் எ.ஈ.பி. 103 to 108.

1. மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் உறையில், Ennore Thermal Scheme, supply of Materials, AEP 103—108 எனவும் மற்றும் ஒப்பந்த தாரரின் பெயரும் எழுதப்பட்டு, கீழ்க்கையொப்பமிட்டவரால் குறிப்பிட்ட தேதியில் மாலை 2–30 மணி வரை பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று மாலை 3–00 மணிக்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

2. தேவையான பொருட்கள், குறிப்பு எண், முன்பணம், முடிவு தேதி முதலியன கீழே தரப்பட்டுள்ளன.

| Serial number and description. | Specn. No. | E.M.D. Payable. Rs. | Cost of Tender Set. Rs. | Due date. |
|---|---|---|---|---|
| 1. Cast steel slide valves, globe valves, non-return valves, welded-on-valves, Flanged valves, etc. | AEP. 103 | 1,000 | 5 | 1st September 1972. |
| 2. Feko (iron/Constantan) Compensating leads, each core area 1·5 sq. mm. | AEP. 104 | 1,000 | 5 | 1st September 1972. |
| 3. 6 in. dia. G.I. Pipes .. .. .. | AEP. 105 | 1,000 | 5 | 8th September 1972. |
| 4. Maxpull pulling and lifting machines, 5 tons and 3 tons lifting capacity. | AEP. 106 | 400 | 5 | 8th September 1972. |
| 5. Spares for Standard-20. vehicles .. | AEP. 107 | 1,200 | 5 | 15th September 1972. |
| 6. Wolf FF 2 and GQ 4 grinders and Flexible Shafts. | AEP. 108 | 600 | 5 | 15th September 1972. |

3. ஒப்பந்தப் பத்திரங்கள் கீழ்க் கையொப்பமிட்டவரிடமிருந்து 14—8—1972 தேதியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

4. துறையினரைச் சார்ந்த நமூனுக்களில்லாத ஒப்பந்தங்களும், முடிவு தேதியிலும் நேரத்திற்குப் பின்னரும் சமர்ப்பிக்கப்படும் ஒப்பந்தங்களும் நிராகரிக்கப்படும். ஏதாவது ஒன்றையோ அல்லது எல்லாவற்றையுமோ காரணம் காட்டாது நிராகரிக்கவும், பிரித்துக் கொடுக்கவும் கீழ் கையொப்பமிட்டவரே உரிமையாவர்.

5. அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டு வழியில் காணுமல் போகும் ஒப்பந்தப் பிரதிகளுக்கு மின்சார வாரியம் பொறுப்பல்ல. ஒப்பந்த பத்திரங்களும் மாற்றத்தக்கவை அல்ல.

தொலைபேசி எண் : 59556 (5 Lines)
தந்தி : ENTERMAL

மேற்பார்வைப் பொறியாளர்,
எண்ணூர் அனல் மின் திட்டம்,
எண்ணூர், சென்னை-57.

(த. 99)

## குடிசைப் பகுதி மாற்று வாரியம்

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும் அண்ணா நகர் ஆம்னிபஸ் (புதிய ஆவடி சாலை அருகில்) திட்டத்தின் கீழ் பல அடுக்குக் கட்டடங்கள் கட்டுவதற்கான அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்களை அடியில் கையொப்பமிட்டுள்ளவர் 18-8-1972 அன்று பிற்பகல் 3 மணிக்கு அப்பாற்படாமல் சேரும் படியாக வரவேற்கிறார். ஒப்பந்தம் வைத்தனுப்பும் உறையின்மீது ஒப்பந்ததாரர்களின் பெயரையும் வேலையின் பெயரையும் உரிய முறையில் குறிப்பிட வேண்டும்.

| வ.எண். | பிரிவு எண். | வேலை விவரம். | வேலையின் தோராய மதிப்பு. | ஒப்பந்த வடிவம். | முன்வைப்புத் தொகை. | ஒப்பந்தப் பத்திரங்களின் விலை. |
|---|---|---|---|---|---|---|
| | | | ரூ. | | ரூ. | |
| 1. | I | நான்கு அடுக்கு குடியிருப்புகள் கொண்ட கட்டடங்கள்—64 குடியிருப்புகள் .. .. .. .. .. .. | 3.70 இலட்சங்கள். | எல்.எஸ். | 5,550 | ரூ. 15 மற்றும் விற்பனைவரி (திருப்பித்தரப் பட மாட்டாது) ஒவ்வொரு பிரிவுக்கும். |
| 2. | II | 64 குடியிருப்புகள் .. .. .. .. .. .. | 3.70 இலட்சங்கள். | எல்.எஸ். | 5,550 | ,, |
| 3. | III | 64 குடியிருப்புகள் .. .. .. .. .. .. | 3.70 இலட்சங்கள். | எல்.எஸ். | 5,550 | ,, |
| 4. | IV | 64 குடியிருப்புகள் .. .. .. .. .. .. | 3.70 இலட்சங்கள். | எல்.எஸ். | 5,550 | ,, |
| 5. | V | 64 குடியிருப்புகள் .. .. .. .. .. .. | 3.70 இலட்சங்கள். | எல்.எஸ். | 5,550 | ,, |
| 6. | VI | 64 குடியிருப்புகள் .. .. .. .. .. .. | 3.70 இலட்சங்கள். | எல்.எஸ். | 5,550 | ,, |
| 7. | VII | 56 குடியிருப்புகள் .. .. .. .. .. .. | 3.21 இலட்சங்கள். | எல்.எஸ். | 4,815 | ,, |

ஒப்பந்தப் பத்திரங்களைக் கீழ்க்கண்ட அலுவலகத்திலிருந்து **4-8-1972** முதல் 17-8-1972 வரை பெறலாம். பெறப்படும் ஒப்பந்தங்கள் **18-8-1972** அன்று பிற்பகல் 3-15 மணிக்கு வந்திருக்கக் கூடிய ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும் எந்தவொரு ஒப்பந்தத்தையும் எக்காரணமுமின்றி ஏற்றுக் கொள்ளவோ, நிராகரிக்கவோ நிருவாகப் பொறியாளருக்கு உரிமையுண்டு.

தாண்டவராயச்சத்திரம்,
சென்னை-10.

நிருவாகப் பொறியாளர்,
குடிசைப்பகுதி மாற்றுவாரியம்,
கோட்டம் எண். 3, கீழ்ப்பாக்கம்,
சென்னை-10.

(த.93)

## மின்சார வரியம்

குறிப்பு எண் SCE. 457.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் அதன் உறையின்மேல் குறிப்பு எண், வேலையின் பெயர் ஒப்பந்ததாரரின் பெயரும் எழுதப்பட்டு, கீழே கையொப்பமிட்டவரால் குறித்த முடிவு தேதி மாலை 3-00 மணி வரை எண்ணூர் அனல் மின் திட்ட அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்பட்டு அன்று மாலையே 3-30 மணிக்கு அங்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்களின் முன்னிலையிலோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையிலோ திறக்கப்படும்.

| குறிப்பு எண். (1) | வேலையின் பெயர். (2) | முன்வைப்புப் பணம். (3) | ஒப்பந்தப் பிரதி விலை. (4) | முடிவு தேதி. (5) |
|---|---|---|---|---|
| | | ரூ. | ரூ. | |
| SCE. 457. | எண்ணூர் மின்நிலையம்—இரண்டாம் கட்ட வேலைகள்—எலக்ட்ரோஸ்டேடிக் பிரசிபிடேடர் 5-க்கு அஸ்திவாரம் அமைத்தல். | 6,000 (ரூபாய் ஆறாயிரம் மட்டும்) | 15 (ரூபாய் பதினைந்து மட்டும்). | 7-9-1972. |

2. ஒப்பந்தப் பிரதிகள் ஒவ்வொன்றும் ரூ. 15 செலுத்திக் கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

3. வேலைக்கான முன் வைப்புத் தொகையை கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் ரொக்கமாக (அல்லது) கேட்பு உண்டியல் ( Demand draft ) மூலம் செலுத்தி ரசீதை ஒப்பந்தத்தில் இணைத்து அனுப்ப வேண்டும்.

4. வாரியத்திற்கு உரிய தாள்களில் எழுதப்படாத ஒப்பந்தங்களும், குறித்த தேதி காலத்திற்குள் சமர்ப்பிக்கப்படாத ஒப்பந்தங்களும் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

5. கீழே கையொப்பமிட்டவர் எந்த ஒரு ஒப்பந்தத்தையோ (அல்லது) ஒப்பந்தங்களையோ எவ்விதக் காரணமும் காட்டாமல் நிராகரிக்கவும் அல்லது வேலையை ஒப்பந்ததாரர்களிடையே பிரித்துக் கொடுக்கவும் உரிமையுடையவராவார்.

6. ஒப்பந்தப் பிரதிகள் அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டு காணாமல் போனால் மின்சார வாரியம் பொறுப்பல்ல, ஒப்பந்தப் பிரதிகள் மாற்றத்தக்கவை அல்ல.

தந்தி : ENTERMAL
தொலைபேசி எண் : 59556 (5 Lines).

மேற்பார்வைப் பொறியாளர்,
எண்ணூர் அனல் மின் திட்டம்,
எண்ணூர், சென்னை-57.

(த.97)

## ஒப்பந்தப் புள்ளி

### சிறு தொழில் கழகம் லிமிடெட்

35/2, உட்ஸ் சாலை, சென்னை-2.

டான்சி சைட் கடை, திருவெறும்பூர், திருச்சி-14-ல், செப்டம்பர், 1972 முதல் ஓராண்டு காலத்திற்கு போக்குவரத்து ஒப்பந்ததாரர் (**Contractor**) நியமனம் செய்வதற்கு 26—8—1972 மாலை 3-00 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்த வடிவத்தின் குறிப்பிட்டப்பட்ட ப்ாரம் ஒப்பந்ததாரர்களுக்கான அறிவிப்புகளுடன், துணை மேலாளர் (**Structurals**) தமிழ்நாடு சிறு தொழில் கழகம் லிமிடெட், 35/2, உட்ஸ் சாலை, சென்னை-2-ல், இந்த அலுவலகத்தில் சீனியர் கணக்கு அலுவலர் (**Cash**) அவர்களிடம், விற்பனைவரி உட்பட ரூ. 5-50 பணமாகவோ அல்லது மணி ஆடர் மூலமாகவோ செலுத்திப்பெறலாம். ஒப்பந்தப்புள்ளிகள் மூடிமுத்திரையிட்ட உறையில், டான்சி சைட் கடை, திருச்சி, போக்குவரத்து ஒப்பந்ததாரராக 26—8—1972-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி என்று குறிப்பிட்டு அனுப்பப்பட வேண்டும். ஒப்பந்தப்புள்ளிகள் 26—8—1972 மாலை 4-00 மணிக்குத் திறக்கப்படும்.

நிருவாக இயக்குநர்.

(த. 61)

## ஒப்பந்தப் புள்ளி

### குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும், கீழ்க்கண்டவைகளை வழங்குவதற்காக, தலைமைப் பொறியாளர் (குடிநீர் வடிகால் வாரியம்) அவர்களால், அவர்தம் அலுவலகம் பொதுப் பணித்துறை கட்டடம், சேப்பாக்கம், சென்னை-5-ல் குறிப்பிடப்பட்ட படிவத்திலான மூடிமுத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 20—9—1972 மாலை 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். அதே நாள் மாலை 3-30 மணிக்கு அச்சமயம் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒப்பந்த வடிவம்—மொத்தத் தொகை.

வேலையின் விவரம்—இந்த மாநிலத்தின் கிராம நீர் வழங்கு திட்டத்திற்காக டர்பைன் பம்பு செட்கள் தேவையான உபகரணங்களுடன் ( **Different Capacities** ) வழங்குதல் (**Supply and delivery**)

கட்டுத்தொகை—ரூ. 10,000 (டிமாண்டு டிராப்ட் அல்லது பாங்கு காரண்டி வடிவில்).

வேலை முடிக்க வேண்டிய காலம்—6 மாதங்கள்.

ஒப்பந்தப் பத்திரங்கள் விலை—ரூ. 10·35 செட் ஒன்றுக்கு விற்பனைவரி உட்பட)

ஒப்பந்தப் பத்திரங்கள், நிருவாகப் பொறியாளர் அலுவலகம், **Bus (Unicef) B—33**, வட கிழக்கு விரிவு, தில்லை நகர், திருச்சி-18-ல் பத்திரங்கள் விலை பணமாகவோ அல்லது மணி ஆடர் மூலமாகவோ செலுத்திப் பெறலாம்.

ஒப்பந்தப்பத்திரங்கள் 7—8—1972 முதல் 16—9—1972 வரை விற்பனைக்குக் கிடைக்கும்.

தலைமைப் பொறியாளர்,
குடிநீர் வடிகால் வாரியம், சேப்பாக்கம், சென்னை-5.

(த. 88)

## விளம்பரம்

### வீட்டு வசதி வாரியம்

கோடம்பாக்கம் புதூர் பகுதியில் மாத வாடகை ரூ. 135-ல், மூன்று ஃபிளாட்ஸ்கள் (**Flots**) உடனடியாக ஒதுக்குவதற்கு மனுக்கள் வரவேற்கப்படுகின்றன. ஒவ்வொரு ஃபிளாட்டிலும் தங்கும் வசதி கீழ்க்கண்டபடி உள்ளது.

ஒரு ஹால்.

ஒரு படுக்கை அறை.

ஒரு கிச்சன்-சாப்பாட்டு வசதி இணைந்த குளிக்கும் அறை & **F.O.L.** முதலில் வருபவர்களுக்கு மனைகள் முதலில் ஒதுக்கப்படும்.

டி. வி. வாசுதேவன்,
தலைவர்,
வீட்டு வசதி வாரியம்.

(த. 101)

## ஒப்பந்தப் புள்ளி

### துறையூர் நகராட்சி

(திருச்சிராப்பள்ளி மாவட்டம்).

கீழ்க்கண்ட வேலைக்காக, கீழ்க்கையொப்பமிட்டவருக்கு, மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 31—8—1972 மாலை 4-00 மணிக்கு அல்லது முன்னர் வந்து சேருமாறு வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் பத்திரங்கள், நகராட்சி அலுவலகத்தில் ரூ. 25.88 காசு செலுத்திப் பெறலாம். ஒப்பந்தப்புள்ளிகளுடன் குறிப்பிடப்பட்ட கட்டுத்தொகை இணைக்கப்பட வேண்டும், ஒப்பந்தப்புள்ளிகள் 31—8—1972 மாலை 4-30 மணிக்கு, ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்களது அதிகாரம் பெற்ற ஏஜெண்டுகள் முன்னிலையில் திறக்கப்படும். மற்ற விவரங்கள், இந்த அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் விண்ணப்பித்துப் பெறலாம்.

திருச்சி மாவட்டம், துறையூர் பஸ் நிலையத்தில் ஸ்டால் மற்றும் ஓட்டல் கட்டுதல், மதிப்பீட்டுத் தொகை ரூ. 1,68,000, ஒப்பந்த மதிப்பு ரூ. 1,02,858, கட்டுத் தொகை ரூ. 2,600.

சையட் அப்துல்காதர்,
சிறப்பு அலுவலர்.

(த. 67)

## வேலை வாய்ப்பு

### சிறைத் துறை

சேலம் மத்தியச் சிறைச்சாலையில் இயங்கும் அலுமினியப் பட்டறையில் ஸ்கில்டு ஒர்க்கர் கிரேடு 1 வேலைக்கமர்த்துவதற்காகத் தகுதிப் பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகிறது. இவ்வேலைக்குத் தேவையான தகுதி சம்பளம் முதலிய விவரங்கள் பின்வருமாறு :—

1, வயது .. .. .. .. 35 வயதுக்குள் இருக்கவேண்டும்.

2. இதரத் தகுதிகள் .. .. 5 ஆண்டுகள் ஏதேனும் ஒரு ஸ்பின்னிங்கில் அலுமினியப் பாத்திரங்கள் செய்யும் தொழிற் சாலையில் வேலை செய்ததற்கான சான்றிதழ்.

3. சம்பளம் .. .. .. .. 200—5—10—300 கிராக்கிப்படி முதலியவைகள் விதிப்படி.

விண்ணப்பங்கள் கீழ்க்கையொப்பமிட்டவருக்கு 21-8-72-ஆம் தேதிக்குள் வந்தடைய வேண்டும். விண்ணப்பதாரர்கள் தங்கள் சொந்தச் செலவில் சேலம் மத்தியச் சிறையில் நடைபெறவிருக்கும் பேட்டிக்கும்தேர்விற்கும் வர ஆயத்தமுள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.

கு. வித்தியாசாகரன்,
கண்காணிப்பாளர்.

(த. 98)

## தோ்வ

### தொழில் நுட்பத் ே நர்வுகள்

நவம்பர்—1972.

1972-ம் ஆண்டு நவம்பர் திங்களில் நடைபெற இருக்கும் மேற்படி தேர்வில் சங்கீதம், நடனம், ஓவியம், அச்சுக்கலை, புத்தகம் கட்டுதல் மேலும் தையற்கலை முதலிய பாடங்களில் தேர்வு எழுத கட்டணம் செலுத்தி அபராதமில்லாமல் விண்ணப்பிக்க கடைசி நாள் 31-8-1972. ஒவ்வொரு தேர்வு மனுவுக்கும் அபராதத் தொகை . 1 செலுத்தி விண்ணப்பிக்கக் கடைசி நாள் 15—9—1972. மேற்ப தேதிக்கு மேல் வரும் தேர்வு மனுக்கள் ஏற்றுக் கொள்ள படமாட்டாது. தேர்வு மனுக்கள் வேண்டுவோர் சம்பந்தப்பட்ட மாவட்டக் கருவூலத்தில் பெற்றுக்கொள்ளலாம். நேரடியாக தேர்வு மனுக்கள் வேண்டுவோர் 0·20 காசு அஞ்சலகவில்லையுடன் 0·05 காசு அகதி நிவாரண வில்லையும் சேர்த்து ஒட்டிய சுயமுகவரியிட்ட உறையுடன் இணைச் செயலாளர், அரசுத் தேர்வு ஆணையர் அலுவலகம், செ ன்னை-6 அவர்களுக்கு விண்ணப்பிக்கவும்.

ப. வெ. அப்புபிள்ளை,
இணைச் செயலாளர்.

அரசுத் தேர்வு ஆணையர் அலுவலகம், சென்னை-6.

(த. 103)

ஆசிரியர், வெளியிடுபவர் செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு அச்சக எழுதுபொருள் இயக்குநரால், சென்னை அண்ணாசாலை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
(முகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை-2